# காதலின் இரு துருவங்கள்

## இலக்கிக்கார்த்தி

# அத்தியாயம் 1

"தாயி இன்னைக்கு அறுவடை நாள்,களத்துல எல்லோரும் உங்களுக்காக காத்துட்டு இருக்காங்க தாயி"

'கனகாம்பரம்நிறமும்,ராமர் பச்சை நிறமும் கலந்த உயர் ரக பட்டுஉடுத்தி, அதற்கு ஏற்றார்போல் தலையில் மல்லிகையும், கைகளில் தங்க வளையலும்,கழுத்தில் அவள் கணவன் கட்டிய தாலிக்கொடியுடன் தங்க ஆரமும்,நெற்றியில் சாந்து பொட்டுடன் வகிட்டில் குங்குமமும்,என அனைத்திலும் லக்ஷ்மிதேவியாய் மின்னினாலும் அவள் முகத்தில் மட்டும் கடவுள் பார்வதியின் குணம்கொண்ட ஸ்ரீவள்ளி அந்தவீட்டில் முதல் மருகமகள்'

" இதோ வரேன் நல்லத்தம்பி அண்ணே,நீங்க போய் பெரிய ஐயாவ கூப்பிட்டு வாங்க,நான் அத்தைய கூப்பிட்டு வரேன்" என்றால்.

'சரி தாயி'

"ஐயா,அங்க களத்துல உங்களுக்காக ஆளுக காத்துட்டு இருக்காங்க"

'என் மருமக வந்துடுச்சா"என்றார்.

"ஐயா, தாயி பெரியம்மாவா கூப்பிட்டு களத்துக்கு வந்துடுவாங்கலாம்,தாயி உங்கள கொப்பிடு நேரா வர சொன்னங்க"

"போகலாம் நல்லா,வா"என்று களத்துக்கு புறப்பட்டார் முத்தையாபிள்ளை.

"அத்தை கிளம்பலாமா"என்று வள்ளி மீனாட்சியிடம் கேட்க.

'நான் எதுக்கு வள்ளி,நீயும் அவருதான் இருகேங்களே நான் உங்களுக்கும்,களத்துல வேலைபார்க்குரவங்களுக்கு சமைக்கணும், உனக்கு தெரியாத நம்ம இடத்தல வேலை பார்க்குறவங்களுக்கு நாமதான் சாப்பாடு குடுக்கணுமனு,என்றார்'

"சரிங்க அத்தை கொஞ்ச நேரம் நான் கழுத்துல இருந்துட்டு வரேன், நானும் உங்ககூட சேர்ந்து சமையலுக்கு உதவி பண்ணிறேன்"

'சரி வள்ளி,நீ கிளம்பு எல்லோரும் உனக்காக காத்துட்டு இருப்பாங்க'

"சரிங்க அத்தை"

"வணக்கம் ஐயா"

"கும்பிடுறேன் சாமி"

வணக்கம் சாமி”

“வணக்கம்,எல்லோரும் சாப்பிடேங்களா,

‘சாப்பிட்டோம் ஐயா’

“எங்க,வள்ளிய இன்னுமா வரல”

‘ஐயா தாயி உங்க பின்னாடிதான் வராங்க’

“வணக்கம் தாயி”

“வணக்கம் அக்கா”

“வள்ளி,நல்ல நேரம் முடிய போகுது,அறுவடைக்கு நேரம் ஆச்சுமா,நீ வந்து ஆரம்பிக்கணும் வா’என்று அழைத்தார்.

“சரிங்க மாமா”

“தல வாழையில் பொங்கல் படைத்து,பத்தி சூடம் பொருத்தி, கருது அறுக்கும் அருவாளில்,சந்தனம்,குங்குமம்,வைத்து அந்த சூரியபகவானுக்கு படைக்கும் விதம் அந்த ஊரில் இன்னும் நஞ்சை வளமும், புஞ்சை வளமும், பெருக கடவுளிடம் வேண்டுவர்”

“மாமா,சாமி கும்பிட்டாச்சு”

‘அடுத்து உங்கையால கருது அறுக்குற அருவாள எடுத்து குடுமா’

“சரிங்க மாமா”

“தாயி முதல உன்கையலா கருது அறுத்துட்டுவா தாயி”என்று அங்கு இருக்கும் ஒரு பெண்மணி கூற.

“ஆமா வள்ளி முதல நீ போய் கருத அறுத்துட்டுவா”என்றும் அவரும் கூற.

“சரிங்க மாமா”

‘கடவுளே இந்த ஊர் மக்கள் நல்ல இருக்கணும்,இந்த அறுவடை நல்ல படியா நடக்கணும்.என்று வேண்டிக்கொண்டே முதல் கருது அறுத்தால்.

“ம்ம் போங்க தாயி முதல் கருது அருத்ட்டாங்க,போங்க நீங்க போய் அறுவடை பண்ணுங்க,என அறுவடைக்கான வேலைகள் ஆரம்பித்தன.

“சரிங்க மாமா முதல் கருத சாமிக்கு வைக்கணும், நானும் வீட்டுக்கு கிளம்புறேன்,அத்தைக்கு சமையலுக்கு உதவி பண்ணனும், வரேன் மாமா,என்று கிளம்பினால்.

"சரி வள்ளி,பார்த்து போம்மா"

"நெல் அறுவடையின் போது,வேலைபார்க்கும் மக்களுக்கு அலுப்பு தெரியாமல் இருக்க பெண்களும்,ஆண்களும் சேர்ந்து நாட்டுபுற பாடல் பாடுவார்கள்,அப்படிபாடும் போது அவர்களுக்கு வேலை செய்யும் நேரம் தெரியாது,பாடிகொண்டே அந்தநாளின் நெல் அறுவடை முடிந்ததது"

"முத்தையாபிள்ளை,இவர்தான் இந்த ஊரின் மிகப்பெரிய செல்வந்தர்,அனைவருக்கும் வாரித்தரும் வள்ளல்,சொல்லிய சொல் மாறாதவர்,என்று இவரை பற்றி கூறிக்கொண்டு போகலாம், இவருக்கு இரண்டு மனைவிகள், காமாட்சியம்மாள், மீனாட்சியம்மாள், இருவரும் அக்கா,தங்கை..,காமாட்சிக்கு பிரசவத்தின்போது ஏற்பட்ட சிக்கலில் அவர் உயிர் பிரிந்தது, அவருக்கு பிறந்தது ஒரு மகன்,மீனாட்சிக்கு இரு பிள்ளைகள், ஒருமகள் ஒரு மகன் இருவரும் வெளிஊரில் படித்துகின்றனர்."

"என்ன மச்சான் அறுவடை எல்லாம் எப்படி போகுது" என்றபடி வந்தார் வள்ளியின் தந்தை முருகவேல்.

'வாங்க மாமா எப்படி இருக்கேங்க,அறுவடை எல்லாம் நல்லா போகுது'என்ன சாப்பிடுறேங்க'.

"எதுவும் வேணாம் மச்சான்,தங்கச்சி எங்க"

'உங்க தங்கச்சி வேலை ஆளுக்கு சமையல் பண்ணுறாங்க, எப்பவும் நாம்ம பண்ணுறது தானே மாமா,ஆமா எங்க என் தங்கச்சி'

"உங்களுக்கு தெரியாத என் வீட்டம்மா உங்க வீட்டுக்குத்தான் போயிருக்காங்க,மச்சான்"

"நல்லா, மாமாவுக்கு இளநி கொண்டுவா"

"மச்சான் எங்க வள்ளிய காணலா"

"முதல் அறுவடை பண்ணாதே நம்ம வள்ளிதான் மாமா, இப்போதான் செத்த நேரத்துக்கு முன்னாடி வீட்டுக்கு போனா" என்றார்.

"வள்ளிய பார்த்து ரொம்ப நாள் ஆச்சு மச்சான்,எப்படி இருக்கா என் மவ"

"உங்க மக இல்லை,என் மருமக மாமா"

"சரி உங்க மருமகதான்,ஆனா அதுக்கு முன்னாடி என் பொண்ணு மச்சான்"

"நல்லா இருக்கா,என் வீட்டுல ராணி மாதிரி இருக்கா"

"முருகவேல்-தமிழ்செல்வி,இவர்களுக்கு பிறந்தவள் ஸ்ரீவள்ளி, இவளுக்கு ஒரு அண்ணன் மலைமாறன்,வெளிநாட்டில் வேலை பார்ப்பவன், தமிழ்செல்வியும்,முத்தையாபிள்ளையும் அண்ணன், தங்கை. முத்தையாவுக்கு இன்னொரு சொந்தமும் உண்டு ஆனால் அவர்கள் இப்பொழுது இவர்களுடன் இல்லை"

"வள்ளி எல்லாம் சமையலும் ஆச்சா,ஆளுகளுக்கு வேலை முடிஞ்சது அவங்களுக்கு சரியான நேரத்துக்கு சாப்பாடு கொடுக்கணும்,வள்ளி"

"அத்தை எல்லாம் வேலையும் முடிஞ்சது இலைய அறுத்து போடசொல்லுங்க அத்தை,நான் எடுத்துட்டுவரேன்".

'அண்ணி,அண்ணி எங்க இருக்கேங்க'என்றபடி வந்தார், தமிழ்செல்வி.

"வா வா தமிழு,எப்படி இருக்க,அண்ணே வரலையா,என்று வரவேற்றார். மீனா.

"உங்க அண்ணே,என் அண்ணனா பார்க்கா வயலுக்கு போயிருகாங்க,

"அதென்ன வீட்டுக்கு வந்துட்டு உள்ள வராம போறாங்க,அண்ணே வரட்டும், என்று செல்லமாக கொபம்கொண்டார்.

"அண்ணி, இன்னைக்கு அறுவடை நாளுல அதனால மச்சானுக்கு துணைக்கு நான் இருக்கணும்,தங்கச்சிக்கு சொல்லிடுனு என்கிட்டே சொல்லிட்டுதான் போனாங்க அண்ணி"என்றார்.

'அம்மா எப்போ வந்தேங்க,வாங்க என்ன சாப்பிடுறேங்க, அப்பாவ எங்க ' என்று வள்ளி தன் தாயை கண்டதும் உற்சாகமாய் இருந்தால்.

"நான் நல்லா இருக்கேன் கண்ணு,நீ எப்படி இருக்க"

"எனக்கென்னமா அத்தையும்,மாமாவும் நல்லா பார்த்ததுக்குறாங்க"

'அது சரி,என் அண்ணே வீட்டுல உன்னை கொடுத்துஇருக்கேன்ல,உன்னை எப்பவும் நல்லா பார்த்துக்குவாங்க'.

"வாணி அக்கா,அம்மாவுக்கு ஒரு மோர் கொண்டுவாங்க, உட்காரும்மா, நானும் அத்தையும் சாப்பாடு எடுத்துவச்சுட்டு வரோம்"

‘அதெல்லாம் வேணாம்,நானும்,உங்ககூட உதவி பண்ணுறேன், அண்ணி வாங்க,

‶தாயி வேலை ஆளுக எல்லாம் வந்துட்டாங்க, என்றார்.நல்லத்தம்பி.

‘நல்லத்தம்பி அண்ணே இலை போடுங்க,வாங்க எல்லோரும் முதல உக்காருங்க,

‶அத்தை வாங்க உங்க கையாலா சாப்பாடு போடுங்க″என்று அவளின் அத்தையை அழைத்தால்.

‘நீயே போடுமா,நீ சாப்பாடு போட்டாதான் அவங்க வயிறு நிறையும்,வள்ளி’

‶சரிங்க அத்தை″

‶எல்லோரும் கூச்சப்படாம கேட்டுவாங்கி சாப்பிடுங்க″என்று வயலில் வேலைபார்த்த சாப்பாடு பரிமாறினார்கள்.

சாப்பாடு முடிந்த கையோடு,அவர்களுக்கு மோர் வழங்கினால்.

‶தாயி இன்னைக்குதான் என் மனசு நிறைஞ்சு இருக்கு, நீங்களும் உங்க குடும்பமும்,என்னைக்கும் நல்ல இருக்கணும், தாயி″என்று பெரியவர்.வாழ்த்தி சென்றார்.

"ஆமாம் தாயி,நீங்களும்,சின்னஐயாவும் நூறு வருஷத்துக்கும் நல்ல இருக்கணும்,பூவும் போட்டுமா சந்தோஷமா இருக்கணும் தாயி" என்று அவளையும்,அவள் கணவனையும் சேர்த்து வாழ்த்தினார் இன்னொரு பெண்மணி.

"அனைவரின் வாழ்த்தையும் கேட்டு,மனதுக்கு மகிழ்ச்சியை கொடுத்தாலும்,கடைசியாய் ஒரு பெண்மணி அவளின் அத்தானை நினைவுபடுத்திவிட்டு சென்றார்"

'என்ன வள்ளி எல்லோரும் வயிறு நிறைய சாப்பிடங்களா,ஒரு குறையும் வைக்கலையே'என்று முத்தையா வள்ளியிடம் கேட்டார்.

"அவளிடம் பதில் இல்லை"

'வள்ளி,வள்ளி,என அவளை தோள் தொட்டு திருப்பினார். 'என்னமா,ஏன் இப்படி இருக்குற,அத்தை எதுவும் சொன்னால'என்று கேட்டார்.

"மாமா,அத்தான் எப்போ வருவாங்க"என்றால்.

'அவரோ ஏன்மா,அவன் இப்போதான வேலைக்கு போய் இருக்கான்.உனக்கு அவன பார்க்கணும் போல இருக்கா'

"இல்லை மாமா,ஒரு பாட்டி நானும்,அத்தானும்,நூறுவருஷம் நல்ல இருப்போனு சொன்னங்க அதான் அத்தான் நினைப்பு வந்துட்டுச்சு"வேற ஒன்னுமில்லை மாமா.

"நான் ஒன்னு சொல்லவா வள்ளி,

'என்ன மாமா,'

"உன் அத்தான்,அதாவது என் மகன் இன்னும் கொஞ்ச நேரத்துல உனக்கு போன் பண்ண போறான்,அதுக்கான நேரம் இப்போ நீ இன்னும் இங்கயே நிக்குற''என்று சொன்னார்.

'அட ஆமால,மாமா ஞாபகப்படுத்துனதுக்கு ரொம்ப நன்றி,இதை பிடிங்க என்று சாப்பாடு கிண்ணத்தை அவர் கையில் கொடுத்து விட்டு அவளின் அறைக்கு ஓட்டினால்.'

''இங்க பாருடா,போன் பண்ண போரானுதனே சொன்னே,அதுக்கே சோத்து கிண்ணத்தை என்கிட்டே கொடுத்து போயிட்டா,அவன் ஊருக்கு வந்துட்டா என்ன கலாட்டா பண்ணுவா,என் மருமக''என்று நினைத்துக்கொண்டார்.

***"உனக்காக மச்சான்***
***காத்திருப்பேன் உறங்காம***
***கண்ணு முழிச்சிருப்பேன்"***

என்ற பாடல் வரியுடன் போன் ரிங்க்டோன் வள்ளியை அழைத்தது.

ஓடி வந்து அவளின் ‘‘விவோ11 ப்ரோ’’போனைகையில் எடுத்தால். அதில் அவளும்,பாண்டியனும்,அவர்கள் கல்யாணத்தில், இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தமாதிரி இருப்பதுபோல் புகைப்படத்தை வால்பேப்பராக வைத்திருந்தால்.

‘போனை அட்டென் பண்ணி காதில் வைத்தவுடன்,’’என்னங்க வள்ளியம்மா எப்படி இருக்கேங்க’’,என்றான்.அவளின் நாயகன், அன்பு காதலன்,அடிமை கள்வன்,இவளால் காதலாக அழைக்கப்படும், செந்தூர்பாண்டியன்.

‘‘அத்தான்,நான் நல்லா இருக்கேன்,நீங்க, சாப்பிடேங்களா, வேலை எல்லாம் எப்படி போகுது’’

‘‘வள்ளியம்மா,நான் நல்லா இருக்கேன்,இப்போதான் சாப்பிட்டேன், வேலை கொஞ்சம் பரவாயில்லை,நெல் அறுவடை நல்லாபடியா முடிஞ்சதா வள்ளியம்மா’’.

‘‘ம்ம் நல்லா முடிஞ்சது அத்தான்,இந்த தடவை நான்தான் எல்லோருக்கும் சாப்பாடு பரிமாறினே,என்று அன்று நடந்த

கதையை சொல்லிக்கொண்டு இருந்தால்.இதெல்லாம் பொறுமையாக கேட்டுக்கொண்டு இருந்தான்,

‘‘அத்தான் உங்களை பார்க்கணும் போல இருக்கு,எப்போ வருவேங்க’’என்று கொஞ்சம் ஆர்வமாக கேட்டாள்.

‘வள்ளியம்மா நான் வர கொஞ்ச மாசம் ஆகும்,இப்போதானே வேலைக்கு போயிருக்கேன்,புரிஞ்சுகோங்க வள்ளியம்மா’என்று தன் மனம் புரிந்து நடந்துகொள்ளும் வள்ளியிடம் கெஞ்சினான்.

‘‘சரிங்க அத்தான்,இருங்க அத்தை,மாமாகிட்ட கொடுக்குறேன் பேசுங்க’’என்று அவளிடம் ஆரம்பித்த பேச்சுவார்த்தை அவனின், அம்மா,அப்பா,வள்ளியின் அம்மா,அப்பா என்று அனைவரிடமும் பேசிமுடித்தான்’’

‘‘சரிங்க வள்ளியம்மா நான் நாளைக்கு பேசுறேன்,நீங்க தூங்குங்க’’என்று போனை வைத்தான்.

ஆனால் அவள்,அவன் நினைவாக இருந்ததால்,கல்யாணம் போட்டோவை எடுத்து பார்த்துகொண்டு இருந்தால்.அதில் அவளுக்கு பிடித்த அவளுடைய அத்தானின் கையில் தாலி வாங்கியபோது எடுத்த படம்,அதை தடவி பார்த்து அந்த நாளுக்கு சென்றாள்.

“ஊரில் யார் கல்யாணம் என்றாலும் அதில் முக்கியஸ்த்தர் நம்ம முத்தையாபிள்ளையாக இருப்பார்,ஆனால் அவர் வீட்டில் முதல் கல்யாணம் என்றால் ஊரே ஒன்று திரண்டு ஜேஜேன்னு இருந்தது,ஆம் முத்தையாபிள்ளைக்கும்,காமாட்சிக்கும் பிறந்தவன் தான் செந்தூர்பாண்டியனுக்கும்,முருகவேல்,தமிழ்செல்வியின் மகள் ஸ்ரீ வள்ளிக்கும்,கல்யாணம் இரு வீட்டிலும் முதல் கல்யாணம்”

“சிறுவயது முதல் அவன் நினைவிலே வாழ்ந்தவளுக்கு இன்று அது நிஜமாக போகும் நேரம் வரப்போகிறது,என்று கண்களில் ஆசையுடன் மணமேடைய நோக்கி சென்றுகொண்டு இருந்தால் ஸ்ரீ வள்ளி”

“அந்த ஊரில் மிகப்பெரும் மதிப்புகொண்ட முத்தையா பிள்ளையின் சொந்தம் திருமூர்த்தி கையால் தாலி எடுத்துகொடுக்க அதை வாங்கி, ஸ்ரீவள்ளியின் கழுத்தில் கட்டினான்”.

“என்ன வள்ளி சாப்பிட வராம இன்னும் இங்க இருக்க”என்று வந்தார் மீனா.

‘அத்தான்கிட்ட பேசிட்டு இருந்தேன் அதான்,அதுக்காக நீங்க ஏன் மேல ஏறி வரணுமா,வாணிக்கிட்ட சொல்லி அனுப்பியிருந்தா நானே வந்து இருப்பேன்,ஏன் அத்தை கஷ்ட்டபடுறேங்க,என்று கோபம் கொண்டால்.

‘‘ராசா நல்லா பேசுனான வள்ளி,பிள்ளைக்கு வேலை எல்லாம் எப்படி போகுது,என்று மகனை விசாரித்தார்.’’

‘‘நீங்க அத்தான்கிட்ட பேசனேங்களே, அப்புறம் எதுக்கு என்கிட்டே கேக்குறேங்க’’

‘தம்பிக்கிட்ட இதை பத்தி கேட்க மறந்துட்டேன்,அதான்’

‘‘அத்தானுக்கு ஒருகுறையும் இல்லை,அத்தை அவரு அங்க நல்லா இருகாங்க,நாளைக்கு பேசுறேன்னு சொல்லிட்டார் அத்தை’’

‘அப்படியா ராசாவுக்கு ஒருகுறையும் இல்லமா நல்லா பாத்துக்க கருப்பையா,நீதான் என் மவனுக்கு துணையா இருக்கணும், என்று கையெடுத்து சாமியை வேண்டினார்.’

‘‘என் அத்தானுக்கு எந்த குறையும் இருக்காது அத்தை,அவர் மனசுக்கு எல்லாம் நல்லபடியா இருக்கும்’’என்று தனது அத்தைக்கு ஆறுதல் கூறினால்.

# அத்தியாயம் 2

அந்த ஐடி வளாகம் முழுவதும் பிஸியாக இருந்தது,அதில் ஒருவன் மட்டும் வேலை செய்வோரை தொந்தரவு கொடுத்துக்கொண்டு இருந்தான்,

‘‘டேய் மச்சி வா இன்னைக்கு நியூ ஜாயினி வந்திருக்கானு பார்த்துட்டு வரலாம்’’என்று பிரகாஷ் வேலை செய்து கொண்டு இருந்த அவன் தோழனிடம் நச்சரித்தான்.

‘பிரகாஷ் பிளிஸ் நான் இந்த எரர் அஹ கண்டிபிடிச்சு சார்கிட்ட சொல்லணும் இல்லையினா பாண்டியன் சார் என்னை மொறைச்சே கொல்லுவாரு’.

‘‘டேய் அந்த கிராமத்து பைல்வான் இன்னும் ஹெட் ஆபிஸ் ல இருந்து வரல வா போயிட்டு வரலாம்’’

‘ஆளா விடு,எனக்கு என் வேலை முக்கியம்’

‘‘நீ இப்படியெல்லாம் சொன்னா சரிபட்டுவரமாட்டா,என்று அவன் தோழன் போனை எடுத்துகொண்டு சென்றுவிட்டான்’’.

‘பிரகாஷ் என் போன் கொடு,என்று அவனும் பின்னோடு சென்றான்’.

‘‘டேய் மச்சி பாருடா எவ்ளோ அழகான பொண்ணுங்க இதை மிஸ் பண்ணுரையே ,புதிதாக சேர்ந்த பெண்களை சைட் அடித்துக்கொண்டு இருந்தான்’’

‘பிரகாஷ் வா போகலாம் சார் வந்தாங்கனா,மாட்டிகிட்டு முழிக்கபோறது நாமதான்’

‘‘அந்த கிராமத்து பைல்வான் என்னை பார்த்தாலே நடுங்குவான்,அவன்கிட்ட நான் முழிப்பிதுங்கி நிக்கபோறேனா,அவன் என்னோட தம்பி மாதிரி,நான் எது சொன்னாலும் சரிங்க அண்ணானு சொல்லுவான்’’என்று அவன் போக்கில் பேசிக்கொண்டு இருக்க,அவனின் தோழன் அப்போ சார் நீங்க பிரகாஷ்க்கு தம்பியா என்று பிரகாஷின் பின்புறம் நின்றுயிருந்த பாண்டியனிடம் கேட்டான்’’

‘‘டேய் அந்த பைல்வான் தான் ஹெட் ஆபிஸ்க்கு போயிருக்கான் நீ என்னனா என் பின்னாடி பேசிட்டு இருக்குற, யாரு டா எனக்கு தம்பி’’ என்று பிரகாஷ் திரும்பி பார்க்க அங்கு பாண்டியன் நின்று பிரகாஷை நன்றாக முறைத்துக்கொண்டு இருந்தான்.

‘அய்யோ இந்த பைல்வான் சும்மாவே என்னக்கு ப்ரோக்ராம் கொடுத்து வேலை வாங்குவான் இதுல என் வாய் சும்மா

இருக்கமா பைல்வான்கிட்ட மாடிவிட்டுச்சே'என்று தனக்குளே புலம்பிக்கொண்டே அவனிடம் மன்னிப்பு கேட்கும் விதமாக நின்றுகொண்டு இருந்தான்.

‘‘கம் டு மை ரூம் பிரகாஷ்’’சிங்கத்தின் கர்ஜினையுடன் சொல்லி சென்றான்.

‘‘பிரகாஷ் இப்போ எதுக்கு சார் உன்னை அவரு ரூம்க்கு கூப்பிடுறாரு, ஸ்பெசலா உனக்கு ஏதோ கொடுக்க போறாரு போடா சார் கூப்பிட்டு அரைமணி நேரம் ஆச்சு’’என்று அவன் பங்குக்கு கலாய்த்து அனுப்பினான்.

‘கடவுளே அந்த பைல்வான் இன்னை எந்த கஷ்ட்டமான வேலையும் கொடுத்துடகூடாது அப்படி மட்டும் என் வேண்டுதலா நிறைவேத்துனேனா அந்த பைல்வான பாதையாத்திரைக்கு கூப்பிட்டு வரேன் என்று வேண்டிக்கொண்டு ‘மே கமீன் சார்’ என அழைத்துக்கொண்டே உள்ளே நுழைந்தான்.

‘‘இந்த பைல் அஹ எல்லாம் ப்ரோக்ராம் டிடைல்ஸ் இருக்கு ஆனா இது ஆடர் படி இல்லை சோ ஆடர் பண்ணி கொண்டுவா’’என்று அவன் வேண்டுதலுக்கு ஆப்பு வைத்தான்.

‘சார் இந்த ப்ரோக்ராம் ஏற்கனவே அனிதா பண்ணிட்டாலே அப்புறம் எதுக்கு நான் தனியா பண்ண’

‘‘ஹ்ம்ம் அந்த ப்ரோக்ராம் எனக்கு பிடிக்கல,அதனால நீங்க முதல இருந்து சரிபண்ணி கொண்டுவாங்க,லெட்ஸ் கோ’’என்று அதிலும் ஆளுமை திறன் இருந்தது.

‘இன்னைக்கு அந்த கடவுள்தான் என்னை காப்பத்தனும்’என்று அவன் கொடுத்த பைலை தலையில் வைத்துகொண்டு அவன் இடத்திருக்கு சென்றான்.

‘‘எஸ்க்யூ மீ மே ஐ கமீன்’’

‘‘எஸ் கமீன்’’

‘‘ஹாய் சார் ஐம் தெய்வப்ரியா,ப்ரம் சென்னை,ஐம் நியூ ஜாயின் திஸ் கம்பெனி,திஸ் மை பைல்’’என பாண்டியனிடம் தன்னை அறிமுகப்படுத்திகொண்டு வேலைக்கான லெட்டரை கொடுத்தாள்.

‘‘அவனோ அதெல்லாம் முழுதாக படித்துபார்த்து அவளிடம் ஆங்கிலத்தில் ஒரு சில கேள்விகளை தொடுத்து அவளின் வேலைக்கான கடிதத்தில் கையெழுத்து போட்டான்’’.

‘‘சார் மை கேபின்’’

‘ஒன் செக்’என போனில் ஒருவனை அழைத்து அவளை அவளிடத்தை காண்பிக்குமாறு கூறினான்.

“தாங்க்யு சார்”

‘யூ ஆர் வெல்கம்”

‘தெய்வப்ரியா திஸ் யூ ஆர் பிளேஸ்’என்று அவளுக்கு இடத்தை காட்டிவிட்டு சென்றான்.

“அவளோ பக்கத்தில் தலையில் கை வைத்து அமர்ந்திருக்கும் பிரகாஷ் கண்ணில் பட்டான். “ஹாய் ஐம் தெய்வப்ரியா,நியூ ஜாயினி என்று அவனிடம் நட்புக்கரம் கோர்த்தால்”

‘ஹாய் ஐம் பிரகாஷ் ப்ரோக்ராமர் அண்ட் யூ’

“ஐம் ப்ரோக்ராம் லீடர்”என்று அவர்களுக்குள் பேச்சு வார்த்தை உணவு நேரத்தை தாண்டியும் சென்றது,அவனோ இங்கு இருக்கும் அனைவரைப்பற்றியும் கூறினான்.

‘பிரகாஷ் ப்ரோக்ராம் ஆர்டர் பண்ணிடேங்களா’என்று இடையில் பாண்டியன் கேட்க

“அவனோ, சார் ப்ரோக்ராம் எரர் காட்டுது சார் ஈவ்னிங்குள்ள முடிச்சுடுவேன் சார்”

‘இன்னும் ஒரு மணி நேரம்தான் உங்களுக்கு டைம் அதுக்குள்ள ஆர்டர் பண்ணி கொண்டுவாங்கா ஓகே’

‘‘என்னாச்சு பிரகாஷ்’’ப்ரியா கேட்க

‘அவனோ காலையில் இருந்து அவள் வருமுன் நடந்ததை சொல்லி முடித்தான்’

‘‘ச்சு இவ்ளோதான கொடு நான் பண்ணிகொடுக்குறேன்’’என்று அவன் வேலையை அரைமணி நேரத்தில் முடித்துகொடுத்தால்.

‘ஆனா பாண்டியன் சார் தெரிஞ்சா இன்னும் அதிகமா வேலை கொடுப்பாரு ப்ரியா’

‘‘அவருக்கு தெரியாது,நீ போய் கொடுத்துட்டு வா,இன்னைக்கு உனக்கு நான் பார்ட்டி வைக்குறேன் போ’’என்று அவனை அனுப்பி வைத்தால்.

‘என்ன பிரகாஷ் இது நீங்களா பண்ணுனேங்களா’

‘‘எஸ் சார்,ஏன் இந்த கேள்வி’’

‘ஓகே மறுபடியும் மத்தவங்க வொர்க டிஸ்டர்ப் பண்ணுறதை பார்த்தேன் இன்னும் ஹெவி பனிஸ்மென்ட் தான் யூ மே கோ’ என்று அனுப்பிவைத்தான்.

‘‘சார் கண்டுபிடிச்சாரா’’என அவனிடம் கேட்டால்.

‘தெரியல ஆனா கண்டிப்பா நான் பண்ணலைன்னு தெரிஞ்சு இருக்கும்.

‘‘தெய்வப்ரியா உங்களை ஹச்ஆர்.பாண்டியன் வரசொன்னாங்க’’ என்று வேறொரு குழுத்தலைவன் கூறிசென்றான்.

‘நான் சொல்லலா’ என் பார்வை பார்த்தான்.

‘‘சார் வரசொன்னேங்கலாமே’’

‘எப்போ இருந்து,அன்னைதெரசா ஆனேங்க, அந்த கேள்வியில் அவள் முகம், புரியாத பாவனையில் இருந்தது,

‘‘நான் பனிஸ்மென்ட் கொடுத்து பிரகாஷ்க்கு ஆனா அவன் பனிஸ்மென்டா நீங்க முடிசுகொடுத்து இருக்கேங்க அதான் கேட்டேன்’’

‘சார்’என்று இழுத்து அவன் முகம் பார்த்தால்.

‘‘இதுதான் உங்களுக்கு லாஸ்ட் வார்னிங் ஓகே’’

‘ஓகே சார்’ ,ம்ம் நீங்க போகலாம்.

‘‘என்ன அந்த பைல்வான் உன்னை அதிகமா திட்டிட்டானோ சரி விடு இதெல்லாம் நமக்கு சாதாரணம் இதுக்கெல்லாம் கவலைபட்டா நாம கிணத்துல குதிக்கவேண்டியது தான் வா

பார்ட்டி வைக்குறேன் சொன்னேள எந்த ஹோட்டல் போகலாம்'' என அவளை அதில் இருந்து வெளிக்கொண்டு வந்தான்.

'உன்னகெல்லாம் சூடு, சொரணை எல்லாம் இல்லையா டா'

''அதெல்லாம் இருக்குறவன் கவலைப்படனும்''

'அடப்பாவி உன்னை'என்று அவளும் அவனும் இன்னும் நெருக்கமான நண்பர்கள் ஆனார்கள்.

''பாண்டியன் தன் வேலைகளை முடித்துக்கொண்டு, முக்கியமான கோப்புகளை அதன் இடத்தில் வைத்துவிட்டு அவன் வீட்டிற்க்கு புறப்பட்டான்''

'சாய்பாபா அப்பார்ட்மெண்ட் வளாகத்தில் தன்னுடைய பைக்கை நிறுத்தி படிக்கட்டில் ஏறி தன்னுடைய அப்பார்ட்மெண்ட் முன் அவனுக்காக காத்திருக்கும் நண்பனை பார்த்து சிறிதாக புன்னகைத்து,வீட்டை திறந்ததும் முதல் ஆளாய் உள்ளே நுழைந்தான் பிரகாஷ் என்கிற பிரம்மமூர்த்தி.

'சாப்பிட்டியா பிரம்மா'

''சாப்பிடலனா நீ செஞ்சு கொடுக்கபோறையா,அதெல்லாம் இன்னைக்கு பிரியா ட்ரீட் வச்சா''.

‘ஹ்ம்ம் அது எனக்கு முன்னாடியே தெரியும்’

‘‘அவனோ கோவமாக இருப்பதுபோல் முறுக்கிக்கொண்டு அவனின் அறைக்கு சென்றுவிட்டான்’’

‘அப்பொழுது பாண்டியனின் கைபேசிக்கு அழைப்பு வந்தது, ‘‘சொல்லுங்கப்பா,எப்படி இருக்கேங்க,அம்மா,அத்தை,மாமா,எப்படி இருக்காங்க’என்று வரிசையாக கேட்டான்.

‘‘எல்லாரும் நல்ல இருக்காங்க தம்பி நீ எப்படி இருக்க,

‘இப்போதான் வேலை முடிஞ்சு வந்தேன்ப்பா,அப்பா, வள்ளிம்மா எப்படி இருக்காங்கப்பா’என்று கேட்டான்.

‘‘வள்ளி உன்கூட பேச காத்துட்டு இருக்கு,அதான் உனக்கு போன் போட்டு சொன்னே’’

‘இதோப்பா இப்பவே அவங்களுக்கு கூப்பிட்டு பேசுறேன், எல்லாம் நல்லா இருக்காங்களாப்பா’ ஒருவித தயக்கமாய் கேட்டான்.

‘‘எல்லாரும் சுகம் தம்பி,நீ வள்ளிக்குபோன் போடு’’என்று அவர் அழைப்பை துண்டித்தார்.

‘வள்ளிமா எல்லாரும் நல்ல இருக்காங்கதானே’என்று அவன் மனையாளுக்கு உடனடியாக போன் போட்டான்.

‘‘அத்தான் ஏன் பதட்டமா பேசுறேங்க,இங்க நாங்க நல்லா இருக்கோம்’’

‘இல்ல அப்பா குரலு ஒருமாதிரி இருந்துச்சு அதான், கேட்டேன்’

‘‘அத்தான் விசனப்படதேங்க,இங்க எல்லோரும் நல்லா இருக்காங்க,நீங்க வேலை முடிஞ்சு இப்போதான் வந்திருபேங்க முதல சாப்பிட்டுங்க அதுக்கடுத்து எனக்கு போன் போடுங்க’’ என்றால்.

‘சரிங்க வள்ளிமா,சாப்பிட்டு கூப்பிடுறேன்’என்று அவனும் தன் மனையாளின் குரலில் வித்தியாசம் உள்ளதை அறிந்தான்,ஆனால் உடனே கேட்டாள் சொல்லிவிடும் அளவிற்கு வள்ளி இல்லை, அவளிடம் எப்படி கேட்டால் உண்மை வெளிவரும் என்று அறியாத அளவிருக்கு அவள் கணவனும் முட்டாள் இல்லை, தன்னை சுத்தபடுத்திகொண்டு,சாப்பாடு அறையில் அவன் காலையில் செய்து வைத்த இட்லியும் காரச்சட்னியும் எடுத்து சூடு செய்து சாப்பிட்டான்.

“இங்க பாரு தெய்வா சாப்பிட வரப்போறையா இல்லையா, என்று அவளின் அன்னை கோபமாக கேட்க”

‘எனக்கு உன் சாப்பாடு வேணாம்’

“பிடிவாதம் பிடிக்காத தெய்வா,அடுத்தநாள் ஆபிஸ்க்கு இதேதான் பேக் பண்ணி கொடுப்பேன் ஓகேனா இப்போ நீ சாப்பிடாத” என்று அவளின் சாப்பாட்டை எடுத்து குளிர்சாதனப்பெட்டியில் வைக்க போனார்”

‘சரி கொடுங்க ஆனா திரும்ப இந்த உப்புமா செய்யகூடாது என்று பிடிக்காத உப்புமாவை சாப்பிட்டுமுடித்தால்’

“அம்மா இன்னைக்கு ஆபிஸ்ல எனக்கு ஒரு ப்ரிண்ட்” கிடைத்தையும் அவனுக்கு உதவி செய்ததுமுதல் அவனிடம் திட்டு வாங்கியது வரை சொல்லிமுடித்தாள்.

‘தெய்வா மத்தவங்களுக்கு உதவி பண்ணு ஆனா நீயே அவனோட ப்ரொக்ராம முடிச்சுகொடுத்தது தப்பு இனிமே இப்படி பண்ணகூடாது சரியா’

“ஹ்ம்ம் சரிமா,ஆனா அந்த ஹிட்லர் ரொம்ப பண்ணுறான்”

‘இப்படி எல்லாம் பேசக்கூடாது தெய்வா அவரு உன் மேலதிகாரி அவருக்கு மரியாதையை கொடுக்கணும்’

“ம்மா நீ எனக்கு அம்மாவை இல்லை அவருக்கா”

‘யாரா இருந்தாலும் மரியாதையை கொடுத்து வாங்கனும்,போ போய் படுத்து தூங்கு நாளைக்கு ஆபிஸ் கிளம்பனும்’

“சரி குட் நைட்”என்று அவளின் அன்னையை கட்டிபிடித்து சென்றாள்.

‘அவரின் மனதில் “பழைய நினைவுகள் வந்து போனது”’.

“எதுக்கு மாமா,அத்தானுக்கு போன் பண்ணுனேங்க”என்று கோபம் படமுடியாத அளவிருக்கு அவள் மென்மையாக கேட்டாள்.

‘வள்ளி நீ அவனை பிரிஞ்சு இருக்கமுடியாம தவிக்குற அதான் அவனுக்கு சொல்லி உன்னை சென்னைக்கு கூப்பிட்டு போக சொல்லபோறேன்’என்று முடிவுடன் கூறினார்.

“வேணாம் மாமா இது அத்தானுக்கு தெரிஞ்சா அவங்க வேலையில நான் சுமையா மாறிடுவேன்”

‘என்ன வள்ளி அவனோட மனைவி நீ,எப்படி சுமையா இருப்பேனு சொல்லுற’ இதுக்குதான் தம்பிய வெளியூருல வேலை பார்க்க அனுப்பமாட்டேனு சொன்னே ஆனா நீ “என் அத்தானோட ஆசையும் அவருக்கு பிடிச்ச உத்தியோகத்தை

பார்க்கட்டும்''என்கிட்டே சண்டை போட்டு அனுப்பி வச்சு ரெண்டு மாசம் ஆகல அதுக்குள்ள நீ ஒழுங்கா சாப்பிடாம இருக்குற,எனக்கு நீயும் என் மகனும் ரொம்ப முக்கியம் வள்ளி'என்று சொல்லி கொண்டு இருக்கும் போது பாண்டியனிடம் இருந்து அழைப்பு வந்தது.

'வேணாம் மாமா எதுவும் சொல்லதேங்க,அத்தான் மனசு ஒரு நிமிஷம் கஷ்டப்பட்டாலும் என்னால தாங்க முடியாது' என்று கண்ணீர் வழிய கூறி சென்றாள்.

''முடிவாக அவனின் அழைப்பை ஏற்றார்,என்ன தம்பி சாப்பிட்டாய''

'என்னப்பா வள்ளியம்மா ஒரு மாதிரி பேசுறாங்க உடம்பு சுகமில்லையா,நான் வேணா ஊருக்கு வரவா'என்றான்.

''அதெல்லாம் ஒண்ணுமில்ல தம்பி வள்ளி நம்மவீட்டு கிணத்துல குளிச்சனால தொண்டைகட்டிகிடுச்சு,நீ உன் மனசுல்ல எதையும் நினைக்கமா வேலையை முடிச்சுட்டு வா சரியா தம்பி''என்றார்.

'ப்பா உண்மையில வேற எதுவும் இல்லையில'சந்தேகமாக கேட்டான்.

‘‘வேற ஒன்னும் இல்லை தம்பி’’என அவரும் முடிந்த மட்டும் பேசிமுடித்து வைத்தார்.

பாண்டியனின் அறையில் விளக்கு இன்னும் எறிந்த நிலையில் இருந்தாய் அறிந்து உள்ளே நுழைந்தான் பிரகாஷ்.

‘‘என்ன பாண்டியா இன்னுமா தூங்கல’’

‘இதோ தூங்க போறேன்’என்று சோர்வுடன் கூறினான்.

‘‘தங்கச்சிக்கிட்ட பேசுனியா’’

‘ம்ம் இப்போதான் பேசினேன்,ஆனா மனசுல்ல இருக்குறத சொல்லமாட்றாங்க,அதான் அப்பாகிட்ட கேட்டா பதில் கிடைக்கும் நினைச்சா அவரு என் வள்ளியம்மவுக்கு மேல இருக்குறாரு’என்று அவன் பேசியதை கூறினான்.

‘‘நீ உண்மையில வேலை பார்க்கதான் சென்னை வந்தியா பாண்டியா,என்று சரியாக கேட்டான்’’பிரகாஷ்.

‘ஏன் இந்த திடீர் கேள்வி’

‘‘இல்லை ஆபிஸ் ஏழு மணிக்கு முடிஞ்சுடுச்சு,ஆனா நீ மட்டும் லேட்டா வீட்டுக்கு வர,அதும் உன்னை அடிக்கடி ஐஜி

ஆபிஸ்ல பார்த்தமாதிரி இருக்கு அதான் கேட்டேன்'' என்று அவனின் முகத்தைப்பார்த்தான்.

'நீ என்னை மாதிரியே வேருயாரையோ பார்த்துட்டு பேசுற, நேரா ஆபிஸ் முடிச்சு வீட்டுக்குத்தான் வந்தேன் போ போய் தூங்குற வேலைய பாரு'என்று அவனை அறையைவிட்டு வெளியே அனுப்பினான்.

''உன்னை எப்படிதான் என் வள்ளி தங்கச்சி சமாளிக்குதோ,என புலம்பிக்கொண்டே தண்ணிர் எடுத்துகொண்டு சென்றான்''.

'பாண்டியனுக்கு தூக்கம் துர சென்றது,அவன் எப்பொழுது அவனின் வள்ளியின் தாலாட்டு பாட்டில் உறங்கி பழகியவனுக்கு இந்த இரண்டு மாதமும் உறக்கம் அவனை தாமதமாக தழுவியது, அவன் நினைவில் அவளுடன் இருந்த அறையில் வள்ளியின் மடியில் தலை வைத்து அவள் அவன் தலை கோதி அவனுக்கு பிடித்தபாடல் பாடி உறங்க வைப்பாள்,

''வரம் தந்த சாமிக்கு பதமான லாலி''

அந்த பாடலுக்கே அவன் அவளிடம் உருகிவிடுவான்,

‘‘நீ என் மனைவியா கிடைச்சதுக்கு நான் கொடுத்து வச்சு இருக்கணும் வள்ளிமா’’என அவளை நெஞ்சில் தாங்குவான்.

‘போனின் மெசேஜ் சத்தில் தன் நினைவில் இருந்து வெளி வந்தான்’ அதில் ‘‘நீங்கள் கேட்ட விபரம் கிடைத்துவிட்டது’’ என்று ஒரு புதிய எண்ணில் இருந்து மெசேஜ் வந்தது.

‘‘பாண்டியன் அதை படித்து பார்த்து, கொஞ்சம் மகிழ்ச்சியாகவும்,கொஞ்சம் சோகமாகவும் இருந்தான்’’

‘இனி என் குடும்பத்துக்கு எதவித ஆபத்தையும் நெருங்க விடமாட்டேன்’ என தனக்குதானே உறுதி எடுத்துகொண்டான்.

‘‘காலையில் ஐந்து மணிக்கு அந்த பெரிய வீட்டின் வாசலை ஒரு ஆளாய் சாணி கரைத்து தொளித்து,கூட்டி பெருக்கி,அந்த வாசலுக்கு ஏற்றவாறு கோலமிட்டு அதில் கலர் பொடி கொடுத்துகொண்டு இருந்தால் வள்ளி’’

‘ஏன் தாயி நான்தான் வீட்டு வேலை எல்லாம் பார்க்குறேன் அப்புறம் ஏன் இந்த காலைபொழுதுல நீ மெனக்கெட்டு எழுந்திரிக்கனும், நானே பார்க்கமாட்டேனா’என அந்த வீட்டில் வேலை செய்யும் பெண் கேட்க.

# காதலின் இரு துருவங்கள்

“இது என் வீடு பெரியம்மா,இந்த வேலை எல்லாம் நான்தான் பார்க்கணும், நீங்கதான் என்னை அடுப்படி பக்கமே விடமாற்றேங்க, நான் பாதி வேலையாவது பார்க்கணும் இல்லையினா எனக்கு கிறுக்கு பிடிச்சுக்கும்”

‘அது சரி நீ,இந்த வீட்டுக்கே மகராணி அப்படி இருக்க,உனக்கு வேலை செய்யத்தான் ஐயா எங்கள வேலைக்கு வச்சு இருக்காங்க இப்படி நீ பண்ணது ஐயாவுக்கு தெரிஞ்சா என் ஒரு நாள் சம்பளம் போயிடும் தாயி’

“அய்யோ பெரியம்மா அப்படி எதுவும் ஆகாது நீங்க கொள்ளபக்கம் செடிக்கு தண்ணிவிடுங்க நான் எல்லாருக்கும் காபி கொடுத்துட்டு வரேன்”

‘சரி தாயி நான் போய் தண்ணிவிடுறேன்’

“சாமி, எந்த குறையும் இல்லாம எல்லாரையும்,இந்த ஊரையும் நீதான் பார்த்துக்கணும்”என்று சாமியிடம்கூட அனைவருக்கும் வேண்டும் இவளுக்கு,கடவுள் வைத்திருக்கும் திட்டம் அறியவிலல்லை.

‘‘இன்னும் பத்துநிமிசத்துல ஆபிஸ் போகலேன்னா அந்த ஹிட்லர் மொறைப்பானே’’என சிக்னலில் நின்று தனக்குதானே பேசிக்கொண்டு இருந்தால்.

‘‘இன்னும் அஞ்சு நிமிஷம் தான் டைம் அதுக்குள்ள மிஸ்.தெய்வப்ரியா வந்தா மீட்டிங் அட்டென் பண்ணலாம், இல்லையினா அவங்கள மீட்டிங் ஹால்க்கு அனுப்பதேங்க’’என்று பியுனிடம் சொல்லிக்கொண்டு இருந்தான்.

‘அய்யோ போச்சு இன்னும் பிரியாவ காணாம்,இவன் வேற பொசுக்கு பொசுக்குனு கோவப்படுறான்,ப்ரியா சீக்கிரம் வா’என பிரகாஷ் சொல்லிக்கொண்டு இருக்க.

‘‘மீட்டிங் ஆரம்பித்தது’’

‘ஆனால் அங்கு ப்ரியா வரவேயில்லை’

# அத்தியாயம் 3

‘‘அந்த ஹால் முழுவதும் அவன் பேச்சு சத்தம் மட்டுமே ஒலித்துக்கொண்டு இருந்தது, சாப்ட்வேர் பற்றியும்,அதன் நுணுக்கங்களையும் தெளிவாகவும்,மற்றவருக்கு புரியும்படி சொல்லிக்கொண்டு இருந்தான்’’

‘சிலர் அதன் விளக்கங்களையும்,குறிப்புகளும் அவனிடம் கேட்டு நோட்ஸ் எடுத்துகொண்டனர்’

‘‘ஓகே ப்ரிண்ட்ஸ் மீட்டிங் ஓவர்’’என அவன் கூறியதும் அனைவரும் வெளியேறினர்.

‘அனிதா,ப்ரியா வந்துட்டாங்களான்னு பார்த்து சொல்லுறேங்களா’என கடைசியாக வெளியே இருந்தவளை அழைத்து கேட்டான்.

‘‘ஓகே பாண்டியன்’’

‘பிரகாஷ் உங்க டீம் லீடர் ப்ரியா வந்துட்டாங்களா’

‘‘அய்யோ மீட்டிங் முடிஞ்சுடுச்சு போல அதான் அவன் ப்ரியாவ பத்தி கேக்குறான்’’.

‘இல்லை அனிதா,வந்தா நான் சொல்லுறேன்’என சொல்லுபோது ப்ரியா உள்ளே நுழைந்தால்.

‘‘எங்க ப்ரியா போனா மீட்டிங் முடிஞ்சா பின்னாடி இவ்ளோ லேட் அஹ வர’’என வந்தவளை எதுவும் பேசவிடவில்லை.

‘ஒண்ணுமில்லை பிரகாஷ், அதை அப்புறமா சொலுறேன்,சார் என்ன சொன்னாங்க,மீட்டிங் வேற அட்டென் பண்ணலை’என சொல்லிக்கொண்டு இருக்கும்பொழுது ‘‘ப்ரியா பாண்டியன் வரசொன்னாங்க’’என அனிதா சொல்லிவிட்டு சென்றாள்.

‘‘போச்சு அந்த பைல்வான்,உன்னை வைச்சு செய்யபோறான், போ போய் பார்த்தட்டு வா’’என்று அவளை அனுப்பி வைத்தான்.

‘என்னடா இப்படி பயமுறத்துற பிரகாஷ்’

‘சரி நீ போய் பாண்டியன் சாரா பார்த்துட்டு வா’

‘‘ம்ம் சரி’’என அவளும் அவனை காண சென்றாள்.

‘‘மே ஐ கமின் சார்’’

‘எஸ்’

‘‘இன்னைக்கு மீட்டிங் இருக்குனு நேத்து உங்களுக்கு மெயில் பண்ணிருந்தேன் ஆனா மீட்டிங் முடிஞ்சு இருபது நிமிஷம் கழிச்சு

வந்திருக்கேங்க,எனித்திங் ப்ரோப்லேம் ப்ரியா''என தன்மையாக கேட்டான்.

'நத்திங் சார்,வரும்போது எனக்கு அடிபட்டுச்சு சார் அதான் ஹோஸ்பிட்டேல் கூட போகாம நேரா ஆபிஸ்க்கு வந்தேன் சார்'

''என்னாச்சு எப்படி அடிபட்டுச்சு,இப்போ எப்படி இருக்கு'',என வரிசையாக கேட்டான்.

'இப்போ பரவாயில்லை சார்,சாரி சார் என்னால மீட்டிங் அட்டென் முடியல,வெரி சாரி சார்'என்று மன்னிப்புகேட்டால்.

''இட்ஸ் ஓகே ப்ரியா,உடம்ப பார்த்துகோங்க இன்னைக்கு லீவ் வேணா எடுத்துகோங்க''

'நோ சார்,ஐம் ஓகே சார் நான் வொர்க் பார்க்க போகலாமா'

''ஓகே போங்க''

'பாவம் ப்ரியா,அந்த பைல்வான்கிட்ட மாட்டிட்டு முழிக்க போறாளோ,முருகா என் ப்ரிண்ட் ப்ரியாவ அவன்கிட்ட திட்டு வாங்காமா பத்திரமா வந்தா அவளை கூட்டிட்டு உன் கோவிலுக்கு பால் காவடி எடுக்கவைக்குறேன் முருகா'என அவளுக்கு வேண்டுதல் வைத்தான்.

‘‘முருகா அந்த பால் காவடி எனக்கு பதிலா,என் உயிர் தோழன் பிரகாஷ் எடுக்கனும்னு நான் வேண்டிக்கிறேன்’’என்றபடி வந்தால் ப்ரியா.

‘ஹே ப்ரியா அவன் உன்னை எதுவும் சொல்லலையா,இல்லை அவன்கிட்ட திட்டுவாங்குனத என்கிட்டே மறைக்குறையா’

‘‘அவன்கிட்ட திட்டு வாங்கனும்னு எனகென்ன தலையெழுத்தா என்ன, என்ன நடந்துச்சுனா’’ என்று அவளும், அவனும், கொசுவத்தி சுருளை சுத்திக்கொண்டு அங்கு நடந்ததை கூறி முடித்தாள்.

‘எங்க அடிபட்டுச்சு ப்ரியா,வா ஹோஸ்பிட்டேல் போகலாம்,என பிரகாஷ் பதறிக்கொண்டு வந்தான்.

‘‘ஹே அதெல்லாம் அவன்கிட்ட பொய் சொன்னே,எனக்கு அடிபடல, என்ன நடந்துச்சுனா ‘‘அவள் சிக்னலில் நின்றுக்கொண்டு இருக்கும் போது ஒரு சிறுமி அவளிடம் பிச்சை கேட்டுவந்தால் அந்த சிறுமியை அழைத்துகொண்டு அவளுக்கு தெரிந்த ஆசிரம்மத்தில் சேர்த்துவிட்டு அந்த குழந்தைக்கான படிப்பு செலவை தான் ஏற்றுகொள்வதாய் கூறினால்’’

‘ஹே எவ்வளவு பெரிய உதவி பண்ணிருக்க அந்த பொண்ணுக்கு,இதை ஏன் நீ பாண்டியன்கிட்ட மறைக்கனும் ப்ரியா,சார்கிட்ட சொல்லிருந்தா அவரே ஒன்னும் சொல்லிருக்க மாட்டாரு,என பேசிக்கொண்டு இருந்த போது ‘‘அவங்க எப்படி சொல்லுவாங்க பிரகாஷ் ஒரு பொய் சொல்ல மத்தவங்கள பார்த்து கத்துகுவாங்க,எப்படினா நீ சொன்ன மாதிரிதான் ப்ரோக்ராம் போட்டது நானு சொல்லுபோது,அவங்களும் வரும்போது எனக்கு ஆக்சிடென்ட் ஆகிடுச்சு சொல்லிருக்காங்க’’என்ன ப்ரியா,என்று சொல்லிக்கொண்டு வந்தான்,பாண்டியன்.

‘‘ஆஹா வந்துட்டான்யா பைல்வான்,ப்ரியா இன்னைக்கு நீ யாரு முகத்துல முழிச்ச’’

‘இப்போ எதுக்கு இந்த கேள்வி’

‘‘ஏன்னா நான் காலையில இவன் முகத்துலதான் முழிச்சேன், என் ராசில இன்னைக்கு பரிசுகிடைக்கும்னு போட்டு இருந்துச்சு, ஆனா அதை தவிர இவன்கிட்ட திட்டுதான் கிடைக்குது’’ என்று அவளிடம் ரகசியமாய் சொல்லிக்கொண்டு இருந்தான்.

‘‘அங்க என்ன பேச்சு பிரகாஷ்,இப்போ ப்ரியா சொல்லுறது உண்மையா அவங்களுக்கு ஆக்சிடென்ட் நடந்துச்சா இல்லையா, சொல்லுங்க’’என அவனை போட்டு மிரட்டிக்கொண்டு இருந்தான்.

ஆமாம் சார் அவங்களுக்கு எதுவும் அடிபடல,அவங்க என ஆரம்பித்து ‘அவனிடம் கூறியதை பாண்டியனிடம் சொல்லி முடித்தான்’ இதான் சார் நடந்துச்சு.

‘‘இன்னைக்கு நடந்த மீட்டிங்ல, மினிட்ஸ் ஒப் மீட்டிங் எனக்கு சமிட் பண்ணல சோ அதை நீங்க சமிட் பண்ணனும்,என்று ப்ரியாவிடம் கூறிவிட்டு,அனிதா இவங்க இன்னும் கால்மணி நேரத்துல மினிட்ஸ் ஒப் மீட்டிங் டைப் பண்ணி எனக்கு சமிட் பண்ணனும் அதுக்கு நீங்க பொறுப்பு ஓகே’’என யாரும் அவளுக்கு உதவி செய்யகூடாது என்றும் மறைமுகமாக சொல்லி சென்றான்.

‘இதுக்குதான் சொன்னே பார்த்தியா இப்போ பனிஸ்மென்ட் கொடுத்துட்டு போய்ட்டான், இதுக்கு காவலா இந்த அனிதா வேற’என்று அவன் ப்ரியாவை கேலி செய்தான்.

‘‘இப்போ என்ன பண்ணுறது பிரகாஷ்,மீட்டிங்ல என்ன நடந்துச்சுன்னு தெரியாது,சார் என்ன பேசுனாங்கனு தெரியாது, ஏதாவது சொல்லுடா’’

‘இப்போ உனக்கு மினிட்ஸ் ஒப் மீட்டிங் தானே டைப் பண்ணிகொடுக்கணும்,ஒரு நிமிஷம் இரு’என அவளிடம் சொல்லிக்கொண்டு மீட்டிங் அட்டென் செய்த அவனின் தோழன் அவனின் போனில் மீட்டிங் நடந்தை ரெகார்ட் செய்து

வைத்திருந்தான்,அதை அவனிடம் போய் கூறி வாங்கிகொண்டு வந்தான்.

“இந்தா இதுல மீட்டிங் நடந்தத அவன் எப்போதும்,ரெகார்ட் பண்ணி வைக்குறது பழக்கம்,அது உனக்கு இன்னைக்கு யூஸ் ஆகிருக்கு, போ சீக்கிரமா அந்தவேலைய முடிச்சுட்டுவா உனக்காக வெயிட் பண்ணுறேன்”என்று அவளிடம் அதை கொடுத்துவிட்டு சென்றான்.

‘அவளும் அதை ஒருமுறை கேட்டுவிட்டு, அதில் நடந்தை கணினியில் ஏற்றி அவனுக்கு மெயில் மூலம் சமர்பித்தால்’.

“மாமா சாப்பிட வாங்க”என்று வள்ளி அழைத்தால்.

‘எனக்கு சாப்பாடு வேணாமா’

ஏன் மாமா, என்மேல இன்னும் கோவம் போகலையா???

உன்மேல கோவபட்டு என்ன ஆகுபோகுதுமா…

‘அப்புறம் ஏன் மாமா சாப்பாடு வேணாம் சொல்லுறேங்க…

“மனசு சரி இல்லைமா,அதான் கொஞ்சம் நேரம் கழிச்சு நான் சாப்பிட வரேன் நீயும் அத்தையும் சாப்பிடுங்க….

அத்தை நீங்க வரமா எப்படி மாமா சாப்பிடுவாங்க….என்று வம்படியாக கூப்பிட்டு சென்றாள்.

சரிமா வா போகலாம்….அத்தையையும்,கூப்பிட்டுவாமா….

‘‘நீயும் உக்கார்ந்து சாப்பிடு வள்ளி……நீங்க சாப்பிடுங்க நான் அப்புறமேல் சாப்பிட்டுக்குறேன் அத்தை….

‘‘நாளைக்கு வாழை கண்டு நடவு இருக்கு மாமா…..தோப்புல வாழைகண்டு வந்து இறங்கிடுச்சு,நல்ல நேரம் பார்த்து நடவு வேலைய ஆரம்பிக்கணும் மாமா’’என்று முத்தையாவிற்கு நியாபக படுத்தினால் வள்ளி.

‘ஆமா வள்ளி…எனக்கு நியாபகம், இருக்கு நீயும் அத்தையும் காலைபொழுதுல வாழைத்தோப்புக்கு வந்துடுங்க’

‘‘ஆமாம் வள்ளி,உன் கையாலா இந்த வாழைகண்டு நடவு செஞ்சா நம்ம குலம் வாழையடி வாழையா தலைக்கும்’’என மீனாட்சி பேச்சுவாக்கில் கூறினார்.

‘‘ஐயா டவுனுக்கு போய், பூஜை பொருள் வாங்கணும் சொன்னேங்க ஐயா,அதான் உங்களுக்கு நியாபகபடுத்த வந்தேன், அப்படியே திருமூர்த்தி ஐயா உங்கள பார்க்கணும்னு சொன்னங்க ஐயா’’என்றார் நல்லதம்பி.

‘சரி நல்லா’ வா போய் திருமூர்த்தி ஐயாவ பார்த்துட்டு அப்படியே டவுனுக்கு போயிட்டு வரலாம்’

‘‘மீனா,வள்ளி, நாங்க போயிட்டு வரோம்’’என்று கூறிசென்றார்.

வள்ளியும் சாப்பிட்டு முடித்து அவள் அறைக்கு சென்றாள், துவைத்ததுணியை மடித்து அலமாரியில் வைக்கும்போது ஒரு சிறிய ஆல்பம் அவள் கையில் கிடைத்தது,அதை பிரித்து பார்த்தால் அதில் பாண்டியனும்,வள்ளியும் இருவரும் கல்யாணம் முடிவு செய்வதற்கு முன் எடுத்த போட்டோ,அதை எடுத்துகொண்டு கட்டிலில் அமர்ந்து ஒவ்வொரு போட்டோவையும் பார்த்து,அந்த நினைவுக்கு சென்றாள்.

‘‘அத்தான்,இதோட என் படிப்பு முடிஞ்சுடும் அதுக்கடுத்து நமக்கு கல்யாணம் பேச சொல்லுங்க உங்களை விட்டு என்னால இருக்கமுடியாது’’என்று அவனின் கையை கோர்த்துக்கொண்டு அவளின் ஆசை கூறிக்கொண்டு இருந்தால்.

‘சரி உன் படிப்பு முடிஞ்சுடுச்சு ஆனா நான் அப்பாக்கிட்ட வாக்குகொடுத்த மாதிரி அந்த நெல் அறுவடை லாபம், நான் காட்டனும் அது இன்னும் முடியல,அது முடிஞ்சா பின்னாடிதான் நமக்கு கல்யாணம்,பதினஞ்சு வருசமா என்னகாக காத்திட்டு

இருந்தேங்க, இன்னும் மூணு மாசம் மட்டுதான் சரியா'என்று அவளை கொஞ்சியும்,கெஞ்சியும் சொன்னான்.

''என் அத்தானுக்காக நான் ஜென்மம் முழுசும் காத்துட்டு இருப்பேன்,இந்த மூணு மாசம் காத்துட்டு இருக்கமாட்டேனா''

'இதான் என் வள்ளியம்மா,சொன்ன புரிஞ்சுக்குவாங்க,அதுனாலதான் உங்கள இன்னும் காதலிக்குறேன்'

''நானும்,உங்களைவிட அதிகமா காதலிக்குறேன் அத்தான்''என அவனின் மார்பில் சாய்ந்துகொண்டு பேசும்பொழுது,அவளுக்கு தெரியாமல் எடுத்த போட்டோ.

''பாதி போட்டோ பார்க்கும் பொழுது அவளுக்கு அவள் அண்ணனிடம் இருந்து போன் வந்தது, ''சொல்லுங்க அண்ணா எப்படி இருக்கேங்க'' இங்க எல்லோரும் நல்லா இருக்காங்க,நீங்க எப்படி இருக்கேங்க''

''நான் நல்லா இருக்கேன் ஸ்ரீகுட்டி,சாப்பிட்டயா,மச்சான் போன் பண்ணுணாங்களா''

'அத்தான் எப்பவுமே,நைட்தான் போன் பண்ணுவாங்கண்ணா,இப்போ அவங்களுக்கு வேலை இருக்கும்'

‘‘ஓ அப்படியா சரிமா நானும் மச்சானுக்கு போன் பண்ணி பார்த்தேன் ஆனா எடுக்கல அதான் உன்கிட்ட கேட்டேன்’’

‘தெரியலேயே அண்ணா,வேலையா இருப்பாங்க’

‘‘சரிமா,நான் அடுத்த மாசம் ஊருக்கு வரேன்,இன்னும் யாருகிட்டயும் சொல்லல நீயும் யாருகிட்டயும் சொல்லாத,சப்ரைஸா இருக்கட்டும்’’

‘ஓ அப்பிடியா அண்ணா சரிண்ணா,நான் யாருகிட்டயும் சொல்லமாட்டேன்’

‘சரிமா நான் வேலை இல்லாதப்போ போன் பண்ணுறேன்,மச்சான் போன் பண்ணுனாங்கனா நான் அவங்களை விசாரிச்சேன்னு சொல்லு’ அழைப்பை துண்டித்தான் மலைமாறன்.

‘‘சரிங்கண்ணா’’

அடுத்த மாசம் அண்ணா வராங்க,அப்படியே அவங்களுக்கும், கீர்த்திக்கும் கல்யாணம் பேச சொல்லணும் அப்போதான் அத்தைக்கும், மாமாவுக்கும் சந்தோசமா இருக்கும்.

தாயி,அந்த லெட்சுமி இன்னைக்கு கன்னு போடபோகுது சீக்கிரம் வா தாயி,என்று பாட்டி கூற..இதோ வந்துட்டேன் பாட்டிம்மா.

‘‘அய்யோ மாமாவேற டவுனுக்கு போயிருக்காங்களே பக்கத்துல திருமூர்த்தி ஐயா இருந்தா வர சொல்லுங்க முத்து’’

இதோ போறேன் தாயி….

‘‘ஒன்னுமில்லை லெட்சுமி,ஒண்ணுமில்லை சரியா’’என்று அந்த மாட்டின் மூக்கணாங்கயிறை பிடித்து அதன் தலையை தடவிகொடுத்தால்.

ஆனால் மாடு கொஞ்சம் மிரண்டுகொண்டே இருந்தது,பாட்டி மாட்டோட வயிற தொட்டு பாருங்க இன்னும் எத்தன நிமிசத்துல கன்னுபோடும் சொல்லுங்க…

‘‘இன்னும் கால்மணி நேரத்துல கன்னுபோடும் தாயி’’

‘நீங்க வெந்நீர் காய வையுங்க பாட்டி,முத்து மூர்த்தி அய்யா எங்க’

‘‘தாயி அய்யா இப்போதான் தோட்டத்துக்கு போனாங்களா, நான் ஆளுககிட்ட சொல்லிவிட்டு இருக்கேன் தாயி’’

‘நீங்க மூக்கணாங்கயிற பிடிங்க நான் என்னனு பார்க்குறேன்’ என்று அவள் மாட்டின் பின்பகுதியில்,வாலை தூக்கிவிட்டு பார்த்தால், அதில் கன்னுக்குட்டியின் தலையும்,முன்னங்காலும்,

கொஞ்ச கொஞ்சமாக வெளியேவர,வள்ளி தானே அதுக்கு பிரசவம் பார்த்தால்.

‘‘தாயி மாடு பயந்துக்கும்,பெரிய ஐயா வந்தவுடனே அது என்னனு பார்க்கலாம்’’என்று அவளை தடுத்தனர்.

‘வேணாம் பாட்டி,இப்பவே தலையும்,காலும் வெளியே வரபோகுது, இன்னியும் காத்திருந்தா மாட்டுக்கு ஆபத்து வந்துடும், நானே அந்த கன்னுக்குட்டிய வெளியே எடுக்குறேன்’என்று அவளின் இரு கைகளையும் மாட்டின் பிரசவிக்கும் வாயில் பகுதியில் உள்ளே விட்டு கன்னுக்குட்டியின் இரு கால்களையும் பிடித்து கொஞ்சம் கொஞ்சமாக வெளியே கொண்டு வந்தால்.

‘பாட்டி மாடு மிரளுது பார்த்து பிடிங்க,முத்து நீங்களும் மாட தடவிகொடுங்க அப்போதான் அது மிரளாது,இன்னும் செத்த நேரத்துல கன்னுக்குட்டிய வெளியே எடுத்துடலாம்’ என சொல்லிக்கொண்டு அந்த கன்னுக்குட்டியை வெளியே எடுத்தால்.

‘‘கீழே விழுந்த கன்னுக்குட்டியை,தாய் பசு தன் நாவினால் தடவிகொடுத்து அதன் மீது உள்ள உதிரத்தை தொடைத்தது’’

‘முத்து அந்த வென்னீர கொண்டு வாங்க,பாட்டி சுண்ணாம்பு,மஞ்சளும் கலந்துகொண்டுவாங்க’என்று அந்த மாட்டை குளிப்பாட்டி அதற்க்கு சாம்பிராணி காட்டி,அதை தொழுவத்தில்

கட்டி வைத்து அதன் பக்கத்திலே அதன் கன்னுக்குட்டியை படுக்க வைத்தனர்.

வள்ளி,மாட்டுக்கு பிரசவம் பார்த்தது,அனைவருக்கு தெரிந்து அனைவரும் கூடிவிட்டனர்.

முத்தையா,திருமூர்த்தி,மீனாட்சி, வள்ளியின், அம்மா அப்பா, ஊரே அந்த வீட்டின் முன்தான் இருந்தது.

‘‘தாயி அந்த பார்வதியோட குணம் உன்கிட்ட இருக்கு, அதுனாலதான் அந்த லெட்சுமிக்கு உன் கையாள கன்னு பிறக்கணும்னு இருந்திருக்கு’’என அந்த பாட்டி கூற.

‘என் மருமகளாச்சே,அவ கைராசிக்காரி,அவ மண்குடம் தொட்டாலும், அது பொன்குடமா மாறும் அப்படிபட்டவ என் மருமக’என்று மீனாட்சி பெருமையில் சொல்ல.

‘‘தாயி அப்படியே நீயும் எப்போ நல்ல செய்தி சொல்லபோற, அதுக்குதான் நாங்களும் காத்துட்டு இருக்குறோம்’’என ஒரு பெண்மணி கூற.

‘‘கூடிய சீக்கிரம்,நீயும் நல்ல செய்தி சொல்லணும்’’என்று திருமூர்த்தி அவளின் நெற்றியில் திருநீறு வைத்து சொல்லிச்சென்றார்.

‘ஆனால் வள்ளியோ, அனைவரும் நல்ல செய்தி சொல்லணும்,என்றவுடன் வெட்கம்பட்டுக்கொண்டு உள்ளே சென்றாள்.

‘‘அது எப்படி கரெக்டா மீட்டிங் நடந்தத எழுதிருக்கேங்க,நீங்க மீட்டிங் அட்டென் பண்ணல,அப்புறம் எப்படி ப்ரியா’’என அவளை கேள்விகேட்டான்.

‘சாப்ட்வேர் பத்தி எனக்கு கொஞ்சம் தெரியும்,அதை வச்சுதான் இன்னைக்கு நீங்க என்ன டாபிக் பேசி இருப்பேங்கனு, அதையே எழுதி உங்களுக்கு மெயில் பண்ணிருக்கேன் சார்’என்று திக்கி திணறி கூறினால்.

‘‘ஓகே நீங்க போங்க,இனி இந்த மீட்டிங் மிஸ் பண்ணமாதிரி வேற எந்த மீட்டிங்கும்,மிஸ் பண்ணகூடாது ஓகே’’

‘‘ஓகே சார்’’

‘என்ன மீட்டிங் அட்டென் பண்ணலை அப்புறம் எப்படி நீங்க எழுதி கொண்டு வந்தேங்கனு கேட்டனா’என்று சரியாய் சொன்னான் பிரகாஷ்.

‘‘எப்படி டா வெளிய வந்து ரெண்டு நிமிசம்கூட ஆகல எப்படி கண்ண்டுபிடிச்ச’’

‘இதெல்லாம் இந்த கம்பெனி ஓனர்க்கே தெரியும்,சரி அதைவிடு இன்னைக்கு சாமி 2 மூவி ரிலீஸ் ஆகிருக்கு,ரெண்டு டிக்கெட் புக் பண்ணிருக்கேன் ஈவ்னிங் அஞ்சு மணிக்கு ரெடியா இரு ஓகே’

‘‘நான் வரல பிரகாஷ்,அம்மா வீட்டுக்கு சீக்கிரம் வரசொல்லிருகாங்க,அதனால நீ உன் ஆளா கூப்பிட்டு போ’’

‘யாரு அந்த அனிதாவ சொல்லுறையா,அவளுக்கு ஏற்கனவே ஆள் இருக்கு’

‘‘நான் அனிதாவ சொல்லல,பாண்டியன் சாரா சொல்லுறேன்’’என்று அவனை கலாய்த்துகொண்டு இருந்தால்.

‘யாரு அந்த பைல்வான கூப்பிடு போறதுக்கு பதிலா,நான் தனியாவே போய் படம் பார்த்துட்டு வந்துடுவேன்,நீ வரையா இல்லையா சொல்லு’

‘‘அதான் சொன்னேல அம்மா வர சொல்லிருக்காங்க சோ முடியாது’’

ஓகே நான் அதை கேன்சல் பண்ணிட்டு நாளைக்கு புக் பண்ணிடுறேன் நாளைக்கு உனக்கு ஓகேவா…

“அவளோ யோசித்து ‘ஓகே போகலாம்’’ என்று சொன்னவுடன்தான் அவளைவிட்டான்.

“ஹலோ பாண்டியன் நீங்க தேடிவந்த குடும்பம் கடைசியா நெல்லையில இருந்திருக்காங்க அப்புறம் அவங்க திருச்சிக்கு மாறி இருக்காங்க ஆனா அங்க போய் விசாரிச்சா அவங்க இப்போ சென்னையில இருக்குறதா சொல்லுறாங்க,அந்த குடும்பத்துல,நீங்க சொன்னமாதிரி மூணு பேர்தான் இருக்காங்க’’

‘ஓகே சார்,ஆனா இப்போ அவங்க அட்ரெஸ் கிடைக்குமா’

“அதுக்குதான் முயற்சி செஞ்சுட்டு இருக்கோம், பாண்டியன், ஆனா அட்ரெஸ் கிடைக்கல இன்னும் ஒரு வாரம் டைம் கொடுங்க அதுக்குள்ள கண்டுபிடிச்சு கொடுக்குறேம்’’

‘ஓகே சார்,ஆனா நான் அவங்கள தேடுறேனு யாருக்கும் தெரியாகூடது, முக்கியமா அந்த திவாகரனுக்கு தெரியாகூடது சார்’

“நீங்க பர்சனலா கொடுத்த வேலை இது,யாருக்கும் ஒரு துளி விசயம்கூட தெரியாவிடாமாட்டோம் பாண்டியான்,எங்களை நம்பலாம்’’

‘சரிங்க சார்’என்று அழைப்பை துண்டித்தான்.

டேய் அந்த தாமரை குடும்பம் எங்க இருக்குனு கண்டுபிக்க இவ்வளோ காலமா எடுத்துப்பேங்க,அந்த பாண்டியன் கைக்கு அந்த குடும்பம் கிடைக்குறதுக்கு முன்னாடி என் கைக்கு அந்த குடும்பம் கிடைக்கணும்,இல்லையினா உங்களை கொன்னுருவேன்…

''ஏன் அந்த குடும்பத்த இத்தன வருசமா தேடிட்டு இருக்கேங்க,அய்யா அவங்களுக்கு உங்களுக்கு பகையா,இல்லை அந்த குடும்பத்த பழிவாங்க போறேன்களா''என்று அவன் கூட்டாளி ஒருவன் கேட்க.

''எனக்கு அந்த குடும்பத்தோட பரம்பரை பகைடா,அதை எல்லாம் அந்த பொண்ண கல்யாணம் செஞ்சாதான் இன்னும் அந்த குடும்பத்த அதிகமா பழிவாங்க முடியும்,அதான் ஒவ்வொரு ஊருலயும் அந்த குடும்பத்த பத்தி விசாரிச்சுட்டு இருக்கேன்''

''யாருனே அந்த பொண்ணு''

'அவளை கண்டுபிடிச்சு கல்யாணம் பண்ணும்போது பாரு, அப்போ தெரியும் யாரு அந்த பொண்ணுனு'

# அத்தியாயம் 4

அத்தை நம்ம கீர்த்திக்கு இன்னும் மூணு மாசத்துல படிப்பு முடிஞ்சுடும், படிப்பு முடிஞ்ச கையோட எங்க அண்ணனுக்கு கீர்த்திக்கு கல்யாணத்தையும் முடிச்சுடலாம்,மாமாகிட்ட இதை பத்தி பேசலாமா அத்தை.....

'ஆமா வள்ளி நான்கூட மறந்துட்டேன்,அவளுக்கும் காலாகாலத்துல கல்யாணத்தை முடிச்சுட்டா அடுத்து தரணிக்கு முடிக்க சரியா இருக்கும்,நான் மாமாகிட்ட நல்ல நாள் பார்த்து பேசுறேன் வள்ளி சரியா'

''ம்ம் சரிங்க அத்தை''

''முத்தையா பாண்டியன் எப்படி இருக்கான்,அங்க அவனுக்கு எல்லாம் சவுகரியமா இருக்கா,என் பிள்ளைனால அவனுக்குதான் தொந்தரவு இதுக்குதான் அவனை பாண்டியன்கூட அனுப்பமாட்டேனு சொன்னே எங்க கேட்டான் உன் பிள்ளை, அவனுக்கு அவன் காரியம் ஜெயிக்கணும்''என்று திருமூர்த்தி பாண்டியனை பற்றி முத்தையாவிடம் விசாரித்துக்கொண்டு இருந்தார்.

'ஹா ஹா என்ன மூர்த்தி அய்யா உங்க பிள்ளைய பத்தி நீங்களே குறைகூறலாமா..அவனுக்கென்ன ராஜா மாதிரி இருக்கான் அவன் தங்குறதுக்குனு தனியா வீடு வாங்கி கொடுத்திருக்கேன், எல்லாம் வசதியும் அவனுக்கு ஏற்படுத்தி கொடுத்திருக்கேன், சமையல் மட்டும் அவனே பண்ணிக்குவான், பிறகு என்ன... பிரம்மாதான் வேலையில கவனம் இல்லாம விளையாட்டு பிள்ளையா இருக்கானு ஒருமுறை பாண்டியன் சொன்னான் அய்யா'

"அதுக்குதான் சொன்னே முத்தையா எதுக்கு அவனையும் உன்கூட வெளியூருக்கு கூட்டிட்டு போறேன்னு அவனால ரொம்ப தொல்லையா இருக்கும் சொன்னே பாண்டியன்தான் நான் அவனை பார்த்துகிறேன் அய்யான்னு சொல்லி கூட்டிட்டு போயிட்டான், எப்போ ஊருக்கு வராங்க பாண்டியனும்,என் பிள்ளையும்"

'அது தெரியல அய்யா,ரொம்ப பெரிய வேலையாம்,முடிய இன்னும் நாலு அஞ்சு மாசம் ஆகுமா, அப்படின்னு வள்ளிதான் சொல்லுச்சு'

'அப்போ சரி வள்ளி சொன்னா எல்லாம் சரியாதான் இருக்கும், அப்புறம் கீர்த்திக்கு மாப்பிள்ளை பார்க்கணுமா இல்லை மாறனுக்கு கட்டிகொடுக்க போறியா'என்று கேட்டார்.

“வெளி மாப்பிள்ளை நம்பி எப்படி கட்டிகொடுக்க முடியும் அய்யா,மாறனுக்கு கீர்த்தினு நான் எப்பவோ முடிவு பண்ணிட்டேன் அய்யா,வள்ளிகிட்டையும்,என் தங்கச்சிகிட்டையும் ஒரு வார்த்தை கேக்கணும்,ஏனா மாறன் வெளிநாட்டுல வேலைபார்க்குறான் அதான் கொஞ்சம் யோசனையா இருக்கு” என்றார்.

‘இங்க பாரு முத்தையா,தமிழ்செல்வி உன்கூட பிறந்த தங்கச்சி அப்படி இருக்க,அண்ணே மகளை தன் பையனுக்கு கல்யாணம் கட்ட காசுக்குமா என்ன,நீ வேணா பாரு தமிழு நாளைக்கே உங்கிட்ட பரிசம்போட தேதி குறிக்க வரும்’என்று அவர் கூற.

“உங்க வாக்கு பொன்னாகட்டும் அய்யா”என இருவரும் தங்களது பிள்ளைகளை பற்றி பேசிக்கொண்டு இருந்தனர்.

“என்ன மாமா உங்களை பார்க்கவே முடியல என்னை மறந்துட்டு அப்படி என்ன வேலை உங்களுக்கு,இப்படி என்னை நினைக்காம உங்க வேலைதான் முக்கியம்மா இருந்துச்சுனா நான் என் அப்பா சொல்லுற மாப்பிள்ளைய கல்யாணம் பண்ணிப்பேன்”

“என் தங்கம்,இந்த மாமாவுக்கு உன்னை நினைக்காம இருக்கமுடியுமா, எல்லாம் அந்த பைல்வான்தான் ரொம்ப வேலையா கொடுக்குறான் உங்க அண்ணே, அவனை சமாளிச்சு உன்னை கவனிக்குறதுக்குள்ள இந்த மாமா ரொம்ப டயர்ட்

ஆகிடுறேன் செல்லம்,அதான் மாமா உன்னை பார்க்க ஓடோடி வந்திருக்கேன் ஆனா நீ ஒன்னும் தரமாட்டேங்குற போ இந்த மாமாகூட பேசாத’’

‘‘அச்சோ என் மாமாவுக்கு இல்லாததா, இந்தாங்க என்று அவள் அவனின் கன்னத்தில், முத்தம் கொடுக்க வர,எங்கிருந்தோ பிரம்மா டே பிரம்மா,என்று பாண்டியான் அவனை எழுப்ப, அவனோ இன்னும் கொஞ்சம் கிட்ட வா என் தங்கம்,என்று அவன் பாண்டியனுக்கு முத்தம் கொடுக்க போக, பாண்டியனோ அவன் தலையில் கொட்டி முழிக்க செய்தான்.

‘‘அய்யோ அம்மா, என் தலை’’என்று அவன் தலையை தேய்த்துகொண்டே முழித்தான்,அய்யோ மச்சான் உங்க தங்கச்சிதான் பார்க்க வரசொன்னா அவளை அடிங்க’’என்று பயத்தில் கூறினான்.

‘டேய் பிரம்மா நான் பாண்டியான் உன் மச்சான் இல்லை’’என மறுபடியும் அவனை கனவில் இருந்து விழிக்க செய்தான்.

‘‘எங்க பாண்டியா என் மாமா பொண்ணு தங்கம்,அவதானே இங்க என் பக்கத்துல இருந்தா, இப்போ நீ இருக்க’’

‘போடா பக்கி,உன் மாமா பொண்ணு தங்கமலரு இந்நேரம் பிள்ளையாருக்கு தண்ணி எடுத்து ஊத்திட்டு இருப்பா ‘‘என் மாமா நல்ல இருக்கணும்,அவருக்கு எதுவும் ஆககூடாதுன்னு’’ஆனா இங்க வந்து பார்த்தா தான் தெரியும் பொண்ணுங்கள சைட் அடிக்குறான்னு’

‘‘வேணாம் பாண்டியா என்னை கேலி செய்யாத,நான் என்னதான் மத்த பொண்ணுங்கள பார்த்தாலும் என் மாமா பொண்ணு எனக்குதான்’’என்று கெத்துடன் சொன்னான்.

‘உன் மாமா பொண்ணு உனக்குத்தான், அதை நீ பெரிய அய்யாகிட்ட சம்மதம் வாங்கி,உன் மாமாகிட்ட பொண்ண கேட்டு, நீ கல்யாணம் பண்ணுறதுக்குள்ள எனக்கு இன்னொரு கல்யாணம் முடிஞ்சுடும்’என எதார்த்தமாக கூற.

‘‘என்னது இன்னொரு கல்யாணமா,பாண்டியா நீ சரி இல்லை, வள்ளி தங்கச்சி இருக்கும் போதே இன்னொரு பொண்ணா, இரு நான் வள்ளிகிட்ட சொல்லுறேன்’’

‘டேய் நான் இன்னொரு கல்யாணம்னு சொன்னது,எனக்கும் வள்ளியம்மாக்கும் நடக்குற அறுபதாம் கல்யாணத்தை சொன்னே, அதுக்குள்ள நீ எங்கயோ போயிட்ட, நீ நான் பேசுனத

சொன்னேனா வள்ளியம்மா நம்பமாட்டாங்க என்மேல அவ்ளோ நம்பிக்கை வச்சு இருக்காங்க வள்ளியம்மா,என்றான்.

“இரு உன் மாமாகிட்ட நான் உனக்கு பொண்ணு கொடுக்ககூடாதுன்னு சொல்லுறேன் அப்போதான் நீ அடங்குவ, அப்படியே தங்கத்துக்கிடையும் சொல்லுறேன் உன்னை விட்டு வேற பொண்ண சைட் அடிக்குறானு”என்று அவனை பயமுறுத்தினான்.

“என் ராசா இல்ல,நான் போய் உன்னை பத்தி வள்ளிகிட்ட சொல்லுவேனா, அதான் நீயே சொல்லிட்டேயே நான் எது சொன்னாலும் வள்ளி தங்கச்சி நம்பாதுன்னு,அப்புறம் என்ன”என ஜாகா வாங்கினான்.

‘ம்ம் அது அப்படி இருக்கணும்,ஆபிஸ் டைம் ஆச்சு நீ முன்னாடி போ நான் ஒரு முக்கியமான வேலையை முடிச்சுட்டு வரேன்’

“இன்னைக்கு நானும் உன்கூட வரேன்”

‘அதெல்லாம் வேணாம்,பிரம்மா நான் வேலைய முடிச்சுட்டு வரேன் உனக்கு இன்னைக்கு முக்கியமான ட்ரைனிங் இருக்கு அதுனால நீ போ’

“எங்கயோ போற ஆனா என்கிட்டே சொல்லமாட்டேங்குற,பார்த்துகிறேன் கடல்ல இருக்குற மீனை பிடிச்சா கடைக்கு கொண்டுவரமாட்டங்களா என்ன அப்போ அந்த முக்கியமான மீனை பார்த்துக்குறேன்”

‘ஒரு பழமொழி கூட ஒழுங்கா சொல்ல தெரியல நீ எல்லாம்,எங்க வேலை பார்க்க போற, போ வேலைய பாரு’என்று அவனை அனுப்பிவைத்தான்.

“என்ன முக்கியமான வேலையா இருக்கும் அப்படி என்கிட்டே மறைக்கிறானா இது ரொம்ப முக்கியமானா விசயமா இருக்கு அப்படி என்ன இருக்கும்” என அவன் யோசித்துக்கொண்டே பைக்கில் சென்றுகொண்டுஇருக்கும் போது யாரோ தன்னை அழைப்பது போல் இருந்தது “டேய் பிரகாஷ் எருமை நில்லுடா”என்று ப்ரியா கூப்பிட அவனோ “என்னை இவ்ளோ பாசமா கூப்பிடுற அந்த ஜீவன் யாரு”என நினைத்துக்கொண்டே பைக்கை நிறுத்தினான்.

‘ஹே ப்ரியா என்னை இங்க நின்னு என்னை கூப்பிட்டுட்டு இருக்குற,என்ன விஷயம்’

“ஹ்ம்ம் என் மாமா பையன் இப்போ வர்ற நேரம் அதான் நின்னுட்டு இருக்கேன்,லூசு கம்பெனியை தாண்டி போயிட்டு

இருக்குற அதான் உன்னை கூப்பிட்டு நிறுத்தினே’’அவள் பேசிக்கொண்டு இருக்கும் போது பாண்டியன் உள்ளே நுழைந்தான்.

‘இதோ வந்துட்டான், உன் மாமா பையன் இல்லை, என் அத்தை பையன்’என்றுபிரகாஷ் சொல்ல’அவர்கள் இருவரையும் நோக்கி வந்துகொண்டு இருந்தான் பாண்டியன்.

‘‘என்ன இன்னும் உங்களுக்கு ஆபீஸ்குள்ள வர்ற எண்ணம் இல்லையா,இங்க நின்னு அரட்டை அடிச்சுட்டு இருக்கேங்க’’என கொஞ்சம் கோவமாக பேச.

‘இங்க பாருங்க பாண்டியன்,இது ஒன்னும் உங்க ஆபிஸ் இல்லை, அப்படியே உங்க ஆபீஸா இருந்தாலும் இன்னும் நாங்க ஆபிஸ்குள்ள வரல,நீங்களும் போகல,அப்போ நாங்க ஒன்னும் உங்க ஸ்டாப் இல்லை, நீங்களும் இப்போ ஹச்ஆர் இல்லை, இனிமே வெளிய நின்னு என்னையும்,என் ப்ரிண்டையும் பேசுற வேலையெல்லாம் எங்ககிட்ட வேணாம்,நாங்க ஆபிஸ் வருவோம், இல்லை படத்துக்கு போவோம் உங்களுக்கு என்ன’என்று அவள் கோவமாக பேச பாண்டியனோ அவளையும்,பக்கத்தில் இருக்கும் பிரகாஷையும் மாறி மாறி பார்த்தான்.

‘‘பிரக்காஷ் ப்ரியாவா இப்படி பேசியது என்று அவளையே பார்த்துகொண்டு இருந்தான்’’.

‘ப்ரியா பேசிமுடித்ததும்,உள்ளக்குள் உதறல் எடுத்தாலும், வெளியே கெத்தாக இருந்தால்’

‘‘பாண்டியன் எதுவும் பேசாமல் ஆபிஸ்க்குள் சென்றான்’’

‘ஏய் உனக்கு கொஞ்சமாச்சும் அறிவு இருக்கா,எதுக்கு தேவையெல்லமா அவன்கிட்ட சண்டை போடுற’

‘‘டேய் உனக்கும் சேர்த்துதானே சண்டை போட்டேன் அப்புறம் ஏன் டா,என்மேலேயே கோவம்படுற’’

‘பெரிய இந்தியா பாகிஸ்தான் சண்டை,இதுல எனக்காக சண்டை போடுறலாம்,அவன் என்ன ஆப்பு வைக்கபோறானோனு நான் பயந்துபோயிருகேன்,இதுல நீ வேற ஏன் ப்ரியா,இன்னைக்கு அவன் என்ன ப்ரோக்ராம் கொடுத்து என்னையும், உன்னையும் பாடுபடுத்தபோறானோ வா போகலாம் ஆபிஸ்குள்ள’என்று அவளை அழைத்துகொண்டு லிப்ட்க்குள் சென்றான்.

‘‘ஹே பயந்தாகொல்லி இந்த ப்ரியா இருக்க பயமேன், பயப்படமாம வா டா எந்த ப்ரோக்ராம் கொடுத்தாலும் நான் செஞ்சுத்தரேன் உனக்கு, இதுக்குபோய் அழுக்குற’’என அவனுக்கு தைரியம் சொல்ல.

'நீ பண்ணிடுவ அதுக்கடுத்து அவன் என்கிட்டே கேக்குற கேள்வியில்ல நான்தான் பதில் சொல்லணும், அது எப்படி இருக்கும் தெரியுமா "குற்றம் நடந்தது என்ன" அப்படின்னு கேள்விமேல கேள்விகேட்டு என்னை இன்னிக்கு முழுசும் என்னை ஆபிஸ்க்கு எழுதிகொடுக்கபோறான்'

"அவன் புலம்பல் லிப்ட் நின்றும் தொடர்ந்து கொண்டு இருந்தது, அனைவரும் அவனை பார்த்து ஒருமாதிரி சிரித்துகொண்டு இருந்தனர், "டேய் புலம்பாம வா எல்லாரும் உன்னைத்தான் பார்க்குறாங்க"என்று அவள் கூற.

'என்ன பிரகாஷ், வீட்டுல பொண்ணு பார்த்துட்டாங்களா என்னை இப்போவே புலம்ப ஆரம்பிச்சுட்ட'என அனிதா கிண்டல் செய்ய.

"ம்ம்க்கு இப்போ அதுக்குதான் எனக்கு குறைச்சல்,போ மா போய் புதுசா சாப்ட்வேர் கண்டுபிங்க,என்னையெல்லாம் கிண்டல் செய்ய வந்துட்டா"

'பிரகாஷ் இப்போ நீ ஏன் கோபம்படுற'

"ம்ம் வேண்டுதல்"

‘‘சரி இன்னைக்கு என்ன வேலைன்னு பார்க்கலாம்,என்று மெயில் ஓபன் செய்தால்’’

‘பிரகாஷ் இன்னைக்கு உனக்கு ட்ரைனிங்,ஆல்ரெடி ஸ்டார்ட் ஆகி போயிட்டு இருக்கு இன்னும் போகாம என்ன பண்ணுற’என்று ஒருவன் கூற.

‘‘அய்யோ பிரகாஷ் இன்னைக்கு சிக்கினது நீ இல்லை நான்தான்’’என ப்ரியா அலற.

‘அடித்துபிடித்து,அவன் எனவோ ஏதோ என்று பார்க்க,அவள் விழிகள் மெயிலை விட்டு அசையவில்லை’

‘‘பிரகாஷும், பார்த்துவிட்டு ‘‘அச்சோ ப்ரியா உன்னை இன்னைக்கு வச்சு செய்யப்போறான்,ஆல் தி பெஸ்ட்’’என்று அவன் வாழ்த்திவிட்டு செல்ல,இவளோ இன்னும் அந்த அதிர்ச்சியில் இருந்து வெளிவரவில்லை.

‘‘இந்த போட்டோவில இருக்குறவங்க உங்களுக்கு தெரியுமா’’

‘ம்ம் தெரியும்,என் வீட்டுலதான் குடியிருந்தாங்கா,ஆனா அவங்க வீட்டை காலி பண்ணி ரொம்ப நாள் ஆச்சு,இப்போ வந்து இவங்களை விசாரிக்குறேங்க’

‘‘அது உனக்கு தேவையில்லை,இப்போ அந்த குடும்பம் எங்க இருக்காங்க அதுமட்டும் சொல்லுங்க’’

‘இல்லைங்க இப்போ எங்க இருக்காங்கனு தெரியலை,நீங்க யாருன்னு சொல்லலை’

‘‘ம்ம் இந்த குடும்பத்தோட ரொம்ப நெருங்கின சொந்தம்’’என்று பெரியவர் என பார்க்காமல் பேசிசென்றான்.

‘‘ஹெலோ, உன்னை கேட்டு ரெண்டுபேர் வந்தாங்க,ஆமா நீ சொல்லுற மாதிரிதான் அவன் இருந்தான் ,நீ நல்லா இருக்கேள, நான் எதுவும் உங்கள பத்தி சொல்லல,நீ எங்க இருக்கேனு நான் ஒரு வார்த்தை கூட சொல்லம்மா,என் பேத்தி எப்படி இருக்கா,ம்ம் சரிமா நான் வைக்குறேன்’’ என்று பேசிவிட்டு அவர் எதிரில் இருக்கும் கடவுள் கந்தனின் படத்தை பார்த்து ‘‘உன்னை நம்பித்தான் அந்த குடும்பம் இருக்கு கடவுளே நீதான் அவங்கள, அவங்க இடத்துல சேர்க்கணும் என கையெடுத்து கும்பிட்டார். (ஆனால் கடவுள் கந்தனோ, இனிமேதான் என் ஆட்டமே இருக்கு என்ற பாவனையில் சிரித்தார்)

‘‘என்ன அண்ணே,அந்த ஆளு அவங்கள பத்தி எதுவும் சொன்னாரா’’

‘இல்லைடா அந்தாளுக்கே அவங்கள பத்தி தெரியாதுன்னு சொல்லுறான்,அதுவும் அவங்க காலி பண்ணி ரொம்ப நாள் ஆச்சாம்,இனி வேற இடத்துலதான் தேடனும்,வாங்க டா போகலாம்’

‘‘அண்ணே நாம ஏன் சென்னையில தேடக்கூடாது’’என்று ஒருவன் கூற.

‘டேய் சென்னையில எனக்கு தெரிஞ்ச ஆளு இல்லையேடா, அப்புறம் எப்படி தேடுறது’’

‘அண்ணே எனக்கு தெரிஞ்ச ஒருத்தர் இருக்காங்க, அவங்ககிட்ட சொன்ன ஒரு வாரத்துல கண்டிபிடிச்சு கொடுப்பாங்க, நீங்க தேடுற குடும்பத்த’

‘‘அவனோ யோசித்து,சரி போகலாம்,ஆனா அவன் ஒரு வாரத்துல கண்டுபிடிக்கலேனா நீ செத்த வா போகலாம் சென்னைக்கு’’

‘என்மேல நம்பிக்கை வையுங்கனே கண்டிப்பா பிடிச்சுடலாம் அந்த குடும்பத்த’என்று அந்த கும்பல் சென்னைக்கு பயணமானது.

‘‘ப்ரியா,பாண்டியன் கூப்பிடுறாங்க’’

‘அய்யோ நான் இன்னும்,இந்த வேலையா முடிக்கலையே, வேலைய முடிச்சுட்டியா இல்லையானுதான் கேப்பான்,பிரகாஷ் இன்னும் ட்ரைனிங் முடிச்சு வரலையே’என அவள் புலம்பிக்கொண்டு இருந்த போது மறுபடியும் அனிதா அவளை பாண்டியன் அழைத்ததாக கூற, ‘இதோ போறேன்’என்று அவனை பார்க்க சென்றாள்.

‘‘ம்ம் ப்ரியா,அந்த வேலையா முடிச்சுடேங்கனா,இந்த பைல் அஹ இருக்குற வேலையையும் முடிச்சுருங்க’’என அவளை பார்க்காமல், அந்த பைலை எடுத்து கொடுத்தான்.

‘அவளோ அதை வாங்காமல்,அவனை பார்த்து முழித்துகொண்டு இருந்தால்’

அவனோ கையில் உள்ள பைலை இன்னும் வாங்காமல் அவள் நின்றுகொண்டுஇருப்பதை,பார்த்து ‘‘என்ன’’என்று கேட்டான்.

‘‘அது….நான் இன்னும் அந்த வொர்க்க முடிக்கலை,அப்புறம் எப்படி இந்த வொர்க் பார்க்கமுடியும்’’

‘என்ன, இன்னும் அந்த வொர்க் முடிக்கலையா,இவ்வளோ நேரம் என்ன பண்ணிட்டு இருக்கேங்க’

“இல்லை,பாண்டியன் அந்த வொர்க்ல எதுல எரர் இருக்குனு கண்டுபிடிக்கமுடியல அதான்”

‘ஒருவேலையகூட ஒழுங்கா முடிக்கமுடியலை,நீங்க எல்லாம் எதுக்கு ஆபிஸ் வரேங்க ம்ம், சொல்லுங்க’என்று அவன் அவளை பிடித்து கத்திக்கொண்டு இருந்தான்.

“சாரி பாண்டியன்,எவ்வளவு ட்ரை பண்ணியும் என்னால முடிக்க முடியலை”என அழும் நிலையில் அவனிடம் பேசினால்.

‘வாங்க உங்க இடத்துக்கு’என்று அவளின் கம்ப்யூட்டரில் அவன் எந்த இடத்தில் தப்பு நடந்துள்ளது என்று கண்டுபிடித்தான், அதை சரி செய்து முடித்ததும்,கம்ப்யூட்டரில் “டிங்டாங்”என மெசேஜ் டோன் பேஸ்புக்கில் இருந்து அவளுக்கு மெசேஜ் வந்தது, அதை பார்த்ததும் அவன் இன்னும் கோபமானான்.

“ஓ என்னடா இன்னும் வேலைய முடிக்கலேன்னு தைரியமா சொல்லுறேன்னு,இப்போதான் தெரியுது இவ்வளவு நேரம் உங்க லவர்கிட்ட சாட் பண்ணிட்டு இருக்கேங்க மேடம்,உங்களுக்கு பேசுறதுக்கு நேரம் இல்லையா,இல்லை இவன் கொடுக்குற வேலையெல்லாம் நாம செய்யணுமா என்னனு ஒரு திமிரா இருக்கேங்க, இது ஒன்னும் உங்க கம்பெனி இல்லை கண்ட நேரத்துலயும் கண்டவங்கிட்டயும் பேசுறததுக்கு,லுக் ப்ரியா இது

வேலைக்கான நேரம்,இதுகடுத்து ப்ரேக் இருக்கு அப்போ உங்க லவர்கிட்ட பேசுங்க,இன்னும் அரைமணி நேரத்துல எனக்கு இந்த பைல் வரணும் மைன்ட் ட்''என அவன் பேசிமுடித்து சென்றான்.

''அனைவரும் அவளையே பார்த்துகொண்டு இருந்தனர், அவளோ அசைய மறுத்து நின்றுகொண்டிருந்தால்,அப்பொழுது பிராகாஷ் ''என்ன எல்லோரும் நின்னுட்டு இருக்காங்க,யாரவது புது எம்டி வராங்களா,இல்லை அனோன்ஸ்மென்ட் பண்ணுறாங்களா'' என அவனுக்குள்ளே பேசிக்கொண்டு வந்தவன், அப்பொழுதுதான் பார்த்தான் ப்ரியா கண்களில் கண்ணீருடன் நிற்பதை ''இவ ஏன் இப்படி நின்னுட்டு இருக்கா'' என யோசித்துக்கொண்டு அவளின் அருகில் சென்று ''என்ன ப்ரியா எதுக்கு அழுகுற,என்னாச்சு, உடம்பு எதுவும் பண்ணுதா,சொல்லு ப்ரியா'' என்று அவளை கேட்டுக்கொண்டு இருக்கும் போது அனிதா அவனிடம் பாண்டியன் வந்து அவளை சத்தம் போட்டதை கூரிசென்றால்.

''அந்த பைல்வானுக்கு வேற வேலை இல்லை,அவன் திட்டுனத மைண்ட்ல வச்சுக்காத ப்ரியா''என சமதானபடுத்தினான், ஆனால் அவளோ கண்ணீரை துடைத்துக்கொண்டு அவள் இருக்கையை இழுத்துபோட்டுகொண்டு உட்கார்ந்து,அவன்

சரிசெய்துகொடுத்த பைலை கிலித்துபோட்டுவிட்டு, இவளே அந்த தவறை கண்டுபிடிக்க முயற்சி செய்தால்.

‘ஹே ப்ரியா,எதுக்கு அந்த பைல கிழிக்குற’அவள் செய்வதை பார்த்ததும், புரிந்துகொண்டான் இவள் வேலையை முடிக்காமல், எழுந்திரிக்க போவதில்லை என்று.

‘அவனும் அவள் பக்கத்தில் இருந்தே அவள் செய்வதை பார்த்துகொண்டுயிருந்தான், அவளோ வேகவேகமாக அந்த தவற்றை கண்டுபிடித்து அந்த பைலை எடுத்துகொண்டு பாண்டியன் அறைக்கு சென்றாள்’

‘‘படார் என யாரோ கதவை திறக்கும் சத்தம் கேட்டு தலையை திருப்பினான், ‘என்ன’ என்று பேசவருவதற்குள், ‘‘இந்தாங்க இது நீங்க தப்ப கண்டுபிடிச்சகொடுத்த பைல்’’, என இரண்டாக கிழிக்கப்பட்டு இருந்த பைலை அவன் முன் வைத்தால், ‘‘இது நானா சொந்தமா எந்த இடத்துல மிஸ்டேக் ஆகி இருக்குனு கண்டுபிடிச்ச பைல்’’என வேறு ஒரு பைலை அவனிடம் கொடுத்தாள்.

‘‘ம்ம் என்ன சொன்னேங்க நான் லவர்கிட்ட பேசிட்டு இருந்தேனா, ஆமா நான் மெசேஜ் பண்ணிட்டுஇருந்தேன், அப்படியே இருந்தாலும் அது என் பர்சனல் விஷயம் அதுல நீங்க

தலையிட தேவை இல்லை ஓகே''என்று அவள் பதிலடி கொடுத்துவிட்டு சென்றாள்.

''வாங்க அண்ணி,வாங்க அண்ணா,எப்படி இருக்கேங்க''என்று மீனாட்சி வள்ளியின் அம்மா,அப்பாவை வரவேற்றார்.

'வரோம் அண்ணி,அண்ணா,நீங்க,வள்ளி எப்படி இருக்கா'என தமிழ்செல்வி கேட்க.

'தங்கச்சி,மச்சான் எப்படி இருக்காங்க,நீ எப்படி இருக்க'

''எல்லோரும் நல்லா இருக்கோம்அண்ணா,அண்ணி''

'அடடே வாங்க மாமா,வாம்மா தமிழு'என முத்தையாவும் வரவேற்றார்.

''நல்லா இருக்கோம் அண்ணா''

'அம்மா, அப்பா, வாங்க'

''இந்தா வள்ளி,உனக்கு பிடிச்ச பருத்திபால்,முறுக்கு''என்று கொண்டுவந்த பொருளை வள்ளியிடம் கொடுத்தார்.

'உக்காருங்கமா குடிக்க எடுத்துட்டு வரேன்'

''இருமா வள்ளி இன்னைக்கு மச்சான் சொல்லுற பதிலுக்கு அடுத்துதான், இங்க சாப்பிடுவோம்''என வள்ளியின் தந்தை கூற.

‘என்ன மாமா என்ன சொல்லணும்’என கேட்க.

‘‘அண்ணா என் மகன் மாறனுக்கு,உங்க பொண்ண கீர்த்திய கல்யாணம் பண்ணிகொடுக்குறேன்களா’’என்று தமிழ் கேட்க.

‘ஆமா மச்சான்,என் வீட்டுக்கு கீர்த்திதான் மருமகளா வரணும், எப்போ பரிசம் போட வரணும் நல்ல தேதி பார்த்து சொல்லுங்க’

‘‘இதுக்குதான் சாப்பிட மாட்டோம் சொன்னீங்களா,வள்ளி இன்னைக்கு நல்ல விஷயம் பேசி இருக்கோம் சைவ சாப்பாடு போடனும் என் வருங்கால சம்மந்திக்கு’’என்று மறைமுகமாக சம்மதம் சொன்னார்.

‘‘அண்ணா ரொம்ப நன்றினா,இப்போதான் சந்தோசமா இருக்கு’’

‘அண்ணி இந்தாங்க குங்குமம் வைச்சுகோங்க’என மீனாட்சி தமிழுக்கு கொடுக்க.

‘‘இப்போவாச்சும்,குடிக்க கொண்டுவரவாப்பா’’

‘குடும்மா, நான் சாப்பிடுறேன்’என மகிழ்ச்சியில் அந்த குடும்பமே இருந்தது.

‘‘வள்ளி இங்க கொடு நானும் அந்த காய்கறிய நறுக்குறேன், என அவள் அன்னையும்,அத்தையும் பரிசத்திற்கு என்ன பொருள் வாங்க வேண்டும் என்று பேசிக்கொண்டே சமைத்துக்கொண்டு இருந்தனர்.

‘‘பாண்டியனின் மனநிலை கொஞ்சம் சரி இல்லாமல் இருந்தது, வேலையில் கவன சிதறிக்கொண்டு இருந்தது, ‘‘என்னாச்சு எனக்கு ஊருல எல்லாரும் நல்லா இருக்காங்க அப்புறம் ஏன் எனக்கு இப்படி இருக்கு,இன்னைக்கு கோவில் போயிட்டு வரலாம் அப்போதான் கொஞ்சம் நிம்மதியா இருக்கும்,முதல பிரகாஷ்கிட்ட சொல்லணும் இன்னைக்கு அவனை கூட்டிட்டு போகணும்’’என முடிவுடுத்தான்.

‘நீயா ப்ரியா இது,கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அழுதிட்டு இருந்த ப்ரியாவ இது,என சாப்பிட்டுகொண்டிருந்தவளை கேட்டான்.

‘‘டேய் சும்மா சும்மா அழுதேன்னு சொல்லாத’’உள்ள நடந்தத கேளுடா, எப்படி அவனுக்கு டோஸ்விட்டேன்னு’’என்று உள்ளே நடந்ததி கூறிமுடிக்க அவள் அருகில் வந்து நின்றான் பாண்டியன்.

‘பிரகாஷோ அவளையும், அருகில் நிற்கும் பாண்டியனையும் மாறிமாறி பார்த்துகொண்டு இருந்தான்’

“அவளோ என்ன டா, என் பக்கத்துல யாரு இருக்கானு பார்த்துட்டு இருக்குற”என அவள் பக்கத்தில் பார்க்க “பாண்டியன் அவளை பார்த்தவிட்டு,இன்னைக்கு கோவில் போகணும் அதானால ரெடியா இரு சரியா”என பேசிவிட்டு சென்றான்.

‘ஏன் டா அவன் பக்கத்துல இருக்கானு சொல்லமாட்டாய, எருமை’என அவனை போட்டு அடித்துக்கொண்டு இருந்தால்.

“அடிப்பாவி அவன் வந்தும் நீ அவனை பத்தி சொல்லிட்டு இருந்த,அதான் எப்படி நிறுத்துறதுன்னு தெரியலை,சரி விடு,நீயும் கோவிலுக்கு வா போயிட்டு வரலாம்”என அவளையும் அழைத்தான்.

“உன்கூடனா நான் வரேன்,ஆனா அந்த பைல்வானும் வருவானே அதனால நீயும்,அவனும் போயிட்டு வாங்க”

‘ஓகே நான் கிளம்புறேன்,பார்த்து போ ப்ரியா’

“ம்ம் சரி டா பை”என்று இருவரும் விடைபெற்று கிளம்பினர்.

“எந்த கோவிலுக்கு போறோம் பாண்டியா”

‘சிவன் கோவிலுக்கு பிரம்மா’

“அம்மா எங்க இருக்கேங்க”

‘கோவில்ல இருக்கேன் தெய்வா,சாப்பாடு எடுத்து வச்சு சாப்பிடு நான் வந்துடுவேன்’

‘‘சரிமா,பார்த்து வாங்க’’

# அத்தியாயம் 5

“கபாலிஸ்வரன் கோவில்”

‘பாண்டியா அர்ச்சனை தட்டு வாங்கிட்டு போகலாம்’என்று பிராகாஷ் கோவிலில் இறங்கியவுடன் பாண்டியனிடம் கூறினான்.

“ம்ம் சரி ரெண்டு வாங்கு”

‘அர்ச்சனை தட்டு வாங்கிவிட்டு,கோவிலுக்குள் சென்றனர் இருவரும்’

“யாருக்கு அர்ச்சனை”என கோவில் பூசாரி கேட்க.

‘சாமி பேர்க்கு பண்ணுங்க சாமி’என்று பாண்டியன் சொல்ல.

“நீங்க யாரு பேருக்கு அர்ச்சனை பண்ணுறேங்க”

‘சாமி,பேருக்கே பண்ணிடுங்க’என பிரகாஷும் கூற,இருவருக்கும் சேர்த்து அர்ச்சனை செய்ய,இருவரும் கண்மூடி அவர்களது வேண்டுதலை சாமியிடம் வைத்தனர்.

“என் குடும்பமும்,என் ஊர் மக்களும் நல்லா இருக்கணும்,என் வள்ளியம்மாவும் நல்லா இருக்கணும்,அவங்களுக்கு எந்தவித துன்பமும் ஏற்படக்கூடாது,நான் தேடுறவங்களுக்கு எந்த

பிரச்சனையும் ஏற்படக்கூடாது,அவங்களும் நல்லா இருக்கணும், சீக்கிரமே அவங்களை என் கண்ணுல காட்டு அப்போதான் அவங்களை நான் பத்திரமா இடத்துல ஒப்படைக்கணும்''என்று வேண்ட அப்பொழுது ம சத்தம் கேட்டது,கண்விழித்து பார்த்தபோது சிவனுக்கு ஆராதனை காட்டிக்கொண்டு இருந்தார் பூசாரி.

'பிரகாஷோ,பாண்டியன் எதுக்கு இங்க வந்திருக்கான்னு தெரியாது,ஆனா அவன் வேண்டுதல் கண்டிப்பா நிறைவேத்தி கொடுங்க,என் அப்பாவும்,என் தங்கமலரும் நல்லா இருக்கணும், என் ப்ரிண்ட் ப்ரியாவும் நல்லா இருக்கணும்'என வேண்டுதலை வைத்தனர்.

''இருவரும்,சாமிகும்பிட்டுவிட்டு பிராகாரத்தில் அமர்ந்தனர்,அப்போது பிராகாஷ் ''என்ன பாண்டியா திடிர்னு கோவில்க்கு போகணும் தோணுச்சு உனக்கு''

'மனசு ஒருமாதிரி இருக்கு பிரம்மா,அதான் கோவில்லுக்கு போலாம் நினைச்சேன்,வேற ஒண்ணுமில்லை பிரம்மா.

''நீ வேணா,ஊருக்கு போயிட்டு வா பாண்டியா''

'போகணும்'

'இங்கு இவர்கள் பேசிக்கொண்டு இருக்க'

"என்னமா எப்போதும் செய்ய வேண்டிய அர்ச்சனை தானே"என்று பூசாரி கேட்க.

'ஆமா சாமி'என தாமரைசெல்வி கூற.

அந்த பூசாரி,அந்த பெயர்களை கூறி அர்ச்சனை செய்துகொண்டு இருந்தார்,கண்மூடி வேண்டிகொண்டார்.

"பிரசாதம் வாங்கிகோங்கமா,என்று அவர்கையில் பிராசாதம் கொடுத்தார், "ஏன்மா வாரம் வாரம் இதே கிழமையில கோவிலுக்கு வந்து அத்தனை பேருக்கும் அர்ச்சனை பண்ணுறேன்களே,ஒரு முறையாவது அவங்களையும் இந்த கோவிலுக்கு அழைச்சுட்டு வரவேண்டியதுதானே"என்று அய்யர் கேட்க.

'நான் நினைச்சது நடந்தா கண்டிப்பா இந்த கோவிலுக்கு அவங்களையும் கூப்பிட்டு வரேன் சாமி'என தாமரைசெல்வி சொல்லிசென்றார்.

"பாண்டியன்,பிரகாஷும் இருக்கும் தூணுக்கு அடுத்து தாமரை அமர்ந்தார், "பாண்டியா நீ எதுக்கு இங்க வந்திருக்க,யாரை தேடி,"

'நான் யாரையும் தேடி வரல,எனக்கு பிடிச்ச வேலையை பார்க்க வந்திருக்கேன்'

‘‘அப்படின்னு,நீ சொல்லறத நான் நம்பனும்,நம்ம வேலை பார்க்குற கம்பெனியை,நீ சொந்தமா ஆரம்பிக்கற அளவுக்கு சொத்து இருக்கு,உனக்கு கீழ வேலைபார்க்க நூத்துக்கு மேல இருக்காங்க,அப்படி இருக்க இங்க நீ வேலை பார்க்கற,அதுவும் எனக்கு பிடிச்ச வேலை பார்க்குறேன்னு என்ன நம்ப சொல்லுற, அதையும் நான் நம்பனும்,சரி நான் நம்பிட்டேன்’’

‘சரி கிளம்பலாம்,பிரம்மா’

‘‘உடனே பேச்ச மாத்திடுவையே’’என்று அவர்கள் இருவரும் கோவிலைவிட்டு வெளியே வந்தனர்.

‘‘என்ன வள்ளியம்மா, மணி நாலு ஆச்சு இன்னும் தூங்கிட்டு இருக்கேங்க,என அவளை எழுப்பினான் பாண்டியன். அவளோ ‘‘தூக்கத்திலும் அவளின் அத்தன் குரலை கேட்டு எழுந்து அமர்ந்து கண்களை கசக்கிக்கொண்டு பார்த்தால்,அவள் எதிரில் அவளின் அத்தான் அவளை பார்த்து சிரித்துகொண்டு இருப்பதை பார்த்து’’

‘‘அத்தான், நீங்க எங்க இங்க,அதுவும் வேலை இன்னும் முடியலைன்னு சொன்னேங்களே,இப்போ இங்க இருக்கேங்க,’’என்று கேட்டால்.

‘உங்களை பார்க்காம இருக்கமுடியலை வள்ளியம்மா அதான் அடுத்த பிளைட்ட பிடிச்சு வந்துட்டேன் உங்களை பார்க்க’

“அத்தான் உண்மையில வந்துட்டீங்களா”என அவனை கட்டியணைக்க செல்ல ஆனால் அவள் கட்டியணைத்ததோ பக்கத்தில் இருக்கும் கரடி பொம்மையை.

‘என்ன அத்தான் உடம்பு பஞ்சு மாதிரிக்கு,என சொல்லிக்கொண்டே கண் முழித்து பார்த்தால், “ச்சே பொம்மைய தான் கட்டி பிடிச்சேனா,அத்தான் இல்லையா”என கொஞ்சம் ஏமாற்றமாய் இருந்தால்,அப்பொழுது கடிகாரம் ஒலி அடிக்க திரும்பி பார்த்தால் மணி “3.00”தான் ஆகுதா,அப்போ நாம கண்டது கனவா’என அவளுக்குள்ளே சொல்லிக்கொண்டு மீண்டும் உறங்க ஆரம்பித்தால்.

‘மீனா,வள்ளி எழுந்துட்டால’

“இல்லங்க,இன்னும் எழும்பல,எப்பவுமே எனக்கு முன்னாடி எழுந்திருவா,இன்னைக்கு என்னாச்சு தெரியலை,நான் போய் பார்த்துட்டு வரேன்”

‘சரிம்மா போய் பார்த்துட்டு வா’என்று மீனாட்சியை அனுப்பிவைத்தார்.

‘‘வள்ளி,வள்ளி’’என அவளை எழுப்பினார். ‘சொல்லுங்க அத்தை…ஹா …….’என்று கொட்டாவி விட்டுக்கொண்டே எழுந்து அமர்ந்தால்.

‘‘என்ன வள்ளி மணி அஞ்சு ஆச்சு இன்னும் தூங்கிட்டு இருக்க,உடம்பு எதுவும் சரி இல்லையா’’என அவளின் நெற்றியில் கை வைத்து பார்த்தார். ‘அதெல்லாம் ஒண்ணுமில்லை அத்தை,நடு ராத்திரில முழிப்பு வந்துட்டுச்சு அதான் தூக்கம் வரல’

‘‘ஹ்ம்ம் இதுக்குதான்,நானும் உன்கூட தூங்குறேன்னு சொன்னே, ஆனா நீதான் வேணான்னு சொல்லிட்டே,இப்போ பாரு நடு சாமத்துல ஏதோ உன்னை பயமுறுத்திருக்கு,நான் போய் உடுக்கை அடிக்குற உடுக்கை சாமிய கூப்பிட்டு வரசொல்லுறேன்’’ என்று அவர் எழுந்திரிக்க.

‘அத்தை,அதெல்லாம் யாரும் என்னை பயமுறுத்தல,எனக்கு ஒண்ணுமில்லை,நான் குளிச்சுட்டுவரேன் அத்தை,நீங்க போய் வேலைய பாருங்க,இன்னைக்கு கந்தசஷ்டி விரதம் அத்தை,வீட்டை துடைக்கணும், இன்னும் வேலை அதிகமா இருக்கு அத்தை’

‘‘ஆரம்பிச்சுட்டா இனி எல்லாம் வேலைய முடிச்சுட்டுதான்,இவளுக்கு தூக்கம் வரும்,நான் சொன்ன எங்க கேக்கபோறா’’என்று அவர் புலம்பிக்கொண்டு கீழே சென்றார்.

‘வள்ளி,குளித்துவிட்டு வாசலுக்கு சென்று,கோலம் போட்டுவிட்டு,சூரியனை கும்பிட்டுவிட்டு வீட்டுக்குள் நுழைந்து சமையல் அறைக்கு சென்று வீட்டில் இருக்கும் அனைவருக்கும், காபி போட்டுகொடுத்தாள்,முத்தையாவிறுக்கு கொடுக்கும் போது வாசலில் பாண்டியன் வந்து நின்றான்.

‘‘என்னமா வள்ளி உடம்பு எதுவும் சரி இல்லையா,இன்னைக்கு இவ்ளோ தாமதமா எழுந்திருச்சுருக்க’’என கேட்டார்

‘ஒண்ணுமில்லை மாமா ராத்திரில முழிப்பு வந்துடுச்சு அதான்,வேற ஒண்ணுமில்லை’

‘‘சரிம்மா’’என்று அவளை போக சொல்லிவிட்டு அவர் திரும்ப, ‘‘தம்பி,செந்துரு’’என அவர் அழைக்க.

‘உள்ளே செல்ல திரும்பியவளோ அவளின் அத்தான் பெயரை கேட்டதும்,அப்படியே நின்றுவிட்டால், ‘‘தம்பி என்னப்பா,சொல்லாம கொள்ளாம இப்படி திடிர்னு வந்திருக்க’’என அவர் பேச.

‘ஆமா அப்பா ஒரு ரெண்டு நாள் லீவ்ல வந்தேன்,உங்களை பார்த்துட்டு போகலாம் நினச்சேன்,அதான்’

‘‘வள்ளியோ திரும்பி பார்த்து ‘‘அத்தான்,நீங்க உண்மையிலே வந்துட்டேன்களா,அப்போ நான் கனவு கண்டது நடந்துடுச்சு,’’என்று அவனை கையை பிடித்து பேசிக்கொண்டு இருந்தால்.

‘நான் உங்க முன்னாடி நிக்குறது உண்மைதான் வள்ளியம்மா’என அவளை கைவளைவில் வைத்துகொண்டு பேசினான், உள்ள போகலாமா இல்லை இங்க நிக்க வச்சு பேசலாமா வள்ளியம்மா’என்று கேட்டான்.

‘‘இவர்களின்,பேச்சு சத்தம் கேட்டு மீனாட்சி ஆரத்தி எடுத்துகொண்டு வந்தார். ‘‘அத்தை அதை எடுக்கத்தான் உள்ள வர நினைச்சேன், நீங்களே எடுத்துட்டு வந்துடேங்க,வாங்க அத்தானுக்கு ஆரத்தி எடுங்க’’என்று சொன்னால்.

‘அவனை மட்டும் எப்படி எடுக்க முடியும்,நீயும் சேர்ந்து நில்லு வள்ளி’என அவளையும் சேர்த்து நிக்க வைத்து ஊரு கண்ணு, உலகு கண்ணு,நாய் கண்ணு,நரிகண்ணு,பூனை கண்ணு, எல்லாம் கண்ணும் போக என,திர்ஷ்டி சுற்றினார்.

‘‘வள்ளி,தம்பிய உள்ள கூட்டிட்டு போ,நான் இதை தீயில போட்டு வரேன்’’

‘எப்படி தம்பி இருக்க’என மீனாட்சி கேட்க.

“நல்லாஇருக்கேன்மா,நீங்க எப்படி இருக்கேங்க,”

‘நான் நல்லா இருக்கேன்,தம்பி……வேலை எல்லாம் எப்படி போகுது, இன்னும் எத்தனை நாளைக்கு நீ அங்க இருப்ப தம்பி’என்ரு மீனாட்சி கேட்க

“தெரியலம்மா,வேலைய பொருத்து இருக்கனும் அங்க இருக்கனும்”என்ரான்.

‘மீனா,தம்பிய இப்போ தான் வந்திருக்கு,பிள்ளைக்கு சாப்பாடு எடுத்து வைய்யுங்க அப்புறம் நிதானமா பேசலாம்’என்றர் முத்தையா.

”போ தம்பி போய் குலிச்சுட்டு வா,சாப்படு எடுத்து வைக்கிரேன், வள்ளி தம்பிய கூட்டிட்டு போ”என்ரார் மீனாட்சி.

’சரிங்க அத்தை,வாங்க அத்தான்’

“அரைக்குல் நுலைந்ததும் வள்ளியை இருக்கி அனைத்துகொண்டான், அவலுக்கும் அந்த அனைப்பு தேவையாக இருந்தது” ‘ரொம்ப ஏங்கினேன் வள்ளியம்மா உங்க அனைப்பு இல்லாம, உங்க வாசனை இல்லாம, நீங்கலும் இல்லாம,உங்க பாட்டு இல்லாம,மொத்துல நீங்க இல்லாம நான் நானாவே இல்லை

வள்ளியம்மா''என்று காதல் வார்த்தையால் இன்னும் இருக்கிகொண்டான் அவலை.

''இன்னைக்கு காலையிலதான் உங்கலை பத்தி கனவு கண்டேன், ஆனா இப்படி நேருல வந்து நிப்பேங்கனு நான் எதிர்ப்பாக்கல அத்தான்,உங்கலை நானும் மிஷ் பன்னுனேன் அத்தான் ரொம்ப'' என்ரு அவலும் அவனை கட்டிகொண்டால்.

'அத்தான் சீக்கிரம் குலிச்சுட்டு வாங்க,உங்கலுக்கு பசிக்கும், அத்தை, மாமா வேர உங்கலுக்காக காத்திட்டு இருப்பாங்க,

''சரிங்க வள்ளியம்மா''

'அத்தை,இன்னைக்கு எல்லாம் அத்தானுக்கு பிடிச்ச சாப்பாடு செயனும்,இப்போ என்ன சாப்பாடு செஞ்சு வைச்சு இருகேங்க' என்ரு ஒவ்வரு கின்னத்தையும் திரந்து பார்த்தால்,அனைத்தும் சைவம் வகையாக இருந்தது.

''அத்தை இதெல்லம் அப்படியே இருக்கட்டும்,அத்தானுக்கு நாட்டுகொழி குருமா ரொம்ப பிடிக்கும் அது செய்யலாம்,அப்டியே ஆடுக்கால் சூப்பு,இரால் தொக்கு,ம்ம் அப்புரம் மட்டன் பிரியானி அத்தை, இதயெல்லம் நானே செய்யுரென் அத்தை இஞ்சி, பூண்டு, மசாலா அரைக்க வானியக்காவ வரசொல்லுங்க அத்தை''என்ரு மடமடவென சமையல் வேலையை பார்க்க ஆரம்பித்தால்.

# காதலின் இரு துருவங்கள்

'வள்ளி,இன்னைக்கு நீ விரதம்,அதை மரந்திட்டையா'

''அத்தான் வந்திருக்காங்கா,அத்தானுக்கு முன்னாடி என் விரதம் எல்லாம் ஒன்னுமில்லை அத்தை,அதே சஷ்டி விரதம் அடுத்த மாசமும் வரும்,ஆன என் அத்தான் மாசத்துக்கு ஒரு வாட்டிதான் வராங்க,அப்பவும் சைவம் சாப்படுனா அத்தானுக்கு பிடிக்காது, அத்தை....என் அத்தனுக்காக எதைவேனாலும் விட்டுகொடுப்பேன் அத்தை'

''ம்ம்ம், அது சரி,உன் அத்தான் வந்துட்டாங்க இனி எங்க உன்னை கையில பிடிக்கமுடியும்,அது வரை உனக்கு எங்கலையெல்லாம் கன்னுக்கு தெரியாது''என வள்ளியை கேலி செய்தார்.

'ச்சு போங்க அத்தை, அத்தான் வர்ர நேரம் ஆச்சு, மாமாவ சாப்பிட கூப்புடுங்க'

''அரைமனி நேரத்தில் கோழிகுருமா, இரால் தொக்கு, செய்துவிட்டால், அவள் அதை எடுத்து வைக்கும் நேரத்தில் அவனும் வந்துவிட்டான்''

'வாங்க அத்தான்,மாமா,அத்தை,வாங்க சாப்பிடலாம்,என அவல் அவர்கலையும் அழைக்க, ''என்ன வள்ளி இன்னைக்கு நீ

சஷ்டி விரதம் சொன்ன ஆனா இங்க எல்லாம் அசைவமா இருக்கு’என முத்தையா கேட்க.

‘‘அதயென் கேட்க்குரேங்,தம்பி வந்திருக்கங்கால,அதான் அவனுக்கு பிடிச்சாதா சமைச்சு இருக்கா உங்க மருமக’’என்ரு கொஞ்ச நேரத்திர்க்கு முன் நடந்த்தை அவரிடம் கூரினார்.

‘‘அதை அருகில் அருகில் இருந்த,பாண்டியனும் கேட்க, சமையல் கட்டில் இருந்து இட்லி,சப்பாத்தியை எடுத்துகொண்டு வந்த வள்ளியை பார்த்தான், வருசம் முழுவதும் விரதம் இருந்து கொண்டுயிருந்த வள்ளி,தனக்காக அந்த விரத்தையும் விட்டு அசைவம் சமைத்ததை அவனுல் இன்னும் அவல் மீது காதல் அதிகமானதே தவிர குரையவில்லை.

‘ஏன்மா,தம்பி நாலைக்கு தான் ஊருக்கு போகும்,அப்புரம் எதுக்கு இன்னைக்கே இதை சமைக்கனும்,அதுவும் உன் விரத்தை விட்டு சமைச்சுயிருக்க’என முத்தையா கேட்க.

‘‘எல்லாம் என் அத்தானுக்காக மாமா’’என்ரு ஒரு வரியில் முடித்துவிட்டால்.

‘ஒவ்வொரு பத்தார்த்தையும் பாண்டியனுக்கு, பார்த்து பார்த்து பரிமாரினால்,இதை கண்ட மீனாட்சியும்,முத்தையாவும்,பார்த்து

மகிழ்ச்சியாக இருந்தனர், ‘‘அத்தான் இன்னும் ரெண்டு சப்பாத்தி வச்சுக்கோங்க,மூனு சப்பாத்தி எப்படி வயித்துக்கு பத்தும்,இன்னும் ரெண்டே ரெண்டுதான் அத்தான்,என கெஞ்சி கொண்டு இருந்தால்.

‘‘அய்யோ வள்ளியம்மா,எனக்கு போதும் இதுவே அதிகம்,தயவுசெஞ்சு என்னை விடுங்க,என்னால சாப்பிட முடியல வள்ளியம்மா’’

‘எனக்காக அத்தான்,இன்னும் ரெண்டு சப்பாத்தி மட்டும்தான், அதுகடுத்து நீங்க சாப்பிட வேனாம்’என ஒரு வழியாக அவனுக்கு ரெண்டு சப்பாத்தியை வைத்துவிட்டு தான் வேரு வேலையை பார்த்தால்.

அவனும் சாப்பிட்டுவிட்டு எழுந்தான், வள்ளி அவன் சாப்பிட்ட தட்டில் சாப்பிட அமர்ந்தால்,அவல் எப்பொழுதும் பாண்டியன் தட்டில் தான் சாப்பிடுவாள், அது அவன் இருந்தாலும், இல்லையென்ராலும்.. இதை பார்த்த பாண்டியன் அவலுக்கு அருகில் அமர்ந்து அவ்லுக்கு தேவையானதை எடுத்து வைத்தான், ‘‘அத்தான் நான் சாப்புட்டுகிரேன் நீங்க, அத்தை,மாமாகூட பேசிட்டு இருங்க’’என்ரு அவனை போக சொன்னால்.

’ஆனால் அவனோ,உங்கலுக்கு சாப்பாடு நான் வைக்குரேன்,பேசாமா நீங்க சாப்பிடுங்க’ என அவலுக்கு

தேவையானதை எடுத்து வைத்தான். ‘‘அத்தான் எனக்கு போதும்,இவ்வலோ வச்சா எப்படி சாப்பிடுவேன்’’ ‘உங்க உடம்பு ரொம்ப ஒல்லியா இருக்கு,இப்படி இருந்தா எப்படி நான் உங்கலை கட்டிபிடிக்க முடியும் நல்லா சாப்பிட்டு கொஞ்சம் குண்டான தான நல்லா இருக்கும்’என்ரு அவலை கொஞ்சி, சாப்பிட வைத்தான்,அந்த கிராமத்து காதலன்.

’’அத்தான் நான் ஏர்கனவே 55 கிலோ,இதுல இவ்வலோ சாப்பிட்டா, அவ்வலோதான்’’

’இவனை கான,ஊர் மக்கல் அனைவரும் வந்திருந்தனர், வந்தவர்கல் இவனை பார்த்து ‘‘ஏன் ராசா உடம்பு மெலிஞ்சு போய் இருக்க, சாப்பிடமாட்டயா’’என்ரும்........ ‘‘ஏன் சாமி நீங்க போய் அங்க வேலை பார்க்கனுமுனு தலையெழுத்தா,இங்கயே இருந்தா நல்லா இருக்கும் சாமி’’என்ரும்......`பலர் அவனை நலம் விசாரித்தும், அடுத்து நீங்கலும்,வள்ளியம்மாவும் நல்ல செய்தி எப்போ சொல்லபோரீங்க தம்பி’’என்ரும்கேட்டுவிட்டு சென்ரனர்.

அவர்கல் சென்ர பிரகு,திருமூர்த்தி அய்யா, பாண்டியனை நலம் விசாரித்துவிட்டு,பிரகாஷ்யும் கேட்டார், ‘‘அவன் கொஞ்சம் வேலையா இருக்கான் அய்யா அதான் அவன் வரமுடியலை’’

‘இப்போ என்ன செந்தூர்,அவனுக்கு இன்னும் நல்ல வேலைய அதிகமா கொடு அப்போ தான் அவன் அடங்குவான்,இப்போ மட்டும் அவன் உன்கூட வந்திருந்தா என் ஊர சுத்த போயிருப்பான், அவன் அங்கயே இருக்கட்டும்’என்ரு புகழ் பாடினார்.

’’உன்கிட்ட ஒரு வேலைய கொடுத்தேனே அது என்னாச்சு’’

‘கூடிய சீக்கிரம் முடிஞ்சுடும் அய்யா,இன்னும் அவங்கல பத்தி நான் விசாரிக்கல,அதுவும் முகவரி கிடைக்கல, அய்யா’

’’சரி செந்தூர்,சீக்கிரம் அந்த வேலைய முடி,அப்புரம் எப்போ என்னை தாத்தா ஆக்கபோர’’என்ரு கேட்டார்.

‘அய்யா,உங்க வேலைய முடிச்ச பின்னாடிதான்,எனக்கு மத்த வேலையே,எதுக்கு அய்யா அவங்கல தேட சொல்லுரேங்க,யாரு அவங்க,உங்கலுக்கு சொந்தமா’

’’எனக்கும் சொந்தம் தான்,அது உனக்கு நெருங்கின சொந்தம்,செந்தூர் அது இப்போ நான் சொன்னா புரியாது’’என்ரார்.

‘பாண்டியனுக்கோ,அவர் கூரியது சுத்தமாய் புரியவில்லை, எனக்கு நெருங்கின சொந்தம் எல்லாம் இங்யே இருக்குரப்போ

அந்த சென்னையில்ல எனக்கு சொந்தம் இருக்குதா’என்ரு யோசிக்க ஆரம்பித்தான்.

‘என்ன டா,தனியா இருக்குர எங்க உன் அருமை அத்தை பையன்’என்ரபடி வந்தால் ப்ரியா.

‘‘அந்த பைல்வான்,வேலை விசயமா டெல்லிக்கு போயிருக்கான், அதுவும் என்னைவிட்டுட்டு போயிருக்கான்’’

‘அதுதான் ஆபிஷ்ல எல்லோரும் ஜாலியா இருக்காங்கலா, அப்பாடா இன்னைக்கு புது படம் ரீலீஷ் ஆகிருக்கு,வா போகலாம்’என்ரால்.

‘‘ம்ம் எனக்கு இண்ட்ரெஷ் இல்லை ப்ரியா’’

‘அடப்பாவி,அந்த பாண்டியன் சார் இருந்தா உடனே வந்திருப்ப,இப்போ அவன் இல்லைனெதும் வரமாட்ர’

‘‘இல்லை ப்ரியா,கொஞ்சம் வேலை இருக்கு, பாண்டியன் ஒரு முக்கியமான வேலை கொடுத்து இருக்கான் அது முடிச்சுகொடுக்கனும் அதான்’’

‘ம்ம் நீ என்னைக்காவது கூப்பிடுவேல அப்போ பார்த்துகிரேன் உன்னை,சரி அது என்ன வேலைன்னு சொல்லு நானும் உனக்கு உதவி செய்யுரேன்’என்ரால்.

‘‘இருக்கட்டும் ப்ரியா, இன்னும் கொஞ்சம் நேரத்துல நமக்கு மீட்டிங் இருக்கு அது சம்மந்தமா சார் வரசொன்னாங்க வா போகலாம்’’என்ரு அவலை அழைத்துகொண்டு சென்ரான்.

’அனைத்து வேலைகலும் முடித்துவிட்டு,அவர்கலின் அரைக்கு வந்தால் வள்ளி, ‘‘என்ன அத்தான் இன்னும் தூங்காமா முழிச்சுட்டு இருகேங்க’’

‘‘உங்கலுக்காக காத்திட்டு இருந்தேன் வள்ளியம்மா,வேலை செய்ய ஆல் இருக்கும் போது நீங்க எதுக்கு இழுத்து போட்டு எல்லாம் வேலையும் செய்யுரேங்க’’என்ரு கேட்டான்.

‘இது நம்ம வீடு அத்தான், நான் பார்க்காம வேர யாரு இந்த வேலை பார்ப்பா சொல்லுங்க,அதுவும் இல்லாம எல்லம் வேலையும் அவங்கலை பார்க்க சொல்லிட்டு நாம மேர்பார்வை பார்த்தா நல்லா இருக்காது’அத்தான்

‘‘அப்படியாங்க வள்ளியம்மா’’என்ரு அவலை கை வலைவில் கொண்டு வந்தான்,அவ்லோ அவனின் என்னம் புரிந்து அவலுல் இருந்த கேல்வியை கேட்டால் ‘‘அத்தான் நமக்கு எப்போ பாப்பா வரும்,எல்லோரும் கேக்குராங்க’’என்ரால்.

‘அவல் கேட்ட அழகில் மயங்கி, “இன்னும் கொஞ்சம் நால் பொருத்துகோங்க வள்ளியம்ம”என அவன் கூர.

”சரிங்க அத்தான்”என்ரு அவல் அவன் மடியில் இருந்து எழுந்து குலியல் அரைக்கு சென்ரு வெரு உடையுடன் வந்தால்” ஆனால் அவனோ திடீர்ரென்ரு அவல் எழுந்த்தும் அவன் முகம் வருத்தமானது.

‘என்ன அத்தான்,எதுக்கு இப்போ முகம் சோர்ந்து போயிருக்கு’என அவல் கண்டுகொண்டதும், அவலை மடியில் சாய்த்து முத்தம் கொடுத்தான்… “என்னை மனிச்சுருங்க வள்ளியம்மா, இனியும் உங்க முகம் வாடுனா எனக்கு தாங்காது”என்ரு அவலை கொஞ்சம் கொஞ்சமாய் அவன் ஆலுகைக்குல் கொண்டு வந்தான்,அவர்கலுக்கு குரித்த முகூர்த்த நேரத்தை விட்டு இன்ரு அவலுடன் பல நால் காத்திருந்த அவனின் தேவதைக்கு அவனுடைய காதலை அழகாக சொல்லிக்கொடுத்தான்…. அவலும் அதை அழகாக கேட்டுகொண்டால்.

“எப்போ வருவாங்க அந்த பாண்டியன் சார்”என்ரு ப்ரியா கேட்க.

‘இன்னும் ரெண்டு நால் ஆகும் ப்ரியா,எனக்கு நாலைக்கு சாப்பாடு கொண்டுவரியா’என்ரு அவலிடம் கேட்டான்.

‘‘இதுகென்ன தினமும் உனக்கு நானே சாப்பாடு கொண்டு வரேன்,உனக்கு பிடிச்சதை மட்டும் சொல்லு’’

’அதெல்லம் வேனாம் ப்ரியா,உனக்கு அம்மா என்ன சமைச்சு தராங்லோ அதையே எனக்கு கொண்டு வா,எனக்கு சமைக்க தெரியாது அதான்,ஒரு ரெண்டு நால் மட்டும் அதுகடுத்து அவன் வந்திடுவான்’

‘‘சரி டா,கொண்டுவரேன்’’

‘இதான் அந்த குடும்பத்தோட போட்டோ,அப்புரம் மத்த விசயம் இதுல இருக்கு என்ரு பைல்லை கொடுத்தான்,என்னி ஒரு வாரத்துல அந்த குடும்பம் எனக்கு வேனும் புரியுதா’என்ரு திவாகரன் கடத்தல் கும்பலிடம் பேசிகொண்டு இருந்தான்.

‘‘புரியுது சார்,அதுக்குல்ல நாங்க கண்டுபிடிச்சு கொடுக்குரோம்’’

# அத்தியாயம் 6

’’ஏன் டி..இவ்ளோ காலையில யாருக்குடி சமைக்க சொல்லுற…அதுவும் இத்தனை அயிட்டத்தை எப்படி கொண்டு போகப்போற….நீ யாருக்காவது டீரிட் வைக்குறக்கு கஞ்சத்தனம் பட்டுகிட்டு,இப்படி என்னை காலங்காத்தால எழுப்பி சமைக்க சொல்லி பாடுப்படுத்துற’’என தாமரை புலம்ப.

‘ம்மா நான் சொல்லிருக்கேன்ல,ஆபீஸ்ல என் ஃபெஸ்ட் ஃப்ரண்ட் இருக்கானு,அவனுக்குதான்….பாவம் ரெண்டு நாளா நல்லவே சாப்பிடலயாம் அதான், அவனுக்கு கொண்டு போறதுக்குதான், இத்தனைக்கு என்கிட்ட முதல் முறையா வாய்விட்டு சாப்பாடு கொண்டு வாரியான்னு கேட்டான் போதுமா….டக்குன்னு எடுத்து வைம்மா லேட் ஆகுது’

’’சரிடி… இந்தா,எல்லாத்தையும் சரியா வைச்சுட்டேன்.. பார்த்துக்க, ம்ம் அப்புறம்…அந்த தம்பிய வீட்டுக்கு கூப்பிட்டு வா ஒருநாள்..சரியா’’

‘ம்ம் கூப்பிட்டு வரேன்,ஆனா அவன்..அந்த பைல்வான் இல்லாம வரமாட்டானே’

‘‘யாரு டி அந்த பைல்வான்’’

‘அதான், அந்த ஹச்.ஆர்,ம்மா’என்று செந்தூர் பாண்டியன் பற்றி கூறிமுடித்தால்.

‘‘உனகெல்லாம் அந்த தம்பி தண்டனை கொடுத்தது தப்பே இல்லை,நானும் அந்த தம்பிய பார்த்து இன்னும் நல்லா பனிஷ்மெண்ட் கொடுங்கன்னு சொல்லுறேன் அப்போதான் உனக்கு பயம் வரும்’’

’ம்மா,நான் உன் பொண்ணு..எனக்கு சப்போர்ட் பண்ணாம அந்த ஆளுக்கு சப்போர்ட் பண்ணுற’

‘‘தப்பு யாரு செஞ்சுருந்தாலும் தப்பு தப்புதான்,அது நீயா இருந்தாலும்,முதல உனக்கு மேல வேலை பார்க்குறவங்களுக்கு மரியாதை கொடுத்து பழகு சொல்லிருகேன்ல,..அந்த தம்பி என்ன பண்ணாங்க,நீ எதாவது தப்பு பண்ணிருப்ப,அதான் அந்த தம்பியும் உனக்கு அதிகவேலை கொடுத்துருக்கங்கா,அந்த பாண்டியன் தம்பியயும் வீடுக்கு அழைச்சுட்டு வா தெய்வா’’

‘மாட்டேன்,அவனை கூப்பிட்டு வரமாட்டேன்,என் ஃப்ரண்ட் ப்ராகாஷ் மட்டும்தான் கூப்பிட்டு வருவேன்…நீ அவனுக்கு சப்போர்ட் செய்யுறேல அதுக்காகவே கூப்பிடமாட்டேன்’எனக்கூறி ஸ்கூட்டியில் சென்றுவிட்டால்.

“ஏய்..ஏய்,..தெய்வா..ம்ம் இந்த பொண்ணு இருக்காலே... அப்படியே அவங்க அப்பா மாதிரி”..என்று அவரின் நினைவில் ஆழ்ந்தார்.

‘அவரும் இந்நேரம் இருந்தா நல்லா இருக்கும்’

“விடியல் அழகாக விடிந்தது.....மெல்ல கண்விழித்தால்... வள்ளி... ‘அவள் உடம்பில் வெறும் போர்வை மட்டுமே ஆடையாக இருந்தது... நேற்று நடந்தது கொஞ்சம் கொஞ்சமாய் நினைவுக்கு வந்தது...அவனின் அன்பில் அவள் கொண்ட காதல் இன்னும் அவன் மீது அதிகமானதே தவிர குறையவில்லை.... மெதுவாக அவன் கையை எடுத்து கீழே வைத்துவிட்டு அருகில் கிடந்த இரவு உடையை எடுத்து அணிந்துகொண்டு குளியல் அறைக்கு சென்றால்”

‘குளித்து முடித்துவிட்டு,தாமரைப்பூ கலரில் சேலையை உடுத்தி, அதற்க்கேற்றார் போல்,அலங்காரம் செய்து,கீழே சென்றாள், “எப்பவும் போலவே..மாட்டுசாணத்தை நீரில் கலந்து அதை வாசலில் தெளித்து, என்றும் இல்லமால் புதிய ரக ரங்கோலி போட்டு, அதில் செம்மண் பட்டை கொடுத்து,சில பாகத்தில்,கலர் பொடி கொடுத்துவிட்டு எழுந்தால்.வீட்டுக்குள் நுலைந்து சாமியறையில் விளக்கேற்றி,சாமி கும்பிட்டுவிட்டு , அனைவருக்கும்

காஃபி கலந்து,அதை எடுத்து வாணியிடம் அத்தை,மாமாவிற்க்கு கொடுக்க சொன்னால்,அவனுக்கு டீ போட்டு எடுத்துக்கொண்டு அவர்களின் அறைக்கு சென்றாள்''

'கதவுதிறந்து உள்ளே சென்றால்,அங்கு அவன் உறங்கி கொண்டிருப்பதை பார்த்து அவளுக்கு எழுப்ப மனம் இல்லை, அவன் முகத்தையே பார்த்துகொண்டு இருந்தால்... ''எவ்ளோ மாற்றம்,என் அத்தான்கிட்ட, அவருக்கு பிடிச்சதே அந்த மீசைதான் ஆனா சென்னைக்கு எப்போ போனாங்களோ அப்போ இருந்து மீசைய எடுத்துட்டாங்க..முதல் முறையா நான் அத்தான்கிட்ட பேசின வார்த்தை ''என்னை கல்யாணம் பண்ணிக்க ரெடியா அத்தான்'' அந்த பெருமாள் கோவில வச்சு,என் காதல சொன்னப்போவும்,சரி இப்பவும் சரி,உங்கமேல உள்ள காதலும், அன்பும் அதிகமா இருக்கு அத்தான்'' அதுகடுத்து என் படிப்புக்கு சென்னை போகும்போது நான் போகமாட்டேனு அடம்பிடிச்சேன், ஆனா நீங்க சொன்ன ஒத்தவார்த்தைக்காக நான் படிக்க போனேன், அப்புறம்...என் பிறந்தநாளுக்கு சப்ரைஸ் கொடுக்க... மழையையும் பொருட்டா கருதாம ராத்திரியில சரியா 12 மணிக்கு எனக்கு வாழ்த்து சொன்னது...அன்னைக்கு முழுசும் என்கூட இருந்தது'' என ஒவ்வென்றையும் நினைத்து பார்த்துகொண்டு இருந்தவள் திடீரென்று அவளை அணைப்பதுப்போல் உணர்வு...

“என்னங்க வள்ளியம்மா கனவு கண்டு முடிச்சுடேங்களா..இல்லை இன்னும் நம்மா காதலை நினைச்சு பார்த்துட்டு இருகேங்களா” என்றபடி வள்ளியை பின்னிருந்து அணைத்தபடி கேட்டான்”

‘எழுந்துட்டேங்களா அத்தான்’

“ம்ம்,எழுந்துட்டேங்க வள்ளியம்மா”

‘இந்தாங்க.. அத்தான் டீ’

“இந்த டீ வேணாம்,இந்த ரெடிமேட் டீ தான் வேணும்”என அவளை திருப்பி இதழில் முத்தமிட்டான்..

‘என்னங்க அத்தான்..நான் குளிச்சுட்டேன்…மறுபடியும் என்னை’அவளை பேசவிடாமல் தொடர்ந்து முத்தமிட்டு கொண்டுயிருந்தான்..

“ம்ம் இப்போதான் சோம்பலே போனமாதிரி இருக்கு”

‘முதல நீங்க போய் குளிச்சுட்டுவாங்க,அம்மா, அப்பா இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடுவாங்க அத்தான்’

“அய்யோ போச்சு…அப்போ இன்னைக்கு முழுசும் நான் மாமாகூட இருக்கனுமா”என்று அலறினான்.

‘ஹாஹா அத்தான்,அம்மா,அப்பா வராங்கன்னு சொன்னதுக்கே இந்த அலறலா..அம்மாவும்,அப்பாவும் உங்கள வழியனுப்பிவிட்டு தான் கிளம்புவாங்க அத்தான்’வள்ளி இன்னும் அவனுக்கு எடுத்துகொடுத்தால்.

’’அப்போ நான் கீழயே வரலைங்க வள்ளியம்மா’’

‘என்னது, ஒழுங்க குளிச்சுட்டு கீழ வாங்க…இல்லை இன்னைக்கு முழுவதும் உங்க கண்ணு முன்னாடி வரமாட்… என்னும் சொல்லும்போது அவள் வாயை அவன் கைகொண்டு மூடினான்.. ‘‘அப்படி மட்டும் சொல்லாதேங்க வள்ளியம்மா, எப்பவும் நீங்க அந்த வார்த்தைய மட்டும் சொல்லிடாதேங்க என்னால நீங்க இல்லாத வழ்க்கையை நினைச்சுக்கூட பார்க்கமுடியாது’’

‘அத்தான்,நெருப்புனா வாய் சுட்டுரும்மா என்ன,எப்பவும் உங்களவிட்டு போகமாட்டேன், என அவள் கூற, அவனோ ‘‘அப்படியே நீங்க என்னைவிட்டு போனாலும்,அடுத்த நொடி என் உயிரும் உங்க்கூடவே…இப்பொழுது அவள்,அவன் வாயை மூடினாள்.. ‘‘எத்தனை ஜென்மம் எடுத்தாலும், இந்த வள்ளிக்கு, செந்தூர்பாண்டியன் தான், செந்தூர்பாண்டியனுக்கு இந்த வள்ளி தான், நம்ம காதலும்,உங்க கையால கட்டுன தாலியும் அந்த

பஞ்சபூதங்களும் சாட்சி’’எனக்கூறி அவனுக்கு முத்தமிட்டு சென்றாள்..,

‘‘சீக்கிரம் குளிச்சுட்டு வாங்கா,அத்தான்..அம்மா, அப்பாவும் உங்க்கிட்ட முக்கியமான விசயம் பேசனும் சொன்னாங்க’’எனறு போகிறபோக்கில் சொல்லி சென்றாள்.

‘இந்தாங்க திவாகர்…நீங்க சொன்ன குடும்பம் இப்போ சென்னையில,இந்த ஏரியாவுல இருக்காங்க,இது அவங்க குடும்ப போட்டோ…அப்புறம் அவங்களுக்கு ஒரே ஒரு பொண்ணுதான்… அந்த குடும்பத்த ஒரு ஆள் தீவிரமா தேடிட்டு இருக்காங்க…. அதுல போலீஸூம் ஒருபக்கம் தேடுறாங்க..நீங்க இப்போ கொஞ்சம் நாள் தேட வேண்டாம் திவாகர்…அந்த குடும்பத்துக்கு ஒரு பாதுக்காப்பா யாரோ பக்கத்துல இருக்காங்க…நான் சொல்லுற வரைக்கும் நீங்க காத்திருக்கனும்,அதுக்குனு சரியான நேரம் இப்போ இல்லை,அதுவரைக்கும் நீங்க பொருத்துருக்கனும் திவாகர்’என அவன் தேடி வந்த குடும்பத்தின் மொத்த விவரமும் அவன் கையில் இருக்க,அவர்களை நெருங்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறான்.

‘‘ச்சே….எங்கெல்லாம் தேடினே ஆனா,அவங்க இருக்காங்களா… இவ்ளோ நாள் பொருத்திருந்த எனக்கு இன்னும்

கொஞ்ச நாள் தானே பரவாயில்ல....இனி அந்த பாண்டியனுக்கு நான் வைக்குறேன் பெரிய ஆப்பா....டேய் பாண்டியா என்னை இனி அந்த குடும்பத்த யாரலும் காப்பாத்த முடியாது''என்று அந்த குடவுனே அதிரும்படி கத்தி கூறினான்.

'அண்ணே...இப்பவாச்சும் அவங்க யாருனு சொல்லுறேங்களா'என அவன் அடியாள் கேட்க..

''சொல்லுறேன்டா..சொல்லுறேன்.''

'இன்னைக்கு உங்களுக்கு என்னவேணுமோ ஆடர் பண்ணி சாப்புடுங்க... அதுக்கான மொத்த செலவும் என்னோடது'என ஒரு கட்டுப்பணத்தை எடுத்துகொடுத்தான்.

''அண்ணே நீங்க என்ன சொன்னாலும் அதை நாங்க செஞ்சு முடிப்போம்... என்னங்கடா''என்ற கூவ..

'ஆமா...ஆமா..'என அங்கிருந்தவர்கள் கூட்டமாக கூச்சலிட்டனர்.

''வாங்க,அத்தை..மாமா''

'மாப்பிள்ளை....எப்படி இருக்கேங்க'என வள்ளியின் தாய்...தந்தை வந்திருக்க..

‘‘நல்லா இருக்கேன் அத்தை,மாமா’’

‘எப்போ வந்தேங்க…வேலையெல்லம் சுழுவா இருக்கா.. இல்லை ரொம்ப அதிகமா’என கேட்க..

‘‘எல்லாம் நல்லா போகுது மாமா…மாறன் என்ன பண்ணாறாங்க’’

‘நல்லா இருக்கான் மாப்பிள்ளை, ‘‘அட்டே..வாங்க மாமா… வாம்மா தங்கச்சி’’என முத்தையாவும்..மீனாட்சியும் வரவேற்க..

‘‘வரோம்..மச்சான்,இப்போதான் வந்தோம் அண்ணா..எங்க வள்ளிய காணாம்’’

‘நீங்க வருவேங்கனு முன்னாடியே சமையல் வேலைய ஆரம்பிச்சுருக்கும், அதான் சமையல்கட்டுல இருந்து வாசனை வர்ரத பார்த்து நீங்க புரிஞ்சுக்கனும் செல்வி’என்று முத்தையா கூற.

’வள்ளி.. வள்ளி.. இங்க வாம்மா…அம்மாவும்..அப்பாவும் வந்திருக்காங்க’ என முத்தையா அவளை அழைக்க.

‘‘இதோ வரேன் மாமா’’

‘வாணி..அந்த மீன பொரிச்சு வைச்சுரு… அப்புறம்.. மட்டன்கூட்டு இன்னும் அஞ்சு நிமிசத்துல இறக்கிடு..கோழி

வறுவல் மட்டும் நான் வந்து பண்ணிகிறேன்..சோறுக்கு உலை வச்சுடு…ம்ம் மறந்துட்டேன் ரசத்த தாலிச்சுடு அவ்ளோ தான்'என்று சமையல் கட்டு வாசலில் நின்று அத்தனையும் சொல்லிக்கொண்டே வந்தாள்.

''வாங்கம்மா, வாங்கப்பா.. என்ன சாப்புடுறேங்க''என வரவேற்றுவிட்டு.. ''வாணி பிரிட்ஜ்ல குடிக்க மாதுளம் பழம் ஜூஸ் இருக்கு,அதை எடுத்துட்டு வாங்க''

'ஏன்டி இப்பவாச்சும் எங்க்கூட உக்கார்ந்து பேச உனக்கு நேரம் இல்லையா,இப்படி எல்லாம் வேலையும் நீயே எடுத்து செஞ்சேனா அப்புறம் எதுக்கு வீட்டுக்கு வேலையாள் இருக்காங்க' என செல்வி கேட்க.

''நீங்களாவது சொல்லுங்கம்மா…காலையில இருந்து பெரிய்யா முதல் கொண்டு எல்லாரும் சொல்லிட்டாங்க, தாயிதான் கேக்காம எல்லா வேலையும் இழுத்து போட்டு செய்யுறாங்க'' என்று வாணி ஜீஸ் கொடுத்துகிட்டே அவளை பற்றி புகார் பட்டியல் வாசித்து கொண்டிருந்தால்.

'வாணி..அடுப்பு வேலைய விட்டுட்டு இங்க என்னை என் அம்மாகிட்ட புகார் பண்ணுறையா போய் வேலைய பாரு'

“உடனே அவமேல எதுக்கு கோவப்படுற….அம்மா, இது நான் வாழவந்த வீடு ஆரம்பிக்காத”என செல்வி கேலிசெய்ய..

‘ம்ம்ம்…என்னை கேலிசெய்யதான் ஊருல இருந்து வந்தீங்களா’

“சரி விடும்மா….அம்மாவ பத்தி உனக்கு தெரியாத என்ன…மாப்பிள்ளை உங்க்கிட்ட ஒரு நல்ல விசயம் சொல்லனும்.”

‘என்ன மாமா..என்ன விசயம்’

“கீர்த்திக்கும்,மாறனுக்கு.பரிசம் போடலாமுன்னு இருக்கோம்.. உங்க வேலை முடிஞ்சா கையோட கல்யாணத்தையும் அப்படியே பண்ணிருலாம்..அதான்”

‘நல்ல விசயம் மாமா..ஆனா என் வேலை காரணம் காட்டி நல்ல விசயத்தை தள்ளிப்போடாதேங்க…மாறன் எப்போ வராங்க’

“இன்னும் அவனுக்கு தெரியாது மாப்பிள்ளை…உங்க்கிட்ட கேட்டுட்டு.. அவன்கிட்ட பேசனும்”

‘சரி மாமா…எனக்கு பதில வள்ளியம்மா இருக்காங்களே..என் இடத்துல இருந்து எல்லமே என் வள்ளியம்மா பார்த்துக்குவாங்க… முடிஞ்சா நான் வேலைய சீக்கிரம் முடிச்சுட்டுவரேன்..என் ஒருத்தனுக்காக நல்ல விஷேசத்த தள்ளிபோடாதேங்க…

என்னப்பா... என்னம்மா.நான் சொல்லுறதுல எதுவும் தப்பில்லையே... என்ன வள்ளியம்மா'

''என்ன தம்பி உன் வார்த்தைக்காக நாங்க காத்திருந்தோம்... நீங்க என்னான எங்க்கிட்டே கேக்குரேங்க..நீங்க எது சொன்னாலும் சரிதான்''என்றார் முத்தையா.

'ஆமா..தம்பி..கீர்த்திக்கு நீங்க மாப்பிள்ளை பார்க்குறதா சொல்லிருந்தேங்க..ஆனா திருமூர்த்தி அய்யா மூலம் வந்த வார்த்தையாலதான் நாங்க இதை முடிவு பண்ணோம்..இப்போ மாப்பிள்ளை வீட்டுகாரங்களே உங்க்கிட்ட முறையா சொல்லிருக்காங்க அவ்ளோ தான்'

''சரிம்மா... மாறன் எப்போ வராங்கனு சொல்லுங்க..அவருக்கு பொண்ணுவீட்டு சார்பா நானே துணி எடுத்து அனுப்புறேன்...என அவன் பேசிகொண்டு இருக்கும் போது அவனுக்கு செல்போனில் இருந்து அழைப்பு வந்த்து.

'ஒரு நிமிசம்ப்பா...முக்கியமான போன்...ஆபீஸ்ல இருந்து வந்திருக்கு.. பேசிட்டுவரேன்... 'போங்க தம்பி வேலை விசயமா இருக்கும் பேசிட்டு வாங்க'

‘‘ம்ம் சரிப்பா…இதோ வரேன்..வள்ளியம்மா’’என அனைவரிடமும் கூறிக்கொண்டு வெளியே சென்று பேச ஆரம்பித்தான்..

‘சொல்லுங்க…என்னாச்சு’கணீர் குரலில் பேச ஆரம்பித்தான்.

‘‘ம்ம் சரி…பாதுகாப்பு எல்லம் பலமா இருக்கனும்…எப்பவும் அவங்க பின்னாடி ஒருத்தர் கூடவே இருங்க…அவங்க மேல சிறு கீறல்கூட படாம பார்த்துகோங்க…அந்த பொண்ணு பின்னாடி ஒரு ஆள் தினமும் ஆபீஸ் போகும் போதும் வரும் போது துணைக்கு இருக்குனும்…இன்னும் ஒருவாரம் உங்களுக்கு டைம் அதுக்குள்ள அந்த பெரியவரையும் கண்டுபிடிக்கனும்…சரியா’’

‘சரிங்க சார்…எல்லாம் வேலையையும் முடிச்சுட்டு கூப்பிடுரேன்.. சார்’

‘‘ம்ம் சரி…அந்த திவாகரையும் ஃபாலோ பண்ணுங்க… அவனை எனக்கு உயிரோட பிடிக்கனும்’’

‘ஓகே சார்…செஞ்சுட்டு உங்களுக்கு கூப்பிடுறோம்’

‘‘ஓகே..தாங்க்யூ’’என போனை ஆஃப் செய்தான்’’

’ஹே ப்ரியா..என்ன இவ்ளோ பெரிய டிபன் கேரியல்..ஒரு ஊருக்கே கொண்டு வந்திருக்க.’ என அனித்தா கேட்க.

‘‘.பிரகாஷ்க்கு கொண்டு வந்துருக்கேன் அனித்தா’’

‘இத்தனையும் அவன் சாப்பிடுறதுக்கா’.என வாயை பிளந்தால்.

‘‘ஆமாம்..உனக்கென்ன’’

‘எனக்கொன்னும் இல்லை….ஆனா முதல் முறையா ஐடி ல வேலை பாக்குறவனுக்கு இவ்ளோ பெரிய கேரியல்ல சாப்பாடு கொண்டுவந்த முதல் ஆள் நீதான்….

‘‘அவள் கொண்டுவந்தை பார்த்து அனைவரும்… அவர்களுக்குள் பேசி சிரித்துகொண்டனர்…. ‘‘டேய் இந்தா ஆஃப்ட்ர்நுன் லன்ஞ் கேட்டேல இந்தா’’

‘ப்ரியா..முகியமான ஃபைல் தேடிட்டு இருக்கேன்..அதை டேபிள் மேல வச்சுட்டு போ’’என அவன் அவளை பார்க்காமல் கூறினான்.

‘‘டேய் இதை டேபிள் மேலயெல்லம் வைக்கமுடியாது’’

‘என்ன சொல்லுற பிரியா…என அவளை திரும்பிப்பார்த்து பேசும் போதுதான் கவனித்தான்..அவள் கொண்டு வந்திருந்த கேரியரை..

‘‘அடிப்பாவி..உன்னை டிபன் பாக்ஸ்ல சாப்பாடு எடுத்துட்டு வரச்சொன்னா..இவ்ளோ பெரிய கேரியர்லயா எடுத்துட்டு வருவ.’’

‘உன்க்கு பிடிச்ச சாப்பாடு என்னனு கேக்கலாமுனு இருந்தேன்டா..ஆனா ராத்திரில உனக்கு போன் பண்ணா நல்லா இருக்காதேனு..நானா கெஸ் பண்ணி உனக்கு என் அம்மா கையால சமைச்சு எடுத்துட்டு வந்திருக்கேன்..ஆனா நீ என்னை கிண்டல் பண்ணுற’

‘‘சரி பிரியா…சாரி…அண்ட் தாங்க்யூ’’என அவளை சமாதானம் செய்தான்.

’ப்ரியா…நீ சாப்பாடு கொண்டு வந்தத பார்த்தா அப்படியே என் ஊருக்கார பொண்ணுங்க அவங்க அவங்க புருசனுக்கு கஞ்சி எடுத்துட்டு போவாங்க..என்ன அந்த பொண்ணுங்கயெல்லம் துக்குவாலில எடுத்துட்டு போவாங்க..நீ கேரியர்ல கொண்டுவந்துருக்க.. அவ்ளோதான் வித்தியாசம்’என்று சொல்லி அவளை கேலிசெய்தான்..

‘‘ஆமா என் வீட்டுகாரர் இங்கதான் வேலை பார்க்குறான்… அவனுக்கு விதவிதமா என் கையால சமைச்சு எடுத்துட்டு வர… அடப்போட’’என அவள் சொல்லிகொண்டு இருக்கும்போது ஃலிப்டில் இருந்து வெளிவந்தான் பாண்டியன்.

‘சரி பிரியா இதை..கேண்டின்ல வை..மதியம் போய் சேர்ந்து சாப்பிடலாம்…சார் ஃபைல் எடுத்துட்டு வரச்சொன்னாங்க’

‘‘சார் தான் இன்னும் ஊர்ல இருந்து வரலையே பிரக்காஷ்.. அப்புறம் எதுக்கு ஃபைல தேடுற’’

‘பாண்டியன் வரலை பிரியா…மேனேஜர் சார் கூப்பிட்டாங்க’

‘‘அதான பார்த்தேன்…எங்கடா அந்த பைல்வான் வந்துட்டானோனு… அவன் டெல்லிலேயே இருக்கனும்..முடிஞ்சா அங்கயே அவனுக்கு வேலை கொடுக்கனும்…எண்ணி ஒருவாரத்துக்கு அவன் இந்த பக்கம் வரகூடாது கடவுளே’’என்று அவள் வேண்ட..

‘ப்ரியா..நீ வேண்டுனது அந்த கடவுளுக்கே பொருக்கல… போல.. கொஞ்சம் திரும்பி பாருமா’

‘‘என்னடா சொல்லுற’’என திரும்பி பார்த்தால்..

‘அனைவரின் வணக்கத்தையும் சிறுபுன்னகையுடன், ஏற்றுகொண்டு அவன் அறையை நோக்கி வந்துகொண்டு இருந்தான்’..

‘‘வந்துட்டானா.. இது அவன் தானா இல்லை வேற யாருமா… என கண்களை கசக்கி பார்த்தால்… ‘‘ஹுகும் இது அவனே

தான்''என அவள் யோசித்துகொண்டிருக்க…அவளை தாண்டி சென்றான்.

'ப்ரியா..நான் சார பார்த்துட்டுவரேன்..நீ வேலைய பாரு'என்று பிரகாஷ் கிளம்பினான்.

'முக்கியமான வேலை வந்துருச்சுப்பா…உடனே கிளம்பனும்' என போன் பேசி முடித்ததும்..அங்கு இருந்தவர்களிடம் கூறினான்.

''என்ன தம்பி..ஊருக்கு ராத்திரிதான் கிளம்பனும் சொன்னேங்க இப்போ என்னனா உடனே கிளம்பனும் சொல்லுறேங்க''என முத்தையா கேட்க.

'இல்லைப்பா…வேலைய என்ன நம்பி கொடுத்துருக்காங்க நான் தான் சரியான நேரத்துல முடிச்சுகொடுக்கனும் இல்லையா'

''அதுசரி..ஆனா கீர்த்தி,மாறன் விஷேசம் பேசும் போது இப்படி திடுதிப்புனு புறப்பட்டா…என இழுத்தார் வள்ளியின் தந்தை''

''என் வேலை அப்படி மாமா…உங்கூட இருக்கனும் எனக்கு ஆசை தான்…ஆனா..மேலதிகாரி கூப்பிடும் போது என்ன பண்ணமுடியும்''

‘‘அத்தான்…உங்களுக்கு என்ன எடுத்து வைக்கனும்’என வள்ளி கேட்க..

‘இதோ வரேன் வள்ளியம்மா’

‘‘சாப்பிட்டு கிளம்பனுமா.. இல்லை இப்போவே கிளம்புறேங்களா அத்தான்’’என அவள் கேக்கும் போது அவளது குரலில் அவனைவிட்டு தற்காலிக பிரிவைகூட தாங்கமுடியாமல் கண்ணீரை அவனுக்கு தெரியாமல் துடைத்தால்.

‘அவள் குரலின் வித்தியாத்தை உணர்ந்த் பாண்டியன்… அவளை திருப்பி.. அவளின் கண்களை பார்த்து… ‘‘இன்னும் ஒருவாரம் மட்டும் தான் வள்ளியம்மா..வேலையை முடிச்சுட்டு இங்கயே உங்க்கூடவே வாழ்க்கை முழுவது இருக்கபோறேன் அப்புறம் என்ன… அதுவரைக்கும்…இந்த முத்தம் உங்களுக்கு துணை இருக்கும்.’’என அவளிடம் பேசி..அவனின் வருகை எண்ணி காத்திருக்க செய்தது….

‘‘மிஸ் யூ அத்தான்..மிஸ் யூ பேட்லி’’

‘மீ டூ…என் அழகு வள்ளியம்மா’’என்று அவளை அணைத்துகொண்டான்.

“அனைவரோடு அமர்ந்து சாப்பிட்டு…வாசல் வரை அவனை வழியனுப்பி வைத்துவிட்டு சென்றார்கள்”

‘சரிங்க மாமா…எனக்கு போர்டிங் போக சரியா இருக்கு..நீங்க கிளம்புங்க…. “சரிங்க மாப்பிள்ளை…பார்த்து போயிட்டுவாங்க… உடம்ப பார்த்துகோங்க”

’சரிங்க மாமா’என அவன் உள்ளே செல்லும் வரை பார்த்துவிட்டு கிளம்பினார்.வள்ளியின் தந்தை.

”என்ன வள்ளி…முகம் ஏன் கருத்துருக்கு”என மீனாட்சி கேட்க.

‘ஒண்ணுமில்லை அத்தை’

“இங்க பாருமா..தம்பி சீக்கிரம் இங்கதான வரப்போகுது அப்புறம் என்ன… உன்கிட்ட காலையிலயே கேக்கனும் நினைச்சேன்.. உன் முகம் பொலிவா இருந்துச்சு”என்று அவளை சிரிக்க வைக்க அவர் கேட்க.

‘ச்சீ போங்க அத்தை…அதெல்லாம் எதுவும் இல்லை’என நழுவ

“ஏய் என்னடி…வெக்கமா”

‘என்ன அத்தை..போங்க..எனக்கு வேலை இருக்கு’அவரிடம் இருந்து தப்பித்து ஓடினாள்…

“ரெண்டு பேரும் சந்தோஷமா இருக்கனும்”என்று மனதார வேண்டிகொண்டார்.

ஆனால்…….

# அத்தியாயம் 7

அனைத்து வேலைகளையும் முடித்துவிட்டு அவள் அறைக்கு வந்தாள் வள்ளி….மெத்தைய பார்த்த்தும் நேற்று அவளும், பாண்டியனும் சிரித்து பேசியதும்….அவர்களின் காதல் கதையை நினைத்துக்கொண்டிருந்தனர்….. ஆனால் இப்பொழுது அவள் மட்டும் இருக்க..அவள் அத்தான் இல்லை… “இன்னும் ஒருவாரம் சீக்கிரம் போகனும்…..என அவளுக்குள் பேசிகொண்டே அன்று அணிந்திருந்த நகைகளை கழட்டி,அதை அலமாரியில் வைக்கும் போது அவள் கண்ணில், அவன், காதலர் தினத்தன்று அவளுக்கு பரிசாய் கொடுத்த “பிளாட்டினம் லவ்பேண்ட்ஸ்” மோதிரத்தை பார்த்ததும் அன்றை நாளுக்கு சென்றால்….. “அத்தான் எங்க கூப்பிட்டு போறீங்க சொல்லுங்க…. ‘இன்னும் கொஞ்ச நேரத்துல நீங்களே தெரிஞ்சுக்குவேங்க வள்ளியம்மா’…. என அவளை கண்களை மூடி அழைத்து சென்றான்……

“டேய் பிரம்மா…எல்லாம் ரெடியா”… ‘எல்லம் ரெடி பாண்டியா’ வள்ளிய அழைச்சுட்டு வா’………..1…..2…..3….. “இனிய காதலர் தினம் வாழ்த்துகள் என் இதயராணி வள்ளியம்மாக்கு” என கூறி அவள் கண்களில் இருந்து கையை எடுத்தான்…….பலூன்கள் பறக்க….விளக்குகள் ஒளிர……அவள் முன்

ரெட்வெல்வெட் கேக்கில் ‘‘என் வள்ளியம்மாக்கு அன்பு காதலர் தின வாழ்த்துகள்’’ என எழுதிருக்க....அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை..... ‘‘கேக் வெட்டுங்க வள்ளியம்மா’’... ‘வள்ளி தங்கச்சி சீக்கிரம் வெட்டுமா...காலையில சாப்பிட்டது........ இந்த பையன் என்னை சாப்பிடவிடாம வேலைவாங்கிட்டான்மா’பாவமாக பிரகாஷ் சொல்ல.... ‘‘ஏன் மாமா இவ்ளோ நேரம் காத்திருந்தேங்கள இன்னும் செத்த நேரம் பொருக்கமாட்டேங்களா’’மலர் சொல்ல..... ‘‘வள்ளியோ.....சேர்ந்து வெட்டலாம் அத்தான். ‘சரிங்க வள்ளியம்மா’’என்று இருவரும்... ஒன்றாக இணைந்து அந்த கேக்கை வெட்டினர்..... முதல் துண்டை எடுத்து அவள் அவனுக்கு ஊட்ட,அவன் அதையே வாங்கி அவளுக்கு ஊட்டிவிட்டான்.... ‘‘நாமா காதலிச்சு இதோட 16ஆவது வருசம் தொடங்குது வள்ளியம்மா.....அதுக்காக என்னோட முதல் பரிசு... ‘‘மலர் அந்த ஃகிப்ட் எடுத்துட்டு வாம்மா’’ ‘இதோ எடுத்துட்டு வரேணா’என மலர் இரண்டு மோதிர பாக்ஸை கொண்டு வந்தால்.......... ‘‘அண்ணா...இந்தாங்க’’......அதில் முதல் பாக்ஸில் உள்ள மோதிரத்தை எடுத்து அவளுக்கு போட்டுவிட்டு அவளின் கையில் முத்தமிட்டான்..... ‘‘இதை நீங்க அண்ணனுக்கு போட்டுவிடுங்க மதினி’’என்று மலர் அவளிடம் அடுத்த மோதிர பாக்ஸை எடுத்துகொடுத்தால்..... ‘வள்ளியும் அதை வாங்கி

அவனுக்கு….போட்டுவிட்டு அவனை அணைத்துகொண்டால்…. நான் எதுவும் உங்களுக்கு வாங்கி தரலையே அத்தான்’……. “நீங்கமட்டும் எனக்கு வாழ்க்கை முழுதும் வந்தீங்கனா அதைவிட வேற எந்த பரிசும் எனக்கு வேணாம் வள்ளியம்மா”

“டேய் உங்க காதல் வார்த்தையெல்லாம் அப்புறம் வைச்சுக்கோங்க. எனக்கு கேக் தருவேங்களா இல்லையா… அவன் புலம்ப….மலரோ….. ‘மாமா…இனிய காதலர் தினம் வாழ்த்துகள்… என மலர் அவள் கையில் “வொயிட்ஃப்ரஸ்ட் ஐஸ்கீரிம்” கேக்கை கொண்டுவந்தால்”…ஹே…மலரு….நீ எப்போ இதையெல்லம் ரெடி பண்ண… “அதெல்லாம் அப்புறம் சொல்லுரேன் இப்போ கேக் கட் பண்ணுங்க”என அவனும் அவளும் சேர்ந்து கேக்கை வெட்டி இருவரும் ஊட்டிவிட்டுக்கொண்டனர்….. “ஐ லவ் யூ மாமா”என்று பிரகாஷ்க்கு இதய வடிவுகொண்ட டாலர் செயினை அவனுக்கு போட்டுவிட்டால்…’ மலரு இது ஒண்ணும் உன் அப்பா பணத்துல வாங்கலலா’என அவன் கேட்க… “நான் பார்ட் டைம் ஜாப்க்கு போனேன், அதுல சம்பாரிச்ச பணத்துல வாங்குன செயின் போதுமா….மாமா பணம் வேணாமா ஆனா அவரு பெத்த பொண்ணு மட்டும் வேணுமா..ம்க்கும்…மலர் கோவபடுவது போல் அவனிடம் நடித்தால்… “என்ன பண்ணுறது….இந்த பொண்ண என்னைக்கு பார்த்தேனோ அன்னைக்கே நான் அவகிட்ட என்

மனச கொடுத்துட்டேன்…அதுனாலதான் என் அப்பாவே எதிர்த்தாலும் உன்னை கல்யாணம் பண்ணனுவேனு என் அத்தைக்கு வாக்குகொடுத்துருக்கேன்''… 'சும்மா சொன்னேன் மாமா அதுகுள்ள பழைய ப்ளாஸ்பேக்குக்கு போயிடுவேங்க.'….. 'ஹாப்பி லவ்ர்ஸ் டே தங்கமலர்'என அவளுக்கு பிடித்த காஞ்சிபுரம் பட்டுச்சேலையை அதுவும் அவளுக்கு பிடித்த கலரில் இரண்டு வாங்கி மலருக்கு பரிசளித்தான்…………'மாமா நீங்களா… அதுவும் எனக்கு பட்டுச்சேலை….லவ் யூ மாமா'என அவனின் காலில் விழுந்து வணங்கினால்…….''.ஹே மலரு… என்னதிது'',…' ஆசிர்வாதம் பண்ணுங்க மாமா அப்போதான் எழுந்திருப்பேன்' ''என்னைக்கும் என் மலரும்,நானும் சந்தோஷமா இருக்கனும்'' போதுமா……என அவளை எழுப்பினான்…. அதன் பின் அவர்கள் காதலர் தினத்தை ஜோடியாக கொண்டாடிவிட்டு வள்ளியயும், மலரையும் ஹாஸ்ட்டலில் விட்டு சென்றனர்…..அந்த மோதிரத்தையே பார்த்துகொண்டிருந்த வள்ளி, அவள் போன் அழைப்பில் நினைவுக்கு வந்தால்………. 'போன் ஸ்கீரினில்… மலர்பிரகாஷ்'என வந்திருக்க…. ''எதுக்கு இந்நேரம் போன் பண்ணுறா'' யோசித்துகொண்டே போனை அட்டென் செய்தால்.

''என்ன மதினி……எத்தனை முறை உங்களுக்கு கூப்பிடுறது….. ஃபுல் ரிங்காகுது ஆனா நீங்க எடுக்கல…வேலையா

இருந்தேங்களா’’……… ‘இல்லைடி மலரு….இப்போதான் வந்தேன்… சொல்லு…என்ன விசயம்’…. “அண்ணா வந்தாங்கனு வாணி சொன்னா…எப்படி இருக்காங்க…இருந்தான் கொடுங்க மதினி’’…. என்று பாண்டியனை பற்றி விசாரிக்க……….

‘அவங்க காலையிலயே கிளம்பிட்டாங்க மலரு…ஆபீஸ்ல இருந்து வேலை வந்திருச்சாம் அதான் அவங்க ஊருக்கு போயிருப்பாங்க இந்நேரம்..நல்லா இருக்காங்க டி’

‘‘அப்படியா மதினி……மதினி,அவங்களும் வந்தாங்களா’’…… என பிரகாஷை பற்றி கேட்க..

’ஓ….இதுக்கு நீ நேராவே கேட்டுயிருக்கலாம் மலரு…..எதுக்கு அத்தான விசாரிக்கனும்…..

‘‘மதினி அவங்க வந்தாங்களா…இல்லை, எதுவும் உங்ககிட்ட சொனாங்களா’’மலர் கொஞ்சம் பதற்றமாய் வினாவ……….

‘என்னடி ஏதும் பிரச்சனையா…உன்பேச்சு சரியா இல்லை’

‘‘எனகொன்னும் இல்லை மதினி…அண்ணா வந்தாங்கள… அதான் அவரும் வந்திருப்பாங்கனு நினைச்சேன்’’

‘இல்லைடி பிராகாஷ் அண்ணா வந்திருந்தாங்கன…உனக்கு சொல்லாமயா இருப்பேன்….ஏன் டி என்னாச்சு’

“மாமா என்கிட்ட பேசியே ஒருவாரம் ஆச்சு மதினி…நான் போன் போட்டாலும் எடுக்கல…அதான் ஊருக்கு வந்திருக்காங்களோனு.. நினச்சேன்….அவருக்கு ஒண்ணுமில்லையே உடம்புக்கு, நல்லா இருக்காங்களா”

‘ஏய் அண்ணா நல்லா தான் இருக்காங்க….நான் அத்தானுக்கு பேசிட்டு..உனக்கிட்ட பேச சொல்லுறேன் அண்ணன சரியா…. எதுவும் நினைக்காம போய் தூங்கு…நாளைக்கு குளக்கரைக்கு வா அங்க பேசலாம்…சாப்பிட்டு தூங்கு’..

“சரி மதினி….பேசிட்டு எனக்கு வாட்ஸப் பண்ணுங்க…….நான் வைக்குறேன்”

‘சரிடி’என அவள் பேசிவிட்டு வைத்தாள்…

”அம்மா உனக்கு என் ஃப்ரண்ட் ரொம்ப தாங்க்ஸ் சொல்ல சொன்னான்…சாப்பாடு அருமை…அதுவும் வாழைப்பூ பொரியல், மிகவும் அருமை….அன்னமிட்ட இந்த அன்னலெக்ஷிமிக்கு மிகவும் நன்றினு..என் ஃப்ரண்ட் பிரகாஷ் சொன்னான்மா”

‘அவரோ சிரித்துகொண்டே…சரி தெய்வா..அந்த தம்பிய வீட்டுக்கு கூப்பிட சொன்னேல….நீ கூப்பிட்டயா’

‘‘அய்யோ அதை மறந்துட்டேன் ம்மா….அவனுக்கு இன்னைக்கு ரொம்ப வேலைமா..சாப்பிடவே தாமதம் ஆச்சுமா……….நெக்ஸ்ட் டைம் அவனை கையோட அழைச்சுட்டுவரேன்மா’’

‘சரி ம்மா…ரெப்ரஸ் பண்ணிட்டு வா காஃபி,ஸ்நாக்ஸ் எடுத்து வைக்குறேன்’.. ‘‘சரிம்மா….காஃபி ஸ்ட்ராங்கா’’

‘‘பிரம்மா…சாப்பிட வா’’ என பாண்டியன் அழைக்க… ‘‘சாப்பிடேன் பாண்டியா….நீ சாப்பிடு’’

‘எங்க சாப்பிட்ட… இன்னைக்குதான் உனக்கு நகரகூட நேரம் இல்லையே அப்புறம் எப்படி’

‘‘இன்னைக்கு ப்ரியா எனக்கும் சேர்த்து சாப்பாடு எடுத்துட்டு வந்தா…அதை ரெண்டு பேருமே சேர்பண்ணி சாப்பிட்டோம்…ஆமா நீதான் டெல்லிக்கு போயிட்டு வர மூனு நாள் ஆகும் சொன்ன….ஆனா ரெண்டே நாள்ல திரும்பி வந்துட்ட’’

‘வேலை சீக்கிரம் முடிஞ்சது…அதான் உடனே கிளம்பிட்டேன்….. என அவன் சொல்லிகொண்டிருக்கும்போதே பாண்டியனுக்கு போன் வந்தது… அழைத்தது வள்ளி என

அறிந்துகொண்டு அவன் அறைக்கு சென்றான்…. ‘‘சொல்லுங்க வள்ளியம்மா…உங்களுக்கு போன் பண்ணமுடியல…. சாரி..வள்ளியம்மா, வந்தவுடனே வேலையே அதிகமா இருந்துச்சு…. என்ன பண்ணுறேங்க….சாப்பிட்டேங்களா…..என அவனே பேசிக்கொண்டிருந்தான்…. ‘என்னாத்தான் எதுக்கு சாரி….உங்க வேலையை பத்தி எனக்கும் தெரியும்…நான் சாப்பிட்டேன்…நீங்க சாப்பிட்டேங்களா.

’இப்போதான் சாப்பிடபோறேங்க வள்ளியம்மா…சொல்லுங்க என்ன விசயம்..நானா போன் பண்ணாம நீங்களா பண்ணிருக்கேங்க.. எதாவது முக்கியமான விசயமா’என அவள் பேச வந்ததை குறிப்பிட்டான்..

‘‘பிரகாஷ் அண்ணா ஏன் மலருக்கு ஒருவாரமா போன் பண்ணலை..பாவம் மலரு அண்ணுக்கு உடம்பு சரியில்லைனு நினைச்சுட்டா…. அண்ணா எப்படி இருக்காங்க…அவங்களுக்கு ஒண்ணுமில்லையே’’

‘அவனுக்கென்ன நல்லாதான் இருக்கான்…நான் மலருகிட்ட, பிரம்மாவ பேச சொல்லுறேன்….காலையில…மலர கவலைபடாம தூங்க சொல்லு….ஒருவாரம அவன் மலருகிட்ட பேசலையா வள்ளியம்மா’

“ஆமா அத்தான்…இப்போதான் போன் பண்ணி என்கிட்ட பேசுனா…அவ பேசுறவிதமே எனக்கு சரியா படல….அதான் உங்கிட்ட பேசிட்டு சொல்லுறேனு சொன்னே அத்தான்”

‘நான் அவன்கிட்ட பேசிட்டு….உங்களுக்கு சொல்லுறேங்க வள்ளியம்மா… மணி பத்தாக போகுது போய் தூங்குங்க…காலையில போன் பண்ணுறேங்க வள்ளியம்மா’

“சரிங்க அத்தான்…சாப்பிட்டு..பால் குடிச்சுட்டு….கொஞ்ச நேரம் நடந்துட்டு தூங்குங்க…..எந்த வேலை இருந்தாலும் ராத்திரில பார்க்கவேணாம்…உங்களுக்கு சாப்பிட்ட்து செரிக்காது அத்தான்….குட் நைட் அத்தான்….போன் வைக்குறேன்”

“சரிங்க வள்ளியம்மா…..குட் நைட்…ஸ்வீட் டீரிம்ஸ்…”என அவன் போனை வைத்ததும்….நேராக பிரகாஷிடம் சென்றான்……

‘உனக்கும்,மலருக்கும் என்ன பிரச்சனை….பிரம்மா,…..மலருக்கு ஒருவாரமா போன் பண்ணாம அப்படி என்ன வேலை உனக்கு’

“அதுக்குள்ள உனக்கும்,வள்ளிக்கு நீயூஸ் வந்திருச்சா…. ஒருவாரமா அவகிட்ட பேசாம நான் இருப்பேனா…இன்னைக்கு காலையில நடந்த சண்டை டா….ஏழு மணி நேரம் தான் பேசாமா

இருந்திருப்பேன்….அதுக்குள்ள அவ ஒருவாரனு உன்கிட்டயும்,வள்ளிக்கிட்டயும் பொய் சொல்லிருக்கா''

'சரி நீங்க சண்டை போட்டாலும் வழிய போய் பேசிடுவேங்க…. இப்போ மட்டும் என்ன…..மலரு ஃபீல் பண்ணறா போல பிரம்மா….அவகிட்ட பேசுடா..சமாதானம் பண்ணு..அவ இன்னும் சாப்பிடலயம் பிரம்மா'

''என்னது அவ இன்னும் சாப்பிடலையா….இரு அவளை திட்டுனாதான் ஒழுங்கா சாப்பிடுவா…நான் நாளைக்கு வந்து உன்கிட்ட பேசுறேன்''என்று ப்ரகாஷ்..போனை எடுத்துகொண்டு பால்கனிக்கு சென்றான்..

'ஏய்… என்னடி… லுசா நீ… இன்னும் சாப்பிடாம என்ன பண்ணுற…. போய் சாப்பிடு'என அவன் எடுத்தவுடன் அவளை திட்ட…. அதை கேட்டுகொண்டே பாண்டியன் சிரித்துகொண்டு சென்றான்…

''ஏன் டி என்னை இப்படி பாடுபடுத்துற……….பேசுனதுக்கு சாரி டி…….அதுக்குனு அவங்க ரெண்டு பேருகிட்டயும் ஒருவாரம் பேசலைனு சொன்னியா… அந்த பக்கம்… ''நான் ஒருவாரம் சொல்லல மாமா….ஒருமணி நேரம் தான் சொன்னே''…………. 'என்

அப்பாக்கு தினமும் போன் பண்ணுறேனோ இல்லையோ உனக்குதானடி முதல போன் பண்ணுவேன்'………''ம்ம்…ஆமாம்''

''சரி போய் சாப்பிடு தங்கம்…இவ்ளோ நேரம் சாப்பிடாம இருந்தா..உனக்கு அல்சர் வந்திரும்….போம்மா…மாமா நாளைக்கு போன் பண்ணுறேன்..சரியா''

'மாமா…ஒருநிமிசம்'….. ''என்னமா''… 'அண்ணா ஊருக்கு வந்திருந்தாங்கா நீங்க ஏன் வரலை அவருகூட'… ''என்ன சொல்லுற பாண்டியன் டெல்லிக்கு போயிருந்தான்….நீ வேற யாரோவ பார்த்துவிட்டு பாண்டியனு சொல்லுற… 'அய்யோ என் மங்குனி மாமா…உண்மையில அண்ணா வந்திருந்தாங்க.. வேணுமுனா பெரிய மாமாக்கு போன் பண்ணி கேளுங்க'….. ''சரி நான் நாளைக்கு பேசுறேன்…போய் சாப்பிட்டு எனக்கு மெசேஜ் பண்ணு…வைக்குறேன்''………. 'சரி மாமா…பை'….ம்ம்ம் சரிமா…. அவன் போனை வைத்ததும்…. ''எதுக்கு டெல்லிக்கு போறேனு சொல்லிட்டு…ஊருக்கு போயிருக்கான்….அதுவும் என்கிட்ட சொல்லாம… வரவர இவன் சரி இல்லை…நாளைக்கு என்னனு விசாரிப்போம்''என்று பேசிகொண்டு மெத்தையில் அமர்ந்து மீதம் இருந்த வேலைய பார்க்க ஆரம்பித்தான்..

‘அவங்களுக்குள்ள சின்ன பிரச்சனைங்க வள்ளியம்மா……வேற ஒண்ணுமில்லை….ஆல்ரெடி மலருக்கு போன் பேச போயிட்டான் வள்ளியம்மா….நீங்க எதுவும் நினைக்காம தூங்குங்க..என அவளுக்கு மெசேஜ் செய்தான்’

’’டேய் எல்லாம் பக்காவ இருக்குல…..இன்னைக்கு அந்த பொண்ண தூக்குனும்….அவள வச்சு அவங்க குடும்பத்த தூக்கனும்…..எவனாவது கோட்டவிட்டேங்க….மவனே என் கையால உங்கள கொன்றுவேன்’’என்று திவாகர் அடியாட்களை வைத்து ‘‘அந்த குடும்பத்தை,கடத்த சென்றான்’’

‘அண்ணே…..முதலாலி தான் கொஞ்ச நாள்..காத்திருக்க சொன்னாங்களே ஆனா நீங்க இப்போவே அந்த குடும்பத்த தூக்க போறேங்க… அண்ணனுக்கு மட்டும் தெரிஞ்சா….எங்களையும் சேர்த்து போட்டுருவாருண்ணே’என அடியாள் பயப்பட……

‘‘டேய்….இன்னைக்குவிட்டா நல்லநாள் இல்லைடா…..அவன் கிடக்குறான்…உங்களுக்கு அவன் கொடுக்குற பணத்தைவிட எக்ஸ்ட்ரா நான் தரேன் நான் சொன்ன வேலைய முடிக்காமா எவனும் இந்த இட்த்தவிட்டு போக்கூடாது…..புரியுதா’’

‘புரிஞ்சதுண்ணே’’………

“அண்ணே, அந்த பொண்ணு வருது……அங்க பாருங்க”என திவாகரிடம்,அவன் சொல்ல..

‘எல்லாம் ரெடியா இருங்கடா….அவ இந்த பக்கம் தான் போவா….டேய் நீ அவ பின்னாடி போயிட்டே இரு…உன் கையில கொடுத்திருக்க மயக்க மருந்து துணியை அவமூக்குல வைச்சு,அப்படியே அவளை தூக்கிடு…நாங்க உன் பின்னாடி கார்ல வரோம் சரியா’என ஒருவனை அனுப்பிவைத்தான்.

“சரிண்ணே..நீங்க சொன்ன மாதிரி நான் முடிக்குறேன்”என அவளை பாலோ செய்தான்….

‘அவளோ தன் பின்னாடி யார் வருவது…என தெரியாமல்… அந்த சாலையோரத்தில் நடந்தால்………அவள் நடந்து சென்றுகொண்டிருக்கும் போது திடீரென்று யாரையோ போட்டு அடிக்கும் சத்தம் கேட்டு திரும்பி பார்த்தால்..அவள் பின்னாடி வந்து கொண்டிருந்தவனை, ஒருவன் சகட்டுமேனிக்கு அடித்துக்கொண்டிருந்தான்…. இவளோ,எதுக்கு அவனை அடிக்குறான்.. என நினைத்துகொண்டிருக்க…பக்கத்தில் இருந்த ஒருவர்.. “பொண்ணை கிண்டல் பண்ணதுக்கு, இவனுக்கு வேணும்…..நல்லா அடிங்க அப்போதான் எந்த பொண்ணையும் திரும்பிகூட பார்க்ககூடாது, இதை பார்த்தாவது இவனமாதிரி

பசங்களுக்கு பயம் வரும்'' என அந்த ஒருவர் கூறிக்கொண்டே சென்றார்..

''இவளோ..நல்லாவேணும் அவனுக்கு……நம்மலும் போய் ரெண்டு அடியாவது அடிக்கனும்''என இவள் மனசுக்குள் நினைக்க..அதற்க்குள் அவனை போலீஸ்ஜீப் வந்து ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டது….

'சொன்னேல…நான் அப்போவே சொன்னேல….அந்த குடும்பத்துக்கு ஒருத்தன் பாதுகாப்பா இருக்கானு…கேட்டயா திவாகர்….உன்னால கொஞ்ச நாள் பொருக்க முடியாதா….இப்போ பாரு என் ஆளு அங்க மாட்டிகிட்டான் … இப்போ என்ன பண்ணபோற…..இங்க பாரு திவாகர் என் ஆள் எனக்கு வேணும்…..அவன் மட்டும் என்னை பத்தி ஏதாவது போட்டுக்கொடுத்தான் …உன்னால என் ஃபிஸ்னஸ் எல்லாம் பாலாபோயிடும்…..அப்படி மட்டும் நடந்துச்சு உன்னை சும்மா விடமாட்டேன் ஞாயபகம் வச்சுக்கோ'..என கோபமாக பேசிவிட்டு போனான்…

''எப்படிடா,அவன் அங்க வந்தான்…..நாம எப்படிடா வழிமாறிப்போனோம்…. சொல்லுங்கடா…அவன் பின்னாடிதான போயிட்டு இருந்தோம்''

’அண்ணே…அடுத்து என்ன பண்ணுறது’

‘‘அவன் சொல்லுறமாதிரி கொஞ்ச நாள் பொருத்திருப்போம்..அதுவரைக்கும் அவள கண்காணிச்சுட்டே இருங்க..சரியா’’

‘‘சரிண்ணே….’’

‘என்னாச்சு….எப்படி நடந்தது……சரி இப்போ யாருக்கும் எதுவும் ஆகலையில….சரி நான் வரேன்….அந்த பெரியவர கண்டுபிடிச்சேங்களா… ம்ம்ம்….சரி…..அந்த குடும்பத்தோட போட்டோ எனக்கு மெயில் பண்ணுங்க… நான் பார்க்கனும்..சரி நீங்களும் ஜாக்கிரதையா இருங்க…ஓகே’’என பேசிவிட்டு வைத்தான் போனை.

‘‘யாருகிட்ட பேசிட்டு இருந்த பாண்டியா’’என கேட்டுகொண்டே வந்தான் பிரகாஷ்.

’வேலை விசயமா பேசிட்டு இருந்தேன்….என்ன வேணும் உனக்கு காலையிலயே வந்திருக்க’

‘‘ஊருக்கு போயிட்டு,எதுக்கு டெல்லி போனேனு பொய் சொன்ன’’

‘அது….அது…வள்ளியம்மாவ பார்க்கனும் போல இருந்துச்சு….அதான் வேற ஒண்ணுமில்லை…உனக்கு யாரு சொன்னது மலரா’

‘‘ஆமா…நேத்து போன் பேசுனதுல சொன்னா’’

‘சரி….நீ எதுக்கு மலர்கூட சண்டை போட்ட……. ‘‘பிரியாவும் நானும் அப்போதான் வேலை முடிஞ்சு சாப்பிட வந்தோம்….அப்போ மலர் போன் பண்ணிருந்தா…நான் முதல கட் பண்ணிவிட்டேன்..ஆன திரும்பவும் போன் பண்ணா…அதை கட் பண்ணும் போது பிரியா என் மொபைல பிடுங்கி பேச ஆரம்பிச்சா….நான் யாருனு சொல்லவரதுக்கூட கேட்காம… ‘ஏங்க…அவனே இப்போதான் வேலைய முடிச்சுட்டு வந்து சாப்பிட உக்கார்ந்தான்..அது உங்களுக்கு பொருக்காதா….அவன் சாப்பிட்டு மெதுவா உங்களுக்கு போன் பண்ணுவான்…ஓகே’ மலர பேசவிடாம…….அவளே பேசிட்டு வச்சுட்டா…. மலரு சும்மா இருப்பாளா……வாட்ஸ்ப்ல….யாரு அவ…..உங்கள அவன்,இவனு…. கூப்பிடுறா…இதுக்குதான் நீங்க சென்னைக்கு வேலை பார்க்க போனீங்களா மாமானு அழுக ஆரம்பிச்சுட்டா…ஏற்கனவே அந்த ஃபிரஜெக்ட் ஃப்ரப்லம் வேற பாண்டியா….அதான் கோவமா அவகிட்ட பேசிட்டேன்….ஆனா அடுத்த நிமிசம் அவளுக்கு போன் பண்ணா எடுக்கல…சரி எப்படியும் உங்க மூலமா

பேசிடுவானு நினைச்சேன்….ஆனா அவ கோவத்துல சாப்பிடமா இருந்திருக்கா…அதுகடுத்துதான் உனக்கு தெரியுமே….என நேற்று நடந்ததை கூறினான்.

''உனக்கும்,பிரியாவுக்கும் இருக்குற ஃப்ரண்ட்சிப் எனக்கு தெரியும்…ஆனா மலருக்கு தெரியாது……. மலரு உன்னை நம்பி இருக்குறவ….. அதை மறக்காத………உன் காதல் அஞ்சு வருஷம்… அவ காதல் பத்து வருஷம்…..ஞாயபகம் வச்சுக்கோ…. அவங்க அப்பாவ எதிர்த்திட்டு உன்னை கல்யாணம் செய்ய ரெடியா இருக்குறா… அந்த பொண்ணுக்கிட்ட நீ கோவமா பேசுனதுக்கு உன்னை நான் திட்டியிருக்கனும்…ஆனா மலருக்கு உன்னை திட்டுனா பிடிக்காது அதுனால உன்னை விடுரேன்…இனிமே மலர்கிட்ட கோவமா பேசுறத இதோட நிறுத்திக்கோ சரியா பிரகாஷ்''

'சரிடா…உன் பாசமான தங்கச்சியை இனி எதுவும் சொல்லமாட்டேன் போதுமா'

''சரி ஆபீஸ் கிளம்பனும்…போய் ரெடியாகு''

'ஏன் டி இதுகெல்லாம சண்டை போடுவ…..அண்ணா பாவம் டி….ஏதாவது முக்கியமான வேலையில இருந்திருப்பாங்க…அதுக்கு நீ கோவமா மெசேஜ் பண்ணுவியா….அண்ணாவுக்கு நீதான்

எல்லாம்….அவங்க அப்பாவ எதிர்த்து உன்னை கல்யாணம் பண்ணபோறாங்க…..உனக்கே தெரியும்ல….அண்ணா உனக்காக எல்லாம் செய்யுறாங்கனு….இனிமே கோவப்படாத மலரு… அண்ணாக்கு நீதான் வாழ்க்கையே….அப்படி இருக்குறப்போ… அவருமேல சந்தேகப்படுறது நல்லதில்ல… புரிஞ்சுக்கோ டி…..…. நான் கிளம்புறேன்….பார்த்து வீட்டுக்குப்போ'என அவள் பேசவந்ததை பேசிமுடித்துவிட்டு சென்றாள்.

''மலரோ….பிரகாஷ்க்கு,மெசெஜ் செய்து மன்னிப்பு கேட்டும்… பிரியாவை பற்றி பேசியதற்கும் சாரி சொல்லியும்….இனி நீங்கள் கோவம்படுவதுபோல் பேசமாட்டேன் மாமா''என சோகமா ஸ்மைலியும்….. காதல் குறி போட்ட ஸ்மைலியும் அனுப்பி வைத்தாள்…

'அண்ணே…அந்த பொண்ணு யாருனு சொல்லுங்கண்ணே… அந்த குடும்பம் அப்படி உங்களுக்கு என்ன செஞ்சாங்க'என அவன் அடியாள் குடிபோதையில் அவனிடம் கேட்க…

''டேய்……நான் தேடுற குடும்பம்…..எங்க தாய்மாமா குடும்பம்….என் அத்தையும்,மாமாவும்,அவங்களுக்கு ஒரு பொண்ணு இருக்கா…ஆனா ஒரு சூழ்நிலையில அவங்க ஊரவிட்டு

போயிட்டாங்க….அவங்க ஊரவிட்டு போயி கிட்டதட்ட பதின்ஞ்சு வருஷம் ஆகிருச்சு''

'அண்ணே…புரியல…அப்போ அந்த பாண்டியன் யாருண்ணே'

''அவன்….எனக்கு ஒரே எதிரி…..அவனுக்கும்,எனக்கு நடக்குற யுத்த்துல நான்தான் ஜெயிக்கனும்….அதுவும் அவன் கையில மாமா குடும்பம் கிடைக்ககூடாது….அப்படிமட்டும் குடும்பம் அவன் கையில கிடைச்சா….இதுல நான் தோத்துபோனாதா அர்த்தம்….. அவனையும்,அவன் குடும்பத்தையும் பழிவாங்க என் மாமா குடும்பம் வேணும்''

'அண்ணே…..கண்டிப்பா உங்க மாமா குடும்பம் உங்க கைக்கு கிடைக்கும்…அதுக்கு நாங்க பொருப்புண்ணே'என போதை தலைக்கேறியதில் அவன் உலறிக்கொண்டு கீழே விழுந்தான்…. திவாகரனுக்கு இன்று நடந்ததை நினைத்து வெறியேரி இன்னும் அதிகமாக குடிக்க ஆரம்பித்தான்..

''சார்…மெயில் பண்ணிட்டேன்….அந்த பொரியவர் எங்க இருக்காங்கனு கண்டுபிச்சுட்டாங்க சார்…இனி நாங்க அவங்களை நேருல சந்திச்சு பேசுறோம் சார்''

‘வேணாம்…..நானும் உங்ககூட வரேன்..எனக்கும் வந்த வேலை முடிஞ்சது….நானே அவங்கள பார்த்து பேசி…எல்லாம் புரியவைக்கனும்… அதுவரை நீங்க பாதுகாப்பா பார்த்துக்கோங்க’

‘‘சரி சார்’’…….

# அத்தியாயம் 8

’’அய்யோ… அம்மா… சார்… வேணாம் சார்,என்னை விட்டுட்டுங்க….. எனக்கு ஒண்ணும் தெரியாது….சார்…….என்னை அந்த பொண்ணு பின்னாடி போகதான் சொன்னாங்க……ஆனா எதுக்கு சொன்னாங்கனு தெரியாது சார்……….. அடிக்காதேங்க சார்……..வலிக்குது’’

‘என்ன…உண்மைய சொன்னான…… ‘‘இல்லை சார்’’………….. ‘இன்னும் நல்லா அடிங்க….அப்போதான்….. உண்மைய சொல்லுவான்’……. ‘‘வேணாம்…….அவன விட்டுட்டுங்க’’……என பாண்டியன் சொல்ல…………சார்…..அவன் உண்மைய சொல்லல……. ஒருவன் சொல்ல, ‘நமக்கு தெரியும் இவன யார் அனுப்பினது…….. அப்புறம் எதுக்கு அவனை அடிக்கனும்………….எனக்கு அந்த குடும்பத்தை பாதுக்காப்பா ஒப்படைக்கனும்…….அதனால இவன விட்டுருங்க’……சரிங்க சார்’என அவனை வெளியில் விட்டனர்..

‘‘அவனையும் கொஞ்சம் கண்காணிச்சுட்டே இருங்க…..எங்க போறான், யாருகிட்ட பேசுறானு…….அந்த திவாகர்கிட்ட போனா நமக்கு அவன பிடிக்க…சுலபமா இருக்கும்’’என பாண்டியன் கூறினான்…

‘ஐயா.....நீங்க சொன்ன குடும்பத்தை கண்டுபிடிச்சுட்டாங்க...... அவங்கள நானே அழைச்சுட்டுவரேன்......எனக்கும், இந்த ஊருக்கு வந்த வேலை முடிஞ்சது....நானும் பிரகாஷும் இன்னும் ரெண்டு நாள்ல வேலைய ராஜினமா செஞ்சிட்டு வரோம்.....ஐயா’என பாண்டியன் திருமூர்த்தியிடம் சொல்ல...

‘‘செந்தூர் அவங்களுக்கு எந்தவித ஆபத்தும் இல்லாம அழைச்சுட்டு வரனும்.....அந்த குடும்பத்துல ஒருத்தருக்கு விபரிதம் நடக்க இருந்தாலும் அதை நீதான் தடுக்கனும்.........அந்த மூனு பேரும் எனக்கு மட்டுமில்லை உன் குடும்பத்துக்கும் ரொம்ப முக்கியம்.........அதே மாதிரி திவாகர் கையில அந்த குடும்பம் கிடைக்க கூடாது....அவனால அந்த குடும்பத்துல சின்ன அடிபட்டாலும் நீதான் பொறுப்பு புரிஞ்சதா......’’ புரிஞ்சது ஐயா....நான் பார்த்துகிறேன்......அவங்களுக்கு எதுவும் ஆகாம உங்ககிட்ட ஒப்படைக்கிறேன் ஐயா.... ‘‘சரிப்பா செந்தூர்.... நல்லது....பார்த்து பத்திரமா வாங்க’’

‘என்ன காரணம்...மிஸ்டர்.பாண்டியன்,எதுக்கு உடனே வேலைய ரிசைன் பண்ணுறேங்க.........வேற கம்பெனில ஜாப் ஆஃபர் வந்திருக்கா....இல்லை நாங்க கொடுக்கிற சம்பளம் உங்களுக்கு ஃப்ரப்லமா பாண்டியன்’என அந்த கம்பெனியின் மேலதிகாரி கேட்க......... ‘‘சார்.....கொஞ்சம் பர்ஸ்னெல் இஸ்யூஸ்

சார்…சோ,சாரி …………என்னால வேலைய தொடரமுடியல’’என தன்மையாக அவரிடம் கூறினான்…. ‘ஓகே….செந்தூர்….ஆனா நீங்க ஏன் பிரகாஷ் வேலைய ரிசைன் செய்யுறேங்க….உங்களும் இங்க வேலை பார்க்குறது பிடிக்கலையா’………… “ஆமா இது அம்பானி கம்பெனி…..இதுல பிடிச்சு வேலை பார்க்கனுமா……….. என மனசுக்குள் நினைத்துகொண்டு….. வெளியில்……… எனக்கு உங்க கம்பெனியில வேலை பார்க்கிறது ரொம்ப பிடிச்சுருக்கு சார்………ஆனா எனக்கு பிடிச்ச வேலை பார்க்கபோறேன் அதான் இந்த வேலைய ரிசைன் செய்யுறேன் சார்’’ பிரகாஷ் கூறினான்…… ‘என்ன வேலை பார்க்கபோறேங்க பிரகாஷ்’……… “விவசாயம்’’ என்று அவரிடம் ஒருவித கெத்துடன் சொன்னான்………. “கங்ராட்ஸ்…. பிரகாஷ்’’…… உங்க ரெண்டு பேரோட ரிசைன் லெட்டர நான் அக்செப்ட் பண்ணுறேன்….. ஒரு நல்ல எம்ப்ளாயிஸ நாங்க மிஸ் பண்ணுறோம்…..யூ மே கோ…

“பிரம்மா…..இன்னைக்கு வேலைய ரிசைன் பண்ணபோறோம்… ரிசைன் லெட்டர் டைப்….செய்து எடுத்து வா…..என அவன் சொல்லிச்சென்றான்….. ஆனால் பிரகாஷிற்க்கு பிரியாவிடம் எதுவும் சொல்லமல் போகப்போகிறோம் என அவன் வருத்தப்பட்டான்……….என்னடா இப்படி யோசிச்சுட்டு இருக்குற… ரிசைன் லெட்டர எடுத்துட்டு வா……நாம வந்த வேலை முடிஞ்சது’’

'என்ன வேலை பாண்டியா….எனக்கு தெரியாம'

''அது….சொல்லுறேன்…..ஊருக்கு போனா நீயே தெரிஞ்சுக்குவ…என அவன் சொல்லிகொண்டிருக்கும் போது பாண்டியனுக்கு போன் வந்தது ''சார் அந்த திவாகர்….நம்ம ஆளுங்க எல்லோரையும் அடிச்சு போட்டு அந்த குடும்பத்தை தூக்கிடான் சார்….நீங்க உடனே வாங்க''

'என்ன சொல்லுறேங்க……….எப்படி நடந்துச்சு……… சரி…. அவன் அந்த குடும்பத்தை எங்கவச்சுருக்காங்கனு ட்ரேஸ் பண்ணுங்க நான் வந்திட்டு இருக்கேன்….'

''சார்…..நாங்க…..அவன பின்தொடர்ந்துட்டுதான் இருக்குரோம் சார்……நீங்க வந்த்தான் காப்பத்த முடியும்…..சார்''

'இதோ வரேன்………பிரம்மா….உடனே வா ஒரு இடத்துக்கு போகனும்' என அவனையும் இழுத்து சென்றான்………

''என்னாச்சுடா யாருக்கு பிரச்சனை''பிரகாஷ் கேட்க.

'ஐயாவுக்கு தெரிஞ்ச குடும்பத்துக்கு பெரிய பிரச்சனைடா'என பாண்டியன் சொன்னது…பிரகாஷ்க்கு புரியவில்லை….. 'என் அப்பாக்கு தெரிஞ்ச குடும்பமா'

''ஹே யாருடா நீங்க எதுக்கு இப்படி எங்கள கடத்திட்டு வந்தேங்க……. என் அம்மாவ, விடுங்கடா''என அவள் கத்திகொண்டிருக்க…… அந்த அடியாளோ………. ''இந்தா சும்மா இருக்கமாட்டீயா…. ஏன் நொய் நொய்னு கத்திட்டு இருக்குற……. இன்னும் கொஞ்ச நேரத்துல உன்னை எதுக்கு கடத்த சொன்னாங்கனு நீயேன் புரிஞ்சுப்ப….அதுவரை நீ தூங்கு'….என அவளது தலையில் கட்டையால் அடித்தான்…… ''அய்யோ…..என் பொண்ணவிடுங்க உங்களுக்கு என்ன வேணும் சொல்லுங்க….. அதை கொடுக்கிறோம்….என் பொண்ணை ஒண்ணும் செய்யாதேங்க'' என அவளின் அம்மா…கதற….

'அதெப்படி அத்தை…..உன் பொண்ணை வச்சுதான்….உன் அண்ணன் குடும்பத்தை நான் பழிவாங்க முடியும்…….அதுக்குதான் இதனை வருசம் நான் காத்திருந்தேன்….என பேசிகொண்டு வந்தான்…. திவாகர்……. ''திவா…..நீயா….வேணாப்பா…என் பொண்ணவிட்டுரு, உனக்கு என்னவேணுமோ சொல்லு…என் சொத்து முழுக்க உனக்கே எழுதித்தரேன் ஆனா என் பொண்ண ஒண்ணும் செய்யாத''……………. 'உன் சொத்தும் வேனும்….உன் பொண்ணும் வேனும்……ஆனா அதுக்கு தடையா, நீ இருக்க கூடாது… அதனால உன்னை கொன்னுட்டு…..உன் பொண்ணுக்கு தாலி கட்டுறேன்…..என அவன் சொல்லிகொண்டிருக்கும் போது….

‘‘அது நான் இருக்கிற வரை நடக்காது திவாகர்’’என சொல்லிக்கொண்டே வந்தான் பாண்டியன்….

‘என்னடா அவன் பாதுக்காப்புல இருந்த குடும்பத்தை தூக்கிருக்கோமே இன்னும் அவன் எண்ட்ரி கொடுக்கலயேனு பார்த்தேன்…… வா பாண்டியன், என் உயிருக்கு உயிரான எதிரி வா….. உன் கண்ணுமுன்னாடியே அவளுக்கு தாலி கட்டுறத பாரு’என திவாகர்….எகத்தாளமாய் பேச…

‘‘திவாகர்…உனக்கு ஒண்ணும் புரியலனு நினைக்கிறேன்……உன் மேல கேஸ் பைல் பண்ணிட்டுதான் வந்திருக்கேன் இங்க இருக்கிற குடும்பத்துக்கு உன்னால ஆபத்து நேர்ந்தா,உன்னை கைது பண்ணறதுக்கு போலீஸ் வந்திட்டே இருக்காங்க’’

‘என்னடா பார்த்துட்டு இருக்கேங்க…..அவன அடிங்கடா……. என அவன் அடியாட்களை ஏவ…… பாண்டியனோ…… அவர்களை அடித்து நொறுக்கினான்….. இதற்கிடையில் திவாகர்…..பாண்டியனை அடிக்க வர…..திவாகரின் பின் இருந்த பிரகாஷ்….அவனை கட்டையால் அடித்தான்…… ‘‘பிரகாஷ்….அவங்கள இங்க இருந்து அழைச்சுட்டு போடா….நான் இங்க இவனுங்கள பார்த்துகிறேன்…. போலீஸ் இன்னும் பத்துநிமிசத்துல…. வந்திருவாங்க… நீ இவங்கள

கூப்பிடு போடா…என மற்றவர்களை அடித்துக்கொண்டே கூறினான்…

‘‘சரிடா…..என அவர்களை காப்பாற்றசென்றான்….. ஆனால் ‘‘அங்கு அவன் பார்த்தது…அவனுக்கே அதிர்ச்சியாக இருந்தது….. ஏன்னென்றால் அங்கு இருந்த்து..பிரியா…. ‘‘பிரியா….உனக்கு என்னாச்சு……. ப்ரியா இங்க பாருமா’’என மயக்கதில் இருந்தவளை….. எழுப்பிகொண்டிருந்தான்….. ‘தம்பி….என் பொண்ணா காப்பாத்துப்பா…..அவளை பத்திரமா இங்க இருந்து கூப்பிட்டு போப்பா’என பக்கதில் இருந்து சத்தம் வந்தது….. ‘‘நீங்க ப்ரியா அம்மாவா’’என அவன் கேட்க… ‘ஆமா தம்பி……என் பொண்ண இங்கிருந்து…..கூப்பிட்டு போப்பா…..அந்த பொறுக்கிட்ட என் பொண்ணு மாட்டக்கூடாது…..தம்பி’என தாமரை செல்வி அவனிடம் கெஞ்சினார்.

’அம்மா ப்ரியாக்கு ஒண்ணும் ஆகாது….வாங்க நீங்களும்…. இங்க இருந்து போகலாம்….என அவரையும்……. ப்ரியாவையும் அழைத்து சென்றான்……. அவர்களை காப்பற்றி அழைத்துசெல்லும் போது அவர்களின் பின்னிருந்து வந்த ஒருவன் கத்தியைகொண்டு பிரகாஷை குத்த வந்தான்….ஆனால் அதை பார்த்த தாமரை அவனையும்,பிரியாவையும் தள்ளிவிட்டு அந்த கத்திகுத்தை அவரின் வயிற்றில் வாங்கிக்கொண்டார்……….

‘‘ஆ….அம்மா’’என அவர் வலியில் சரிந்து கீழே விழுந்தார்……

‘‘அம்மா…….என பிரகாஷும்…பாண்டியனும் அழைத்துகொண்டே அவரின் அருகில் வர….திவாகர் கீழே விழுந்த ப்ரியாவை தூக்கி தோலில் போட்டுகொண்டு தப்பிக்க முயன்ற போது போலீஸ் அவனை பிடித்துக்கொண்டனர்……

‘‘டேய் உனக்கெல்லம் பட்டாலும் புத்தி வராத……உன்னை ‘‘கான்ஸ்டெபிள் அரெஸ்ட் ஹிம்…..’’என திவாகரனையும்…அவன் அடியாட்களையும் குண்டுக்கட்டாக கைது செய்தனர்.

‘உங்களுக்கு ஒண்ணும் ஆகாதுமா ‘‘பிரம்மா…ஹாஸ்பிட்டல் போகனும்… தூக்கு இவங்கள’’என பாண்டியன் சொல்ல…… பிரகாஷ் இதோ போன் பண்ணுறேண்டா………..அவரோ ‘தம்பி நான் இன்னும் கொஞ்ச நேரத்துல இறந்துடுவேன்…..என்னை ஹாஸ்பிட்டல் கொண்டுபோனாலும் நான் பிழைக்கமாட்டேன்…… என் பொண்ணு….நல்லா இருக்கனும்……எனக்கு ஒரு சத்தியம் பண்ணித்தாங்க தம்பி…….என தாமரை திக்கித்திணறி…. பாண்டியனிடம் கூற….. ‘‘என்ன செய்யனும் சொல்லுங்கம்மா’’

‘நீங்க என் பொண்ண கல்யாணம் பண்ணிகனும்… தம்பி’என அவர் கூற….. ‘‘அவனுக்கோ அதிர்ச்சி… என்னால முடியாதும்மா…. உங்க பொண்ணுக்கு நல்ல பையனா பார்த்து நானே கல்யாணம்

செஞ்சு வைக்கிர்றேன்ம்மா…. இந்த சத்தியம் மட்டும் என்னால பண்ணமுடியாதும்மா…. எனக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகிருச்சும்மா….. என்னால முடியாதும்மா….இது என் வள்ளியம்மாக்கு செய்யுற துரோகம்மா புரிஞ்சுக்கோங்கமா’’என அவன் வள்ளியை நினைத்து அவருக்கு சத்தியம் செய்யாமல்… இருக்க… ‘உன் அத்தைக்காக இதை பண்ணமாட்டையா….. செந்தூர்’என அவர் உரிமையாய் அவனை அழைக்க……

‘அத்தையா…..அம்மா என்ன சொல்லுறேங்க……. ‘‘உன் அப்பாக்கு இரண்டாவது தங்கச்சிதான் நான்…….உன் அம்மா உன்னை பெத்துதெடுக்கும் போது உன்னை நான் தான் முதல என் கையால வாங்குனேன்……உனக்கு செந்தூர் பாண்டியன் பேர் வச்சதும் நான்தான்’’ எனக்காக என் பொண்ண கல்யாணம் பண்ணிக்கோப்பா…அவளுக்கு நீதான் பாதுகாப்பா இருக்கனும்… அந்த திவாகர் குடும்பத்துக்கு கையில மட்டும் என் பொண்ணு கிடைச்சுடக்கூடாது…..தம்பி…… இந்த அத்தைக்காக செய்யமாட்டியா செந்தூர்..என அவர் கண்ணீருடம் கேட்க… ‘‘இந்த நிலையிலையா நீங்க என் சொந்த அத்தைனு தெரியனும்….. அய்யோ அத்தை….என்னால இதை செய்யமுடியாது……என அவன் மறுக்க……. ‘‘தாமரையோ….வயிற்றில் கத்திகுத்தின் வலியை தாங்கிகொண்டு மெதுவாக எழுந்து….அவனின் காலை

தொட'' 'அய்யோ அத்தை என்ன பண்ணுறேங்க'……….. ''எனக்கு இதைவிட்டா வேற வழி தெரியலை செந்தூர்…….என் பொண்ணு கழுத்துல தாலி கட்டுப்பா…..இல்லையினா என் உயிர் போனாலும்.. என் ஆத்மா சாந்தி அடையாதுப்பா…''என அவர் அவனிடம் கைகூப்பி கேட்க…..

'பிரம்மா… என பாண்டியன் அந்த கட்டிடமே அதிர கத்தினான்……. ''பாண்டியா….இன்னும் அஞ்சு நிமிசத்துல ஆம்லன்ஸ் வந்திரும்………'' என அவன் கூற……ப்ரியாவ எங்கடா 'அவ இன்னும் மயக்கத்துல இருந்து கண்ணுமுழிக்கலடா' ''அவளை தூக்கிட்டு வா……பிரம்மா''என அவன் சொல்ல……. 'சரிடா…..என அவன் மெதுவாக ப்ரியாவை கைத்தாங்களாக அழைத்து வந்தான்'…….தாமரையோ அவரின் கழுத்தில்…. இருந்த தாலியை எடுத்து…..பாண்டியனின் கையில் கொடுத்தார்…….. பிரகாஷ்க்கோ…. ஒன்றும் புரியவில்லை…….. ''இந்தாப்பா இந்த தாலிய அவ கழுத்துல கட்டுப்பா''என அவர் கொடுக்க…….. பிரகாஷிற்கு அதற்க்கு மேல் அதிர்ச்சியாய் இருந்தது… பாண்டியா… என அவனை தடுக்க… ''தாமரையின் முன்னிலையில் ப்ரியாவின் கழுத்தில் அந்த தாலிசெயினை போட்டுவிட்டான்'' ப்ரியாவை தாங்கி பிடித்திருந்த பிரகாஷ்…….பாண்டியனை அப்பொழுதிருந்து வெறுக்க ஆரம்பித்தான்………. 'மகளை ஒரு

நல்லவன் கையில் ஒப்படைத்ததை நினைத்து அவர் இறுதியாக….. கண்களை மூடிகொண்டார்…….செந்தூர்பாண்டியனின் இரண்டாவது மனைவியானல் தெய்வப்பிரியா.

’’முடிந்தது எல்லாம் முடிந்தது…………தாமரையின் பிரேத பரிசோதனை முடிந்து அவரின் உடல் பாண்டியனிம் ஒப்படைத்தனர்… ப்ரியா இன்னும் கண்விழிக்கவில்லை…. பிரகாஷ் பாண்டியனிடம்… ஒருவார்த்தை கூட பேசவில்லை………..வள்ளிக்கு என்ன பதில் சொல்லவது, அப்பா,அம்மா, கீர்த்தி,தம்பி, அத்தை, மாமா…மாறான்….என அனைவரையும் நினைத்துப்பார்த்தான் அனைவரும் தான் சொல்வதை கேட்ப்பார்களா….என் வள்ளியம்மா… என்னை நம்புவாங்களா…….என யோசிக்க ஆரம்பித்தான் பாண்டியன்.

‘சார்….எல்லம் பார்மாலிட்டிஸ் முடிஞ்சது….. நீங்க போறதுக்கும்…. அவங்க உடம்ப கொண்டுபோறதுக்கும்…..எல்லம் ரெடியா இருக்கு….சார்….ஆனா அந்த பொண்ணு கண்முழிக்கல… என்ன பண்ணலாம் சார்….என கேட்டுக் கொண்டிருக்கும் போது செவிலியர், பாண்டியனிடம் “சார் உங்க மனைவி கண்முழிச்சுட்டாங்க… நீங்க போய் பார்க்கலாம்’’என சொல்லிச்சென்றார்…….

“பிரகாஷ் இதையெல்லம் ஓரமாக நின்று பார்த்துக்கொண்டிருந்தான்…… தவிர..தலையிடவில்லை….”

’ஓகே’ நர்ஸ்…..இதோ வரேன்…… பிரம்மா நீயும் வா…. அப்போதான் அவளுக்கு புரியவைக்க முடியும்”என அவனையும் அழைக்க… ‘என்னைக்கேட்டா அவ கழுத்துல தாலிக்கட்டுன… உன்கிட்ட பேசகூட பிடிக்கல…..பாண்டியா… தயவுசெய்து என்னை விடு……. என அவன் அந்த இடத்தில் இருந்து கிளம்பிவிட்டான்……

”அவளுக்கு எப்படி புரியவைப்பது………. எல்லாத்தையும்….பு ரிஞ்சுக்குவாளா…… என யோசித்துக்கொண்டே அறையின் கதவை திறந்துக்கொண்டு உள்ளே சென்றான்…… ‘அம்மாக்கு என்னாச்சு சார்… அம்மா நல்லா இருக்காங்கள…… எதாவது சொல்லுங்க சார்’ என அவள் அழுதுகொண்டே கேட்க…. “அம்மா உயிரோட இல்லை ப்ரியா”என அவளிடம் கூறினான்……. ‘இல்லை பொய் சொல்லாதேங்க சார்…..அம்மாவ என் கண்ணுல காட்ட சொல்லுங்க சார்’………. என அவள் கதறி அழ……அவனோ அவளை எப்படி சமதானம் செய்வது எனத்தெரியாமல் முழித்துக்கொண்டிருந்தான்… “அம்மாக்கு ஒண்ணுமில்லை ப்ரியா…….அம்மா உன்னை, கடவுளா இருந்து பாதுகாப்பாங்க ப்ரியா……அழுகாத’என பிரகாஷ் வந்து

அவளை சமாதானம் செய்தான்………… ‘‘என் அம்மா இல்லையினா எனக்குனு யாருடா இருக்குறா….அப்போ நான் அனாதையா….. அப்பாவும் எங்க இருக்காங்கனு தெரியாம அம்மாவ இழந்துட்டு அனாதையா இப்போ நிக்கிறேன் பிரகாஷ்…..என அவள் தேம்பி தேம்பி அழுதால்… ‘உனக்கினு நாங்க இருக்குறோம் ப்ரியா…..நீ கவலைப்படாத…….என்னைவிட….உன்னை பாதுகாப்பா பார்த்துகிறதுக்கு பாண்டியன் பக்கபலமா இருப்பான் ப்ரியா….என அவன் சொல்ல… அவரு எதுக்கு எனக்கு பாதுகாப்பா இருக்கனும் பிரகாஷ்… ஏன்னா அவன் தான் உனக்கு தாலிக்கட்டிருக்கான்….. ‘‘என்ன சொல்லுற எனக்கு தாலிக்கட்டுனார…..என்ன உலறல் பிரகாஷ்… என அவள் கழுத்தில் கைவிட்டு தொட்டு பார்க்க… அதில் அவள் அம்மாவின் தாலி அழகாக அவள் நெஞ்சில் இருந்தது… அவளோ…..யாரு கட்டுனது பிரகாஷ்…. ‘‘பாண்டியன்… ப்ரியா’’ அவரு எதுக்கு எனக்கு தாலிக்கட்டனும்’’… ‘உன் அம்மாவோட கடைசி ஆசை ப்ரியா…..அவங்கதான் சொன்னாங்க’ என அங்கு நடந்தை கூறினான்……. ‘அம்மாவ பார்க்கனும் பிரகாஷ்….. என் அம்மாகிட்ட கூப்பிட்டு போடா…..’

‘‘அம்மாவ ஊருக்கு கொண்டுபோறோம் அங்க பார்த்துகலாம் ப்ரியாவ. கூப்பிட்டு வா பிரம்மா எல்லம் ரெடியா இருக்கு ஊருக்கு போக’’என அவர்களிடம் கூறிவிட்டு சென்றான்….

‘இங்கு தாமரை அத்தையின் குடும்பத்தை கடத்தியதும்… அதில் தாமரை அத்தை உயிர் பிரிந்ததும்……அவரின் மகள் கழுத்தில் தாலி கட்டியதும், எல்லாத்திற்க்கு காரணமாய் இருந்த திவாகரனையும், அவன் அடியாட்களையும் போலீஸ் கைது செய்ததும்… அடுத்து தாமரை அத்தை உடலை எடுத்துகொண்டு ஊருக்கு வருவாதாய் அவன் திருமூர்த்தியிடம் கூறிமுடிக்க “வேண்டாம் செந்தூர்…….என திருமூர்த்தி சொல்ல… ஐயா… என்ன சொல்லுறேங்க….. ‘ஆமா பாண்டியா…….தாமரைய இந்த ஊருக்கு முத்தியாவோட தங்கச்சியா அழைச்சுட்டு வரனும் நினைச்சேன்………ஆனா அவ உயிர் இல்லாத உடல இங்க கொண்டு வந்தா ஊருக்காரவங்க என்ன பேசுவாங்கனு தெரியாது… அதனால தாமரையோட உடல அங்கயே அடக்கம் செஞ்சுட்டு வந்திரு… நான் நீங்க வர்ர விபரத்தை உன் அப்பாக்கிட்ட சொல்லுறேன்… அதுவரை நீ உன் செல்போன ஆன் பண்ணாத பிரகாஷ்கிட்டையும் சொல்லிடு செந்தூர் அந்த பொண்ணையாவது உயிரோட அழைச்சுட்டுவா வள்ளிகிட்ட எந்த விசயத்தையும் சொல்லவேன்ண்டாம் புரியுதா என்று அவர் பேசிமுடித்து வைத்தார்.

’’சரிங்க ஐயா’’

‘நல்ல முறையில் தாமரையின் உடலை அடக்கம் செய்தனர் எல்லாவற்றையும் பாண்டியனே பார்த்தான்…. அவருக்கு நெய் பந்தம் பிடித்து வாய்க்கருசி போட்டு…….முடிவாக கொல்லியும் அவனே வைத்தான்’ இதெல்லம் முடிந்து அவர்களின் வீட்டுக்கு வந்தார்கள்… பாண்டியனும், பிரகாஷும்…….

“ஊருக்கு கிளம்புற வேலைய பாரு பிரம்மா… அவளையும்…. கிளம்பச்சொல்லு…தேவையானதை இப்போ எடுத்து வச்சுக்க சொல்லு… ஊருக்கு நாளைக்கு போகனும் பிரம்மா…. மறந்துடாத” என அவன் கூறிவிட்டு செல்ல…..

‘ஒரு நிமிசம்…….பாண்டியா……என அவனை நிறுத்தினான்….. “என்ன பிரம்மா”… வள்ளிக்கு என்ன பதில் சொல்லப்போற… ஒரு கேள்வி மட்டும்தான் கேட்டான்……. “தெரியலை ஐயா பார்த்துக்கிறேனு சொல்லிருக்காங்க……அங்க போனாதான் தெரியும்”… ப்ரியாக்கு இன்னும் உண்மை தெரியாது பாண்டியா…..நீ ஏற்கனவே கல்யாணம் ஆனவனு அவகிட்ட இதை பேசனும்டா’… என அவன் சொல்ல… நீயே அவளுக்கு புரியிறமாதிரி சொல்லுடா என்னால இன்னும் நம்பமுடியல என் வள்ளிக்கு துரோகம் பண்ணத அவகிட்ட பேசுற நிலைமையில நான் இல்லைடா’என அவன் சென்றுவிட.

’’ப்ரியாவை தேடி சென்றான் பிரகாஷ் ‘ப்ரியா சாப்பிடயா ’என அவள் அறைக்குள் நுலைந்ததும் கேட்டான் “என் அம்மா இந்நேரம் இருந்திருந்தா எனக்கு ஊட்டிவிட்டுதான் சாப்பிடுவாங்க அவங்கதான் இல்லையே…..என அவள் வானத்தை வெறித்து பார்த்துகொண்டே… அவனிடம் சொல்ல அவனோ….கையில் சாப்பாடு தட்டை ஏந்திகொண்டே வந்தான்… அவளை நோக்கி….. “இங்க பாரு ப்ரியா…..உன் அம்மாதன் இல்லை ………உனக்கினு ஒரு நல்லா ஃப்ரண்டா….ஒரு அண்ணனா நான் இருப்பேன் இப்போ ஒரு அண்ணனா உனக்கு சாப்பாடு ஊட்டிவிட்டா நீ சாப்படுவியா….ப்ரியா….என அவள் முன் வந்து நிற்க….. அவளோ………சம்மதமாய் தலை அசைத்தால்…… “அவனும் அவளுக்கு சாப்பாட்டை ஊட்டிவிட்டுக்கொண்டு அவளிடம் பாண்டியனை பற்றி கூற வேண்டும் என முடிவுடம் பேச்சை ஆரம்பித்தான் ‘ப்ரியா…உன்கிட்ட பாண்டியன பற்றி சொல்லனும்… ஆனா நீ என்ன முடிவு எடுத்தலும் அது ஊருக்கு போனப்பின்னாடி பார்த்துகலாம் சரியா………’

“என்ன பிரகாஷ்…….என்ன சொல்லனும்………எந்த ஊருக்கு போறோம் நாமா’’

‘பாண்டியனுக்கு…ஏற்கனவே கல்யாணம் ஆகிருச்சு ப்ரியா என அவன் சொல்ல’ ’’அவளோ அதிர்ச்சியில் அப்போ எதுக்கு

என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க’’…….’ ‘உங்க அம்மா கடைசியா இறக்கும்போது…என அவன் ஆரம்பித்து… தாமரை, பாண்டியனிடம் ப்ரியாவை கல்யாண செய்துகொள்ளுமாறு சத்தியம் வாங்கியதும்…..ப்ரியாவை பாதுகாப்பதும், அவளுக்கு எந்தவித ஆபத்தும்….அந்த திவாகரன் குடும்பத்தினால் ப்ரியாவுக்கு எதுவும் ஆக்கூடாதும் என்றும் அதனால் தன் பொண்ணை பாண்டியன் கல்யாணம் செய்யவேண்டும்…..எனக்கூறி அவன் முன்னால் நடந்ததை அவளிடம் சொன்னான் பிரகாஷ்….

‘‘இதெல்லாம் கேட்ட ப்ரியா……என் அம்மாவால,அவங்கள இப்படி ஒரு சூழ்நிலையில கொண்டுவந்து நிறுத்திட்டாங்களே… அவங்கள எங்க பிரகாஷ்….. ‘அவன் ரூம்ல இருக்கான் ப்ரியா’…. ‘‘நான் அவங்கள பார்த்துட்டு வரேன்…….’’என அவன் அறைக்கு சென்றால்…………..

‘பாண்டியன்….அவனது மடிகணினியில் வள்ளியுடன் எடுத்த ஒவ்வொரு போட்டோவையும் பார்த்துக்கொண்டிருந்தான்… ப்ரியா வந்ததை கவனிக்காமல். ‘‘சார்…..என அவனை அழைத்தால்….’’ அவனோ அதை மூடிவைத்துவிட்டு……… ‘என்ன ப்ரியா…….என்ன வேணும்’… ‘‘பிரகாஷ் இப்போதன் உங்களை பற்றி சொன்னான் உங்க வள்ளிய பற்றியும்…..சாரி என் அம்மாவால உங்களுக்குதான் அதிக பிரச்சனை……நான் ஊருக்கு வரலை சார்….என்னால உங்க

மனைவிக்கும், குடும்பத்துக்கும் தான் மனக்கஷ்டம் சார்’’என அவள் பேசிகொண்டே போக..........

‘கொஞ்சம் நிறுத்துறையா உன்னையும் ,உங்க குடும்பத்தையும் கண்டுபிடிச்சு கூப்பிட்டு வரச்சொன்னது எங்க ஐயாதான்.....அவர் சொன்ன பேச்சுக்கு மறுவார்த்தை பேசாமா.....உங்களை தேடி வந்தோம்... ஆனா எங்களால முடியல......அதுனால தான் எனக்கு தெரிஞ்ச ஃப்ரண்ட் ஒருத்தன் போலீஸ் வேலை பார்க்கிறனு அவன் மூலமா உங்கள தேடுனோம் அவனும் உங்கள பற்றி எல்லா விபத்தை கண்டுபிடிச்சு,உங்க போட்டோ முதல் கொண்டு எனக்கு அனுப்பி வைச்சான்....ஆனா உங்க குடும்பத்தை நேருல பார்க்கபோறனால எதுக்கு...போட்டோனு நான் பார்க்கவேயில்லை முன்னாடியே நீங்கதான் அந்த குடும்பனு தெரிஞ்சிருந்தான் இந்நேரம் நான் உங்கள எங்க ஐயா முன்னாடி கொண்டுபோயிருப்பேன்... எல்லாமே கெட்டு போயிருச்சு... ஊருமுன்னாடி நான் எப்படி நிக்கபோறேனு தெரியல......... தயவுசெய்து என் கண்முன்னாடி நிக்காத போயிடு.....போ....என அவன் கத்தினான்... அவளோ தன்னை சுற்றி இவ்வளவு நடந்து இருக்கிறதா... என அவள் அழுதுகொண்டே சென்றாள்.

''பாண்டியனோ....நாளை என்னவெல்லம் நடக்கபோகிறதோ என யோசித்துகொண்டு உறங்க முற்ப்பட்டான்.......ஆனால் அவன் நினைவில் வள்ளி மட்டுமே.....இருந்தால்..........

'என்ன ப்ரியா...எதுக்கு அழுகுற.......அவன் கோவமா பேசுனான.... விடு ப்ரியா அழுகாத.....'என அவளை தேற்றிகொண்டிருந்தான்.... ''பிரகாஷ்.....நான் ஊருக்கு வரலை.... நான் இப்படியே எங்காயவது போயிடுறேன்.....என்னை விடுங்க....'' என அவள் வீட்டின் வாசலுக்கு போக...... 'ம்ம்ம்...அப்படியே உன் அப்பா மாதிரி எங்கயாவது தொலைஞ்சு போ....நாங்க எங்க ஐயா முன்னாடி தலைகுனிஞ்சு நிக்கிறோம்.....உனக்கு உன் கவலைதான் தெரியுது...என்னையும் இவனையும் பத்தி நினைச்சுருந்தா....நீ இப்படி பண்ணுவியா....போ...'என பாண்டியன் அவளை சத்தம் போட்டுகொண்டே வர......... ''அவளோ.....அப்படியே நின்றால்...... என்ன நின்னுட்ட.........போகலையா...'' என கேட்க....... அவளோ அழுதுகொண்டே இருந்தால்.... 'பிரம்மா இவளை கூப்பிட்டு போய் அவ ரூம்ல தூங்க வை....நாளைக்கு காலையில ஊருல இருக்கனும்... என சொல்லிவிட்டு சென்றான்.....

''அதே நாள் காலையில்....... ''வள்ளி எழுந்து,குளித்துவிட்டு வாசல் பெருக்கி கோலமிட்டு.....வீட்டினுள் நுலைந்து சாமி கும்பிட்டு, குங்குமத்தை எடுத்து வைக்கும் பொழுது....குங்குமம்

செப்பு தவறி கீழே விழ….அதை சரியாக…. அவளின் அத்தை பிடித்து அவளிடம் கொடுத்தார்….பார்த்துமா….இன்னைக்கு நல்ல நாள்..அதுவுமா குங்குமம் கீழே விழக்கூடாதுமா வள்ளி….இந்தா.. என்றார்….. ‘‘அவளுக்கோ….எதுவோ தவறாக நடக்க போகிற அறிகுறியாக இருக்குமோ…..என யோசித்தால்’’… அதற்க்கு ஏற்றார் போல்… பல்லி சத்தமிட இவளுக்கு இன்னும் பயம் அதிகமானது.’’ எல்லாரும் நல்லா இருக்கனும்….அத்தானுக்கும்,கீர்த்தி,தம்பி,என் அண்ணாவுக்கு எதுவும் ஆக்கூடாது….சாமி….எந்த கஷ்ட்டனாலும் எனக்கு கொடுங்க….என வேண்டிகொண்டு சென்றால்..ஆனால் அதற்கு தடையாய் அவள் ஏற்றிய குத்துவிளக்கு அணைந்து போனது……..

‘சமையல் அறையில் சமையல் செய்துகொண்டிருந்த வள்ளிக்கு ஒருமாதிரியாக இருந்தது இதை பார்த்த வாணி ‘‘தாயி… என்ன செய்து… ஒருமாதிரி இருக்கேங்க’’…. ‘ஒண்ணுமில்லை வாணி நீ போய் கீரை பிடுங்கிட்டு வா…மாமாக்கு முருங்கை கீரை சூப்பு வச்சு கொடுக்கனும்….என அவளை வெளியில் அனுப்பி வைத்தால் தாளித்த வாசனை தாங்கமுடியாமல் அவள் வாஷ்பேஷனில் வாந்தியெடுத்தால்…… இதை பார்த்த மீனாட்சி…… ‘வள்ளி என்னாச்சு….என தலையை பிடித்துகொண்டார்…… என்னடி வாந்தியெடுக்கிற.. ராத்திரி என்ன சாப்பிட்ட……’என

வினாவிக்கொண்டிருந்தார்……. அவளோ இட்லி சாப்பிட்டேன் அத்தை…..என பேசியவள்… போன மாதம் தலைக்கு ஊத்தியது இன்னும் வரவில்லை தேதியை பார்த்து உடனே புரிந்துகொண்டால் ‘‘அத்தை…… நாள் தள்ளி போயிருக்கு’’என மகிழ்ச்சியான விசயத்தை கூறினால்…. ‘என் வீட்டு மருமகளே…..என் குடும்ப வாரிச பெத்துகொடுக்க போற மகாராசி டி நீ’ வா வந்து இப்படி உக்காரு…..என அவளை மெதுவாக அழைத்து வந்தார்…..

‘‘அப்பொழுது……பாண்டியன் வரும் விசயத்தை…..ஒருவன் வந்து கூற…….. ‘‘திருமூர்த்தி ஐயாதான் தாயி உங்ககிட்ட விசயத்தை சொல்ல சொன்னாங்க… வரேன் தாயி’’

‘என் பையனும் ஊருல இருந்து வரான்……என் பேரனும் இன்னும் பத்து மாசத்துல வந்திருவான்……என உற்ச்சாகமாக கூற…. ‘‘வள்ளியோ அத்தை யாருக்கும் சொல்லவேணாம்,அத்தை அத்தான் வந்த பின்னாடி சொல்லிக்கலாம் அத்தனுக்குதான் முதல சொல்லனும் அத்தை’’என கோரிக்கை வைத்தால் ‘முதல் முதலா என்கிட்ட கேட்டுருக்க கண்டிப்பா யாருக்கும் சொல்லமாட்டேன்’ என அவரும் அவளுக்கு துணையாய் இருந்தார்…..

# அத்தியாயம் 9

’’சென்னையில் இருந்து கோட்டையூர் நோக்கி அந்த கார் சென்றுக்கொண்டிருந்தது டிரைவர் சீட்டில் பிரகாஷ் இருக்க அவன் பக்கதில் பாண்டியன் அமர்ந்திருக்க…….பின்னாடி ப்ரியா அமர்ந்திருந்தால் அவள் நேற்று நடந்ததை நினைத்து கொண்டிருந்தால் பாண்டியன் அவளை திட்டிவிட்டு சென்றதும்… பிரகாஷ், பிரியாவை அவளின் அறைக்கு அழைத்துசென்று ’எல்லாம் முடிஞ்சது ப்ரியா….இனி எதுவும் நீ பேசாக்கூடாது… நாளைக்கு நாம ஊருக்கு போகப்போறோம்….அங்க போய் பேசிக்கலாம்…..நீ எதுவும் நினைக்காம தூங்கு…….அங்க என்ன நடந்தாலும், நான் இருக்கேன்…. யாரும் எதுவும் உன்னை சொல்லமாட்டாங்க…..சரியா…..இப்போ தூங்கு நான் என் ரூம்க்கு போறேன்……’ என அவள் உறங்கிய பின் அவன் அறைக்கு சென்றான்……..

‘மறுநாள் காலையில் மூவரும் தயாரக இருந்தனர்….. ‘‘பிரகாஷ் என் வீட்டுக்கு போகனும்,என் அம்மாவும்,நானும் வாழ்ந்த வீடு…. பிளிஸ் டா……என்னை கூப்பிட்டு போடா…..’’என அவனிடம் கேட்டுகொண்டிருந்தால்…….. ‘சரி ப்ரியா….அவன்கிட்ட கேக்குறேன்…….’

“எல்லாம் எடுத்தாச்சுலா பிரம்மா…….கிளம்பலாம…….ஊருக்கு போகவே நேரம் ஆகும்….இருட்டுறதுக்குள்ள போகனும்…….வா, நீ வண்டிய ஓட்டு…..நான் உன் பக்கத்துல உக்கார்ந்துக்கிரேன்… பிரம்மா…..அந்த் பொண்ணையும் வரச்சொல்லு…’’ என்றான்.

‘பாண்டியா……ப்ரியாவுக்கு…..அவளோட வீட்டுக்கு போகனுமா அவங்க அம்மா போட்டோவ எடுக்கனுமா……அதனால ப்ரியா வீட்டுக்கு போயிட்டு நாமா ஊருக்கு போயிடலாம்….’என அவனிடம் கேட்டான்.

“ம்ம்ம்…..சரி போகலாம் ஆனா அங்க போய் அழுக வேண்டானு சொல்லு… நமக்கு நேரம் இல்லை……வா வண்டிய எடு அந்த பொண்ண பின்னாடி உக்காரச்சொல்லு..’’

“அவளின் வீட்டின் முன் கார் நின்றது…. ப்ரியாவோ…. பள்ளிவிட்டு செல்லும் குழந்தைப்போல் அவள் வேகமாக இறங்கி ஓடினால்… “டேய் நீயும் போடா இலையினா அந்த பொண்ணு பீல் பண்ணிட்டு இருப்பா.’’ என அவனையும் உள்ளே போகச்சொன்னான்………..

‘உள்ளே சென்றதும்…..அந்த வீட்டையே சுற்றிப்பார்த்தால்… அங்கு அவளும்,தாமரையும் ஒன்றாக எடுக்கொண்ட போட்டோவை எடுத்துப்பார்த்தால்… அதை பார்த்ததும்……அடக்கி

வைத்திருந்த அழுகை வெளிவந்தது… ‘ஏன் மா என்னைவிட்டு போன… நீயும்,நானும்… சந்தோஷமா இருந்த வீடு இப்போ யாருமில்லாம அமைதியா இருக்கு…. பிளிஸ்மா நீ இருக்குர இடத்துக்கே நானும் வரேன்…..எனக்கு நீ மட்டும் போதும்மா…… ’என அவள் அழுதுகொண்டே சொல்ல…….அவள் பேசியதை கேட்டுக்கொண்டே வந்த பிரகாஷ்……ப்ரியாவை தோள் தொட்டு எழுப்பி அவளை சமாதானம் செய்தான் ‘‘என்ன ப்ரியா….. இப்போதனே சொன்னே, அழுகாத…… வேற பொருள் எதாவது எடுக்கனுமா….. எடுத்துட்டு வா போகலாம்… என அவன் சொல்ல…… ‘‘அவளோ தாமரையின் அறையில்….தேவையானதை எடுத்துகொண்டு……மற்றவையெல்லாம் ஒரு பெட்டியில் வைத்து பூட்டிவிட்டு சென்றால் ‘‘எடுத்துடீயா போகலாமா எதுவும் மறக்கலையே’’ என அவன் கேட்க ‘‘இல்லை எல்லாத்தையும் எடுத்து வைச்சுட்டேன் போகலாம் பிரகாஷ்…..’’ என அவளை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வெளியே வந்தான்….’

‘‘என்ன பிரம்மா போகலாமா……….’’

‘போகலாம் பாண்டியா…….ப்ரியா போய் காருல உக்காரு அதை கொடு நான் பெட்டியில வைக்குறேன்……’என அவள் எடுத்து வந்த பொருளை,உள்ளே வைத்து பூட்டினான்……….’

“அங்கிருந்து ஆரம்பித்த பயணம்… ஆறு மணி நேரம் அவர்களின் பயணம் தொடர்ந்தது ப்ரியாவோ யாரிடமும் எதுவும் பேசாமல் அமைதியாக…. வந்தால் பாண்டியன் பிரகாஷிடம் மட்டுமே பேசினான்…….ப்ரியாவிடம் பேசவேயில்லை… இடையில் பிரகாஷ், ப்ரியாவிடம் சாப்பிட எதுவும் வேண்டுமா.. என கேட்க……அவளோ பேசாமல் வேண்டாம் என தலையை மட்டுமே அசைத்தால்……”.

‘பாண்டியனுக்கு….ஊர் நெருங்க,நெருங்க அவனுக்கு பயம் பிடித்துக்கொண்டது என்னதான் திருமூர்த்தி ஐயா…. சொன்னலும், அவன் பக்கம் நியாயம் என்ற, ஒன்றை பார்ப்பார்களா……இல்லை, தாமரை அத்தையை பற்றி கூறினால் நம்புவார்களா….. ப்ரியாவை எப்படி எடுத்துக்கொள்வார்கள்…’என அவன் நினைத்துகொண்டே வர…….அவனுக்கு திருமூர்த்தியிடம் இருந்து அழைப்பு வந்தது… அதை பார்த்ததும் “பிரம்மா காரை ஓராம நிறுத்து முக்கியமான போன்கால்..” என்றான். கார் நின்றதும் பாண்டியன் காரில் இருந்து இறங்கி கொஞ்சம் தள்ளி சென்றான் பேச ஆரம்பித்தான்.

“சொல்லுங்க ஐயா…”

’எங்க இருக்கீங்க பாண்டியா….ஊருக்கு வந்துட்டேங்களா… இல்லை….வர நேரம் ஆகுமா’

‘‘ஊரு எல்லைய, தாண்டிட்டோம் ஐயா…..இன்னும் அரை மணி நேரத்துல வந்திருவோம்……….என்னங்க ஐயா எதாவது பிரச்சனையா…..அங்க’’என அவன் பதற.

‘அதெல்லாம் இல்லை… பாண்டியா… பார்த்து வாங்க… அந்த பொண்ணு பத்திரம்’

‘‘சரிங்க ஐயா’’ என அவன் பேசிமுடித்ததும் காரில் வந்து ஏறினான்…..’ ‘போகலாம் பிரம்மா’… ‘‘யாருடா போன் பண்ணது…’’ என்று பிரகாஷ் கேட்க…. ‘ஐயா….தான் போன் பண்ணிருந்தாங்க வேற ஒண்ணுமில்லை…’அவ்வளவு தான் என்பது போல் அமைதியாகிவிட்டான்..

‘பாண்டியன் ஊருக்கு வருவது அனைவருக்கும்… கட்டுத்தீப்போல் பரவியது முத்தையாவிர்க்கு இருப்பு கொள்ளவில்லை ஊர் மக்கள் அவன் வரவிர்க்கு காத்திருந்தனர்… ‘‘அண்ணே… ஆட்டுக்குட்டி இளம் குட்டிதானே அப்போதான் கறி வேகும் அப்புறம் சிக்கன் பிரியாணி பண்ணிடுங்க…….அரிசி சோறு அதிகமா செஞ்சுடுங்க…….அசைவம் சாப்பிடாதவங்களுக்கு,சாம்பார் சாதம் செஞ்சுடுங்க….முட்டை,வறுத்த மீன்…….எல்லாம் ரெடி பண்ணிடுங்க….ரசத்துல மிளகு,சீரகம், அதிகமா போட்டு பண்ணுங்க அப்போதான் ஜீரணம் ஆகும் அண்ணே… சரியா,…..

'வாணி நீ பக்கத்துல இருந்து பாத்துக்க...... சரி தாயி எல்லாம் சரியா செய்றோம்... முத்து அண்ணே இலை அறுத்துட்டேங்களா..... 'அதுக்கு தான் தாயி வாழை தோப்புக்கு போயிட்டுயிருக்கேன்.' ‘‘சரிணே.... அப்படியே தென்னைந்தோப்புல இளநி வெட்டிட்டு வாங்க.....’’ 'சரி தாயி' என ஆளுக்கு ஒவ்வொரு வேலையை கொடுத்தால்...வள்ளி...........

’’வள்ளி.......இப்படி வந்து உக்காரு... அங்கயும்,இங்கயும் அழைஞ்சா உன் உடம்பு என்னத்துக்கு ஆகுறது... இந்த மாதுளம் பழம் ஜூஸ் குடிச்சுட்டு ஒழுங்க ரெஸ்ட் எடு.......தம்பி வந்தா நான் சொல்லுறேன்.....அதுவரை நீ எழுந்து வரகூடாது புரியாதா என்று வள்ளியை செல்லமாக கடிந்தார்.....மீனட்சி.......’’

'ம்ஹூகும் அத்தை,... அத்தான் வரும் போது நான் இங்கதான் இருப்பேன்..... நான் தான் முதல பார்ப்பேன்.... அதுகடுத்து தான் நீங்க பார்க்கனும்...அத்தான் வந்த பின்னாடி ரெஸ்ட் எடுத்துகிறேன்... அம்மாக்கும்,அப்பாக்கும், அத்தான் வர்ர விசயத்தை சொல்லனும் அத்தை.......சமையல் ரெடியாகுது....அதை அப்போ அப்போ போய் பார்க்கனும்.......இன்னும் வேலை இருக்கு அத்தை நீங்க என்னான ரெஸ்ட் எடுக்க சொல்லுறேங்க...போங்க அத்தை....'என்றாள்'

“இங்க பாரு வள்ளி,அந்த வேலையெல்லாம் நானும்,வாணியும் பார்த்துகிறோம்.....நீ மேற்ப்பார்வை பார்த்தா போதும்......அதுவரை இந்த இடத்தவிட்டு எழுந்திருக்க கூடாது......அத்தை நான் சொல்லுறேன் கேட்டுக்கனும்..” ‘சரிங்க அத்தை.....நான் இங்கயே இருக்குரேன்... போதுமா’....... ம்ம்....இதுதான் என் மருமக......” என அவளை கொஞ்சிவிட்டு சென்றார்....

‘என்ன முத்தையா......பாண்டியன் எப்போ வருவான்..... இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்.......எங்க வந்திட்டு இருக்கானு கேட்டையா...’என திருமூர்த்தி, முத்தையாவிடம் விசாரிக்க... “இன்னும் அரைமணி நேரத்துல வந்திருவான் ஐயா......நீங்க உள்ள வந்து உக்காருங்க.....”என அவரை வரவேற்று அமர வைத்தார் அப்பொழுது.....தமிழ்செல்வியும்,முருகவேலும்...வந்திறங்கினர்...... “வாங்க மாமா வாம்மா எப்படி இருக்கேங்க”என முத்தையாவும்... திருமூர்த்தியும் வரவேற்க ‘நல்லா இருக்கோம் ஐயா அண்ணே நீங்க எப்படி இருக்கேங்க ஐயா...” ‘என தமிழ்செல்வி விசாரிக்க ’எனகென்னமா நல்லா இருக்கேன்....உள்ள போங்க..... ‘வணக்கம் ஐயா,எப்படி இருக்கேங்க மச்சான்’என முருகவேல் அவர்களிடம் பேசிகொண்டு அங்கயே அமர்ந்துவிட்டார்.....

“வள்ளி,என்னமா இங்க உக்கார்ந்திருக்க மாப்பிள்ளை வராங்கனு அண்ணி சொன்னாங்கா…….இந்நேரம் வீட்டைய அமர்களப்படுத்திருப்பனு பார்த்தா….. அமைதியா இருக்க உடம்பு சரியில்லையாமா”என அவளின் கழுத்திழும்…. நெற்றியிலும் கை வைத்து பார்த்தார் உடம்பு நல்லாதானே இருக்கு அப்புறா என்னமா” என அவளிடம் கேட்க ‘அதை நான் சொல்லுரேன் அண்ணி, எப்படி இருக்கேங்க…..அண்ணே எங்க’ என கேட்டுகொண்டே வந்தார்..மீனட்சி… “இப்போதான் வந்தோம் அண்ணி…. நல்லா இருக்கோம்….. அவரு, ஐயாகூடவும், அண்ணே கூடவும் வெளிய பேசிட்டு இருக்காரு…. வள்ளி ஏன் இப்படி இருக்குரா… அண்ணி…..”………என செல்வி,மீனாட்சிடம் கேட்க… ‘காலையில இருந்து தம்பி வராங்கனு தெரிஞ்சதுமே ஒரு இடத்துல இவ நிக்கல… அத்தானுக்கு, பிடிச்சது செஞ்சு வைக்கனும், அது, இதுனு ஒருத்தரையும் இவ விடல……….நான் எல்லாம் பார்த்துகிறேன் நீ அமைதியா இந்த இடத்தவிட்டு எழுந்திருக்க கூடாதுனு சொன்னே அதான் அமைதியா இருக்குறா…”

‘ஏன் டி,மாப்பிள்ளை தான் இங்கயே இருக்க போறாங்கள அப்புறம் என்ன… வேலையை ஒருத்தர்கிட்ட ஒப்படைச்சுட்டு நீ அமைதியா இருக்க மாட்டீயா… இப்பவும் எல்லா வேலையும் இழுத்து போட்டு செய்வீயா… உன்னயெல்லாம் மாப்பிள்ளை

சொன்னாதான் கேட்ப்ப அண்ணி சொன்னது சரிதான்... இங்கயே உக்காரு எல்லாம் வேலையும் நானும்,அண்ணியும் பார்த்துகிறோம்.'

''அம்மா அத்தான் வராங்கம்மா எந்த வேலையும் செய்யவிடாமா என்னை சோம்பேறியா இருக்க சொல்லுறேங்க.... போங்கம்மா முத்துண்ணே இலை அறுத்துட்டு வந்துட்டாங்களானு கேட்க்கனும்,சமையல் ரெடியாகிடுச்சானு போய் பார்க்கனும் இன்னும் நிறைய இருக்குமா வள்ளி சொல்லிகொண்டே எழுந்திருக்க'' வள்ளி அப்போ நான் சொன்னதுக்கு மரியாதை இல்லை'' மீனாட்சி பேச அப்படியே அமைதியாக அமர்ந்தால் ''ம்ம்ம் அது'' நீங்க வாங்க அண்ணி உள்ள போகலாம்...... என்று செல்வியை அழைத்துசென்றார்....

'ஒவ்வொரு நிமிடமும்.......வள்ளிக்கு யுகமாய் நகர்ந்தன... வாசலை பார்ப்பதும்,கடிகாரத்தைப் பார்ப்பதுமாக இருந்தால்... வீட்டில் இருந்த அனைவரும், பாண்டியனுக்காக கத்திருந்தனர்... ''ஐயா... சின்னத்தம்பி வண்டி நம்ம தெருவுக்குள்ள வருதுங்க ஐயா......'' என ஒருவர் கூற...

''அனைவரும் அவனின் வரவுக்காய் காத்திருந்த தருணம் வந்துவிட்டது 'வாணி ஆரத்தி தட்டை எடுத்துட்டு வா... அத்தை, அம்மா வாங்க அத்தான் வந்துட்டாங்கா.' என்று வள்ளி

அவர்களிடம் கூறிக்கொண்டு வாசலை நோக்கி அவள் செல்லவும் அதே நேரத்தில் பாண்டியன் கார் வாசலில் வந்து நிற்க்கவும் சரியாக இருந்தது………”

‘முதலில் பிரகாஷும்,பாண்டியனும் இறங்கினர் “வா பாண்டியா வாப்பா பிரகாஷ்” முத்தையாவும்,திருமூர்த்தி ஐயாவும், முருகவேலும் அவர்களை வரவேற்க…… ‘அத்தான்…… வாங்க, பிரகாஷ் அண்ணா வாங்க……எப்படி இருக்கேங்க’ வள்ளியும்……. ஊர் மக்கள் அனைவரும் அவர்களை விசாரிக்க……. “அவனோ சிறு புன்னகையை மட்டும் சிந்தினான்………. “அத்தான், அண்ணா…. இப்படி வந்து நில்லுங்க………ஆராத்தி எடுக்கனும்…..” என வள்ளி சொல்ல……. ‘ஒரு நிமிசம் வள்ளி…… இன்னொருத்தவங்களும் வந்திருக்காங்க .அவங்களையும் சேர்த்து ஆரத்தி எடும்மா……” திருமூர்த்தி கூற………. ‘யாரு அத்தான் அவங்க……’.. காரில் இருந்து இறங்கினால் ப்ரியா…..

“வாம்மா….இப்படி வந்து நில்லு….” பாண்டியன் பக்கத்தில் நிற்க்க வைத்தார்…..வள்ளி இப்போ ஆரத்தி எடும்மா……என்று சொன்னவுடன் .அங்கிருந்தவர்களுக்கு கொஞ்சம் அதிர்ச்சியாகவும் .இருந்தது ‘முத்தையாவோ யாருங்க ஐயா இந்த பொண்ணு எதுக்கு பாண்டியன் பக்கத்துல நிக்கவைக்குறேங்க……’ திருமூர்த்தியிடம்

கேட்க……. ‘நான் சொல்லுறேன்……இப்போ ஆராத்தி எடும்மா வள்ளி’ என அவர் சொல்ல…….அதை ஏற்று…..அவளும்…..ஒரு கேள்வியும் கேட்காமல்…..அவர்களுக்கு ஆராத்தி எடுத்துதால்…… ‘வாணி இதை தெற்க்கும்,வடக்குமா….ஊத்திட்டுவா….. ஆராத்தி தட்டை அவளிடம் கொடுத்தால்………’ ‘‘வாங்க…அத்தான்….. வாம்மா….என அவர்கள் அழைத்து சென்றால்……வள்ளி…’

‘‘தம்பி…..நல்லா இருக்கியா……பிரகாஷ் நல்லா இருக்கியா…மீனாட்சியும், செல்வியும அவர்களை வரவேற்றும் விசாரித்தனர் அப்பொழுதுதான்…..ஒரு பெண் புதிதாக இருப்பததை கண்டுகொண்டார்….. ‘‘யாரிந்த பொண்ணு…..தம்பி’’ ப்ரியா பார்த்து கேட்க.’’

‘அதை நான் சொல்லுறேன்…….மீனாட்சி… ‘‘இந்தப் பொண்ணு….. உன்வீட்டு இரண்டாவது மருமக……’’ திருமூர்த்தி சொல்ல…… ‘ரெண்டாவது மருமகளா…. புரியலை அண்ணா…..’ என்ன சொல்லுறேங்க…….ஆமாம் மீனாட்சி.. பாண்டியனோட ரெண்டாவது மனைவினா…..உங்களுக்கு ரெண்டாவது மருமகதானே…….’

‘‘என்னது….பாண்டியனுக்கு ரெண்டாவது மனைவியா……’’என மீனாட்சி, செல்வி, முத்தையா,முருகவேல்…..என அங்கிருந்த

அனைவருக்கும் இது மிக பெரிய அதிர்ச்சிதான்… ‘தம்பி என்ன இது நீ இப்படி பண்ணுவனு நாங்க எதிர்ப்பாக்கல…. குடும்பத்தையே இப்படி தலைகுனிய வச்சுட்டையே…….தம்பி……’ ‘‘என்ன மாப்பிள்ளை…என் பொண்ணு வள்ளி உயிரோட இருக்குறப்போ….. இன்னொரு பொண்ணுக்கு தாலிக்கட்ட எப்படி மனசு வந்துச்சு……சொல்லுங்க மாப்பிள்ளை…..எதுக்கு என் பொண்ணுக்கு துரோக செஞ்சேங்க….’’ என செல்வியும், முருகவேலும் பாண்டியனை பார்த்து கேட்க….. ‘ஐயா சொன்னதை தான் செஞ்சேன் மாமா…..ஆனா இந்த பொண்ணு யாருனு தெரியுமா???…எந்த மாதிரி சூழ்நிலையில இவ கழுத்துல தாலி கட்டுனேனு….’என பாண்டியன் பாதி சொல்லிகொண்டிருக்கும் போது…. ‘நிறுத்து பாண்டியா…..எந்த விசயமும் இப்போ சொல்லக்கூடாது……அதுக்குனு ஒரு நேரம் இருக்குது…. அதுவரை இந்த பொண்ண பத்தி நீ சொல்லக்கூடாது…….உங்களுக்கு ப்ரியாவ ரெண்டாவது மருமகளா ஏத்துக்க முடியாதுனா……….நான் ப்ரியாவ கூப்பிடு என் வீட்டுக்கு போறேன்….பிரம்மா…வா போகலாம்.. அவனை அழைத்துகொண்டு… அவர் ப்ரியாவிடம் ‘‘என் வீட்டுக்கு வருவியாம்மா….உன் அப்பாவா என்னை நினச்சுக்கோ….’’ அவளிடம் கேட்க… ‘‘அதுவரை இங்கு என்ன நடக்கிறது என்ன தெரியாமல்……. கண்ணைக் கட்டி காட்டுக்குள் விட்டது போல ஒரு

உணர்வு……அவர்களுக்குள் என்ன பேசினார்கள்… எதுவும் அறியாமல்…. நின்றிருந்தால்…. தன் முன் ஒரு பெரியவர்….தன்னை அவர் வீட்டுக்கு அழைக்க…….அவளுக்கு அழுகை முட்டிகொண்டு வந்தது……. “என்னக்கு என்ன நடக்குதுனு தெரியல…..பிரகாஷ் சொன்ன ஒருவார்த்தைக்கு தான் அவங்க கூட கிளம்பினேன்….. எனக்குனு யாரும் இல்லை….என்னை இங்கிருந்து சென்னைக்கு அனுப்பிவையுங்க…. சார்… தேவையில்லாம ஒரு பொண்ணு வாழ்க்கையில நான் தடங்களா இருக்ககூடாது…..அது பெரிய பாவம்…….நான் உங்க கூட வரேன்…..”ப்ரியா அழுதுகொண்டே கூறினால்.. “வாம்மா போகலாம்…”என அவர்,அவளை அழைத்துகொண்டு வாசலுக்கு சென்றார்.

“நில்லுங்க ஐயா……எங்க கூப்பிட்டு போறேங்க அந்த பொண்ண……அவ இந்த வீட்டு மருமக……அவ இங்க இருக்குறது தான்….சரி…..அவள இங்க விட்டுட்டு போங்க….” எனறு சொல்லியது….வள்ளிதான்….. ‘வள்ளி என்ன பண்ணுற…..அந்த பொண்ணு வீட்டை விட்டு போறது தான் சரி……நீ ஏன் தடுக்குற….’என மீனாட்சி கேட்க…. “இந்த வீட்டு மருமகளா….செந்தூர்பாண்டியனோட மனைவியா சொல்லுறேன்…. அந்த பொண்ணு இங்க தான் இருப்பா…..இது தான் என்னோட முடிவு…இதை எதிர்த்தேங்கனா…..நான் இந்த வீட்ட விட்டு

போகவேண்டிய’’ என முடிக்கும் முன்னே….. மீனாட்சியும், முத்தையாவும், ’வேண்டாம் வள்ளி….அந்த பொண்ணு இங்கயே இருக்கட்டும்,…. ஐயா அந்த பொண்ணு இங்க இருக்கட்டும்… அந்த பொண்ண விட்டுட்டு போங்க’ என அவர்கள் கூறியதும்….. ‘‘….ஆனா பொண்ண பத்திரமா பார்த்துக்கோங்க…. வள்ளி உன் வார்த்தைக்காக தான் என் பொண்ண விட்டுட்டு போறேன் பாத்துக்க…’’என அவர் பிரகாஷை கூப்பிடுக்கொண்டு சென்றுவிட்டார்..

‘உன் வாழ்க்கையே நீயே கெடுத்துக்காத…..வள்ளி…..அந்த பொண்ணுக்காக…நீ ஏன் டி வெளிய போகனும்…..’மகளின் வாழ்க்கை இப்படி இருப்பதை கண்ட செல்வி கண்ணீர் விட….. ‘‘என் அத்தான் மேல எனக்கு நம்பிக்கை இருக்கு…எனக்கு அவரு துரோகம் செய்யமாட்டாரு…’’என ஒரே ஒரு வார்த்தை சொன்னால்., வள்ளியின் பதிலால் பாண்டியனின் மனதில் வள்ளி மீது உள்ள காதல் இன்னும் அதிகமானது,… ‘‘வாணி….இந்த பொண்ணு உன் பேர் என்னமா’’..என ப்ரியாவிடம் கேட்க.. ‘தெய்வப்ரியா’ அவள் அழுதுகொண்டே சொல்ல… ‘‘இங்க பாரு தெய்வா… வீட்டுக்கு முதல் முறை வந்திருக்க….அழுக கூடாது….. என அவள் கண்களை துடைத்துவிட்டால்…..இது உன் வீடு என்ன வேணும் சொல்லு நான் உனக்கு செஞ்சு தரேன்….உனக்கு

யாருமில்லைனு நினைக்காத….நான் இருக்குறேன்….. என்ன அக்கானு சொல்லி கூப்பிடு…….’’அவளின் அழுகையை நிறுத்தினால்.

‘‘வாணி….இந்த பொண்ண…விருந்தாளிங்க இருக்குற அறையில தங்க ஏற்ப்பாடு பண்ணு…’’ ‘போம்மா… தெய்வா… ரூம்க்கு போயி ரெஸ்ட் எடு….. ’..வாங்கம்மா… போகலாம் தெய்வாவை அழைத்துப்போனால்….வாணி..’’

‘முத்துண்ணே….அவங்க காரு இருக்குற…பெட்டிய எடுத்துட்டு வாங்க….அந்த பொண்ணு பெட்டிய…வாணிக்கிட்ட கொடுங்க…. அத்தான் பெட்டிய….என் அறையில் வச்சுடுங்க….. அப்படியே… சாப்பாடு எடுத்து வையுங்க…..முதல…ஊர் மக்களுக்கு சாப்பாடு போடுங்க…..அதுகடுத்து நாங்க சாப்பிட வரோம்……’.. ‘‘என்ன எல்லாரும் இங்கயே நிக்கிறேங்க….சாப்ப்பிட போங்க…..பாட்டி…. அக்கா,மாமா… போய் சாப்பிடுங்க…’ என வந்தவர்களை அழைத்து சாப்பிட வைத்தால்…

‘‘என்ன அத்தான் இன்னும் நீங்க ரூம்க்கு போகலையா… போய் குளிச்சுட்டு வாங்க…..எல்லாரும் உங்களுக்காக காத்திருக்காங்க…. போங்க அத்தான்…அத்தை.. மாமா,அம்மா, அப்பா….நீங்களும் என்ன இங்கயே நின்னுட்டு இருக்குறேங்க….

போங்க…..வந்தவங்கள கவனிக்க வேண்டாமா…’’அந்த வீட்டின் மருமகளாய் பேசினால்.

’பாண்டியனை தவிர….மற்ற நால்வரும் அமைதியாக சென்றனர்…. ’அத்தான் இன்னும் ரூம்க்கு போகலையா… வாங்க..’என அவனை அழைத்துகொண்டு… அவர்களின் அறைக்கு சென்றனர்…. “இந்தாங்க அத்தான் துண்டு போங்க குளிச்சுட்டு வாங்க…..அப்படியே இந்த ட்ரெஸ் போட்டு வாங்க…அழுக்கு துணியெல்லாம் குடுங்க துவைக்க போட்டுவரேன்…’’என உள்ளே வந்தும் அவளே பேசிக்கொண்டிருந்தால்……அவனோ… “வள்ளியம்மா….என்மேல நம்பிக்கை வச்சுயிருக்க உங்களுக்கு நான் என்னைக்குமே துரோகம் செய்ய நினைக்கல…… வள்ளியம்மா…..அந்த இடத்துல அவங்க….என்’’அவன் சொல்ல வருவதை கேட்காமல்…..பாண்டியனின் வாயை மூடினால்.. “அங்க நடந்தது எதுவும் எனக்கு தேவை இல்லை அத்தான்…..நீங்க எனக்கு துரோகம் செய்யமாட்டேங்க அத்தான்…..அந்த கடவுளவிட உங்கமேல நம்பிக்கை அதிகமா இருக்கு…..யாரும் எது சொன்னாலும் உங்கமேல உள்ள எனக்கு சந்தேகமே வராது அத்தான்…..அப்படி நான் உங்கமேல சந்தேகப்பட்டா….நான் தீக்குளிக்குறதுக்கு சமம் அத்தான்..’’… ‘அய்யோ வள்ளியம்மா…. அப்படி சொல்லாதேங்க…..என்னைக்குமே நான் உங்களுக்கு

மட்டும் தான்….கூடிய சீக்கிரம்….அந்த பொண்ண பத்தின விசயத்தை எல்லாரும் முன்னாடியும் நான் சொல்லுறேன்.. வள்ளியம்மா….’.. ‘‘சரி போதும் அத்தான் நீங்க வருத்தப்பட்டா இந்த வள்ளிக்கு பிடிக்காது….போங்க குளிச்சுட்டு வாங்கா…’’

’என் காதல் என்னைக்குமே உங்களுக்கு மட்டும் தான்….. அத்தான்..,அதே மாதிரி உங்க காதலும் எனக்கு மட்டும் தான்….. அத்தான்…..தெய்வா யாருனு எனக்கு தெரியும் அத்தான்…..ஆனா அந்த பொண்ணுக்கு நம்ம வாழ்க்கையில இடம் இல்லை….. அத்தான்’.

’’பாவம் தாயி…..அவங்க வாழ்க்கைய பங்கு போட இன்னொரு பொண்ணு வந்துட்டா… இது அந்த கடவுளுக்கே அடுக்குமா நம்ம ஊருக்கு எல்லாரையும் காக்கும் பெண் தெய்வமே இருந்ததே தாயிதான்,….அந்த தாயிக்கே இப்படி ஒரு சோதனை……’’ என பாட்டி ஒருவரிடம் புலம்ப….. ‘ஆமா பாட்டியம்மா….ஆனா சின்னத்தம்பி இப்படி செஞ்சிருக்க கூடாது……வேணுமுனா பாருங்க,தாயி ஊர் பஞ்சாயத்தை கூட்டி அந்த பொண்ணையும்,சின்னத்தம்பியயும் அத்துவிடப்போறாங்க…’ என வேறு ஒரு பெண்மணி சொல்ல….எது எப்படி நடந்தாலும்…..வெளியூர் பொண்ணு நம்ம ஊரைவிட்டு போகனும்…..அப்போதான் தாயிக்கும்,சின்னத்தம்பியும் ஒன்னா

இருப்பாங்க….நான் கும்பிடுற அந்த பாண்டிச்சாமி இதுக்கு ஒரு வழி பண்ணுவாரு….என கடைசியாய் அந்த பாட்டி சொல்லிவிட்டு சென்றார்.’’

‘இதையெல்லாம் ஓரமாக நின்று கேட்க்கொண்டிருந்தால் ப்ரியா’

’’நீங்களா ஒரு பெரியமனுசரா…..நீங்க இப்படி பண்ணுவேங்கனு நான் நினைக்கல……உங்களை என் அப்பானு சொல்லிக்க பிடிக்கல…….உங்க ஒருவார்த்தைக்காக அங்க மூனு பேரு வாழ்க்கை வீணா போயிடுச்சு…..எப்படி உங்களால வருத்தப்படாம இருக்க முடியுது…..ச்சே…..அப்படி என்ன வேலை கொடுத்து சென்னைக்கு பாண்டியனை, அனுப்புனேங்க சொல்லுங்க…. ஊர்க்காரவுங்க ப்ரியாவையும்,பாண்டியனையும் இந்நேரம் தப்பா நினைச்சுருப்பாங்க…..செத்து போனா அந்த அம்மா யாரு உங்களுக்கு…. சொல்லுங்க…..ஏன் அமைதியா இருக்கேங்க…..’’என வீட்டுக்குள் நுழைந்ததும் அவனின் சண்டையை ஆரம்பித்துவிட்டான்….பிரகாஷ்…… ‘ஆனால் அவர் ஒரு வார்த்தை பேசவில்லை…….சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டு அவன் பேசுவதை கேட்டுகொண்டிருந்தார்…. ‘‘ஒரு வேளை அந்த அம்மா…உங்களோட மறைமுக மனவியோ…… அப்போ ப்ரியா உங்களுக்கு மகளா.……சொல்லுங்க…, உங்களால

என் அம்மாவுக்கு எப்படி துரோகம் நினைக்க முடிஞ்சது'' என அவன் அந்த கேள்வியை கேட்டது….அவர் கண்களை திறந்து….அ வனை கூர்மையாக பார்த்துவிட்டு……அவரின் அறைக்குள் சென்றுவிட்டார்…''

'அப்பொழுது பிரகாஷின் போனுக்கு ஒரு அழைப்பு வந்தது…….' ''ஹலோ…யாரு பேசுறா…''… 'மாமா….அப்பா, எனக்கு வேற இடத்துல மாப்பிள்ளை பார்த்துட்டாங்க,…….பரிசம் போட…. இன்னும் ரெண்டு நாள்ல மாப்பிள்ளை வீட்டுல இருந்து வராங்களா மாமா.'என மலர் அழுதுகொண்டே சொல்லிவிட்டு செல்போனை அணைத்துவிட்டால்…. ''ஏய் என்னடி சொல்லுற…… ஹலோ…. ஹலோ….மலரு நீ பேசுறது கேக்கலம்மா''..

# அத்தியாயம் 10

''நீ என்ன பெரிய தியாகியாடி....அந்த பொண்ணு உன் வாழ்க்கையில சொந்தம் கொண்டாட வந்திருக்கா....அவளை போய் இந்த வீட்டுல சேர்த்திருக்க...நீ பண்ணறது கொஞ்சம் கூட சரியில்லை.. இதுனால பாதிக்கபடுறது கீர்த்தி, மாறன் கல்யாணம் தான்....அது ஏன் உனக்கு புரியலை...இப்படி அமைதியா இருந்தா என்ன அர்த்தம் வள்ளி....பதில் பேசுடி..''..

'அண்ணா,அண்ணி...நீங்களும் அமைதியா இருக்குறேங்க... என் மகள் வாழ்க்கையில் இப்படி நடந்துருக்கு..ஏதாவது சொல்லுங்க..அண்ணா...'..

''என்ன சொல்லச்சொல்லுற....செல்வி,..அந்த பொண்ண இந்த வீட்டுல இருக்க சொன்னது என் வீட்டு மருமக..அவளே சொல்லும் போது நாங்க என்ன பண்ணமுடியும்...,வள்ளி எது செஞ்சாலும் சரியா இருக்கும்,..அந்த பொண்ணு இன்னும் எத்தனை நாள் இந்த வீட்டுல இருக்க போகுது...எனகென்னமோ பாண்டியன் மேல எந்த தப்பும் இல்லனு தோனுது....பார்ப்போம்..அந்த கடவுள் நமக்கு துணையா இருக்கும் போது வள்ளி,பாண்டியன் வாழ்க்கையில யாரும் கெடுக்க முடியாது...''என முத்தையா சொல்லிவிட்டு போக..

'என்ன அண்ணி இது, அண்ணா இப்படி சொல்லிட்டு போறாங்க….ஏங்க உங்க மகளுக்கு நீங்களாவது சொல்லுங்க…' செல்வி, கணவனை துணைக்கு அழைக்க..

''இங்க பாரு வள்ளி…நீயே உன் வாழ்க்கைய கெடுத்துக்காத…நீ எதுக்கு அந்த பொண்ண இந்த வீட்டுக்குள்ள சேர்த்தேனு தெரியாது..ஆனா,அந்த பொண்ணுனால, நம்ம உறவுகள் பாதிக்கப்படக்கூடாது புரிஞ்க்கோ,…நாங்க கிளம்புறோம்… தங்கச்சி…வரேன் வள்ளி.. வா செல்வி போகலாம்'' என்று மகளின் வாழ்க்கையில் இப்படி நேர்ந்துவிட்டதே என கண்ணீருடன் புறப்பட்டு சென்றனர்..

'அத்தை நீங்க மட்டும் அமைதியா இருக்கீங்க உங்களுக்கு எதாவது சொல்லனுமுனா சொல்லுங்க…அத்தை..'அவ்வளவு நேரம் செல்வி பேசியதற்க்கு ஒரு பதிலும் பேசாமல் இருந்த வள்ளி…இப்போது..மீனாட்சியிடம் வாய் திறந்தால்… ''நான் என்ன சொல்லனும் வள்ளி,தம்பி மேல நான் வைக்காத நம்பிக்கைய நீ வைச்சுயிருக்கியே அதுவே எனக்கு போதும்…ஒரு நொடி நமக்கு பிடிச்சவங்க மேல நம்பிக்கை இல்லாம போனா..அந்த நம்பிக்கை வாழ்க்கை முழுவதும் இருக்காது.. அதுமாதிரி தான்….உன் வாழ்க்கையும்…. நீ தம்பிமேல நம்பிக்கை அளவுக்கு அதிகமா வைச்சிருக்க…. எனக்கு அது போது…வள்ளி..ஆனா நீ மாசமா

இருக்குற விசயத்தை இன்னும் பாண்டியன்கிட்டயும், யாருகிட்டையும் சொல்லவேயில்லையே வள்ளி…இப்போ என்ன செய்யபோற….எப்போ சொல்லப்போற…''

'சொல்லுனு அத்தை….அதுக்குனு ஒரு நேரம் இருக்குறப்போ சொல்லனு…' என இவர்கள் பேசிகொண்டிருக்கும் போது… ''அக்…அக்கா..'' ப்ரியா, வள்ளியை அழைத்தால்…, மீனாட்சியும், வள்ளியும், அவளை திரும்பி பார்த்தானர்.. ''என்னம்மா தெய்வா… உள்ளவா…ஏன் அங்கயே நிக்கிற…''ப்ரியாவை அழைத்தால். ''என்ன வேணும் தெய்வா…''ப்ரியாவை, அவள் பக்கதில் அமரவைத்து பேசினால்.. ''என…..எப்படி கேக்குறதுனு தயக்கமா இருக்கு..''.. 'என்ன தயக்கம் உனக்கு…நான் தான் சொன்னேல..இது உனக்கும் வீடுதான்…சொல்லு என்ன வேணும்..''… 'என..எனக்கு பசிக்குது…சாப்பாடு தர்றேங்களா…'..என்று தயக்கத்துடன் கேட்டால்… ''ஊருக்கே சாப்பாடும் முத்தையாவின் குடும்பம்…, எந்த விஷேசம் என்றாலும்,மீனாட்சியும்,வள்ளியும் சாப்பாடு செய்து ஊருக்கே அன்னதானம் போடும் இவளிடம் ஒரு குழந்தை தன் தாயிடம் பசிக்குதும்மா எனக் கேட்கும் விதம்…போல இருந்தது ப்ரியாவின் செயல்….''..

‘இன்னுமா நீ சாப்பிடல…தெய்வா,…சாப்பிட்டு எத்தனை நாள் ஆச்சுமா’

“அது..அது..இரண்டு நாள்…”

‘இரண்டு நாளா சாப்பிடாம என்ன பண்ண…..இரு…’ ‘வாணி… வாணி…. இங்க வா…’

“சொல்லுங்க தாயி….”

‘தட்டுல….சுடச்சுட…சாப்படு போட்டு,சாம்பார்,காய் வச்சு எடுத்துட்டு வா…’ “சரிங்க தாயி…இதோ..” என்று வேகவேகமாக தட்டில்,சாதம் வைத்து,சாம்பார்,காய் வைத்து எடுத்து வந்தால்… வாணி.. “இந்தாங்க தாயி…” வள்ளியிடம் கொடுத்துவிட்டு…. ‘வாணி…தண்ணீர் எடுத்துட்டு வா..’.. “சரிங்க தாயி”…. ‘வள்ளி அந்த சாப்பாடு தட்டை வாங்கி…நன்கு பிசைந்து….ப்ரியாவுக்கு ஊட்ட…அவள் வாய் அருகே கொண்டு போனால்… “வேணாம் அக்கா…நானே சாப்பிடுறேன்…. கொடுங்க”என வள்ளியிடம் இருந்த தட்டை வாங்க கை நீட்டினால் பிரியா… “உங்க அம்மா ஊட்டிவிட்டா சாப்பிடுவியா…” என்று வள்ளி, பிரியாவிடம் கேட்க… ‘ம்ம்ம்.. சாப்பிடுவேன்….’.. “அப்போ சாப்பிடு…என்னை உன் அம்மாவா நினைக்க வேண்டாம்…உன் அக்காவ நினைச்சுக்கோ….என மறுபடியும் கையில் உள்ள சாப்பாட்டை

ப்ரியாவின் வாய் அருகே கொண்டுபோனால்..., இந்த முறை அவள் எந்த மறுப்பும் இல்லாமல் வாங்கிக்கொண்டால்... இதை எல்லாம் மீனாட்சி அமைதியாக பார்த்துகொண்டிருந்தார். ஒவ்வொரு வாய் சாப்பாட்டிற்க்கு..ப்ரியாவுக்கு அழுகையா வந்தது....தாமரை ஒரு முறை அவளுக்கு ஊட்டிவிடும் போது.. “ஏன் தெய்வா சாப்பிட அடம் பிடிக்குற.... ஒழுங்க ஒரு இடத்துல நில்லு...சாப்பிட்டு அப்புறம் வேலைய பாரு..”... ம்மா.. இன்னைக்கு பிராஜெக்ட் வைவா ம்மா..அதுக்கு ப்ரிப்போர் பண்ணனும் நீங்க, சாப்பிடு,சாப்பிடுனு சொல்லுறேங்க....இந்த பிராஜெக்ட் மட்டும் நான் முடிச்சுகொடுத்தா...எல்லா சப்ஜெக்ட்லையும் நான் தான் ஃபர்ஸ்ட் ம்மா.. எனக்கு பெரிய கம்பெனில வேலை கிடைக்கும், “அதுக்கு முதல சாப்பிட்டாதான் இந்த வேலையெல்லாம் பண்ணமுடியும்...சாப்பிடு..” என அவளை அதட்டியும்,பாசமாகவும், ஊட்டிவிடும் தாமரையின் நினைவு அவளுக்கு வந்தது.....

‘என்னம்மா... தெய்வா... இப்போ எதுக்கு அழுகுற....சாப்பாடு பிடிக்கலையா...’ ப்ரியாவின் கண்ணீரை பார்த்து கேட்க..

“என் அம்மாவும், எனக்கு இப்படி தான் ஊட்டிவிடுவாங்க.... ஆனா நான், சாப்பிடாம அடம்பிடிப்பேன்....அதான் இப்போ ஞாயபகம் வந்துச்சு......”

‘ச்சு…சின்ன குழந்தை மாதிரி அழுதுகிட்டு….இங்க உனக்கு… அம்மாவ இருந்து கவனிச்சுக்க,…மீனாட்சி அத்தை,மாமா…என் அம்மா, அப்பா,நான்,அத்தான் எல்லாரும் இருக்காங்க….அப்புறம் எதுக்கு இந்த அழுகை……இப்படி நீ அழுதேனா…எனக்கு கவலையா இருக்கும்….அக்கா கவலைப்பட்டா உனக்கு பிடிக்குமா…. சொல்லு…’ என ப்ரியாவை சமாதானம் செய்ய…. “வேணாம் அக்கா…இனி அழுக மாட்டேன்….. கவலைப்படாதேங்க…

“ம்ம்,…இது அழகு…போம்மா…போய் ரெஸ்ட் எடு….” ‘சரிக்கா..’ ப்ரியாவை சாப்பிட்டு அவளை அனுப்பி வைத்தால்…

‘நீங்க ஏன் அத்தை அவ வந்தபோது பேசல….அவளுக்கு வருத்தமா இருக்காதா. “என்ன இருந்தாலும்….உடனே அந்த பொண்ண ஏத்துக்க முடியல வள்ளி….. கொஞ்சம் நாள் போகட்டும் பார்க்குறேன்….’என மீனாட்சி, வள்ளியிடம் சொல்ல….

”யாரை கேட்டு…மலருக்கு மாப்பிள்ளை…பார்த்து…பரிசம் போட வரச்சொல்லிருக்கீங்க……. அவ என் பொண்டாட்டி….அவ புருஷன் நான் இருக்கும் போது யாருக்கு கட்டிகொடுக்க போறேங்க….”பிரகாஷ்…மலரின் அப்பாவிடம்…. சிவநாதனிடம் சண்டையிட்டு கொண்டிருந்தான்….

‘நான் யாரைக் கேக்கனும்…..நீ என்ன, என் பொண்ணு கழுத்துல தாலி கட்டுன மாதிரி பேசுற….அவ என் பொண்ணு….. அவள யாருக்கு கல்யாணம் பண்ணிக்கொடுக்கனும் எனக்கு தெரியும்….உன் ஐயனுக்கு தான் எங்க குடும்பத்தையே பிடிக்காதே…. அப்புறம் ஏன் என்கிட்ட சண்டை போடுற… ‘‘குடுப்பத்துக்குள்ள நீங்க சண்டை போட்டேங்கனா அதுக்கு நானும்,மலரு என்ன பண்ண முடியும்…..சண்டை போட்டது உங்க தப்பு, ஆனா காதலிச்சது எங்க தப்பு இல்லை….இங்க பாருங்க மாமானாரே….மலரு எனக்கு தான்…. என்னை மீறி மலர… யார் பரிசம் போட வராங்கனு பார்ப்போம்….,..’’என்று சிவநாதனிடம் மல்லுக்கட்டிவிட்டு…..அங்கு ஓரமாய் அழுதுகொண்டிருந்த மலரை பார்த்து… ‘‘ஏய், எதுக்கு அழுகுற….சீக்கிரம் நம்ம கல்யாணம் நடக்கும்… நம்ம காதல் மேல உனக்கு நம்பிக்கை இருக்குல…..எல்லாத்தையும் நான் பார்த்துகிறேன்….கொஞ்சம் பொறுத்துக்கோ…என்னை…’’.. ‘சரிங்க மாமா… உங்களுக்காக நான் காத்திருப்பேன்… மாமா…’…. மலரிடம் கூறிவிட்டு சென்றான்.

‘‘அப்பா….மலரு தான், பிரகாஷ விரும்புரானு தெரியுதுல…..அப்புறம் எதுக்கு அவளுக்கு வேற இடத்துல மாப்பிள்ளை பார்க்குறேங்க…..எப்படி இருந்தாலும்… மலரு பிரகாஷா தவிர யாரையும் கட்டிக்க மாட்டா….எதுக்கு இந்த

சண்டை…… அவன்கூட….'' என சிவநாதனின் மூத்த மகன்… தென்னவன் அவரை கேட்க….

''எனக்கு மட்டும்…, அவன்கிட்ட சண்டை போடனும் வேண்டுதலா…..என் மனைவி அவனுக்கு வாக்கு கொடுத்தது எனக்கும் தெரியும், ஆனா திருமூர்த்தி இந்த கல்யாணத்துக்கு ஒத்துக்கமாட்டாரு…அது தான்…. என் பொண்ணுக்கு, பிரகாஷுக்கும்… தெரியமாட்டேங்குது…..பார்க்கலாம் அவன், திருமூர்த்தி ஐயாவ சம்மதிக்க வைப்பானானு……இப்போ சண்டை போட்டு போனதுக்கு பின்னாடி…அவன், ஐயாகிட்ட தைரியாமா பேசுவான்…..அதான்.. மலருக்கு மாப்பிள்ளை பார்க்குற மாதிரி நடிச்சேன்…..''

'அப்பா….ஏன் திருமூர்த்தி ஐயா…உங்க்கிட்ட சண்டை போட்டாரு….ஏன் இத்தனை வருசம் பேசாம இருந்தேங்க… முத்தையா பெரியப்பாக்கிட்ட மட்டும் பேசுறேங்க…..சொல்லுங்க அப்பா..'

''அது உறவுனு இருந்தா….சில..சண்டை,பிரச்சனைனு வரத்தான் செய்யும்…. இன்னைக்கு அடிச்சுகிட்டா… நாளைக்கு சேர்ந்துக்குவோம்….பார்ப்போம்…இந்த முறையாவது திருமூர்த்தி ஐயா சண்டையெல்லாம் மறந்து பேசுவாறானு…''..

‘எல்லாம்…நல்லாதாவே நடக்கும்…..கவலைப்படாதேங்க…. எனக்கு டவுன்ல வேலை இருக்கு….போயிட்டுவரேன்…’

‘‘சரிப்பா…பார்த்து போயிட்டு வா…..உனக்கும் காலா காலத்துல பொண்ணு பார்க்கனும்டா……பொண்ணு ஜாதகம் இருந்தா தரகர்கிட்ட சொல்லி வைக்கனும்…’’அவர், அவனிடம் சொல்ல…. ‘ப்பா….முதல, மலரு கல்யாணம் முடியட்டு….இப்போவே ஆரம்பிக்காதேங்க…..

’ஏன் துரை…எந்த பொண்ணையும் பார்த்துட்டேங்களா…..’’

‘ப்பா…எனக்கு நீங்க பார்க்குற பொண்ணதான் கட்டிப்பேன்….., வீட்டுல இருக்குற பொண்ண கரைசேர்த்துட்டு தான்…, பசங்க வாழ்க்கைய பார்க்கனும்… அப்போ தான் ….குடும்பமும் நல்லா இருக்கும்…..நான் வரேன்…’அவனின் பதிலில் சிவநாதன் மனதில் மகிழ்ச்சியாய் இருந்தது…..

‘‘என்மேல உங்களுக்கு கோவம் இல்லையாக்கா…’’ என ப்ரியாவின் படுக்கயை விரித்துக்கொண்டிருந்த வள்ளியிடம் கேட்க….

‘உன்மேல எதுக்கு நான் கோவப்படனும்….எதுக்கு இந்த கேள்வி கேக்குற’

‘‘உங்க வாழ்க்கையில…இடையா நான் இருக்குறேன்….எந்த பொண்ணு…இப்படி பட்ட சூழ்நிலையில இருந்தாலும்….அவளுக்கு கோவம் வரும்,சண்டை போடுவா….,அதுக்கும்மேல….என்னை மாதிரி பொண்ண வீட்டைவிட்டு அனுப்பிடுவா….ஆனா நீங்க ஏன், என்கிட்ட சண்டை போடல….,சொல்லுங்க அக்கா….எனக்கு கஷ்ட்டாமா இருக்கு….ஒரு நாள், நானே இந்த வீட்டைவிட்டு போயிடுவேன்…..அதுக்கு முன்னாடி உங்க மனசுல என்ன இருக்குனு எனக்கு தெரியுனும் அக்கா…சொல்லுங்க..’’வள்ளியிடம் வற்புறுத்திக் கேட்க…..

‘என் அத்தான், அவங்க மேல எனக்கு இருக்குற நம்பிக்கை, காதல்,பாசம், இதுதான், உன்மேல எனக்கு கோவம் வராததுக்கு காரணம்……அதைவிட முக்கியம்….ஐயாமேல இருக்குற மரியாதை அவர் என்ன சொன்னலும்….நாங்க மட்டுமில்லை…., இந்த ஊரே… கேக்கும்….அது தன்… போதுமா…’

‘‘சார்மேல அந்தளவு காதலா அக்கா….’’

‘அத்தான் மேல மட்டும் இல்லை, இந்த குடும்பத்து மேலையும் அக்கரையும்,தான்….’

‘‘எனக்கும் இந்த மாதிரி கூட்டுகுடும்பம் இல்லைக்கா…. நான்,அம்மா,அப்பா மூனு பேர் இருந்தோம்….நான் டுவெல்த்

படிக்கும் போது அப்பா…எங்க போனாருனு தெரியலை…..அதை பத்தி அம்மாக்கிட்ட கேட்டா….. சொல்லமாட்டாங்க…. நானும் விட்டுருவேன்…..இப்போ வரை அப்பா எங்க இருக்காங்கனு தெரியாதுக்கா….அடுத்து…காலேஜ்…படிப்பு,வேலைனு வாழ்க்கை போயிருச்சு….இப்போ அம்மா…இல்லை…''என அவள் தாமரையின் நினைவில் அழுக ஆரம்பித்தால்….

'இன்னைக்கு தானே சொன்னேன்….அழுக கூடாதுனு…. அதுவும் விளக்கு வைச்ச நேரத்துல வீட்டுல இருக்குற பொண்ணுங்க கண்ணீர்விடக் கூடாது….அப்படி அழுதா…வெளிய போனா ஆம்பளைங்களுக்கு ஆபத்துனு சொல்லுவாங்க….'என வள்ளி சொன்னதும்…வேகமாக கண்ணீரை துடைத்தால்….''இனிமே அழுக மாட்டேன் அக்கா…இங்க இருக்குற யாருக்கும் எதுவும் ஆகாக்கூடாது….''

''ம்ம்ம்….இதுதான் தெய்வா….. இங்க பாரும்மா… எல்லாத்துக்கும் ஒரு முடிவு இருக்கு….அது மாதிரி தான், இந்த வாழ்க்கையும், சரியா, எதுவும் நினைக்காம தூங்கு….நான் என் அறைக்கு போறேன்….தனியா தூங்குவேல…..இல்லை பயமா இருந்தா சொல்லு, நான் துணைக்கு உன்கூட தூங்குறேன்…..''என வள்ளி கேட்க…. 'எனக்கு பயமெல்லாம் இல்லைக்கா….நீங்க போய்

தூங்குங்க….குட் நைட்’.. ‘‘சரிம்மா….குட் நைட்’’..வெளிய வந்து கதவை தாளிட்டுவிட்டு சென்றால்..

’என்னத்தான்….இன்னும் தூங்காமா என்ன பண்ணுறேங்க….. பால் குடிச்சேங்களா… அவர்கள் அறைக்குள் நுழைந்ததும்.. பாண்டியனிடன் கேட்டால்…. ஆனால் அவனோ எந்த பதிலும் சொல்லாமல்…அமைதியாக ஜன்னலில் இருந்து… வானத்தில் இருக்கும் நிலாவை பார்த்துக்கொண்டிருந்தான்…. வள்ளியோ எதுவும் பேசாமல் இருந்த பாண்டியனை…திரும்பி பார்த்தால்…. அவன் அருகில் சென்று… பின்னிருந்து அவனை இருக்கி அணைத்துக்கொண்டால்…… ‘‘என்ன அத்தான் எதுவும் பேசாமல் இருக்கேங்க……ஏன் அத்தான்…அமைதியா இருக்கேங்க….’’ அவளே மீண்டும் பேச்சை ஆரம்பித்தால்…..அதற்க்கும் அவன் பேசாமல் அமைதியாக இருந்தான்… ‘‘என்னாச்சு அத்தான், எந்த விசயம் உங்க மனச சஞ்சலப்பட வைக்குது…..சொல்லுங்க..’’

‘வள்ளியம்மா….உங்க காதலுக்கு நான் தகுதியானவனா…..’

‘‘எதுக்கு இப்போ இந்த கேள்வி’’

‘சொல்லுங்க வள்ளியம்மா….உங்க காதலுக்கும், நம்பிக்கைக்கும், நான் தகுதியானவனா…..’

‘‘என் உயிரே நீங்கதானே அத்தான்…அப்படி இருக்கும் போதும்,. தகுதி ,அது,இதுனு பேசுறேங்க……உங்களுக்கு ஏன் அப்படி தோனுது…..’..அவனின் கன்னத்தில் கை வைத்து பாண்டியனை சமாதானம் செய்தால்….

‘எனக்கு மட்டும் ஏன் வள்ளியம்மா…கடவுள் சோதனைக்கு மேல சோதனையா கொடுக்குறாங்க….நேற்று உங்க எல்லோர் முன்னாடியும் என் பக்க நியத்தை சொல்லும் போது ஐயா தடுத்துட்டாங்கா…..இப்போ சொல்லுறேன் வள்ளியம்மா நான் சென்னை போனது எதுக்குனு இன்னைக்கு சொல்லுறேன் வள்ளியம்மா…. அங்க..’என அவன் சொல்லும் போது தன் கைகொண்டு வாய்யை மூடினால்.. ‘‘அத்தான்….அங்க நடந்ததை சொன்னா…நான் உங்கமேல நம்பிக்கை வைக்கலனு அர்த்தம்…..அத்தான்… கடவுள் உங்களுக்கு சோத்னைக்கு மேல, சோதனை கொடுக்குறாங்கனா…உங்க பலத்தை அதிகப்படுத்துறாருனு அர்த்தம்… எந்த சூழ்நிலையிலும்…நீங்க துவண்டு போககூடாதுனு கெட்டவங்களுக்கு எல்லாம் கொடுப்பாரு ஆனா கைவிட்டுருவாறு….நல்லவங்களை சோதிப்பாரு ஆனா என்னைக்கு கைவிடமாட்டாறு கடவுள்…. இப்போ உங்களுக்கு கொடுத்துருக்க சோதனையில நீங்க எப்படி வெற்றியோட வருவேங்கனு கடவுள் உங்களை சோதிக்குறாரு…..இதுக்கானா

வழியை, நீங்க தான் கண்டுபிடிக்கனும்…அத்தான்…., அப்போ தான் அந்த பொண்ணுக்கு நாம நல்ல வாழ்க்கையை அமைச்சுகொடுக்க முடியும்….'' 'வள்ளியம்மா…..ரொம்ப குழம்பி போயிருந்தேன்…..நீங்க வந்து என் மனச தெளியவச்சுட்டேங்க…. வள்ளியம்மா… என்றான்…

''சரி பால் சாப்பிட்டேங்களானு அப்போ இருந்து கேக்குரேன் ஒரு பதிலும் சொல்லல அத்தான் நீங்க….'' 'ம்ம்…சாப்பிட்டேன் வள்ளியம்மா…இல்லையினா என்னை நிம்மதியா தூங்கவிடுவேங்களா…' ''சரி போய் தூங்குங்க….நான் ட்ரெஸ் மாத்திட்டுவரேன்….''…வள்ளி குளியல் அறைக்கு சென்று உடையை மாற்றிகொண்டு வெளியே வந்தாள்…. ''பாண்டியன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான், அவனது உறக்கம் கலையாமல்…. அவளின் செல்போனை எடுத்துக்கொண்டு பால்கேனிக்கு சென்று அவளுக்கு வந்த குறுஞ்செய்தியை படிக்க ஆரம்பித்தால் முழுதாக அந்த செய்தியை படித்துமுடித்ததும்…..எந்த எண்ணில் குறுஞ்செய்தி வந்ததோ….அதே எண்ணிற்க்கு வள்ளி…. ''தேடிய விபரம் கிடைத்தவுடன்… குறிப்பிட்ட ஆட்களை வைத்து முதல் திட்டத்தை செய்யது முடிக்கவும்''….பதில் அனுப்பினால்..

‘அந்த குறுஞ்செய்தியை அனுப்பி முடித்ததும்….பாண்டியனின் அருகில் வந்து படுத்துக்கொண்டு அவனின் தலைகோசத்தை மெதுவாக வருடிக்கொடுத்தால்… ‘‘இன்னும் கொஞ்ச நாள் தான் அத்தான் அதுகடுத்து உங்களுக்கு எந்த பிரச்சனையும் அண்டவிடமாட்டேன்……கர்ணனுக்கு எப்படி கவசம்குண்டலம் பாதுகாப்பா இருக்குதோ, அதே மாதிரி….உங்களுக்கு நான் கவசமா இருப்பேன் அத்தான்…. இனி உங்களை பார்த்துக்க…நானும்,நம்ம மகளும் இருக்குறோம் அத்தான் எதையும் நினைக்காம நிம்மதியா தூங்குங்க……’’மனதில் நினைத்துக் கொண்டால்…..அப்போது, ‘பாண்டியனோ…வள்ளியின் இடையை இறுக்கி கட்டிகொண்டு தூங்கினான்….’

‘‘எப்பவும் போல வள்ளி…எழுந்து அவள் வேலையை பார்க்க……ப்ரியா…எழுந்து கீழே வந்தால்……. முதலில் அங்கிருந்த முத்தையாவை பார்த்தும்… அவளுக்கு பயம் வந்துவிட்டது….. ஆனால் அவரோ….’என்ன வேணுமா….’…என கேட்க… ‘‘அக்கா… அக்கா தேடிவந்தேன் தாத்தா…’’…. ‘அவரோ அவள் சொல்லிய தாத்தாவில் சிரிப்பு வந்தாலும்….அதை காட்டாமல்..’.. ‘‘உள்ள மீனாட்சியம்மா இருப்பாங்க..அவங்ககிட்ட கேளும்மா’’ அவளிடம் சொல்லிவிட்டு நாளிதழை படிக்க ஆரம்பித்தார்…. ப்ரியாவோ… ‘அங்கு எந்த இடத்தில் அவர் இருக்கிறார் என ஒவ்வொரு

அறையையும் பார்த்துக்கொண்டு போனால்….கடைசியாக சமையல் அறையை அவரை பார்த்ததும்…… 'என்கிட்ட பேசுவாங்களா..' என்று சிந்திக்க….ப்ரியாவை பார்த்துவிட்ட வாணி….மீனாட்சியிடம் அவள் வந்திருப்பதை சொன்னால்…. ''என்ன வேணும்….''.. ப்ரியாவின் சிந்தனையை கலைத்தது…மீனாட்சியின் குரல்….. 'ஹான்….அது…அது வந்து அக்கா…அக்காவ தேடி வந்தேன் பாட்டி…..'என ப்ரியா மீனாட்சியை பாட்டி என்றழைத்தும்…. அங்கிருந்த வாணி சிரித்துவிட….. ''வாணி….என்ன சிரிப்பு….''.. அவளை அடக்கிவிட்டு….. 'கொள்ளப்பக்கம் இருப்பா…உன் அக்கா…. வாணி இவளை அங்க கூட்டிட்டு போ.'…வாணியிடம் சொல்லி ப்ரியாவை அவளுடன் அனுப்பி வைத்தால்….. அவர்கள் போனபிறகு…அங்கு இருந்த வாஷ்பேசன் கண்ணாடியில் மீனாட்சி அவரின் முகத்தை பார்த்து ''அதுக்குள்ளவா நான் பாட்டியானது இவளுக்கு தெரியுமோ….இல்லையே வள்ளி இன்னும் யாருக்கும் சொல்லலையே…..என் முகம் பாட்டியானா சந்தோஷத்தோட இருக்குதோ….'' என முகத்தை திருப்பி, திருப்பி பார்த்தார்…. அதற்க்குள் யாரோ வரும் அரவம் கேட்டதும்…..விட்ட வேலையை பார்க்க ஆரம்பித்தார்…''

'ஏண்ணே….இன்னும் காரி மாட்டுக்கு தண்ணிக்காட்டாம என்ன செய்றேங்க…. மாடுக்கு…பசிக்கு போல…..சீக்கிரம் தண்ணி

வையுங்க…..'.. 'சின்னப்பொண்ணு… அந்த கோழியும்,சேவலும் ஒன்னா மேயவிடாதேங்க…அது சண்டை போடும்… அப்புறம் அது பறந்து வேலியை தாண்டி போகும்…..பார்த்துக்கோங்க…'… 'பாட்டிம்மா…ஆடுக்கு கீரையை கொடுங்க…..முந்தாநேத்து….ஒரு ஆடு குட்டி போட்டுச்சுல…. அந்த குட்டிய எடுத்துட்டு போய் அங்க இருக்குற… அதோட தாய் ஆட்டுக்குட்டிகிட்ட விடுங்க…இன்னேரம் அதுக்கு உடம்பு சரியாகிருக்கும்…' 'நல்லத்தம்பியண்ணே….வாழைத்தோப்புல….ஒரு வாழைத்தாரு,ஒரு கட்டு வாழை இலையும், கொண்டுவாங்க….'…சரிங்க தாயி…. 'என்ன அக்கா…உங்க வீட்டுக்காருக்கு இப்போ உடம்பு எப்படி இருக்கு…..'… ''உன் கையால இருந்து மருந்து வாங்கிட்டு போயிருக்கேன்ல தாயி…அப்போ எப்படி உடம்பு சரியாக போகும்….அவங்களுக்கு குணமாகி வேலைக்கு போயிட்டாங்க தாயி….எல்லாம் உன் கைராசி''…. 'அக்கா….கடவுள் என்னைக்கு நல்லாவங்கள கைவிடமாட்டரு… போய்….செடிக்கு தண்ணீ ஊத்துங்க…'.. ''சரிங்க தாயி''…. 'முத்தண்ணே…..நீங்க கொண்டு வந்த…இரண்டு நாய்யும் என்ன பண்ணுது….'… ''போங்க தாயி….அதை ஊருக்கு வெளியவே விட்டுருப்பேன் நீங்க தான், நான் வளர்க்குறேனு சொல்லி… அதுக்கு நான் சாப்படு வைக்குபோதெல்லம்…என்னை கடிக்க வருது…இனிமே அதுக்கு

நான் சாப்படு வைக்கமாட்டேன் தாயி…பயமாயிருக்கு..'' 'அண்ணே…அதுகளுக்கு அஞ்சறிவு, அது குறைக்கவும்,கடிக்கவும், தான் செய்யும்,….நாமா தான் அதுக்கு அடிப்பட்டுருக்கானு பார்க்கனும்….வாங்க…. இன்னைக்கு அதுக்கு நானே பால்சோறு வைக்குறேன்…என்னை கடிக்காதனு பார்க்கலாம்….' ''வேணாம் தாயி…உங்கள கடிச்சா….தம்பியும்,ஐயாவும் தான் என்னை திட்டுவாங்க….நானே அதுக்கு சோறு வைக்குறேன்..தாயி''… 'அண்ணே நான் சொன்னதை கொண்டுவாங்க…'..என அவன் பால்சோறு கொண்டுவந்து வள்ளியிடம் கொடுத்தான்…..

''அந்த கம்பிக்கதவை திறங்க…..அது வெளியவரட்டும்…..''.. 'சரிங்க தாயி' என நாய்களை அடைத்து வைத்த கதவை திறந்துவிட்டான்…. ''திறந்துவிட்டதும்…. அந்த இரண்டு நாய்களும்… முத்துவை பார்த்து குரைத்துவிட்டு…..வள்ளியின் அருகே சென்று…. அவளின் காலில் முனங்கிகொண்டே படுத்துக்கொண்டது…… ''என்ன ஆச்சு உங்களுக்கு…ஏன் அண்ணன பார்த்து குரைக்குறேங்க…..அவங்க உங்களை பார்த்துகுறவங்க, கடிக்ககூடாது…..சரியா….''என நாய்களின் பிடரியை தடவிக்கொடுத்தால்…..அந்த நாய்களுக்கு என்ன புரிந்ததோ… அதுவும்…. வள்ளியின் தன் நாவினால் நக்கிக்கொடுத்தது….. ''உங்களுக்காக….அண்ணே பால்சோறு

எடுத்து வந்திருக்காங்க…சாப்பிடலாமா…..'' என கேட்க்கொண்டே அதன் கிண்ணத்தில் போட்டால்….. ஆனால் அந்த நாய்களோ….சாப்பாடு கிண்ணத்தை நுகர்ந்துவிட்டு….. முத்துவின்… காலில் வந்து படுத்துகொண்டது…. ''பார்த்தேங்களா அண்ணே…. அது உங்களை சாப்பாடு போடச்சொல்லுது…..இது தான் அதுகளோட பாசம்….இந்தாங்க…மீதி சாப்பாடு நீங்களே போடுங்க இந்தாங்க…..'' முத்துவிடம் கொடுத்தால்….முத்துவும் அந்த கிண்ணத்தில் சாப்பாடு போட்டதும்…..வேகமாக சாப்பிட்டது….. ''அண்ணே….எந்த ஜீவனா இருந்தாலும் அதோட பாசத்தை நாமா புரிஞ்சுகிட்டா, நம்ம பாசத்தையும் அதுக புரிஞ்சுக்கும்……இனிமே நீங்களே சாப்பாடு போடுங்க…. 'சரிங்க தாயி'… இதையெல்லாம்….வந்தில்லிருந்து பார்த்துகொண்டிருந்தால் ப்ரியா….

''சரி வேலைய பாருங்க…..நான் உள்ள இருக்குற வேலைய பார்க்கபோறேன்…. என வள்ளி திரும்பி வரும் போது அங்கிருந்த ப்ரியாவை பார்த்ததும்…. 'என்னமா குளிச்சுட்டீயா….காலையில என்ன சாப்பிடுவ…. காஃபியா, டீ யா'… வள்ளி கேட்க….. ''எப்படிக்கா….உங்க பேச்ச…அந்த ரெண்டும் நாய்களும் கேக்குது'' 'நீ எப்போ வந்த இங்க…..'… ''அதையேன் கேக்குறேங்க….. ஹால்லா தாத்தாகிட்ட, கேட்டேன்..அவரு…உள்ள இருந்த பாட்டிகிட்ட கேக்க சொன்னாங்க…அந்த பாட்டிம்மா சொல்லி

தான்….இந்தா அக்கா என்னை, இங்க அழைச்சுட்டு வந்தாங்கா…..'' என வாணியை கைக்காட்டினால்.

'தாத்தா….பாட்டியா…..வாணி ஊருக்காரங்க யாரவது வந்தாங்களா….தெய்வா.. பாட்டி, தாத்தானு சொல்லுறா…' ''தாயி….. ப்ரியாம்மா சொன்னது….பெரியயாவும், பெரியம்மாவையும் சொல்லுறாங்க…. தாயி''என வாணி விளக்கி கூறினால்…. வள்ளியோ…. .'ஹாஹாஹா… தெய்வா… அவங்க… தாத்தா ,பாட்டி இல்லை….என் அத்தானோட, அம்மா, அப்பா….எனக்கு மாமா, அத்தை,….உனக்கும் தான் அவங்க மாமா, அத்தை….. சரியா'சிரித்துகொண்டே வள்ளி கூறினால், ப்ரியா… 'எனக்கு தெரியாதுக்கா….இனிமே தாத்தா,பாட்டினு சொல்லமாட்டேன்…..' ''சரி குளிச்சுட்டியா….வாணி தெய்வாக்கு…..நாட்டு சர்க்கரை போட்டு பால் எடுத்துட்டு வா….'…வாணியிடம் சொல்லிவிட்டால்…. ''இன்னும் குளிக்கலைக்கா…..'' … 'பால் சாப்பிட்டு குளிச்சுட்டு வா….காலை சாப்பாடு ரெடியா இருக்கும்…..என வள்ளி, ப்ரியாவிடம் பேசிக்கொண்டிருந்த போது…..தண்டோரா சத்தம் கேட்டது…..

''நாளை மறுநாள்….பஞ்சாயத்து கூடுது….ஊர் மக்கள், தவறாமா கலந்துக்கொள்ள வேண்டும்…..''என முத்தையாவின்

வீட்டு வாசல் முன் தண்டோர அடித்துகொண்டு சொல்லிச்சென்றான் ஒருவன்.....”

# அத்தியாயம் 11

''வாங்க….வாங்க…என்ன ஊருக்காரவங்கயெல்லாம் சேர்ந்து வந்திருக்கேங்க…. என்ன விசயம்''

'வணக்கம்….ஐயா….வணக்கம்…பெரியய்யா'

''வணக்கம்…அண்ணே….வணக்கம்…என்ன சாப்பிடுறேங்க….''

'அதெல்லாம் வேண்டாம் ஐயா….உங்ககிட்ட ஒரு முக்கியமான விசயம் பேசுறதுக்கு தான் நாங்க வந்திருக்கோம்…. பேசலாமுங்களாம்…'

''சொல்லுங்க என்ன பேசனும்…''

'அது வந்துங்கய்யா…..எப்படி ஆரம்பிக்கிறதுனு தெரியல…. அதான்…'

''எந்த தயக்கமும் வேண்டாம்….சொல்ல வந்த விசயத்தை சொல்லுங்க….''

'ஐயா….உங்க குடும்பத்துமேல, பஞ்சாயத்துல..புகார், கொடுத்துருக்காங்க… அது விசயமா பேசத்தான் நாங்க வந்திருக்கோம்…'

“என் குடும்பத்துமேல…புகார், கொடுத்துருக்காங்களா யாரு… என்னனு சொல்லிருக்காங்கா?????”

‘அது….தம்பி ரெண்டாம் தாரமா…கல்யாணம் பண்ணி கூட்டிட்டு வந்திருக்காங்காளா…அதை பற்றி தான்…புகார் கொடுத்திருக்காங்கா….அதுவும் புகார் கொடுத்தவங்க பேருல….ஊர் மக்களுனு போட்டுயிருக்கு…..’

“உங்களுக்கே தெரியும்….ஊர் மக்கள், போட்டு புகார் வந்தாலே அதை நிராகரிக்க முடியாது……இதை நாங்க முதல திருமூர்த்தி ஐயாகிட்ட சொன்னோம்…. அவரு பஞ்சாயத்தை கூட்டனும் சொல்லிட்டாரு……உங்களுக்கு நேருல போய் புரியும் படியா சொல்லச்சொன்னாங்க…… ஊர் மக்களுக்கு தண்டோரா அறிவிப்புல உங்க குடும்பம் பஞ்சாயத்து நடக்குதுனு சொல்லலை….. பஞ்சாயத்து கூடுதுனு மட்டும் தான் அறிவிப்பு கொடுத்துருக்கோம் ஐயா…நீங்க என்ன சொல்லுறேங்க ஐயா… இந்த…. பஞ்சாயத்தை நடத்தலாமா இல்லை… வேண்டாமானு சொல்லுங்க நீங்க சொல்லுறமாதிரி செய்றோம்…ஐயா…இது தான் விசயம்..” கொஞ்சம் நேரம் யோசித்த முத்தையா….ஒரு முடிவுடன்… அவர்களை பார்த்தவர்…… ‘என்னைக்கு பஞ்சாயத்தை.. கூட்டாலாமுனு சொல்லுங்க…..நான் என் குடும்பத்தோட அங்க வரேன்….’அவர் சொல்ல… “ஐயா

பஞ்சாயத்தை உங்க வீட்டுலையே வச்சுக்கலாம்…. எதுக்கு நீங்க அங்க வரனும்.' ''அது தப்பு…ஊர் மக்களே என் குடும்பத்துமேல மனு கொடுத்திருக்காங்க…. எல்லோருக்கும் எப்படி பஞ்சாயத்து நடக்குமோ….அப்படியே எங்க குடும்பத்துக்கும் நடக்கனும்…இங்க எல்லோரும் ஒன்னுதான்….' முத்தையா அனைவரும் ஒன்றுதான் அனைவரையும் சேர்த்து சொன்னதை கேட்டு அவர்களுக்கு கொஞ்சம் மனவேதனையாக இருந்தது….இப்படிப்பட்டவரின் மேல் எப்படிதான் மனு கொடுக்க தோன்றியதோ…ஊர் பெரியவர்களுக்கு வேதனையாக இருந்தது…. 'பஞ்சாயத்து…நாளை மறுநாள் நடக்குது ஐயா…. சரிங்க ஐயா நாங்க போயிட்டுவறோம்….' ஊர் பெரியவர்கள்…. கிளம்பினர்.. ''ம்ம்.. போயிட்டுவாங்க'… கையெடுத்து கும்பிட்டு வழியனுப்பிவைத்தார்…. முத்தையா….

'வீட்டில் இருக்கும்…அனைவருக்கும் இந்த விசயம் பரவியது…..மீனாட்சிக்கோ அதிர்ச்சியாய் இருந்தது….ஊரில் உள்ள மக்களின் பஞ்சாயத்தை நடத்திய குடும்பத்துக்கே….பஞ்சாயத்தில் புகார் கொடுத்து, குடும்பத்தையே பஞ்சாயத்துக்கு அழைப்பது….. இதுவே முதல் முறை….. ''என்னங்க இது…நம்ம குடும்பத்து மேல புகார் கொடுத்து….பஞ்சாயத்துக்கு கூப்பிடுறது யாருங்க….''.. 'மனு கொடுத்தவங்க பேருல ஊர் மக்களுனு இருக்குது….மீனா'… ''யாருக்கு எந்த தீங்கும் நினைக்காதா குடும்பத்துமேல இப்படி

பஞ்சாயத்துல நிக்க வைக்க எப்படி மனசு வந்தது''....கண்ணீருடன் முத்தையாவிடம் கேட்டார்.... 'மீனா..எதுக்கு இப்போ கண்கலங்குற..... யாருக்கும்...எந்த துரோகமும் நாம செய்யல... அப்படி இருக்க...என் மகன் மேல எந்த தப்பும் இருக்காது..... கடவுள் நம்மல சோதிச்சுப்பார்க்குறாரு போல....என்ன நடக்குதுனு பார்க்கலாம் அழுகாத மீனா...' மீனாட்சியை சமதானம் செய்தார்....

‘‘மாமா....நமக்கு இது சோதனை காலமும்... நினைச்சுக்கோங்க என்ன நடந்தாலும் நம்ம பக்கம் தெளிவான ஆதாரம் இருக்கும் போது எதுக்கு கவலைப்படுறேங்க நம்ம குடும்பத்த பஞ்சாயத்துக்கு கூப்பிட்டாங்கனா...இது நமக்கான வழினு எடுத்துக்கோங்க....அந்த தெய்வா..பொண்ண ஊருல என்ன சொல்லி பேசுறாங்கனு நமக்கு தெரியாது....சிலர்... தெய்வாவையும், அத்தானை சேர்த்து வச்சு பேசலாம்....இல்லை...நம்ம குடும்பத்து மீது அக்கரையாவும் இருக்கலாம்.....எதுக்கு வருத்தப்படனும்.... மாமா,...குடும்பத்தோட பஞ்சாயத்துக்கு போகலாம்....என்ன நடந்தாலும்...நம்ம குடும்பத்துல எந்தவித பிரச்சனையும் வராது.... என் வார்த்தை உண்மை மாமா....''..

'வள்ளி.....உன்னை மாதிரி பொண்ணு தான் வீட்டுக்கு வீடு மருமகளா கிடைக்கனும்...எந்த சூழ்நிலை வந்தாலும் எவ்வளவு தைரியமா இருக்க....இதுக்கு தான் என் மருமக வள்ளி வேணும்.....

மீனா.. இங்க பாரு வள்ளி எப்படி தைரியமா இருக்கா… உனக்கு ஏன்…வள்ளி போல இருக்க முடியல….வள்ளிக்கு இருக்குற பக்குவம் உனக்கு இல்லை மீனா…..இப்போ கவலைபடுறதை நிறுத்திட்டு…மத்த வேலையா பாரும்மா போ' முத்தையா மீனாவை சமாதானம் செய்து அனுப்பிவைத்தார்.'

''பஞ்சாயத்துனா என்னக்கா….எதுக்கு காலையில இருந்து… எல்லோரும் முகமும் சோகமா இருக்கு…..என்னால எதுவும் பிரச்சனையா…அக்கா…சொல்லுங்கக்கா.. என்னால முடிஞ்ச வரை உங்களுக்கு உதவி பண்ணுறேன்…அக்கா…ப்ரியா…… வள்ளியிடம் கேட்க…''

'பஞ்சாயத்துனா…ஊர் மக்களோட குறையை தீர்த்து வைக்குறது… தெய்வா…, முதல் முதலா நம்ம குடும்பத்துமேல பஞ்சாயத்துல புகார் கொடுத்துருக்காங்க அதை கேள்விப்பட்டு தான் எல்லோரும் கொஞ்சம் வருத்தமா இருக்காங்க…. உன்னால எந்த பிரச்சனையும் இல்லை தெய்வா நீ ஏன் அப்படி நினைக்குற….. எனக்கு ஒரு உதவி மட்டும் பண்ணனும் தெய்வா…செய்வயா…'

''என்ன உதவினு சொல்லுங்கக்கா…..கண்டிப்பா செய்யுறேன்''

‘நாளை மறுநாள் நடக்க போற…பஞ்சாயத்துல நீ உண்மைய மட்டும் பேசனும்…. சரியா..’

“கண்டிப்பா உண்மை என்னனு நான் சொல்லுவேன் அக்கா…என்ன, என்ன நடந்தது…முதல் கொண்டு எல்லாமே சொல்லுவேன்க்கா….என்கிட்ட முதல் முறை கேட்டுருக்கேங்க செய்வேன்க்கா…உங்களுக்கா”

‘ம்ம்..சரிம்மா….’

“என்ன மதினி….. நம்ம குடும்பத்தவே பஞ்சாயத்துக்கு கூப்பிட்டுருக்காங்க….. பாண்டியன் அண்ணாவுக்கு தெரியுமா….. செல்வி அத்தை,மாமாக்கு தெரியுமா… பஞ்சாயத்து நடக்க போறது…..’” மலர்…கோவிலுக்கு வந்த வள்ளியிடம் பேசிகொண்டிருந்தால்…

‘அம்மாக்கு,அப்பாக்கு…அத்தை சொல்லிட்டாங்க….அவங்க நாளைக்கு வந்திருவாங்கா….அத்தான்…விதை நெல்லும்,விதை வெங்காயமும், வாங்க திண்டுக்கலுக்கும், மதுரைக்கு,…. போயிருக்காங்கா… இன்னைக்கு ராத்திரி தான் ஊருக்கு வருவாங்க….அத்தான் வந்த பின்னாடிதான் நான் பஞ்சாய்த்தை பற்றி அவருகிட்ட சொல்லனும்….’

“மதினி….என்னகென்னமோ அந்த பொண்ணு….பஞ்சாயத்துல அண்ணாகூட தான் வாழ்வேனு சொல்லிட்டா…என்ன பண்ணறது……, மாறன் மாமாக்கு இன்னும் விசயமே தெரியாது…. தெரிஞ்சா…சும்மா இருக்கமாட்டங்க…..கீர்த்திக்கு,கார்த்திக்கு கூட இங்க நடக்குற இசயம் தெரியாது…..என்ன பண்ணப்போறீங்க மதினி…. எனக்கு பயமா இருக்கு…நாளைக்கு நடக்கப்போற பஞ்சாயத்தை நினைச்சா..”

‘என்ன நடந்தாலும்….எனக்கு அத்தான்மேலையும்,கடவுள் மேலையும், நம்பிக்கை இருக்கு….மலர்…பார்க்கலாம் பஞ்சாயத்து கூட்டத்துல என்ன நடக்குனு……நான் கிளம்புறேன் மலர்… நீ பார்த்து போ வீட்டுக்கு’

“சரி மதினி, நீங்களும் பார்த்து போங்க”

‘வழி நெடுக்கிலும்…பாண்டியனிடம் எப்படி பேசுவது,… பஞ்சாயத்து பற்றி பேசினால் புரிந்துகொள்வாரா… இல்லை… தெய்வாவிடம் சண்டை போடுவாரா…., மாறன், அண்ணாக்கிட்ட பேசி.. புரிய வைக்கலாம்,…மலர் சொன்ன மாதிரி… கீர்த்திக்கும்,கார்த்திக்கும் தெரிஞ்சா…..அதுவும் கார்த்திக்கு,…. அத்தானுக்கு ஒன்னுனா…யாரு காரணம் தெரிஞ்சுகிட்டு போய் சண்டை போடுவான்….. அவனை சமாதானம் பண்ண…யாருலும் முடியாது….என்ன செய்யலாம்….. அத்தைகிட்ட இதை பற்றி

பேசிடலாம்….அவங்க இதுக்கு ஒரு முடிவு சொல்லுவாங்க….' முடிவுடன் கோவிலில் இருந்து வீட்டுக்கு விரைந்தால்…

"என்ன பண்ணலாம் அத்தை….இதுக்கு நீங்க தான் ஒரு முடிவு சொல்லனும், இப்போதைக்கு தம்பிக்கிட்ட நாளைக்கு நடக்கப்போற பஞ்சாயத்தை மட்டும் சொல்லி புரியவை….. மத்ததெல்லாம் அப்புறம் பார்க்கலாம்…. மாறன்,கீர்த்தி, கார்த்தி, மூனு பேரும் ஊருக்கு வரலை, அப்படியே வந்தாலும், நாம சொல்லாம அவங்களுக்கு எப்படி விசயம் தெரியும்….இதையும் மீறி அவங்களுக்கு தெரிஞ்சா…. அன்னைக்கு பார்த்துகலாம்…. சரியா…." வள்ளிக்கு தெளிவான முடிவை கூறினார்……

'சாப்பிட்டு தூங்கு தெய்வா….எதையும் நினைக்காம தூங்கனும்…சரியா..'

"சரிக்கா…."

'பாண்டியனுக்கா காத்திருந்தால் வள்ளி… அவனும் வந்தான் "என்னத்தான் இவ்வளவு தாமதா வரேங்கா வாங்க சாப்பிட்டலாம்". 'குளிச்சுட்டு வந்திறேன் வள்ளியம்மா…அப்போ தான் நல்லா இருக்கும்….'… "சரிங்க அத்தான் குளிச்சுட்டு வாங்க….அதுக்குள்ள சாப்பாடு டேபிள்ல எடுத்து வைக்குறேன்…" குளித்துவிட்டு வந்தவன் ..சாப்பிட அமர்ந்தான்….. பாண்டியனுக்கு சாப்பாடும்

பரிமாறினால்…வள்ளி…. “எவ்வளவு வேலை செய்துவிட்டு…. களைப்போடும் வரும் கணவனுக்கு தன் கையால் செய்யும் உணவை, அதை பார்த்து, பார்த்து பரிமாறும் அழகும், மனைவிக்கு அழகு தான்…..அது தான் வள்ளியிடம் இருக்கிறது…..”….

“இருவரும் அவகளின் அறைக்கு சென்றனர்…… பாண்டியன் வழக்கம் போல் அன்றைய கணக்குகளை பார்க்க ஆரம்பித்தான்….. வள்ளி, உடை மாற்ற குளியல் அறைக்கு சென்று மாற்றிக்கொண்டு வந்தால்…..எப்படி பேசுவது எனத்தெரியாமல்…. அவர்களின் படுக்கையை விரித்துகொண்டே பாண்டியனிடம் பேச ஆரம்பித்தால்…. ‘அத்தான்….நாளைக்கு எதாவது முக்கியமான வேலை இருக்குதா….’.. “இல்லைங்க வள்ளியம்மா….விதை நெல்லும்,விதை வெங்காயமும்…வாங்க்கிட்டு வந்துட்டேன்….இனி வேலை எதுவும் நாளைக்கு இல்லை…..ஏன் வள்ளியம்மா….”… ‘நாளைக்கு நம்ம குடும்பத்தை பஞ்சாயத்துக்கு கூப்பிடுருக்காங்க.. அத்தான்… ஊர் பெரியவங்க நேத்து தான் மாமாகிட்ட, வீட்டுக்கு வந்து சொல்லிட்டு போனாங்க….’ ஒரு நொடியில் அவனிடம் கூறிமுடித்தால்…. “வள்ளியம்மா….நம்ம குடும்பத்து மேலையா புகார் கொடுத்திருக்காங்க….”….அவன் அதிர்ச்சியுடன், வள்ளியிடம் கேட்க….. ‘ ஆமாம் அத்தான்….’… “வள்ளியம்மா….., நீங்க

சொன்ன மாதிரி கடவுள் எனக்கு இப்போ மிகப்பெரிய சோதனை கொடுத்திருக்காங்கா… அந்த சோதனையில்ல நான் கண்டிப்பா… ஒரு வழி எனக்கு கிடைக்கும்…. என்மேல நீங்களும்….நம்ம குடும்பமும் வச்சிருக்க நம்பிக்கைய நான் காப்பாத்துவேன் வள்ளியம்மா….'' கோவப்படுவான், நேராக ப்ரியாவிடம் சண்டை போட்டப்போகிறான் இன்று…அனைவருக்கும் தூங்கா இரவாக அமையப்போகிறது என நினைத்தவள்…. பாண்டியன் …. தன்மேல் ஒரு தவறும் இல்லை , அதை அனைவரின் முன் சொல்லுவேன் என தைரியமாக பேசுவதை பார்த்த வள்ளி….அவனை கட்டியணைத்தால்… 'அத்தான்….. கண்டிப்பா உங்கமேல எந்த தவறும் இல்லைனு, எல்லோரு சொல்லுவாங்க அத்தான்… என் நம்பிக்கை என்னைக்கும் பொய்யாகது….அத்தான்….'.. அவனிடம் மனதில் நினைத்ததை சொல்லாமல்….அவனின் நம்பிக்கைக்கு… துணையாய் இருந்தால்… ''வள்ளியம்மா…..நீங்க சொன்னதை கேட்டு நான் சண்டை போடுவேனு …. நினைச்சேங்களா…'' அவள் மனதை சரியாக புரிந்துகொண்டு கேட்டான்…. 'வள்ளியோ….ஆம் ' தலை ஆட்டினால்….. ''வள்ளியம்மா…..சண்டை போட்டாலும், போடாம இருந்தாலும்….நாளைக்கு நடக்கப்போற பஞ்சாயத்து நடக்காம போயிடுமா…..என்ன???… எனக்கு நம்பிக்கை அதிகமா இருக்கு வள்ளியம்மா…. என்மேல எந்த தவறும் இல்லையினு…..

அப்புறம் எதுக்கு சண்டை போடனும்…. சொல்லுங்க….’’….. ‘அத்தான் …..உண்மையை மட்டும் பேசனும்….எக்காரணம் கொண்டு தெய்வாவ சங்கடப்படுற மாதிரி பேசக்கூடாது….என்ன நடந்ததோ அதை மட்டும் சொல்லுங்க,….சரிங்களா..’.. ‘‘ம்ம்…. சரிங்க வள்ளியம்மா… என்ன நடந்ததோ அதை மட்டும் தான் பேசுவேன்…வாங்க தூங்கலாம்…..நேரமாச்சு’’.. அவளை அணைத்துகொண்டே மெத்தையில் படுக்க வைத்தான்…..அவனும் அவள் பக்கதில் படுத்துகொண்டான்…வள்ளி படுத்தாவுடனே உறங்கிவிட…. பாண்டியனுக்கு….நாளை நடக்க இருக்கும் பஞ்சாயத்தில் திருமூர்த்தி ஐயா தான் தலைவர்….அவர் முன்னிலையில் நடந்ததை கூறாமுடியுமா….. பார்க்கலாம்…நாளை என்ன நடக்க போகின்றது’’ அவனும் உறங்க முயன்றான்…

’பிரகாஷ்க்கு தூக்கமே வரவில்லை….. தந்தையிடம், பாண்டியனுக்குகாக சண்டை போட்டது….. அதற்கடுத்து…. சிவநாதனிடம் தைரியமாக சொல்லிவிட்டான் பெண் கேட்டு வருவாதாக மலருக்கும்,தனுக்குமான.. திருமணப்பேச்சை எப்படி ஆரம்பிப்பது என தெரியாமல் இருக்க….அதற்க்குள்…. பாண்டியன், குடும்பத்தின் மீது பஞ்சாயத்தில் புகார் கொடுத்திருப்பது அவனுக்கு அதிர்ச்சி தான்…. அதை கேள்விப்பட்டதும்…. திருமூர்த்தியிடம் மீண்டும் சண்டை போட்டது ‘‘இப்போ சந்தோஷமா….மூனு பேர்

வாழ்க்கையில தேவையில்லாம குழப்பத்தை ஏற்ப்படுத்திட்டு…. இப்போ அதுக்கு ஒரு பஞ்சாயத்து வச்சு…. அவங்களை… கேவலப்படுத்த போறீங்க….. உங்களையெல்லாம் என் அப்பானு சொல்லிக்கவே பிடிக்கலை…..என் அம்மாக்கு துரோகம்… செஞ்ச உங்களை எனக்கு பிடிக்கவேயில்லை…… அன்னைக்கு நான் கேட்டல….அந்த அம்மா…உங்க மனைவியானு….அப்போவே நீங்க அமைதியா போகும் போதே எனக்கு எல்லாம் புரிஞ்சுச்சு……. இங்க பாருங்க நாளைக்கு நடக்கப்போற பஞ்சாயத்துல ஊர்மக்கள் முன்னாடி எப்படியும் நீங்க உண்மையான தீர்ப்பு மட்டும் தான் வழங்கனும்….. இல்லையினா உங்களுக்கு ஒரு மகன் இல்லையினு நினைச்சுக்கோங்க…’… எப்பொழுது….திருமூர்த்தியை கண்டால், சாதரணமாக கூட பேசமாட்டான்….. அவரிடம் சண்டையும்… அவ்வளவாக போடமாட்டான்….. அவனுக்கு எதாவது தேவையென்றால் மட்டும், பேசுவான்….ஆனால் அவரிடம் பாசம் இருக்கிறதா, இல்லையா… எனக்கேட்டால் அவனுக்கே தெரியாது….. திருமூர்த்தியும் அப்படிதான் தாய் இல்லாத மகன்…அவனை, பாசத்தோடு வளர்க்க வேண்டும் என நினைக்கவில்லை….என் மகன்….அவ்வளவே தான் அவருக்கு,இது தான் பிரகாஷ் மீதுள்ள எண்ணம்…..’

“காலையில் எழுந்த வள்ளி…குளித்து முடித்து, சாமியறையில் விளக்கேற்றி.. கண் மூடி…எதை வேண்டுவது, தெரியாமல்…. அமைதியாக இருந்தால்…..”எனக்கு என்ன வேணும்,கொடுக்கனும் உனக்கு தெரியும்……ஆனா.. இன்னைக்கு எனக்கு மனசுல ஏதோ சஞ்சலாம இருக்கு…..எந்த அசாம்பாவிதமும் நடக்காம… இன்னைக்கு…பஞ்சாயத்து நல்லாபடியா நடந்து முடியனும்…… அதுக்கு நீங்க துணையா இருக்கனும்…..” அவள் வேண்டிகொண்டு…. சாம்பிராணி புகையை எடுத்துகொண்டு… மாட்டுத்தொழுவத்திற்க்கு சென்றால்….. அங்கு….வரிசையாக கட்டியிருந்த பசுமாட்டிற்க்கு அந்த புகையை காண்பித்தால்……. அனைத்து வேலையும் முடிந்து….பஞ்சாயத்துக்கு கிளம்பவேண்டிய நேரமும் நெருங்கியது…..”

‘ஆலமரம்….பிள்ளைகள் போல்……தன் விழுதுகளையும், கிளைகளும்…. சுமக்கும்.. ஆலமரம்… கிராமப்புறங்களில் மிகவும், சிறப்பு…. அதுவும், திருமணமானவர்கள் குழந்தை வரவு தள்ளிப்போனால்…. காலைபொழுதில் ஆலமரத்தை சுற்றினால்… குழந்தை வரவு கைகூடி வரும் என ஐதீகம்…அதிலும் விநாயகர் குடிகொண்டிருக்கும் ஆலமரத்தை சுற்றினால் இன்னும் விசேஷமாக இருக்கும்,…..இப்படி போற்றும் அந்த ஆலமரத்தில் ஊர் மக்களின் நிறை,குறைகளையும் தீத்து வைக்கபடும்…

நீதிபதியில்லாத ஒரு நீதிமன்றம்… ஆம்….அந்த ஊரில் உள்ள மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட குறையும், தவறு செய்திருந்தால் அதற்க்கு தண்டனையும்,…அந்த ஊர் பெரியவர்களால் கொடுக்கப்படும் அந்த பஞ்சாயத்தின் தலைவரான….திருமூர்த்தி ஐயாவும், அதன் கீழ் உள்ள பெரியவர்களில் ஒருவரான… முத்தையாவும் அடங்கும்,….. இருதரப்பில் நடக்கும் விசாரணையில் யார் பக்கம் குற்றம் இருக்கிறதோ அவர்களுக்கு ஏற்ற தண்டனை வழங்கப்படும், குற்றம் இல்லாதவர் பக்கம் அவர்களுக்கான நியமான தீர்ப்பு வழங்கப்பட்டு…..அவர்களின் குறையும் தீர்த்து வைக்கப்படும்…. இது தான் அந்த ஊரின் வழக்கம்……இது என்றுமே மாறாத வழக்கமும் கூட….அதே போல் முத்தையாவின் பஞ்சாயத்தும் நடக்க போகிறது..'

''ஊரின் உள்ள…பெரியவர்கள், மக்கள்,……பஞ்சாயத்தின் தலைவர்…. அவ்ருக்கு கீழ் உள்ள பெரியவர்கள்….முத்தையாவின் குடும்பமும்..உட்பட……அனைவரும் பஞ்சாயத்தில் இருந்தனர்….. 'ஐயா…ஆரம்பிக்கலாம'ஒரு பெரியவர் திருமூர்த்தியிடம் கேட்க….. ''எல்லோரும் வந்தாச்சா…''… 'எல்லோரும் வந்தாச்சுங்கயா'… ''அப்போ ஆரம்பிக்கலாம்''….திர்மூர்த்தி சொல்லியவுடன்…. 'ஊர் மக்களுக்கு முந்தினநாளே….தண்டோர மூலம் இன்று பஞ்சாயத்து நடக்க இருக்குனு அறிவிச்சோம்….அதுபடி…இன்னைக்கு

பஞ்சாயத்துல….முத்தையா ஐயா குடும்பத்துமேல புகார் கொடுக்கப்பட்டுள்ளது…..அந்த புகாரு கொடுத்தது ஊர் மக்களுனு நம்ம எல்லோரையும் சேர்த்து சொல்லிருக்காங்கா……அதுனால இந்த புகார நிராகரிக்க முடியாது….. ஊர் தலைவரான திருமூர்த்தி ஐய்யாகிட்ட இந்த புகாரை பற்றி சொன்னதும்…. பஞ்சாயத்தை நடத்த சொல்லிட்டாரு…. அவரோட சம்மதம்… எவ்வளவுக்கு எவ்வளவு முக்கியமோ அது போல…. முத்தையா ஐய்யாவோடா வார்த்தையும் முக்கியம்…அவருக்கு தெரியப்படுத்த ஐய்யாவோட வீட்டுக்கு போய் இந்த பஞ்சாயத்தை பற்றி பேசினோம்….அவரும் நடத்தை சொல்லிட்டாரு…… இப்போ இந்த புகாருல என்ன எழுதி இருக்குனு படிக்கபோறேன்….அதுபடி இனி பஞ்சாயத்து நடக்கும்……ஒரு பெரியவர் பஞ்சாயத்து எதுனால் கூடியது ……மக்களுக்கு தெரியப்படுத்திவிட்டு அந்த புகாரை படிக்க ஆரம்பித்தார்….

‘‘ஊர் பெரியவர்களுக்கு,மக்களுக்கும் என் வணக்கங்கள்…..

உங்களுக்கே தெரியும், வள்ளியம்மாவும்,பாண்டியன் ஐய்யாவும், சேர்ந்து எத்தனை வருஷமாக காதலித்து,கல்யாணம் செய்தனர் என்று…..ஆனால் அவர்களின் கல்யாணம் நடந்தது மூன்று மாதம் ஆன நிலையில் பாண்டியன் வேலையின் காரணமாக வெளியுர் சென்று…..திரும்பி வரும் போது

இரண்டாம் தாரமாக வேறொரு பெண்ணை யாருக்கும் தெரியாமல் கல்யாணம் செய்துகொண்டு வந்தார்….அதை கேள்விப்பட்டதும்…. ஒரு மனைவிக்கு செய்யும் துரோகமாக எனக்கு தெரிந்தது…..அதானல் …பாண்டியன்.. இரண்டாம் தாரமாக திருமணம் செய்துகொண்டு வந்த பெண்ணை….தீர விசாரித்தும்,அவர்களுக்கு எப்படி திருமணம் நடந்தது பற்றியும்,…பாண்டியன் பக்கமும் விசாரிக்க வேண்டும் என்பதையும்,….தெரிவித்துக்கொள்கிறேன்….. இருவரின் பக்கமும் தவறு இருந்தால்….ஊரைவிட்டு வெளியில் அனுப்பும்மாறும், இருவரின் பக்கம் தவறு இல்லையென்றால் அவர்களுக்கு நியமான நீதியை வழங்கவேண்டும் என்பதை மிகவும்….தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்…..

இப்படிக்கு….

ஊர் மக்கள்……

‘புகார் கடிதத்தை…ப டித்து முடித்த பெரியவர்…. திருமூர்த்தியிடம் அந்த புகார் கடிதத்தை கொடுத்தார்… ‘‘

‘திருமூர்த்தி அந்த கடிதத்தை வாங்கி மீண்டும் ஒரு முறை படித்துவிட்டு….. முத்தையாவின் பக்கம் பார்த்தார்… ‘‘முத்தையா… இந்த கடித்துல பாண்டியன், வள்ளி, அப்புறம் அந்த பொண்ணு…

தெய்வப்ரியா….இவங்க மூவரையும் குறிப்பிட்டு பஞ்சாயத்து கூட்டப்பட்டுயிருக்கு…..அதுனால….அவங்க மூனு பேரும் இந்த சபை முன்னாடி வரச்சொல்லுங்க முத்தயா…..திருமூர்த்தி அவரிடம் சொல்ல…. ‘சரிங்க ஐயா’.. பாண்டியன்,வள்ளி,தெய்வப்ரியா.. மூவரும் சபையின் முன்னாடி வந்து நின்றனர்…..’

‘‘பாண்டியன்… முதல் மனைவி இருக்கும் பொழுது எதுக்கு இரண்டாம் தாரமா திருமணம் செஞ்சுட்டு வந்திருக்க அதுக்கான காரணம் என்ன…..பாண்டியன்.. எதுனால இந்த பொண்ண கல்யாணம் பண்ணனு இந்த பஞ்சாயத்துக்கு சொல்லுப்பா’’

‘முதல இங்க இருக்குற எல்லா பெரியவர்களுக்கும், ஊர் தலைவரான ஐய்யாவுக்கும்…என் வணக்கம்….., நான் வெளியூர் போக காரணம்…..எங்கள விட்டு பிரிஞ்சு போன சொந்தத்தை தேடி தான் நான் வெளியூர் போன்னேன்… அதுக்கு துணைக்கு ஐய்யாவோட மகன் பிரம்மாவையும் அழைச்சுட்டு போனேன்….. வெளியூர் போறதாதான் என் வீட்டலையும்,என் மனைவி வள்ளியம்மாக்கிட்டையும், சொல்லிட்டு போன்னேன்…..அங்க எங்க ரெண்டு பேருக்கு தேவையான வேலைய தேடிகிட்டு, பிரிஞ்சு போன சொந்தத்தையும் தேடிட்டு இருந்தேன்…..அப்போதான் எனக்கு முக்க்கியமான ஒரு ஆள், அறிமுகம் ஆனாங்க…..அது ….சென்னை டி.ஐ.ஜி…..திரு.ரவிக்குமார்….அவர் எனக்கு உதவி

செய்ய முன் வந்தாரு….அவரு மூலமா… பிரிஞ்சு போன சொந்தம்…. கிடைக்க வாய்ப்பிருக்குனு அதிகம் நம்பிக்கை வச்சேன்….., நான் வேலை செய்யுற கம்பெனில தெய்வப்ரியா சேர்ந்தாங்க…..அந்த பொண்ணு பற்றி எனக்கு அவ்வளவா தெரியாது…..ஆனா…முக்கியமான நேரத்துல தான் பிரிஞ்சு போன சொந்தம் கிடைக்க போகுதுனு எனக்கு தகவல் வந்துச்சு நானும்…அந்த சந்தோஷத்தோட….. வேலையை ராஜினமா பண்ணிட்டேன்…… அடுத்த நாள் அந்த குடும்பம்…. திவாகரனால…. அதாவது…. பழனிசாமி மகன்…திவாகரன்…என் சொந்த்ததை கடத்திட்டாதா…..எனக்கு தகவல் வந்துச்சு…..அங்க போனா…அவன், அந்த பொண்ணையும்,அம்மாவையும், கடத்திவச்சு… அந்த அம்மாவ கொல்லப்போனா…..அதை தடுக்க போனை என்னையும், பிரம்மாவையும் அடிக்க வந்தான்…..ஆனா நான் முன்னாடி போலீஸ்க்கு தகவல் பண்ணிட்டு வந்தனால…. என்னால அவங்களை காப்பத்த முடிஞ்சது….ஆனா….ப்ரியாவோட அம்மாவ என்னால காப்பத்த முடியலை…..ஐய்யா…'' பாண்டியன் நடந்ததை… சொல்லிக்கொண்டே வரும்போது…..அதை கேட்டுகொண்டிருந்த முத்தையாவுக்கு…..பெரிய அதிர்ச்சியாக இருந்தது… மீனாட்சிக்கு சொல்லவே வேண்டாம்……அவர் பாண்டியன் எந்த சொந்ததை தேடி சென்றான் என்பதை அவ்ருக்கு கொஞ்சம் கொஞ்சம் புரியத்துவங்கியது…… ப்ரியாவுக்கு

அன்றையா நாளை நினைத்து கண்ணீர் வரத்துவங்கியது……பிரகாஷ்,மலர்…, வள்ளியின், தந்தை,செல்வி, இவர்களுக்கும் கூட…. பாண்டியன் சொன்னதை கேட்டதும் திகைத்து நின்றனர்….. ஆனால் வள்ளி மட்டும் எந்த உணர்ச்சியும் காட்டாமல் பாண்டியன் கூறுவதையே….பார்த்துகொண்டிருந்தால்….. "ப்ரியாவோட அம்மாவ அந்த திவாகரனோட ஆள்…, கத்தியால குத்திட்டான்….. அவங்க… காப்பத்த முடியமா….நான் பட்ட வேதனை…..கொஞ்சம் நஞ்சம் இல்லை……ஐய்யா….அப்போ அவங்க என்கிட்ட கேட்ட உதவி தான்…..என்னால செய்யமுடியாம இருக்க முடியல….. அவங்க, என்கிட்ட ப்ரியாவை கல்யாணம் பண்ணிக்கனும்,அந்த பொண்ண… என்னால மட்டும் தான் காப்பாத்த முடியும்… சொன்னாங்க…. என்னால முடியாதுனு நான் மறுத்தேன்….ஆனா அந்த அம்மா.. கத்திகுத்தோட அந்த வலியிலையும் கையெடுத்து கும்பிட்டு என் கால்ல விழுக போனாங்க……நான் தடுத்துத்தேன்….அவங்களோட மகளை என்னைத் தவிர யாரும் காப்பாத்த முடியாது……இதை மட்டும் என்க்காக செய்யவேண்டுமுனு என்கிட்ட கேட்டாங்க என்னால….அதை தாங்க முடியாம….ப்ரியாவ கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சேன்…..அடுத்த நிமிசமே அவங்க கழுத்துல இருக்குற மாங்கல்யத்தை எடுத்து என் கையில கொடுத்து போடச்சொன்னாங்க….அதை வாங்கி எந்த எண்ணமும் இல்லாம அந்த பொண்ணு கழுத்துல தாலிய போட்டேன்…..இது தான்

நடந்தது….ஐய்யா…’’பாண்டியன் முழுதாக சொல்லிமுடித்ததும்……. அங்கு இருந்தவர்கள் அமைதியாக பாண்டியனை பார்த்துகொண்டிருந்தனர்…..

‘அந்த அமைதியை கலைத்தார்… திருமூர்த்தி… ‘‘சொந்தம், சொந்தமுனு சொல்லுறையப்பா….அந்த சொந்தம்… யாருனு இந்த ஊர்காரவங்க முன்னாடி சொல்லு பாண்டியா’..

‘‘அந்த சொந்தம் என் அப்பாவோட இரண்டாவது தங்கச்சி…. சேதுபதி பிள்ளையோட…. மூனாவது பொண்ணு…..திருமதி. தாமரைச்செல்விகுருமூர்த்தி,… அவங்களோட பொண்ணுதான்… தெய்வப்ரியா…’’ பாண்டியன் தாமரையை பற்றி உண்மையை சொன்னான்…..

‘பாண்டியன்….தெய்வாப்ரியாவை பற்றியும்,அவள் யாருடைய குடும்பத்தை சேர்ந்தவள் என முழுவதையும் கேட்ட முத்தையா,மீனாட்சியும்…..அதிர்ந்து நின்றார்கள் அவர்களுக்கே… இப்படி என்றால்…..ஊர் மக்களுக்கும்,பிரகாஷ், மலர்க்கும், செல்வி, முருகவேலுக்குமே இது பெரும் அதிர்ச்சியாக இருந்தது…. ஆனால் மூவருக்கு மட்டுமே இது ஏற்கனவே தெரிந்த விசயம் என்பது போல் அமைதியாக இருந்தனர்…..’

’’இனி…பஞ்சாயத்தின் தீர்ப்பு என்னவாக இருக்கும்????’’

# அத்தியாயம் 12

''புயல் வந்தால் கூட இவ்வளவு அமைதியாக இருக்காது…. ஆனால் அந்த பஞ்சாயத்தில் அனைவருமே அமைதியாக இருந்தனர்….தாமரைசெல்வியின் உண்மையும், தெய்வப்ரியா யாரென்றும்….அவள் யாருடைய சொந்தம் என்றும், அவளுக்கும், இந்த ஊருக்கும் சம்மந்தம் இருக்கிறது….., என்றும், பாண்டியன் கொஞ்சம், கொஞ்சமாக கூறிக்கொண்டு வந்தான்…''

'பாண்டியா…. உன் பக்கம் இன்னும் வேற எதாவது சொல்ல வேண்டியது இருக்கா… இல்லை அவ்வளவு தானா…' திருமூர்த்தி, பாண்டியனிடம் கேட்க…

''இருக்குங்க ஐயா… சொல்லுறேன்… ப்ரியாவோட அம்மாக்கு, நான் தான் கடைசியா கொல்லி வச்சேன்…, அதுகடுத்து… நானும், பிரம்மாவும், ப்ரியாவ கூப்பிட்டு நம்ம ஊருக்கு வந்துட்டேம்…. ஐயா…. நான்… சென்னைக்கு போனதுல இருந்து.. நம்ம ஊருக்கு வந்தது வரை நடந்த அத்தனையும் இந்த பஞ்சாயத்துல சொல்லிட்டேன் ஐயா…. இனி ஊருக்காரவங்க எல்லோரும், பஞ்சாயத்துல எந்த முடிவு எடுத்தாலும் அதுக்கு நான் பாண்டியன் சொல்ல வரும்போதும்…. ''நாங்கனு… என்னையும் சேர்த்து

சொல்லுங்க அத்தான்'' வள்ளி பாண்டியனை பார்த்து சொன்னால்…..பாண்டியனோ வள்ளி கூறியதை கேட்டு.. அவளை பார்த்துக்கொண்டு 'அதுக்கு நாங்க சம்மதிக்குறோம்….. ஐயா.

'என்னப்பா… பாண்டியன் பக்கம் இந்த நியாயத்தை சொல்லி முடிச்சாச்சு, இனி அந்த பொண்ணு.. தெய்வப்ரியா பக்கம் இருக்கும் நியாயத்தையும் கேட்டுட்டு… வள்ளிவோட முடிவும் என்னனு கேட்டுட்டு பஞ்சாயத்தோட தீர்ப்பு சொல்லிடலாம் என்னப்பா….. அந்த பொண்ணுகிட்ட இருக்க நியாயத்தை கேக்கலாமா…' திருமூர்த்தி ஊர்மக்களிடம், கேட்டார்..'

''கேக்கலாம் ஐயா…..''

' தெய்வப்ரியா….. இங்க பாரும்மா… இது கிரமத்து பஞ்சாயத்து… பயப்படாம உண்மைய மட்டும் பேசனும், சரியா… சென்னையில என்ன நடந்தது….தெய்வப்ரியா, சொல்லுமா…'

''நான், என் அம்மா, சென்னைக்கு வந்து நாலு வருசம் ஆச்சு….., நாங்க சென்னை வரதுக்கு முன்னாடி என் அப்பா எங்க போனாருனு தெரியலை…. அம்மாக்கிட்ட கேட்டா… வெளியூர்க்கு வேலை விசயமா போயிருக்காங்க… இன்னும் கொஞ்சம் நாளுல அப்பா வந்திருவாங்கனு சொல்லி என்கிட்ட சமாளிச்சாங்க….., ஆனா உண்மையில என் அப்பா எங்க போனாருனு எனக்கு

தெரியாது……, நானும் என் அப்பாவ பற்றி கேக்குறதை விட்டுட்டேன்….., என் அம்மா சொந்தமா நர்ஸரி வச்சு அதில இருந்து வந்த பணத்துல தான் என்னை படிக்க வச்சாங்க…. படிச்சு முடிச்சதும், எனக்கு ஐ.டி. கம்பெனில வேலை கிடைச்சது…, அங்க தான் பாண்டியம் சாரையும்,பிரகாஷையும் பார்த்தேன்…, சொந்தம்,பந்தம்,ஃப்ரண்ட்ஸ், யாருமில்லாம வளர்ந்த எனக்கு… பிரகாஷ பார்த்ததும்… ஒரு நட்பு உணர்வு வந்தது….., நானும், பிராகாஷும்… நல்ல நணபர்கள் ஆனோம்… தினமும்… என் பொழுது பிரகாஷ்கூட போச்சு… அப்படி சந்தோஷமா இருந்த என் வாழ்க்கையில… திடீர்னு….ஒரு நாள், ஆபீஸ் கிளம்பும் போது… என் வீட்டுக்குள்ளயே வந்து என் அம்மா கழுத்துல கத்தி வச்சு… என்னை மிரட்டி…., என்னையும், என் அம்மாவையும், கடத்திட்டு போனான்… அவன்…, எனக்கு பேர்ரெல்லாம் தெரியலை ஐயா…, எனக்கு என்ன செய்யறதுனு தெரியலை…. யாருமில்லாம… இருந்த எங்களுக்கு, யாரும் காப்பாத்த மாட்டாங்கனு நினைச்ச நேரம்…. என்னை ஒருத்தன்… கட்டையால அடிச்சதுல… நான் மயக்கம் ஆனேன்… அதுகடுத்து…. நான் முழிச்சு பார்த்தா ஹாஸ்பிட்டல இருந்தேன்… அங்க என்ன நடந்துச்சு… என் அம்மா எப்படி இறந்தாங்க, எனக்கு தாலி போட்டது பாண்டியன் சார்னு, என் அம்மாவுக்கு கொல்லி வச்சது, அங்க நடந்த அத்தனையும் எனக்கு பிரகாஷ் சொல்லி தான்…. தெரியும்….., ஐயா…’’

‘அம்மா இல்லாத வலி எனக்கும் தெரியும்மா…, ஆனா உன்னை ஒரு நல்லவன் கையில ஒப்படைச்சுட்டு உன் அம்மா இறந்துட்டாங்க… ஆனா அவங்களுக்கு தெரியாதுல, நல்லவனு நினைச்சு… பாண்டியனை கல்யாணம் செஞ்சு வச்ச உன் அம்மாவுக்கு… அவனுக்கு ஏற்கனவே கல்யாணம் ஆனா விசயம் தெரியாது… உன்மேலையும், உன் அம்மா மேலையும், தவறு இல்லைனு தெரியுது,’

‘‘ஊர் மக்களுக்கு ஒரு விசயம் சொல்லுறேன்…. இரண்டு கல்யாணம் ஏன் அந்த காலத்துல இருந்து இப்போ வரை செஞ்சுகிறாங்கனா… முதல் மனைவிக்கு உடல் நிலை சரியில்லாம,… இறந்தாலும், அவங்களுக்கு… குழந்தை பாக்கியம் இல்லனாலும், முதல் குழந்தை பிறந்து அந்த பொண்ணு இறந்தாலும்… தான் இரண்டாவது கல்யாணம், செய்வாங்க…. அதுவும், முதல் மனைவி சம்மத்தோட… அந்த இரண்டாவது கல்யாணம் நடக்கும்…., இதுவரை நம்ம ஊருக்குள்ள… இரண்டு கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க… ஒன்னு முத்தையாபிள்ளையும், கந்தாசாமியும், தான் இரண்டாவது கல்யாணம் செஞ்சுகிட்டாங்க…., முத்தையாவும், கல்யாணம் செஞ்சது… காமாட்சியோட சம்மத்தோட தான்…, அதே மாதிரி தான்.. கந்தசாமியும்… கல்யாணம் செஞ்சுகிட்டாங்க… இப்போ பாண்டியன்.. யாரோட சம்மதமும்

இல்லாம... கல்யாணம் பண்ணிட்டான்.... அதுக்காக... பாண்டியன் செய்யது சரினு சொல்லல...., இப்போ நான் எடுக்க போற முடிவ விட, அந்த பொண்ணு, தெய்வப்ரியா என்ன முடிவு பண்ணிருக்குனு கேட்கலாம்.... என்னப்பா.. நான் சொல்லுறதுல எதுவும் தவறு இருந்தா சொல்லுங்கப்பா...'' திருமூர்த்தி இரண்டு கல்யாணத்தினை ஆதரிக்கவும், எதிர்க்கவும் இல்லை என்ற முடிவை கூறினார் ஊர்மக்களின் முடிவையும் கேட்டார்..

'ஐயா... என்னைக்கு, உங்க முடிவை நாங்க எதிர்த்தோம்,... நீங்களும், முத்தையா ஐயாவும்... சொல்லுற முடிவு என்னைக்குமே தப்பாகாதுங்க ஐயா... அந்த பொண்ணோட முடிவை கேக்கலாம் ஐயா....'

" தெய்வப்ரியா... நான் இப்போ சொன்னதை எல்லாம் கேட்டுருப்ப... நல்லா யோசிச்சு, தெளிவா ஒரு முடிவு நீ எடுக்கனும், நீ சொல்லுற முடிவுல தான்.. நான் பஞ்சாயத்தோட தீர்ப்ப சொல்லப்போறேன்... சொல்லுமா... உன் முடிவு என்ன, பாண்டியன் கூட சேர்ந்து வாழ முடிவு செஞ்சுருக்கியா... எதுனாலும் சொல்லுமா...'' திருமூர்த்தி, தெய்வப்ரியாவிடம் கேட்க...

'தெய்வப்ரியாவோ... ஒரு நிமிடம் கண்களை மூடிகொண்டு... யோசித்தால்.. "என்னை அரவணைச்சு அழைச்சுட்டு போன..

அந்த வள்ளியக்காவுக்கு என்னால முடிஞ்சது, பாண்டியன் சார விட்டு விலகிப்போறது தான் சரியான முடிவு, என் அம்மாக்கு தெரியாது, பாண்டியன் சார்க்கு,கல்யாணம் ஆனது, அப்படி தெரிஞ்சிருந்தா… பாண்டியன் சார் அஹ.. கட்டாயப்படுத்திருக்க மாட்டாங்க… என் ஒருத்தியால… அந்த, குடும்பத்துக்குள்ள எந்த பிரச்சனையும் வரக்கூடாது.. எனக்கு வள்ளி அக்காவோட வாழ்க்கை ரொம்ப முக்கியம், அவங்க வாழ்க்கையில நான் இடையில இருக்க கூடாது…. நான் விலகிப்போறது தான் சரி…. தீர்க்கமாக முடிவெடுத்துகொண்டு, கண்களை திறந்தால்… நேராக… திருமூர்த்தி ஐயாவை பார்த்து… பேச ஆரம்பித்தால் ‘‘எனக்கு அவரோட வாழ முடியாதுங்க ஐயா…, இந்த கல்யாணம் நான் சுயநினைவு இல்லாம நடந்த கல்யாணம்… இதுல எனக்கு கொஞ்சம் கூட உடன்பாடு இல்லை…. என் முடிவு இது தான் ஐயா’’… பாண்டியனைவிட்டு முழுமையாக பிரிய தயரானால் ப்ரியா…, ப்ரியாவின் முடிவை கேட்டு… ஊர் மக்கள் மகிழ்ச்சியாக இருந்தாலும்,. ப்ரியாவின் முடிவை கேட்டதும் சந்தோஷப்படுவதா இல்லை.. சொந்த தங்கை மகள் தங்களைவிட்டு பிரிய தயராக இருக்கிறாளே… என அங்கிருந்த முத்தையாவின் குடும்பம்… நினைக்க…, பிரகாஷிற்க்கு ப்ரியாவின் முடிவும் சரி என்றாலும், அவளுக்கு இருக்கும் சொந்தத்தைவிட்டு பிரியாமல இருக்க வேண்டும் அவன் நினைக்க…வள்ளியின் மனநிலையோ வேறு

சிந்தனையில் இருந்தது…. பாண்டியனுக்கு ஏதோ ஒரு குற்ற உணர்வில் இருந்து தப்பியது போல் இருந்தது…..இவ்வாறாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு மனநிலையில் இருக்க, திருமூர்த்தி ஐயா பேச ஆரம்பித்தார்..

'நல்லா யோசிச்சு தான் இந்த முடிவ எடுத்துருக்கியாம்மா… இதில எந்த மாற்றமும் இல்லையே…., பஞ்சாயத்து தீர்ப்பு சொல்லிட்டா உன் வாழ்க்கைய எங்க யாருலும் திருப்பி கொடுக்க முடியாதும்மா… இது தான் உன் முடிவாம்மா..'

''ஆமாங்க ஐயா… என் முடிவுல எந்த மாற்றமும் இல்லை… இந்த பஞ்சாயத்து தீர்ப்புல எனக்கு எந்தவிதமான மாற்றமும், இல்லைங்க ஐயா… என் முடிவ இந்த ஊர் மக்களுக்கும், உங்களுக்கும், தெரிவிச்சுட்டேன்.. ஐயா….''

'சரிம்மா… உன் முடிவுல மாற்றம் இல்லைனா… எனக்கும், இந்த ஊர் மக்களும், இந்த முடிவ, நாங்க… ஏத்துகிறோம்… என்னப்பா… அந்த பொண்ணே சொல்லிருச்சு… இந்த கல்யாண வாழ்க்கையில விருப்பம் இல்லைனு… இப்போ பஞ்சாயத்துல தீர்ப்பு சொல்லலாம…'திருமூர்த்தி ஊர்மக்களிடம் கேட்க…

''சரிங்க…. ஐயா..''

‘ஒரு நிமிசம் ஐயா…’வள்ளி,திருமூர்த்தியின் தீர்ப்பு வழங்கும் முன் இடையே குறுக்கிட்டால்..

‘‘சொல்லும்மா…வள்ளி’’

‘மன்னிச்சுக்கோங்க ஐயா…. உங்க தீர்ப்புல நான் குறுக்கிட்டதுக்கு,… நான், தெய்வாகிட்ட பேசனும்….’

‘‘தீர்ப்பு சொல்லப்போற நேரத்துல…., அந்த பொண்ணுகிட்ட என்னமா பேசப்போற…, ‘உங்க முன்னாடி தான் ஐயா பேசப்போறேன்..’ ’’சரி பேசும்மா…’’

‘வள்ளியோ தெய்வப்ரியாவை நோக்கி சென்றால்…. ‘‘தெய்வா… உண்மையில என் அத்தான் கூட வாழ விருப்பம் இல்லையா… என் கண்ணப்பார்த்து சொல்லு,உனக்கு இந்த கல்யாணத்துல உடன்பாடு இல்லனு..’’ வள்ளி, ப்ரியாவை பார்த்து கேட்க.

‘‘எனக்கு விருப்பம் இல்லைக்கா,…. இந்த கல்யாணத்துல உடன்பாடும் இல்லைக்கா…. ப்ரியா, வள்ளியின் கண்களைப்பார்த்து சொன்னால்… ‘அப்போ எனக்கு ஒரு சத்தியம் செஞ்சு தருவியா.. ப்ரியா…..’. ‘‘என்ன சத்தியம் அக்கா… சொல்லுங்க கண்டிப்பா நான் செய்யுறேன்..’’… ‘தெய்வாவின், முன் வள்ளி தன் கையை நீட்டி,

நான் பார்த்த மாப்பிள்ளைய நீ கல்யாணம் பண்ணிக்கனும்…. பண்ணிக்குவியா… சத்தியம் செய்வியா தெய்வா. எனக்கு, நீ சத்தியம் செஞ்சுகொடுத்தான் இந்த பஞ்சாயத்து தீர்ப்பு செல்லுபடியாகும்… தெய்வா,''ஒரு அதிர்ச்சியை வைத்தால் வள்ளி… திருமூர்த்திக்கே வள்ளியின் சத்தியம் பெரும் அதிர்ச்சியாக இருந்தது… ஆனால் தெய்வா… அதிர்ச்சியாகமல்…. வள்ளியின் கையில்… தன் கையை வைத்து… நீங்க பார்த்த மாப்பிள்ளைய கல்யாணம் செஞ்சுக்க தயார் வள்ளியக்கா…. என சத்தியம் செய்து கொடுத்தால்… தெய்வா….''… 'இந்த சத்தியத்தை நீ மீறினால்..'…. வள்ளி முடிக்கும் முன்… ''என் உயிர் இருக்காது அக்கா…. நான் தாமரைசெல்வியோட பொண்ணு….. உங்களுக்கு செஞ்சுகொடுத்த சத்தியத்தை மீறமாட்டேன்.. அக்கா….''… தெய்வாவின் உறுதியான வார்த்தையில் வள்ளி ஒரு நிமிடம் திகைத்து தான் போனால்… வள்ளி.. திருமூர்த்தியிடம் தீர்ப்பை வழங்குமாறு… அவரிடம் கூறிவிட்டு… தெய்வாப்ரியாவின் அருகிலேயே நின்றுகொண்டால் வள்ளி…'

''இரண்டு பக்கமும் தீர விசாரிசாச்சு….., பாண்டியன் பக்கம் முதல் தவறு இருக்கு, முதல் மனைவிக்கே தெரியாம கல்யாணம் செய்தது…, அதுக்கான தண்டனை… தெய்வப்ரியா கழுத்துல பாண்டியன் போட்ட தாலியை, பாண்டியனே கழட்டனும்….,

அப்பறம் இந்த ஊர் மக்கள் உங்க முன்னாடி நான் மன்னிப்பு கேட்கனும்,..''

'ஐயா… நீங்க எதுக்கு மன்னிப்பு கேக்கனும்… உங்க தவறு இதுல என்ன இருக்குங்க ஐயா…' ஒரு பெரியவர் கேட்க…

''என் பக்கம் தவறு இருக்க போயிதான் உங்க முன்னாடி மன்னிப்பு கேட்கிறேன்…''

'அப்படி என்ன தவறுங்க ஐயா…??, ஊருக்கே நல்ல தீர்ப்பு வழங்குற நீங்க, ஊர் மக்கள் நலன் கருதி எது செஞ்சாலும், அதுல உங்க தவறுனு எதுவும் இல்லை… இப்போ முத்தையா ஐயாவ பஞ்சாயத்துக்கு அழைச்சது கூட எங்களுக்கு மனவருத்தம் தான் அதிகமா இருக்குங்க ஐயா… அப்படி இருக்க நீங்க எங்ககிட்ட மன்னிப்பு கேட்டா.. அது அந்தா சாமிக்கே பொருக்காதுங்க ஐயா…'

''ம்ம்ம்… என்மேல இவ்வளவு தூரம் நம்பிக்கை வச்ச உங்களுக்கு என்னைக்கு நல்லதுமட்டும் தான் செய்வேன்… ஆனா.. பஞ்சாயத்துல என் குடும்பமும் சம்மந்தப்பட்டு இருக்கே… அதுனால தான்… மன்னிப்பு கேட்க்கிறேன்… என் குடும்பமுனு நான் சொன்னது…. என் தம்பி குடும்பத்தை தான்…,'' ஊர் மக்களுக்கு தெரியும் திருமூர்த்தி ஐயா யாரை தன் குடும்பம் என

குறிப்பிடுகிறார் என்று…. “ என் தம்பி குருமூர்த்தியோட மனைவிதான், தாமரைசெல்வி, என் தம்பிக்கும்,தாமரைக்கும் பிறந்த பொண்ணு தான் இதோ நிக்குற பொண்ணு தெய்வப்ரியாகுருமூர்த்தி…, பாண்டியன், நடந்ததை சொல்லி முடிச்ச பின்னாடி… என் தம்பி குடும்பத்தை பேசலாம் நினைச்சேன்… ஆனா என்மேலையும், நான் வழங்குற தீர்ப்புமேலையும், நம்பிக்கை வச்சுருக்க உங்களுக்கு என்னால மனவருத்தம் உண்டாகக்கூடாது…. அதுனால தான் பாண்டியனுக்கு தண்டனையை வழங்கிட்டு உங்ககிட்ட உண்மையை சொன்னேன்… என்னை மன்னிச்சுருங்க மக்களே…..,.” திருமூர்த்தி ஐயா ஊர் மக்கள் அனைவரின் முன் எழுந்து நின்று, கைகூப்பி மன்னிப்பு கேட்டார்…

‘அதை பார்த்த ஊர்மக்களும், முத்தையாவின் குடும்பமும், திகைத்து, ‘‘அய்யோ ஐயா… என்ன செய்யுறேங்க….., தம்பி தான் அந்த பொண்ணு தாமரைசெல்விகுருமூர்த்தியோட பொண்ணுனு… சொல்லிட்டாங்களே.., பின்ன என்னங்க ஐயா… இப்படி எங்க முன்னாடி கையெடுத்து கும்பிட்டு மன்னிப்பு கேட்குறேங்க… ஐயா.. கையை இரக்குங்க…. என்னப்பா பார்த்துட்டு இருக்கேங்க… ஐயாக்கிட்ட சொல்லுங்கப்பா…” பெரியவர்களும்,மக்களும் திருமூர்த்தி செயலை பார்த்து பதறிப்போனார்கள்….

’’என்ன தான் பஞ்சாயத்துல நான் தீர்ப்பு வழங்குறவனாலும் இருந்தாலும், என் தம்பி குடும்பமும் என் குடும்பம் தானே… அப்போ நானும் உங்ககிட்ட மன்னிப்பு கேக்குறது தானே சரி…’’

‘ஐயா…, உங்க மன்னிப்ப நாங்க ஏத்துகிறோம்… முதல… கையை கீழ இரக்குங்க ஊர் மக்கள், வருத்தப்படுறாங்க.., ஐயா… இப்போ நாமா பஞ்சாயத்தை பார்க்கலாம் ஐயா… நேரம் போகுதுங்க ஐயா…’ அந்த பெரியவர், திருமூர்த்தி ஐயாவை பஞ்சாயத்தின் பக்கம் திசை திருப்பினார்…

‘‘சரியென்று அவர், பாண்டியா.. அந்த பொண்ணு கழுத்துல இருந்து… நீ போட்ட தாலிய உன் கையால எடுக்கனும், போப்பா பாண்டியா… பொண்ணு கழுத்துல இருக்க தாலிய எடுத்துட்டு வா….’’ திருமூர்த்தி ஐயாவும், பெரியவரும் கூறினார்கள்.

‘பாண்டியன்… அவர்கள் சொன்னதை கேட்டுவிட்டு, ப்ரியாவை நோக்கி சென்றான்…., ப்ரியாவோ.. அவனின் கையால் தாலியை எடுக்க போகும் நிகழவுக்காக காத்திருந்தாலோ என்னவோ… சுடிதாரின் உள்ளே இருந்த தாலியை வெளியே எடுத்துப்போட்டால்… அவளின் செய்கையை பார்த்திருந்த அனைவரும்… கொஞ்சம் அதிர்ச்சியாக பார்த்துகொண்டிருந்தனர்…, ஒரு பெண்ணோ… ‘‘இந்த பொண்ணுக்கு தைரியம் அதிகம்

போல..., என்னதான் ஒருத்தன், இரண்டாவதா கல்யாணம் பண்ணிருந்தாலும், அவளுக்கும் புருசன் தானே... எந்த பொண்ணும் தான் கழுத்துல எப்படிப்பட்ட சூழ்நிலையில தாலி ஏறியிருந்தாலும், அந்த தாலியை விட்டுக்கொடுக்க மாட்டா..., தம்பி மூலமா தாலிய எடுக்க போறாங்க... ஆனா.. இந்த பொண்ணு அதுவே உள்ள இருக்குற தாலிய வெளிய எடுத்து போட்டுயிருக்கு... உண்மையில ஐயாவோட பொண்ணுக்கு இந்த கல்யாணத்துல விருப்பம் இல்லை போல... எப்படியோ.. வள்ளி தாயி வாழ்க்கையில இந்த பொண்ணு இல்லையே அதுவே எனக்கு போதும்...'' அந்த ஊரை சேர்ந்த ஒரு பெண்மனி பக்கதில் இருக்கும் ஒரு பெண்ணிடம் கூறிகொண்டிருந்தால்... 'ப்ரியாவின் முன் பாண்டியன் நின்றிருந்தான்..., ப்ரியாவொ.. பாண்டியனை நேருக்கு நேராய் பார்த்துகொண்டு இருந்தால்... பாண்டியன், ப்ரியாவின் கழுத்தில் இருந்த தாலியை மெதுவாக எடுத்தான்...அன்று ப்ரியாவின் கழுத்தில், தாலியை போடும் போது அவனின் நுனி விரல்கூட படாமல் அந்த தாலியை போட்டுவிட்டான்... இன்றும்.. அவள் கழுத்தில் அந்த தாலியை எடுக்கும் போது அவளை நுனி விரல் தீண்டாமல் அவள் கழுத்தில் இருந்து தாலிய எடுத்தான்.., 'பாண்டியா.. அந்த தாலியை, மீனாட்சிக்கிட்ட கொடுத்துருப்பா...இந்த தாலி பிறந்தவீட்டு சீதனம்..., அதுனால அங்க இருக்குறது தான் நல்லது..' திருமூர்த்தி

பாண்டியனிடம் இருந்த தாலியை அவன் அன்னையிடம் ஒப்படைக்க சொன்னார்…

’பாண்டியா… இனி உனக்கும், தெய்வப்ரியாவுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, அதாவது, நீ அந்த பொண்ணுக்கு புருசனும், இல்லை, அந்த பொண்ணு உனக்கு இரண்டாவது மனைவியும் இல்லை… , இன்னையில இருந்து நீ, வள்ளியோட புருசன், வள்ளி, உனக்கு மனைவி தான், இது என்னைக்கு மாறாது… பாண்டியா…, தெய்வப்ரியா என் குடும்பத்து பொண்ணு, அதுனால அந்த பொண்ணு என் வீட்டுக்கு அழைச்சுட்டு போறேன்… இது தான் இந்த பஞ்சாயத்தோட தீர்ப்பு, என்னப்பா… , என் தீர்ப்புல எதுவும் மாற்றம் இருக்கா, இல்லை, தீர்ப்பு மாற்றம் செய்யலாமா…. சொல்லுங்கப்பா…’ திருமூர்த்தி, மக்களிடம் தன் தீர்ப்பில் மாற்றம் இருக்கிறாத, எனக்கேட்டார்…

“இல்லைங்க ஐயா… உங்க தீர்ப்புல, என்னைக்கும் மாற்றம் இருக்க கூடாது, நீங்க சொன்ன தீர்ப்புல எங்களுக்கு முழு சம்மதம் ஐயா……, இதில மாற்றம் இல்லைங்க ஐயா..” ஊர் மக்களும், பெரியவர்களும்… ஒரு சேர கூறினார்கள்..

‘சரிப்பா… இத்தோட இந்த பஞ்சாயத்து முடிஞ்சது… ஊர் மக்களு, நீங்களும், பஞ்சாயத்து நடக்க ஒத்துழைப்பு கொடுத்ததுக்கு நன்றி… இனி அவங்க, அவங்க வேலைய பார்க்க

போகலாம்... பஞ்சாயத்து கலைஞ்சுருச்சு,...போங்கப்பா.., முத்தையா... நாளைக்கு நான் என் பொண்ணோட உன் வீட்டுக்கு வரேன்..., பாண்டியா... எல்லோரையும் கூட்டிகிட்டு போப்பா...., நானும் கிளம்புறேன்..... வரேன்ங்க ஐயா.....' பெரியவர்களும், மக்களும்... பஞ்சாயத்தின் நல்ல தீர்ப்பால் தங்களுக்குள் பேசிகொண்டே கலைந்தனர்..., முத்தையாவிடம், திருமூர்த்தி, நாளை வீட்டுக்கு வருவதாக கூறிவிட்டு, ப்ரியாவை அழைக்க சென்றார்...., பாண்டியன்.. முத்தையாவையும், மீனாட்சியையும், செல்வி,முருகவேல்,வள்ளி இவர்களை எல்லாம் அழைத்துகொண்டு சென்றான்...,

''திருமூர்த்தி, ப்ரியாவின் அருகில் சென்று, அவளை பார்த்தார்... ''ப்ரியா... நம்ம வீட்டுக்கு போகலாமா...'' அவளிடம் கேட்டார்.. 'போகலாம்... என தலையசைத்து அவருக்கு பதில் சொன்னால்.....'.. ''என்னை பெரியப்பானு கூப்பிடும்மா.... நீ என் தம்பி பொண்ணு, என் பொண்ணு மாதிரிம்மா...சரியா..''.. 'சரிங்க பெரியப்பா....'.. அவரை உறவுமுறை சொல்லி அழைத்தால்... ''வாம்மா... போகலாம்.'' அவளை வீட்டுக்கு அழைத்து சென்றார்... திருமூர்த்தி... இதையெல்லா... அங்கு நின்று பார்த்துகொண்டிருந்த பிரகாஷ்க்கு, ப்ரியா தன்னுடைய, சித்தாப்பா மகளா.. அவனால்

நம்பமுடியவில்லை….., அவனும், ப்ரியாவை காண வீட்டிற்கு சென்றான்…

’என் சொந்த தங்கச்சி பொண்ணு தான் தெய்வப்ரியானு தெரியாம இருந்திருக்கேனே…., பாண்டியா இதை ஏன் ஊருக்கு வந்த முதல் நாளே என்கிட்ட சொல்லல…, மீனா… என் தங்கச்சி தீடீர்னு எங்க போனானு தெரியாம நாம இருந்தோம்…, ஆனா.. அவ பொண்ணு மூலமா.. இங்க வந்திருக்கா.., அவ முகத்தை கடைசிவரை என்னால பார்க்க முடியாம போயிட்டேனே…., செல்வியையும், தாமரையும் எந்த பாகுபாடு பார்க்கமா, வளர்த்தேன்…, அவளுக்கு மனசுக்கு பிடிச்ச மாப்பிள்ளைய பார்த்து கல்யாணமும் பண்ணிவச்சேன் ஆனா… தாமரை கடைசிவரை நம்ம குடும்பத்தை பார்க்கமலேயே போய் சேர்ந்துட்டா…., வள்ளி.. நீ அந்த பொண்ணுமேல காட்டுன பாசத்தை கூட, நான் ப்ரியாமேல காட்டலையே… , இந்த பஞ்சாயத்துல தான் ப்ரியாவோட, குடும்பத்தை பற்றி எனக்கு தெரியவேண்டி இருக்கு,… இதுக்கு தான் கடவுள் என் தங்கச்சி பொண்ண.. என் வீட்டுல தங்க வச்சாறா…..’ முத்தையா…தாமரையின் பிரிவில் இவ்வளவு வருசம் இருந்த்தை அங்கிருந்த ஒவ்வொருவரிடம் சொல்லி வருத்தப்பட்டுகொண்டிருந்தார்….

“முத்தையா வருத்தப்பட்டுகொண்டிருக்கும் போது, முருகவேலு,செல்வியும் ‘என்னை மன்னிச்சுருங்க மாப்பிள்ளை, உங்கமேல தப்பு இருக்குனு நானும், என் மனைவியும் உங்களை பேசிட்டோம்...., வள்ளி உங்கமேல நம்பிக்கை வச்ச அளவுக்குகூட நாங்க வைக்கல...., மாப்பிள்ளை.... அதுக்கு எங்களை மன்னிச்சுருங்க மாப்பிள்ளை...” செல்வியும், முருகவேலும்... பாண்டியனிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டிருந்தார்... ‘ஐய்யோ என்ன, மாமா... என்கிட்ட போய் மன்னிப்பு கேட்டுகிட்டு, நீங்க பெரியவங்க... நீங்க போய் என்கிட்ட மன்னிப்பு கேட்டா... அது எனக்கு மனசு சங்கடமா இருக்கு மாமா, அத்தை.. நீங்களும் தான்.., பாண்டியன் அவர்களை, சமாதானம் செய்தான்...

‘மாமா.. இப்போவும் ஒன்னும் கெட்டுப்போகலை...., ப்ரியா.. உங்க தங்கச்சி பொண்ணு தானு தெரிஞ்சிருச்சு..., நாளைக்கு திருமூர்த்தி ஐயா.. வீட்டுக்கு வரேனு சொல்லிருக்காரு... அப்போ... உங்க தங்கச்சி பொண்ண.. பக்கத்துல வச்சு பார்த்துக்கோங்க... அவ... இந்த ஊரல தான் இருக்க போறா... வருத்தப்படாதேங்க மாமா... காலையில சாப்பிட்டதோட இருக்கேங்க... இன்னும் யாரும் சாப்பிடலை..., நீங்க சாப்பிட்டாதான்.. நாங்களும் சாப்பிடுவோம்.. மாமா.. அத்தை நீங்களும் தான்... எதுக்கு இப்போ வருத்தப்படுறீங்க...., வாங்க அத்தை நீங்க, மாமாவ

சாப்பிட கூப்பிடுங்க.. அத்தை…,' வள்ளி அனைவரின் மனநிலையை மாற்ற…. பேசிகொண்டிருக்க… அவளுக்கு லேசாக மயக்கம் வருவது போல் இருந்தது… இதை பார்த்துவிட்ட பாண்டியன்… "வள்ளியம்மா… உங்களுக்கு என்ன செய்யுது… ஏன் ஒரு மாதிரி இருக்கேங்க…".. பாண்டியன்… வள்ளியிடம் கேட்டுகொண்டே அவள் அருகில் வர… அதற்க்குள்… வள்ளிக்கு மயக்கம்… வந்துவிட்டது…., தலையை பிடித்துகொண்டு தரையில் விழுந்தால்…. பாண்டியனோ… "வள்ளியம்மா…" கத்திகொண்டு… அவளை மடியில் வைத்துகொண்டு கன்னதில் தட்டினான்… 'முத்தையா, மீனாட்சி,செல்வி,முருகவேல்..' அவர்கள் மூவரும், வள்ளி கீழே விழுந்ததில்… திகைத்து… அவர்களுக்கருகில் சென்றனர்…. மீனாட்சி,செல்வி, "வள்ளி, வள்ளி, என்னாச்சுமா…வாணி.. தண்ணீர் கொண்டு வா…சீக்கிரம் வாணி.." அனைவரும் பதறி, என்னவென்று பார்த்தனர்….. "அண்ணே பக்கத்துல மருத்துவச்சி இருப்பாங்க… போய் அவங்களை கூப்பிட்டு வாங்க…"செல்வி, முத்தையாவிடம் சொல்லிவிட்டார்.. "இதோ போறேன்… , மாமா.. நீங்களும் வாங்க…" முத்தையா, முருகவேலையும் துணைக்கு அழைத்து சென்றார்.

"மருத்துவச்சி, தாயம்மா வந்ததும் வள்ளியின் முகத்தை பார்த்தார்… ஐயா… வள்ளிதாய… மெத்தையில படுக்க

வையுங்க…'' மருத்துவச்சி சொன்னதும், வள்ளியை தூக்கிகொண்டு, அவர்களின் அறைக்கு சென்று படுக்க வைத்தான் பாண்டியன்,… ''ஐயா…. நீங்கஎெல்லாம் வெளிய இருங்க…, அம்மா நீங்க மட்டும் இங்க இருங்க…'', ஆண்கள் மூவரையும் வெளியில் அனுப்பிவிட்டு, பெண்கள் இருவரும், மருத்துவச்சியும் உள்ளே இருந்தார்கள்.., மருத்துவச்சி, வள்ளியை முழுதாக சோத்தித்துப்பார்த்தார்…., வள்ளியின் கையை பிடித்து பார்த்ததும், மருத்துவச்சியின் முகத்தில் சிறுப்புன்னகை, இருந்தாலும், வள்ளியின் வயிற்றில் கை வைத்துப்பார்த்தார்… அதில் இன்னும் உறுதி செய்துவிட்டு, பக்கத்தில் இருக்கும், செல்வியிடமும், மீனாட்சியிடமும், மகிழ்ச்சியாய், ''அம்மா, எல்லாம் நல்ல விசயம்,விசேஷம் தான்…, உங்க வீட்டுக்கும், உங்க பரம்பரைக்கு, அடுத்த ராஜா… வரப்போறாங்க…., ஆமா அம்மா, வள்ளி தாயி அறுபது நாள், கருவ சுமந்துட்டு இருக்காங்க….'' மருத்துவச்சி இனிப்பான விசயம் சொன்னதும், அவர்களுக்கு சந்தோஷமாக இருந்தது… 'என்ன சொல்லுற…தாயம்மா… உண்மை தானா… என் பொண்ணு மாசமா இருக்காளா…, ''ஆமாம் அம்மா… உங்க பொண்ணு, ஒரு குழந்தைக்கு தாயாக போறா…. மறுபடியும் அவர் சொல்ல…, மீனாட்சிக்கு இது ஏற்கனவே தெரிந்த விசயம் என்பதால் மனதுக்குள் இப்போதாவது அவர்களுக்கு உண்மை

தெரியட்டும்….அவர் நினைத்துகொண்டார்…,இந்த மகிழ்ச்சியான விசயத்தை முதல மாப்பிள்ளைக்கிட்ட சொல்லனும், வெளியே நின்றிருக்கும் ஆண்களுக்கு தெரியப்படுத்த செல்வி வெளியே சென்றார்… அவரின் பின் மீனாட்சியும்,மருத்துவச்சியும் வந்தனர்…

"வெளிய வந்த, செல்வியை பார்த்து பாண்டியன், அவரிடம் சென்றான்,, 'அத்தை வள்ளியம்மாக்கு என்னாச்சு, இப்போ மயக்க தெளிஞ்சுட்டாங்களா… நான் பார்க்கலாம… அத்தை…' அவன் பதட்டத்துடன் கேட்க… செல்வியோ " மாப்பிள்ளை.. நீங்க பயப்படற மாதிரி வள்ளிக்கு ஒண்ணுமில்லை,.. எல்லாம் நல்ல செய்தி தான்… நீங்க அப்பாவாக போறீங்க… அண்ணா… நீங்க தாத்தாவாக போறீங்க, என்னங்க நீங்களும் தான் தாத்தாவாக போறீங்க…வள்ளி, மாசமா இருக்கா…" வள்ளி கரு உண்டாகியிருப்பதை செல்வி சொன்னதும்… பாண்டியனுக்கு தலைகால் புரியவில்லை… மருத்துவச்சிக்கு… நன்றி சொல்லி, அவருக்கு தேவையானவை கொடுத்து…. வழியனுப்பி வைத்தார் முத்தையா… "என் வீட்டுக்கும்,என் பரம்பரைக்கும்… இன்னொரு வாரிசு வரப்போகுது மாமா.." 'ஆமாம், மாப்பிள்ளை…, நாம ரெண்டு பேரும் தாத்தாவாகிட்டோம்..' அவர்கள் இருவரும் கட்டியணைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்….பாண்டியன் வள்ளியை பார்க்க உள்ளே சென்றான்….'

‘‘முத்தையாவின் வீட்டு வாசலில் வெடிச்சத்தம் கேட்டது… அந்த சத்ததை கேட்டு வீட்டில் உள்ள அனைவரும் வாசுலுக்கு சென்று பார்த்தனர்…. ஆனால் அங்கு இருந்தவர்களை பார்த்ததும்… முத்தையாவுக்கும்,மீனாட்சிக்கும் அதிர்ச்சி என்றால்.., செல்விக்கும், முருகவேலுக்கும் அதிர்ச்சியாக இருந்தது…., கடவுள் சோதனைக்கு மேல, சோதனையா ஐயா குடும்பத்துக்கு கொடுக்குறாரே… எனக்கு வேதனையா… இருக்கு நல்லத்தம்பியண்ணே….., இனி வள்ளியம்ம தான் இவங்களை சமாளிக்கனும்… ஏன்னா… அவங்களுக்கு மட்டும் தான் இவங்களை சமாளிக்குற திறமை இருக்கு….,’’

# அத்தியாயம் 13

’’மயக்கதில் இருக்கும் வள்ளியை பார்த்துகொண்டே இருந்தான் பாண்டியன்… அவனுக்கும்,வள்ளிக்கும் புதிதாகவும், அவர்களின் இத்தனை வருடக் காதலுக்கு மிகப்பெரிய பரிசாகவும்,வரப்போகும் அவன்(ள்) குழந்தையை சுமக்கும், வள்ளியை காணும் போது அவனுக்குள் இருக்கும் மகிழ்ச்சியை மிகைப்படுத்தியது…,. ‘வள்ளியம்மா நீங்க எனக்கு கிடைச்ச வரம், நமக்குனு ஒரு குழந்தை வரப்போகுது, என்னை அப்பாவும், உங்களை அம்மாவும் சொல்லிக்கூப்பிட குழந்தை வரப்போகுது வள்ளியம்மா…, என் சந்தோஷத்துக்கு அளவே இல்லைங்க வள்ளியம்மா…, நம்ம காதலோட பரிசு வள்ளியம்மா…, நம்ம குடும்ப வாரிசுங்க வள்ளியம்மா… இந்த சேதுபதிபிள்ளையோட பரம்பரையில் பிறக்க போற அடுத்த வாரிசு வள்ளியம்மா.. எல்லோரும் ரொம்ப சந்தோஷமா இருக்காங்க வள்ளியம்மா…’பாண்டியன் பேசிகொண்டிருக்கும் போதே வள்ளியின் விழி அசைய ஆரம்பித்தது…. அதை உணர்ந்த பாண்டியன்… அவள் கண்விழிப்பதற்க்காக பேச்சை நிறுத்தி அவன் காத்திருந்தான்… மெதுவாக கண்களை திறந்தாள் வள்ளி… ‘‘வள்ளியம்மா இப்போ எப்படி இருக்கு உங்களுக்கு, பார்த்து

மெதுவா எழுந்திரிங்க வள்ளியம்மா..'' வள்ளி எழுந்து அமர்வதற்க்காக உதவி செய்தான்… ''அத்தான்.. என்னாச்சு… எதுக்கு மெத்தையில படுத்து இருக்கேன்…'' வள்ளி கேட்க..

'வள்ளியம்மா… நீங்க, அம்மா ஆகப்போறீங்க…, நான் அப்பா ஆகப்போறேன்… வள்ளியம்மா, வள்ளிக்கு ஏற்கனவே தெரிந்த விசயத்தை இவன் மிகவும் மகிழ்ச்சியாக அவளிடம் கூறினான்…, வள்ளியோ அவனுக்காக… '' என்ன அத்தான் சொல்றேங்க… நான் அம்மா…அம்மா.. ஆகப்போறேனா… நீங்க அப்பா அத்தான் எனக்கு எவ்வளோவு சந்தோஷமா இருக்கு தெரியுமா… அத்தான் உங்களுக்கு சந்தோஷம் தானே…, சந்தோஷமா இருக்கேங்கீளா…, அத்தான்.., '' அவனிடம் கொஞ்சம் பொய்யாகவும், கொஞ்சம் உண்மையாகவும் அவனிடம் பேசினால்…. 'வள்ளியம்மா… எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு, அவளின் நெற்றியில் முத்தமிட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான்.., ''அத்தான்.. உங்க கையை கொடுங்க அத்தான்…'' பாண்டியனின் கையை எடுத்து அவளின் சேலை மறைவில் இருக்கும் வயிற்றில் மெதுவாக அவனின் கையுடன் சேர்த்து அவளின் கையையும் வைத்தால்… ''அத்தான் நம்ம குழந்தை, உங்க காதலுக்கு பிறக்கப்போற'' வள்ளி அவனின் காதலை மட்டும் தனித்து கூற… வள்ளியின் வாயில் விரல் வைத்து… ''நம்ம காதலுக்கு பிறக்கப்போற குழந்தை

வள்ளியம்மா..'' அவளின் காதலையைம் சேர்த்து கூறினான்…

''உங்களைவிட என் காதல் உசந்தது இல்லை அத்தான்…, என்னைக்குமே என் அத்தான் என்மேல வச்சிருக்க காதல் தான் உசந்தது அத்தான்… அதுக்கு ஈடா என் காதல் இல்லை அத்தான்…,'' வள்ளி, அவனின் காதலை உயர்ந்த இடத்தில் வைத்து பேசினால்… 'என்னங்க வள்ளியம்மா… உன் காதல், என் காதல்னு பிரிச்சு பேசுறேங்க… என்னைக்குமே நம்ம காதல் தான் உயர்ந்தது…,' அவன் இருவரின் காதலும் உயர்ந்தது தான் அவளுக்கு கூறினான்..

''அத்தான்… இந்த இடத்துல தான் குழந்தை இருக்கும்'' வள்ளி அடிவயிற்றில் அவனின் கையோடு, அவளின் கையையும் வைத்து அவனுக்கு சொன்னாள்.. ''அத்தான்.. குழந்த்தை இதயத்துடிப்ப கேக்குறீங்களா…,''.. அவனுக்குமேல.. மிகவும் மகிழ்ச்சியாக அவனிடம் பேசினால் வள்ளி,.. ஒருவாரத்திற்க்கு முன்பு அவனுக்காக காத்திருந்து இந்த மகிழ்ச்சியாக தருணத்தை கூறவேண்டும், வள்ளி காத்திருந்தாள்…, ஆனால் இங்கு நடந்த வேறு சில விசயங்கள், அவளை சொல்லவிடாமல் தடுத்துவிட்டது… ஆனால் அதற்க்கும் சேர்த்து வைத்து இன்று அவனுக்கும், இந்த சந்தோஷத்தை அதிகமாக வெளிப்படுத்தினால் வள்ளி…''

''வள்ளியம்மா... இப்போ எல்லாம் குழந்தையோட துடிப்பு கேக்காது... நாமா நாளைக்கு டாக்டர்கிட்ட போகலாம் வள்ளியம்மா.. நீங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க வள்ளியம்மா..., நான் உங்களுக்கு குடிக்க கொண்டுவரேன்... பாண்டியன் அவளிடம் சொல்லிவிட்டு மெத்தையில் இருந்து எழும் போது வெடி சத்தம் காதை பிளந்தது..., அந்த சத்ததில் வள்ளி பயந்துகொண்டு எழ நினைத்த பாண்டியனை இறுக்கி அணைத்துக்கொண்டால்..., பாண்டியனுக்கோ வள்ளி கட்டிகொண்டது மகிழ்ச்சி என்றாலும்..., திடீரென்று பக்கத்தில் இருந்து வெடி சத்தம் கேட்க்கிறது... அவனுக்கு கோவமாகவும், இதனால் வள்ளிக்கும், குழந்தைக்கும் இந்த வெடி சத்தத்தினால் அதிர்வு ஏற்படுமோ என, அவன், வள்ளியின் காதை இறுக்கி மூடிக்கொண்டான்..., வெடியின் சத்தம் நின்றதும் ''வள்ளியம்மா நீங்க இங்கவே இருங்க... நான் இப்போ வரேன்...''.. அவன் கோவத்தை அவள் முன் காட்டாமல்... அவளிடம் சொல்லிவிட்டு சென்றான்.., ஆனால் வள்ளிக்கு தான் அவனின் பற்றி தெரியுமே... தன் முன் கோவத்தை காட்டாமல்... பாண்டியன் இப்படி சென்றால்.. அவர்களை சும்மா விடமாட்டான் என்று... அதனால் அவளும் அவன் பின் சென்றால்..., இல்லையென்றால் அவன் கையால் அடிவாங்கும் போகும் அந்த நபர் இந்த உலகிலே

இல்லை என்று அர்த்தம்....வள்ளி பின்னாடி வருவதை, பாண்டியன் கவனிக்கவில்லை..''

'ஆனால், பாண்டியனுக்கும், வள்ளிக்கும் முன் அங்கு முத்தையா,மீனாட்சி, செல்வி,முருகவேல்... அனைவரும் இருந்தனர்..., வாசலில் நின்றிருந்தவர்களை பார்த்து அதிர்ச்சியாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தனர்.. ஏனென்றால் வந்தது முத்தையா,மீனாட்சியின் பிள்ளைகள்.., கார்த்திகேயன்.., அந்த நேரம் பார்த்து.... அவனது செல்போனில் ஒரு பாட்டு பாட ஆரம்பித்தது...

*"கொக்கொரக்கோ கோழி கூவ*
*கொண்ட சேவல் குத்து போட*

***கூத்தடிக்க வந்திருக்கான் முருகன்***
***ரஜினி முருகன் கன் கன் கன்***
***ரஜினி முருகன் கன் கன் கன்***

*டண்ட நக்குற தாளத்தோட*
*டப்பாங்குத்து ஆட்டத்தோட*

வந்துருக்கிற உங்க நண்பன்

ரஜினி முருகன் கன் கன் கன்

ரஜினி முருகன் கன் கன் கன்

நாளை என்ன ஆகுமுன்னு பீலிங் இல்ல

ஒரு ரூவா கூட பாக்கட்டுல சேவிங் இல்ல

கால நேரம் பாத்து காத்து வீசவில்ல

கருத்தோட வாழ ஆசப் பட்டா ஓவர் தொல்ல

கவலை ஏதும் எனக்கு இல்ல பங்கு பங்கு

நான் தலையில் மகுடம் தரிசிடாத கிங்கு கிங்கு

கொக்கொரக்கோ கோழி கூவ

கொண்ட சேவல் குத்து போட

கூத்தடிக்க வந்திருக்கான் முருகன்

ரஜினி முருகன் கன் கன் கன்

ரஜினி முருகன் கன் கன் கன்”

பாட்டு முடிந்ததும்… சிவகார்த்திகேயன் ஸ்டைலில் வணக்கம் வைத்து நின்றிருந்தான் கார்த்திகேயன்‘‘அம்மாமாமா…. அப்பாபாபா அவர்களை நோக்கி ஓடினான்.., எப்படி இருக்கேங்கமா.. மீனாட்சியை கட்டிபிடித்துகொண்டு கேட்டான்…., அப்பா… நீங்க எப்படி இருகேங்க, அவரையும் கட்டிபிடித்து கேட்டான்..’’

‘நாங்க நல்லா இருக்கோம்… கார்த்தி, நீ எப்படி இருக்க…கார்த்தி…. படிப்பெல்லாம் நல்லபடியா முடிஞ்சதா…., தம்பி..’முத்தையா கேட்க…

‘‘எல்லாம் எக்ஷாமும் நல்லபடியா முடிஞ்சதுப்பா…,அம்மா.. ஏன் என்னை பார்த்து முறைக்குறேங்க…,’’

‘நீ மட்டும் வந்திருக்க… எங்க டா கீர்த்தி,… அவளைவிட்டுட்டு வந்துட்டயா…, தம்பிக்கு மட்டும் நீ கீர்த்தியவிட்டு நீ ஊருக்கு வந்தது தெரிஞ்சது உன்னை திருப்பி மும்பைக்கே அனுப்பிடுவான்…,’மீனாட்சி அவனை கோபமாக பேச..

‘‘அந்த பயந்தாங்கோழி… அங்க ஒளிஞ்சுருக்கா பாருங்க…, கீர்த்திக்கு வரபோற வருங்கால மாமானாரே, மாமியாரே.. கொஞ்சம் அந்த வேப்பமரத்துக்கு பின்னாடி இருக்குற.. உங்க

வருங்கால மருமகளை நல்லா பாருங்க...,'' கார்த்திக், கீர்த்தி இருக்கும் இடத்தை காட்டினான்...

''அவ ஏன் டா அங்க இருக்குறா...'' மீனாட்சி கேட்க..

'எல்லாம் , நான் போட்ட வெடிக்காகதான்மா...,' கார்த்தி சொன்னதும், நால்வரும் அவனை பார்த்து முறைக்க தொடங்கினர்...

''நன்றாக காதை இறுக்கி பொத்திகொண்டு, வேப்பமரத்துக்கு பின்னே இருந்த கீர்த்தி... வெடி சத்தம் நின்றதும்... கொஞ்சம் கொஞ்சமாக, வெடி சத்தம் நின்றுவிட்டாதா.. கண்களை திறந்துகொண்டு பார்த்துவிட்டு... மரத்தின் பின்னாடி இருந்து வெளியே வந்தாள்...,அங்கு அம்மா,அப்பா,மாமா, அத்தை என அனைவரும் இருந்தை பார்த்ததும், அதிலும் கார்த்திக் அவர்களிடம் தன்னை பற்றி எதையோ கூறுவது போல்... தெரிய வேகமாக அவர்களை நோக்கி சென்றாள்''

'அவள் கையில் வைத்திருந்த, பையை கொண்டு அவனை அடித்தாள் கீர்த்தி, ''எருமை, எருமை... சொன்னேல...,எனக்கு வெடி சத்தம் ஆகாது, எனக்கு பயமுனு சொன்னேல கேட்டயா... சொல்ல, சொல்ல கேட்க்காம..., நீ ஊருல இருந்து வருவதற்க்காக... வெடி போட்டு நீயே உன்னை பெரிய

இவனாட்டம் வரவேற்பு கொடுக்குற…,’’ அங்கு நின்றிருந்தவர்களை சுற்றி கார்த்திக் ஓட, அவனை அடிப்பதற்காக கீர்த்தியும் ஓடினால்…, ‘கீரி… எனக்கு மட்டுமா வெடி போட்டேன்… உன்க்கும் தானே சேர்த்து வெடிப்போட்டேன்… இதுக்காக என்னை அடிக்க வர்ர…, பாவம் அண்ணன்… விடுமா.. ஓடிக்கொண்டே அவளிடம் சமாதான செய்ய… “ நான் கேட்டேனா…, நானும் ஊருக்கு வரேன்… எனக்கு சேர்த்து வெடிப்போடுனு நான் கேட்டேனா.., பஸ் திண்டுகல் நிக்கும் போது… டீ குடிச்சுட்டு வரேனு தான போனா.. எப்போ எனக்கு தெரியாம வெடி வாங்குன… சொல்லு…ஆமா நீ எப்போ இருந்து எனக்கு அண்ணன் ஆனா…, நீ எனக்கு தம்பி.. நான் தான் உனக்கு அக்கா… அதை புரிஞ்சுக்கோ…’’ அவனைவிடாமல் துரத்தினால்… ‘அது… நீ ஒரு பாட்டிக்கும் உதவி செய்யப்போகும் போது நான் வெடி வாங்கிட்டு… பையில வச்சுட்டேன்…, ஓய் கீரி… ரெண்டு நிமிசத்துக்கு பின்னாடி நான் பிறந்தா, உனக்கு தம்பியா… இல்லை…இல்லை, நீதான் என் தங்கச்சி…, நான் தான் அண்ணன்…’ அவன் சொல்லிகொண்டே பாண்டியன் மீது மோதிவிட்டான்… “அய்யோ அண்ணா…, போச்சு… கீர்த்து.. எஸ்க்கேப் டி.. அவள்.. மீனாட்சியின் பின் ஒளிந்துகொண்டால்.., ‘டேய்.. கார்த்தி… சில்வண்டுகிட்ட இருந்து சிங்கத்துகிட்ட மாட்டிகிட்டயே… கார்த்தி..,.., எங்க என் அண்ணிய காணோம்…,

அண்ணி இருந்தா இந்த சிங்கத்துகிட்ட இருந்த ஈசியா தப்பிக்கலாம்…. கார்த்தி நினைத்துகொண்டிருக்க…., வள்ளியும் வந்தாள்…, எங்கள் அண்ணி வாழ்க,வள்ளி அண்ணி வாழ்க. கார்த்தி, பாண்டியனை மோதிவிட்டு, இவ்வளவு நேரம் மனசுகுள்ளேயே பேசிக்கொண்டிருந்தான்…

“கார்த்தி… எப்படி இருக்க…, இப்போ தான் வந்தியா…, எங்க கீர்த்திமா…,” வெடி வெடித்தவன் மீது ஏற்ப்பட்ட கோபம், தன் தம்பியை பார்த்ததும்… அதை மறந்து ஊரில் இருந்த வந்த கார்த்திக்கை பார்த்ததும் மகிழ்ச்சியில் அவனை வரவேற்றான்…,”

‘நல்லா இருக்கேன் அண்ணா… நீங்க எப்படி இருக்கேங்க…, கீர்த்தியும் என்கூட தான் வந்தா…’. அவனிடம் கூறினான்..

“கீர்த்திமா…, பாண்டியன் அழைக்க மீனாட்சியை பார்க்க…, அவளோ, மீனாட்சியின் பின்னிருந்து வெளியே வந்தாள்…, “ கீர்த்திமா… எப்படி இருக்க…, நல்லபடியா படிப்ப முடிச்சுட்டியா,… ஏன் உடம்பு மெலிஞ்சு போயிருக்க… அங்க நல்ல சாப்பாடு கிடைக்கலையா.., என்னமா.. ஏன் அமைதியா இருக்குற…., அண்ணா.. உன்னை படிக்க மும்பை படிக்க அனுப்பினதுக்கு கோபமா… இல்லை அண்ணா… படிப்பு முடியும் வரை ஊரு பக்கம் வரக்கூடாதுனு சொன்னதுக்கு கோபமா… சொல்லுமா

கீர்த்தி…. சரி அந்த கோபம் போக கீர்த்திகிட்ட அண்ணே சாரி கேக்குறேன்… ‘‘சாரி கீர்த்திமா’’ அவன் காதுகளை பிடித்துகொண்டு கீர்த்தியிடம் மன்னிப்பு கேட்டான்… பாண்டியனின் செயலை பார்த்து… அனைவரும் வியந்தனர்…, செய்த தவறுக்கு மட்டுமே மன்னிப்பு கேட்ப்பானே தவிர…, அவன் கோபத்துக்கும், தங்கை பேசாமல் இருந்தற்க்கும் சேர்த்து மன்னிப்பு கேட்பது இதுவே முதல் முறை…., அதுவரை பாண்டியன் முன் தலை குனிந்து நின்றவள்…., தன் அண்ணன்.., தன்னிடம் மன்னிப்பு கேட்பதை பார்த்ததும்…, பாண்டியனின் கையை காதில் இருந்து எடுத்துவிட்டு ‘‘என்ன அண்ணா…, நீங்க போய் என்கிட்ட மன்னிப்பு கேட்குறேங்க…, எனக்கு உலகம் தெரியனும், வெளி ஆட்களோட பழகனும், எனக்குள்ள ஒரு தைரியம் வரனும் தானே… என்னை படிக்க அனுப்பினேங்க… நானும் நல்லபடியா படிப்பு முடிச்சுட்டு வந்துட்டேன்…அதுவும் இல்லாம என்னை மட்டுமா அங்க படிக்க அனுப்பினேங்க… கார்த்திக்கையும் சேர்த்து தானா அனுப்புனேங்க…’’ பாண்டியனிடம் சகஜமாக பேசினால்…

‘‘எப்படி இருக்கேங்க அண்ணா…,’’

‘நல்லா இருக்கேன்மா…., நீ எப்படி இருக்க’

(கார்த்திகேயன்,கீர்த்திகா இருவரும் முத்தையா, மீனாட்சியின் பிள்ளைகள், இரட்டை பிறவிகள், இருவருக்கும் பாண்டியன் என்றால், அதிக பயம், கடலளவு அன்பு, அதிலும் வள்ளி என்றால் கீர்த்திகாவின் இரண்டாவது அன்னைப்போல்…,மீனாட்சியின் கண்டிப்பு செல்லுபடியாகவில்லை என்றால், வள்ளியின் அன்பு கண்டிப்பு சொல்லுபடியாகும், பள்ளி படிப்பை முடித்த இவர்கள் இருவரையும் கல்லூரி படிப்பிற்க்காக… பாண்டியன் தனக்கு தெரிந்த நண்பர் மூலம் மும்பை யுனிவெர்சிட்டியில் இவர்களுக்கு சீட் வாங்கிகொடுத்து படிக்க அனுப்பியவர்கள் படிப்பு முடிந்த பின் தான் இந்த ஊருக்கு வரவேண்டும் என்று கட்டளையும் இட்டான் பாண்டியன்…, இதில் கீர்த்தி மட்டும் படிக்க போகமாட்டேன் என அடம்பிடிக்க, வள்ளி தான் அவளை சமாதானம் செய்து அனுப்பி வைத்தாள் பாண்டியனின் கல்யாணத்திற்க்கு கூட கார்த்தியும்,கீர்த்தியும் வரவில்லை… ஆனால் பிரகாஷ் தான் பாண்டியன், வள்ளியின், கல்யாணத்தை வீடியே மூலம் அவர்களுக்கு ஒளிபரப்பினான்…)

‘‘நல்லா இருக்கேன்மா..,’’கீர்த்தியை பார்த்ததும் அவனுள் இருக்கும் தங்கையின் பாசம் கண்களில் இருந்து கண்ணீரால் வெளிவந்தது… இதை பார்த்த வள்ளி… பாண்டியனின் பக்கம் வந்தாள்.

“ஹ்ம்ம்…. வந்ததில்ல இருந்து…. ரெண்டு பேருக்கும் அண்ணா தான் நினைப்புல இருக்கு போல…, வீட்டுக்கு வந்திருக்கவங்களையும், இனி புதுசா வரப்போகிறவங்களை கவனிக்கமாட்டாங்க…, இல்லைம்மா…” வள்ளி, அவள் அன்னையிடம் கூறினால்..

‘ஆமா… ஆமாம் வள்ளி.., கீர்த்திக்கு இந்த செல்வி அத்தைகூட நினைவு இல்லை போல…,’ செல்வியும் சேர்த்து கேலி செய்ய…,

“அண்ணி….. நாங்க உங்களை மறப்போமா….,” கீர்த்தியும், கார்த்தியும் ஒரு சேர்ந்தா போல் பேசிகொண்டே வள்ளியை நோக்கி சென்றனர்…. “எப்படி இருக்கீங்க அண்ணி…”

“நல்லா இருக்கேன், கீர்த்து, கார்த்தி, நீங்க எப்படி இருக்கீங்க…, நல்லா சாப்பிடுறேங்கல…, ”

‘அந்த ஊரு சாப்பாடு சாப்பிட்டு, நாக்குல உணர்ச்சியே இல்லை அண்ணி, நீங்க காரமா, வைப்பேங்கள…குழம்பு, சாதாம், அது செஞ்சு தாங்க அண்ணி…,’ கார்த்தி கேட்க…

“டேய்.. வந்தவுடனே அண்ணிய வேலை வாங்குற..,இருடா யாரோ புதுசா வரபோறாங்களா… அது யாருனு கேட்ப்போம்… அண்ணி யாரு புதுசா வரபோறாங்க… சொல்லுங்க அண்ணி”

“வள்ளி மாசமா இருக்கா, கீர்த்தி…,” செல்வி சொல்ல…

“அண்ணீஈஈஈஈஈ…., கீர்த்தி கத்திகொண்டே வள்ளியை கட்டியணைத்தால்…, கார்த்தியோ பாண்டியனை கட்டியணைத்து வாழ்த்து கூறினான்…., அப்போ நான் அத்தையாக போறேன்…., நான் சித்தப்பா ஆகப்போறேன்…., இருவரும் சொல்லிகொண்டே.. கார்த்தி ”அண்ணா இந்த பாட்டு உங்களுக்காக நான் டெடிகேட் பண்ணுறேன்” பாண்டியனுக்கும்,வள்ளிக்கு ஒரு பாட்டை தனது செல்போனில் போட்டுவிட்டான்..

*“ஜூன் ஜூலை மாதத்தில் ரோசா பூவின் வாசத்தில்*
*ஜூனியர் சூரியன் கையில் கிடைக்கும்*
*மனம் பாராஷூட் கட்டிதான் வின்னில் பறக்கும்*
*ஆரஞ்சு கன்னத்தில் ஆப்பிள் போன்ற வண்ணத்தில்*
*பால் நிலா வீட்டுக்குள் பாதம் பதிக்கும்*
*எந்தன் ஹார்மோன்கள் எல்லாமே துள்ளி குதிக்கும்*
*ப்ரீ கே ஜி பட்டர்ப்ளை நாளை கையில் கிடைக்கும்*
*இனிஷியல் கேட்டுத்தான் ஆது மெல்ல சிரிக்கும்*

# இலக்கிக்கார்த்தி

ஜூன் ஜூலை மாதத்தில் ரோசா பூவின் வாசத்தில்
ஜூனியர் சூரியன் கையில் கிடைக்கும்
மனம் பாராஷூட் கட்டிதான் விண்ணில் பறக்கும்

வானதின் உச்சிக்கு நிலவு வந்த நேரத்தில்
நீ என்ன தொட்டாக்கா பொன்னு பொறப்பா

பூவெல்லாம் பூவெல்லாம் பூக்க போர நேரத்தில்
நான் உன்ன தொட்டாக்கா பையன் பொறப்பான்

மைனா மைனா ஒன்னு கூடும் நேரத்தில்
நாம செய்தா அட ரெட்ட புள்ளதான்

சீனத்து பொன்னும்தான் அடி ஒரே நேரத்தில்
அஞ்சாறு பெத்தாலாம் அத தாண்ட வேண்டாமா

ஜூன் ஜூலை மாதத்தில் ரோசா பூவின் வாசத்தில்
ஜூனியர் சூரியன் கையில் கிடைக்கும்
மனம் பாராஷூட் கட்டிதான் விண்ணில் பறக்கும்

# காதலின் இரு துருவங்கள்

கல்லுக்கு கல்லுக்கு சிற்பி தொட்டா சந்தோஷம்
பொன்னுக்கு புருஷந்தான் தொட்டா சந்தோஷம்

மீனுக்கு மீனுக்கு பாசிகண்டா சந்தோஷம்
ஆணுக்கு அப்பாவா ஆனா சந்தோஷம்

தொட்டில் கட்டி பாட்டு சொன்னா சந்தோஷம்

ஏட்டி நின்னு அத பாத்தா சந்தோஷம்

தாய்பாலு தரம்போது இந்த ஜென்மம் சந்தோஷம்

இன்னொரு ஜூனியர் தந்தா ரொம்ப சந்தோஷம்

ஜூன் ஜூலை மாதத்தில் ரோசா பூவின் வாசத்தில்
ஜூனியர் சூரியன் கையில் கிடைக்கும்
மனம் பாராஷூட் கட்டிதான் வின்னில் பறக்கும்
ஆரஞ்சு கன்னத்தில் ஆப்பிள் போன்ற வண்ணத்தில்
பால் நிலா வீட்டுக்குள் பாதம் பதிக்கும்

*எந்தன் ஹார்மோன்கள் எல்லாமே துள்ளி குதிக்கும்*

*ப்ரீ கே ஜி பட்டர்ப்ளை நாளை கையில் கிடைக்கும்*

*இனிஷியல் கேட்டுத்தான் ஆது மெல்ல சிரிக்கும்"*

அந்த பாடலில் சில வரிகள்.. பாண்டியன், வள்ளியை குறிப்பது போல் இருக்கின்றது..., என பாண்டியன் நினைக்க... வள்ளியோ.... என்றும் இவர்களின் மகிழ்ச்சி நிறைந்திருக்க வேண்டும் கீர்த்திகாவும்,கார்த்தியும், பற்றி நினைத்துகொண்டால்

'கார்த்திக்,கீர்த்திகாவும் ஊருக்கு வந்தது மகிழ்ச்சி என்றாலும்.., இன்று தான் பஞ்சாயத்து முடிந்தது் அதை பற்றி இவர்கள் கேள்விப்பட்டால்...என்ன செய்வது என முத்தையாவும்,மற்ற மூவரும் சிந்தனைக்கொள்ள...., முத்தையாவின் முகத்தை பார்த்த வள்ளி.. அவரின் அருகே சென்று "எதை பற்றியும் இப்போ நினைக்காதிங்க மாமா... அவங்ககிட்ட நேரம் பார்த்து நானே எடுத்து சொல்லுறேன்... இப்போ தான் ஊருக்கு வந்திருக்காங்கா.. கீர்த்திக்கு நடக்கபோற நல்ல காரியத்தை நாமா ஆரம்பிக்கனும் மாமா.., அதுல இவங்களோட கவனம் இருந்தா.... மற்றதை இவங்க கவனத்துக்கு சென்றாலும் அதை கண்டுக்கமாட்டாங்க மாமா.., கவலைப்படாம இருங்க...' வள்ளி, முத்தையாவுக்கும் எடுத்து சொன்னால்...

“சரிமா…, இனி கீர்த்தி,மாறன் கல்யாணத்தை ஆரம்பிக்கனும், அதுக்கான வேலையை பார்க்கிறேன்…. நாளைக்கு திருமூர்த்தி ஐயாவும் வராங்க அதுனால அவர் முன்னாடியே இந்த நல்ல விசயத்தை பேசலாம்…” அவர் வெளியே சென்றார்..

’ஓய் வாலுங்கலா… போதும் உங்க அன்பு மழையில நனைஞ்சது… முதல போய் உங்களை சுத்தம் பண்ணிட்டு வாங்க சாப்பிடலாம்..’ வள்ளி அவர்களை அனுப்ப..

“இருங்க அண்ணி என் அத்தையும் மாமாவும் இருக்காங்கா… அவங்ககிட்ட பேசவேயில்ல… பேசிட்டு வந்திரேன்” கீர்த்தி சொல்ல… “உங்க அத்தையும், மாமாவு எங்கயும் போகமாட்டாங்க… இங்க தான் சாய்ந்திரம் வரை இருப்பாங்க போங்க போய் குளிச்சிட்டு வாங்க….” அனுப்பி வைத்தாள்.

” வாம்மா…, வந்து உக்காரு…, நீ சாப்பிடுவதற்க்கு நான் வகை, வகையா செஞ்சுருக்கேன்… வாம்மா.. இப்படி வந்து உட்க்காரு… “ ப்ரியாவை அழைத்து வந்து டைனிங் டேபிளின் சேரை இழுத்து போட்டு அவளை அமர வைத்தார்… ‘ஏன் மா தயங்குற… இது தான் உன்வீடு…, நீ பிறந்த வீடுனா அது இது தான்… உன் அம்மா வாக்கப்பட்டு வந்த வீடு, உன் அப்பா பிறந்த வீடுனா.. உன் வீடும் தானே…’ அவளின் தயக்கதை போக்கினார்..

‘அவள் முன் தட்டை வைத்து… கொஞ்சம் சாதம் வைத்து, குழம்பு ஊற்றி, காய் பொரியல் வைத்து அவரின் கையால் பிசைந்து… ஒரு கவளம் எடுத்து அவளின் அருகில் கொண்டு சென்றார்.., அவளும் அதை மறுக்காமல் வாங்கி கொண்டால்…. ஒவ்வொரு முறையும் திருமூர்த்தி ஊட்டுவிடும் போதும், ப்ரியாவிற்க்கு தந்தையின் பாசம் கிடைத்தது….. இதை பார்த்த பிரகாஷ்…, முதன் முதலாய் தந்தையிடம் இருந்து விலகியது தவறோ எனத் தோன்றியது….ஏனென்றால் பிரகாஷ்க்கு இது நாள் வரை அவனுக்கு சாப்பாடு ஊட்டியதும் இல்லை, இப்படி பாசமாக பார்த்ததும் இல்லை.. பிரகாஷிற்க்கு நினைவு தெரிந்த நாள் முதல் இது போல் திருமூர்த்தி அவனிடம் நெருக்கமாக பழகியதும் இல்லை… அதனால் தான் பிரகாஷ் இன்று ப்ரியாவிற்க்கு சாப்பாடு ஊட்டுவதை பார்த்ததும் அவனுள் இருக்கும் ஏக்கம் வெளியே தெரிய ஆரம்பித்தது…. இன்னும் கொஞ்சம் நேரம் இருந்தால் தானும் அவரிடம் சென்று ‘‘எனக்கும் ஊட்டிவிட வேண்டும்’’ எனக் கேட்டுவிடுவோமோ என பிரகாஷ்க்கு தோன்றிவிட்டது… அதை தவிர்க்க வந்த வழியே சென்றான்…

‘‘எனக்கே ஒரு நிமிசம் இந்த பொண்ணு தாமரை பெரியம்மா பொண்ணு தானு கொஞ்சம் சந்தோஷமாவும், கொஞ்சம் பயமாகவும் இருந்துச்சுண்ணே…., அப்புறம்.. அங்கு பஞ்சாயத்தில்

ஆரம்பம் முதல் இறுதி வரை சொல்லிமுடித்தாள் மலர்... அப்புறம் என மலர் அடுத்து பேச ஆரம்பிக்கும் போது அவளது செல்போனுக்கு அழைப்பு வந்தது.... அதில், ''மை மாமு'' பிரகாஷின் அழைப்பை பார்த்ததும் மலருக்கு பக்கத்தில் தென்னவனை பார்த்தாள்.. ‘‘சரி பிரகாஷ்கிட்ட பேசு நான் கிளம்புறேன்...'' அவன் மலரிடம் சொல்லிவிட்டு கிளம்ப..., மலருக்கு தான் ஒரு மாதிரியாக இருந்தது...''

‘‘சொல்லுங்க மாமா... இன்நேரத்துல போன் பண்ணிருக்கீங்க, எதாவது முக்கியமான விசயமா...'' அவள் கேட்க... அந்த பக்கம் இருந்து அமைதியே பதிலாக கிடைத்தது.... ‘‘மாமா.. போன் போட்டுட்டு இப்படி அமைதியா இருக்கேங்க... சொல்லுங்க மாமா...''மலர் பேச... அவனோ ஒரு பதிலும் பேசாமல் இருந்தான்... ‘‘மாமா ஏன் இப்படி போன் போட்டு அமைதியா இருக்காங்க.., ஒரு வேலை அவங்க மனசுல ஏதோ ஒன்னு இருக்கு... இப்படி கேட்டா மாமா சொல்லமாட்டாங்க'' மலர் நினைக்க... அந்த பக்கம் இருந்திருந்து பேசினான் பிரகாஷ்... ‘‘எனக்கு சாப்பாடு ஊட்டுவிடுவியா தங்கம்...'' அவன் கேட்டதும் அவளுக்கு புரியவில்லை... ‘‘என்ன மாமா, என்ன சொல்லுறீங்க எனக்கு புரியலை..''.. ‘எனக்கு இப்பவே நீ சாப்பாடு ஊட்டிவிட

வரனும் தங்கம்..' கொஞ்சம் கொஞ்சமாக மலருக்கு புரிய ஆரம்பித்தது… ‘‘எங்க இருக்கீங்க மாமா’’.. மலர் கேட்டால்.. ‘‘மாங்கா தோப்புல இருக்கேன்’’ பிரகாஷ் சொன்னது தான் தாமதம் மலரோ, போனை அணைத்துவிட்டு…, சமையல் அறைக்கு சென்று பிரகாஷ்க்கு பிடித்த உணவுகளை அறை மணி நேரத்தில் சமைத்து எடுத்துகொண்டு் மாங்கா தோப்புக்கு சென்றாள்.

'வீட்டில் இருந்து வெளியே வந்தவன்.. அவனுக்கு மிகவும் பிடித்த மாந்தோப்புக்கு சென்றான்… அங்கு இருந்தால் அவனின் அன்னை கூடவே இருப்பது போல் ஒரு உணர்வு…, அங்கு வந்தவன்.. திருமூர்த்தி பிரியாவிற்கு ஊட்டியதை நினைத்துகொண்டிருந்தவன்.., மலருக்கு உடனே போன் செய்து அவளிடம் கேட்டால் தன் நிலைமையை புரிந்துகொள்வாளா. என்று தான்… நினைத்தான்.. ஆனால் தன் முன் தூக்கு வாலியுடன் நிற்பாள் என கனவிலும் அவன் நினைக்கவில்லை…. ‘‘எழுந்திரிங்க மாமா…, எழுந்து வாங்க சாப்பாடு கொண்டுவந்திருக்கேன்..’’.. ‘ஏய் இந்த நேரத்துக்கு ஏன் டி இங்க வந்த…' பிரகாஷ் தன் வருத்தத்தை மறைத்துகொண்டு அவளை திட்டினான்… ‘‘நீங்க இப்படி சொன்னா கேட்கமாட்டீங்க… எழுந்திருங்க…’’ மலர், பிரகாஷின் கையை பிடித்து இழுத்துகொண்டு அந்த மாந்தோப்பின் வீட்டுக்குள் சென்றாள்…, ‘‘மலரு இந்த நேரத்துல நீ இங்க இருக்குறதை

யாரவது பார்த்தா நம்ம குடும்பத்துக்கு தான் பிரச்சனை... சொன்னா கேளுடி... வீட்டுக்கு போ...'' அவன் சொல்ல, அவளோ, கையோடு கொண்டுவந்த சாப்பாட்டு வாலியில் இருந்து ஒவ்வொரு பதார்த்தையும் எடுத்து வைத்தால்.. இலையில்... ‘‘மலரு.. ஏதோ நினைப்புல உன்கிட்ட பேசிட்டேன் ... இங்க இருந்து கிளம்புமா..., உன் அப்பா பார்த்தாங்கனா என்னை தான் தப்பா நினைப்பாருடி'' அவன் பாட்டு பேசிகொண்டிருந்த போது இலையில் சாப்பாட்டை போட்டு அதை பிசைந்து கையில் எடுத்து அவனுக்கு ஊட்டிவிட்டாள்..., தான் பேசுவதை பொருட்படுத்தாமல் இவள் செய்வதை பார்த்தவன்... மீண்டும் அவளை பேச ஆரம்பிக்க அந்த இடைவேளையை தனக்கு சாதகமாக பயன்படுத்திகொண்டு அவனுக்கு ஊட்டிவிட்டாள்..., அவள் பாங்காய் ஊட்டுவதையும், தனக்கு பிடித்த சாம்பார்,சாதம்,கேரட் பொரியல், என அவனுக்கு பிடித்த சமையல் செய்து அவனுக்காக அந்த இரவு நேரத்தை பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் இவன் ஏக்கத்தை போக்க தன்னால் முடிந்த அளவு அவனுக்கு ஆறுதல் தந்தாள் மலர்... அவனுக்கு ஊட்டிவிட்டு முடித்ததும், கைகளை கழுவி விட்டு, தண்ணீர் கொண்டு அவனின் வாயை துடைத்துவிட்டு, தன் தாவணி முந்தானையை கொண்டு அவனின் வாயை துடத்துவிட்டாள்...., இந்த செயலால் பிரகாஷுக்கு தன் தாய்

இருந்திருந்தால் இவ்வாறு தான் தனக்கு செய்திருப்பார்... என நினைத்துகொண்டான்..

‘‘சரிங்க மாமா...நான் கிளம்புறேன் வீட்டுக்கு போங்க, இனி எப்போ உங்களுக்கு என் கையால ஊட்டிவிடனும் மனசுல நினைச்சா நான் உங்க முன்னாடி இருப்பேன்.. எதை பற்றியும் நினைக்காம வயிறு நிறைஞ்சதுல மனசும் நிறைஞ்சுருக்கும், அதுனால நல்ல தூக்கம் வரும்..., போய் தூங்குங்க.. மாமா.., நான் இருக்கேன் மாமா, அப்புறம் எதுக்கு உங்களுக்கு இந்த வருத்தம்..., எதுனாலும் மாமாகிட்ட மனசுவிட்டு பேசுங்க எல்லாம் சரியாகிடும் மாமா.. நான் கிளம்புறேன் அண்ணா இன்நேரம் வந்திருக்கும்,’’ மலர் பேசிமுடிக்க வெளியில் பைக்கின் ஹாரன் சத்தம் கேட்டது..., மலரோ வருகிறேன் என்பது போல் பார்க்க... பிரகாஷோ.., மலரின் கையை பிடித்துகொண்டு ‘‘என் அம்மா இருந்திருந்தா என் ஏக்கத்தை புரிஞ்சுருப்பாங்க, அதே மாதிரி தான் நீயும், என் அம்மாவோட முகத்தை இன்னைக்கு தான் உன் மூலமா பார்க்குறேன் தங்கம், பார்த்து போயிட்டு வா... சீக்கிரமே நம்ம கல்யாணம் நடக்கும்...’’ அவளிடம் சொன்னான்..., அவளும், ’’அந்த நாளுக்காக தான் காத்திருக்கேன் மாமா’’ சொல்லிவிட்டு, அவனை பார்த்துகொண்டே வெளியே சென்று, தென்னவன் கூடவே வீட்டுக்கு சென்றால்..’

“இது தான் உன் அறை, இங்க உன்னோட எல்லா பொருளையும் வைக்க இடம் அதிகமா இருக்கு, நாமா, நாளைக்கு முத்தையா வீட்டுக்கு போறோம் அப்படியே உன் பொருளையும் எடுத்துட்டு வரலாம்… அதுவரை இதோ இங்க இருக்குற துணியை போட்டுக்கோ.. இதெல்லாம் வள்ளி தான் வாங்கி கொடுத்துச்சுமா… நேரமாச்சு நீ படுத்து தூங்குமா தெய்வா… நாளைக்கு பேசலாம்.” அவளிடம் சொல்லிவிட்டு திருமூர்த்தி சென்றுவிட்டார்.. ஆனால் இவளுக்கு தான் தூக்கமே வராமல் புரண்டு, புரண்டு படுத்துகொண்டிருந்தால்.., இடையில் ஏதோ சத்தம் கேட்டு அவளின் அறையைவிட்டு வெளியே வந்தால்.., அங்கு பிரகாஷ் அவனது அறைக்கு செல்வதை பர்த்ததும்.. அவனை நோக்கி சென்றால்…, “பிரகாஷ்… இந்த நேரத்துல எங்க இருந்து வர்ர… சாப்பிட்டயா…எனக்காக நீ இருப்பேனு சொன்னேல… ஆனா நீ என்னை வந்து பார்க்கவேயில்லை…”.. பின்னிருந்து பிரியாவின் குரல் கேட்டதும் திடீரென்று திரும்பி பார்த்தான்… அதற்க்குள் அவள் பேச ஆரம்பித்துவிட்டாள்…

‘நீ இருந்த வீடு முத்தையா மாமா வீடு, அப்படி இருக்க… உனக்கு எந்த குறையுமில்லாம பார்த்துக்க வள்ளி இருக்கும் போது நான் வந்து உன்னை பார்த்தா அது நல்லா இருக்காது, அதான்…, வேற ஒன்னுமில்லை பிரியா.., நீ சாப்பிட்டயா…”

‘ம்ம்.. சாப்பிட்டேன்.. நீ’’

’’ ம்ம்ம் சாப்பிட்டேன்…, சரி நீ போய் தூங்கு, நாளைக்கு பார்க்கலாம்’’

‘சரி பிரகாஷ்..’..அவள்சொல்லிகொண்டு சென்றால், போவதையே பார்த்தான்…, ‘‘இவள் என் சித்தாப்பாவின் மகள் எனத்தெரியாமல், அவரிடம் என்னவெல்லாம் பேசிவிட்டேன்…, தாமரை சித்தி மட்டும் இருந்திருந்தால்.. இன்நேரம் நன்றாக இருந்திருக்கும்.., முதலில் இருவரிடமும் நாளை மன்னிப்பு கேட்க வேண்டும்…’’ பிரகாஷ் மனதுக்குள் நினைத்துகொண்டு அவன் அறைக்கு சென்று படுத்து தூங்கிவிட்டான்…

‘‘முத்தையாவின் வீட்டில்… அனைவரும் அமைதியாக இருந்தனர்…, ஏனென்றால், கீர்த்தி,மாறன் கல்யாணம் பற்றி பேசிமுடித்தவர்கள் அடுத்து தெய்வாவின் கல்யாணத்திலும், பிரகாஷின் கல்யாணத்திலும் வந்து நிறுத்தினர் அவர்களின் பேச்சு…., ஆனால் அதற்க்கு முன் வள்ளி தெய்வாவிடம் வாங்கிய சத்தியம்.. அப்பொழுது தான் முத்தையாவுக்கு நினைவு வந்தது…., அதை பற்றி வள்ளியிடம் முத்தையா கேட்க… வள்ளியோ ஒரு பெரிய அதிர்ச்சியை அவருக்கு வைத்தாள்…, வள்ளை சொன்னதை கேட்டு அங்கிருந்தவர்கள் அதிர்ந்தார்கள், ஆனால்

ஒருவருக்கும் மட்டும் இதுவும் எனக்கு ஏற்கனவே தெரிந்த விசயம் என்பது போல் அங்கு நடந்தை, நடக்க போவதையும் விறுவிறுப்பாக பார்த்துகொண்டிருந்தார்.”

# அத்தியாயம் 14

’’வள்ளியின் நல்ல செய்தியை கேட்டு திருமூர்த்தி ஐயாவும், தெய்வாவும், காலையின் பொழுதே முத்தையாவின் வீட்டுக்கு வந்திருந்தனர்…, திருமூர்த்தி ஐயா, வள்ளியையும்,பாண்டியனையும், ஒருசேர ஆசீர்வாதம் செய்தார், தெய்வா வள்ளியிடம் அவளது வாழ்த்துகளை சொன்னாள்.அதே சந்தோஷத்துடன் கீர்த்தி,மாறன் கல்யாணத்தை பேச தொடங்கினர்..’’

‘ஐயா… கீர்த்தியும் படிப்பு முடிச்சு வந்துட்டா…, மாறனும் இன்னும் இரண்டு நாளுல ஊருக்கு வரதா போன் செஞ்சான்… ஐயா. அடுத்து நாம கீர்த்திக்கு பரிசம் போட நல்லா நாள் பார்த்து சொல்லுங்க ஐயா…, நீங்க பார்த்து குறிச்சு கொடுத்த நாளுல தான் பாண்டியன்,வள்ளிக்கு நல்லபடியா கல்யாணம் பண்ணி வச்சோம், உங்க ராசியால இன்னைக்கு வள்ளி மாசமா இருக்கா, அதே மாதிரி மாறன் கல்யாணத்தையும் முடிச்சுக்கொடுக்கனும் ஐயா… முத்தையா, கூறினார்’

‘‘எல்லாம் நல்லபடியா நடக்கும் முத்தையா…, அந்த காலாண்டர் எடுத்துட்டு வாம்ம மீனாட்சி..,’

''காலாண்டரில் நல்லா நாள்,நல்ல நேரம், பார்த்தார்...,''. 'முத்தையா, ஐப்பசி 20 தேதி நல்லா நாளா இருக்கு, அன்னைக்கு மாலையில 6.30 லிருந்து 8.00 மணி வரை நல்ல நேரம் இருக்கு, அப்போவே நாம பரிசம் போடலாம்.., இது எல்லாருக்கும் சம்மதமா..,''

'எல்லாருக்கும் சம்மதம் ஐயா, நீங்க குறிச்சுகொடுத்த நேரத்துலயே பரிசம் போடலாம்..., என்னம்மா மீனாட்சி, சம்மதமா...'மீனாட்சியை கேட்க

''முதல,அண்ணா, அண்ணிய கேளுங்க,''

'எங்களுக்கு சம்மதம் மாமா, அண்ணா, இருவரும் ஒன்றாக கூறினார்கள், ''இன்னும் மூனு நாள் தான் இடையில இருக்கு, அதுக்குள்ள பரிசம் சேலை எடுக்கனும், நகை எடுக்கனும், ஊருக்காரவங்களுக்கு சொல்லனும், இப்போ இருந்தே வேலைய பார்க்க ஆரம்பிக்கனும் மாமா,என்ன செல்வி நான் சொல்லறது..''

'ஆமாங்க..., நீங்க சொல்லற மாதிரி வேலை அதிகமா இருக்கு,'

''கீர்த்தியின் கல்யாணம் பேசும் போதே... முத்தையாவுக்கு தெய்வாவிடம் வள்ளி வாங்கிய சத்தியத்தை அப்போது நினைவுக்கு வந்தது..., தாமரையின் இடத்தில் இருந்திருந்து

தெய்வாவின் கல்யாணத்தை தாய் மாமான் முறைக்கு எல்லாம் நான் செய்யவேண்டும், அவர் நினைத்திருக்க, அதை அனைவரின் முன் கேட்டார் வள்ளியிடம்.’’

‘வள்ளி, பஞ்சாயத்துல தெய்வாகிட்ட சத்தியம் வாங்குனியேம்மா, அந்த மாப்பிள்ளை யாரும்மா, முத்தையா கேட்க…, அன்நேரத்தில் பிரகாஷும், பைக்கில் வந்து இறங்க, சிவநாதனும், தென்னவனும் காரில் வந்து இறங்கினர்…, அவர்களை பார்த்த முத்தையா, ’’வா சிவநாதா…, வாப்பா தென்னவா, பிரகாஷ் அதிசயமா நீயும் வந்திருக்க…’’முத்தையா அவர்களை வரவேற்றார்…’’

‘ஆனால் திருமூர்த்தி ஐயா, அவர்கள் இருவரையும் பார்த்து எதுவும் பேசாமல், அமைதியாக இருந்தார்…, பிரகாஷ் வந்தது, சாதாரணமாக இருந்தது, அனைவரும் அவர்களை பார்த்து வரவேற்றனர், ’வரேன் அண்ணே…,வரேன் பெரியப்பா,’

‘‘எப்படி இருக்கீங்க அண்ணி, மாமா,செல்வி,பாண்டியா எப்படி இருக்கீங்க..’’

‘நல்லா இருக்கோம், தம்பி நீங்க எப்படி இருக்க’

‘‘நல்லா இருக்கேன் பெரியம்மா,’தென்னவன் சொல்ல

’’என்ன விசயம், சிவநாதா…, திடீர்னு வீடு தேடி வந்திருக்க…,’’ முத்தையா கேட்க..

‘பஞ்சாயத்துல நடந்த விசயத்தை கேள்விப்பட்டேன் அண்ணே, அன்னைக்குனு வெளியூர் போயிட்டேன், இப்போ தான் விசயத்தை கேள்விபட்டு வந்தேன்…, செல்வி எப்படி எனக்கு தங்கச்சியோ, அதே மாதிரிதான் தாமரையும், ஆனா தாமரைக்கு நம்மளவிட்டு போக எப்படி மனசு வந்துச்சோ…, கவலையா இருக்குண்ணே…, அதான் விசாரிச்சுட்டு போகலானு வந்தேன்… அண்ணே..,’

‘‘என்ன செய்றது சிவா…, எல்லாம் வலியையும் தாங்கிக்க பழகிக்கனும், என் தங்கச்சி போனாலும் அவளோட பொண்ணு இருக்காளே, அவளை நல்ல இடத்துல கல்யாணம் செஞ்சுகொடுக்கனும் தாய் மாமானு நான் எதுக்கு இருக்கேன்…, என் பொண்ணுக்கு எப்படி கல்யாணம் செஞ்சுகொடுக்குறேனோ அதைவிட அதிகமா என் தங்கச்சி பொண்ணுக்கு செய்வேன்.., கண்கள் கலங்கி அவர் பேச, மீனாட்சி முத்தையாவின் கரத்தை பிடித்துகொண்டு அவரின் வருத்தபடுவதை வேண்டாம், கையை அழுத்தினார், கண்ணீரை உள்ளிழுத்து கொண்டு மற்றவர்கள் முன் சாதாரணமாக பேசினார் இதை பற்றி வள்ளிகிட்ட பேசும் போது தான் நீங்க வந்தீங்க…,’’

‘அப்படியா…. அண்ணே, சரிண்ணே… நான் கிளம்புறேன்…, சிவநாதன் எழுந்திரிக்க, ‘நில்லுங்க மாமா, எங்க கிளம்புறேங்க…’’ வள்ளி சிவநாதனை நிறுத்த…

‘‘இல்லைமா வள்ளி, குடும்ப விசயம் பேசும் போது நான் இருந்தா நல்லா இருக்காது…, நான் கிள்ம்புறேன்… நீங்க பேசுங்க…’’

‘மாமா… நீங்களும் எங்க குடும்பம் தான்… மறந்துட்டீங்களா.., என் மாமாவோட சின்னம்மா மகன் நீங்க அப்படி இருக்க நீங்க ஒதுங்கி போகலாம… மாமா.., நான் பேசப்போற விசயத்துல உங்க குடும்பமும் அடங்கி இருக்கு.. மாமா.. அப்போ நீங்களும் இருக்கனும்.’

‘‘ஆமாம் சிவநாதா… நீயும் என் குடும்பம் தான், நீயா தனியா ஒதுங்கி நிக்குறது எனக்கு பிடிக்கலை, என் வீட்டு விசேஷம்னா உன் வீட்டு விசேஷம் தான் சரியா…’’ முத்தையாவும் சொல்ல…

‘‘வள்ளி, என்ன விசயம்னு சொல்லுமா…, எல்லோரையும் காக்க வைக்காதே.., என்னனு சொல்லுமா… ‘‘ அனைவரும் ஆவலாய் கேட்க… வள்ளியும் அந்த விசயத்தை சொன்னாள்…

‘ஐயா…,மாமா…, நான் தெய்வாகிட்ட, நான் பார்க்குற மாப்பிள்ளையா தான் கல்யாணம் செய்யனும், சொன்னேன்…, மாப்பிள்ளையும் நான் பார்த்துட்டேன் ஐயா,..’

‘‘யாரும்மா அந்த மாப்பிள்ளை’’

‘சிவநாதன் மாமாவோட மகன், தென்னவன் தான், தெய்வாவுக்கு பார்த்த மாப்பிள்ளை… ஐயா..’ வள்ளி சொன்னதும், முத்தையா முதலில் திருமூர்த்தி ஐயாவை தான் பார்த்தார்…, அவர் என்ன சொல்லப்போகிறார் என்று…, ஆனால் திருமூர்த்தியோ…, வள்ளியின் முகத்தை பார்த்து நான் கணித்த விசயம் சரிதான் என்ற பாவனையில் அவர் இருந்தார்…, முத்தையா மட்டும் இல்லை அனைவரும் ஐயாவின் முகத்தை தான் பார்த்தார்கள்…, ‘

‘‘சரிம்மா வள்ளி, நீ பார்த்த மாப்பிள்ளைய எனக்கு பிடிச்சுருக்கு, ஆனா தெய்வாவுக்கு பிடிக்கனுமே…, தெய்வாவ கூப்பிட்டு கேளுமா…, அந்த பொண்ணோட விருப்பத்தை…, வள்ளியிடம் கூறிவிட்டு, அப்புறம், சிவா,உனக்கு சம்மதமா, என் வீட்டு பொண்ண உன் வீட்டுக்கு மருமகளா வரதுக்கு சம்மதமா,’’ சிவநாதனிடம் கேட்டார்..’’

‘பலநாள் சண்டையை மறந்து, அவரே வழிய வந்து பேசும் போது அவர் மட்டும் பேசாமல் இருப்பாரா என்ன…, ‘‘என்னங்க

ஐயா, உங்க வீட்டு பொண்ணு என் வீட்டுக்கு மருகளா வந்தா அதைவிட வேற என்ன சந்தோஷம், சொல்லுங்க,… ரொம்ப சந்தோஷம் ஐயா,'' சிவநாதனும் சம்மதம் சொல்ல…

''தம்பி உனக்கும் சம்மதமா, என் பொண்ண கல்யாணம் பண்ணிக்க..'' திருமூர்த்தி, தென்னவனிடம் கேட்க..

'சம்மதம், ஐயா,'அவனும் சொல்ல..

''தெய்வாவை அழைத்து வந்தாள் வாணி, வள்ளி, தெய்வாவிடம் அவளின் சம்மதத்தை கேட்க.. ''தெய்வா…, நான் பார்த்த மாப்பிள்ளை இவங்க தான், அந்த பையன பார்த்து உனக்கு பிடிச்சுருக்கானு சொல்லுமா….'' வள்ளி, தென்னவனை பார்க்க சொல்ல.

''தென்னவனை நிமிர்ந்து பார்த்து, வள்ளியிடம் ''எனக்கு சம்மதம் அக்கா, அவங்களை எனக்கு பிடிச்சுருக்கு,'' தெய்வா தன் சம்மத்தை சொன்னவுடன்,அங்கிருந்த அனைவருக்கும் மகிழ்ச்சி என்றாலும், மூவருக்கும் தெய்வாவின் பதிலால் திருப்தி இல்லை,''

'அப்புறம் சிவநாதா… உன்கிட்ட இன்னொரு விசயமும் கேட்க்கனும்…'

''சொல்லுங்க ஐயா,''

'என் மகன் பிரகாஷுக்கு, உன் பொண்ணு தங்கமலரை, கொடுப்பியா,' ஐயா கேட்க.

"எனக்கு சம்மதம் ஐயா…," தென்னவன் ,பிரகாஷின் கல்யாணமும் முடிவானது.

'பிரகாஷுக்கு ஒன்றும் புரியவில்லை, காலையில் பாண்டியன் அழைத்து இன்று வீட்டுக்கு வரச்சொன்னதும்,இதோ தன் கல்யாணமும்,தெய்வாவின் கல்யாணமும் உறுதியானதும் அவனுக்கு சந்தோஷம் இருந்தாலும், ஏதோ படத்தை பார்ப்பது போல் இருந்தது…, அதில் இருந்து அவனால் வெளிவரமுடியவில்லை…

"அப்போ கீர்த்தி,மாறன் பரிசம் போடுற நாளுலயே இவங்க ரெண்டு பேர் பரிசமும் வச்சுக்கலாம் ஐயா… அன்னைக்கே கல்யாண நாளையும் குறிச்சுருலாம்.. மூனு பேருக்கும் என்னங்க ஐயா நான் சொல்லுறது.." முத்தையா, திருமூர்த்தியிடம் கேட்டார்.

'சரி, முத்தையா, அதுக்கான வேலைய பார்க்கலாம்..எனக்கு கொஞ்சம் வெளிய வேலை இருக்கு, பிரம்மா, தெய்வாவ மாலையில வீட்டுக்கு அழைச்சுட்டு வா…'முத்தையாவிடம், சொல்லிவிட்டு, தெய்வாவை அழைத்து வருவதை பிரகாஷிடம் ஒப்படைத்தார்…,

“முதன் முதலாய், பிரகாஷிடம் அமைதியாக பேசியது இதுவே, அவனோ “சரிங்க ஐயா, பத்திரமா அழைச்சுட்டு வரேன்” அவனும், அவரை உரிமையாய் அழைத்தான்…

’சரிங்கண்ணே, நானும் கிளம்புறேன் ஒன்னுக்கு ரெண்டு கல்யாணம், அதுக்கான வேலைய நானும் பார்க்கிறேன், வரேன் அண்ணே, அண்ணி, எல்லோருக்கும் நான் போயிட்டுவரேன்…’ சிவநாதன் விடைபெற..

“நல்லது சிவநாதா… பார்த்து போயிட்டு வா…,”

‘அண்ணா, நாங்களும் கிளம்புறோம், எங்களுக்கு அதே கல்யாண வேலை இருக்கும் போயிட்டு நாங்க பரிசம் போடுற நாளுக்கு வரோம்… ‘ அனைவரிடமும் விடைபெற்று கிளம்பினர் செல்வியும்,முருகவேலும்.

“சரிமா, சரிங்க மாமா, பார்த்து போயிட்டு வாங்க…” அவர்களை வாசல் வரை சென்று வழியனுப்பிவைத்தார்.

’உனக்கு உண்மையில இந்த கல்யாணத்துல சம்மதமா ப்ரியா…” செம்பருத்தி ப் செடியை வருடிகொடுத்து கொண்டிருந்த தெய்வாவிடம் கேட்டான் பாண்டியன்… திடீரென பேச்சை

கேட்டதும்,அதிர்வுடன் திரும்பி பார்த்தாள், ‘‘என்ன கேட்டீங்க சார்’’..

‘என்னை சார்னு கூப்பிடுறதை நிறுத்து ப்ரியா, நான் உன்னோட மாமா பையன், உனக்கு மாமா முறை, மாமானு சொல்லி கூப்பிடு என்ன, சரி அதை விடு, உனக்கு இந்த கல்யாணத்துல சம்மதமானு கேட்டேன்’

‘‘சம்மதம் தான் சா…சார்… ச்சே மாமா… ஏன் திடீர் கேள்வி’’

‘என் வள்ளியம்ம தேர்வு செஞ்ச எந்த பொருளும், சோடை போகாது, அதே மாதிரி தான் உனக்கு பார்த்த மாப்பிள்ளையும்…, தென்னவன் ரொம்ப நல்லவன், அதைவிட மலரும்,சித்தாப்பாவும் ரொம்ப நல்லவங்க…, அவங்க உன்னை நல்லபடியா பார்த்துப்பாங்க.. இருந்தாலும் உன் மனசுல என்ன இருக்குனு தெரியாமா வள்ளியம்மா சத்தியம் வாங்கிட்டாங்க அதான் எனக்கு உறுத்தாலா இருந்துச்சு, வேற ஒண்ணுமில்லை.., ப்ரியா..’

‘‘எனக்கும் அக்காமேல நம்பிக்கை இருக்கு, அதுனால தான் சத்தியம் பண்ணேன் சா….. இல்லை மாமா..’’

’சரி…, சாப்பிட்டயா…’

‘‘இல்லை, இனிதான் சாப்பிடனும்..’’

'சரி..., நான் வரேன்..., என் தங்கச்சிக்கும், உனக்கும் பிரகாஷுக்கும் பரிசம் போடுறாங்க அதுக்கான வேலை பார்க்கனும்... நீ போய் சாப்பிடு ப்ரியா' அவளை அனுப்பி வைத்தான்.. அவனுக்கு தெய்வாவின் கல்யாணம் புரியாத புதிரக இருந்தது..., இருந்தும் வள்ளியின் செயலுக்கு பின் ஏதோ இருக்கிறதென்று பாண்டியனும் உணர்ந்துகொண்டு அந்த இடத்தைவிட்டு அகன்றான்..., ஆனால் இவர்களின் சம்பாசனையை ஒருவர் அறிந்துகொண்டு, அடுத்த திட்டதை செயல்படுத்த முனைந்தனர்.

''டேய்.., போயும், போயும் அந்த சின்னகுழந்தைகிட்ட சண்டை போட்டு இந்த கொய்யாபழத்தை வாங்கிட்ட வந்திருக்க உன்னை.... கீர்த்திகா அவனின் தலையில் தட்ட..., "நீ அந்த பொண்ணுக்கிட்ட திருடி கல்லாக்காய் சாப்பிட்டேல அதை என்ன சொல்ல''.. "டேய்... அந்த பொண்ணுகிட்ட எவ்ளோ கெஞ்சுனேனு நீயே பார்த்தேல, அதான் இரண்டு கல்லாக்காய் அவளுக்கு தெரியாம எடுத்து சாப்பிட்டேன்..., உனக்கே தெரியுமுல...எனக்கு கல்லாக்காய்ன ரொம்ப பிடிக்குனு...''..

"எப்படியும் திருடி சாப்பிட்டயா இல்லையா... அதை சொல்லு''.. 'சரி நீ திருடி சாப்பிட்ட, நான் வாங்கி சாப்பிட்டேன் அதைவிடு டா... ஐயா வீடு வந்திருச்சு, வா பேசிட்டு வரலாம்..''

‘அடிப்பாவி மாத்தி சொல்லுற…, நான் திருடுனேனா, அவ்வாவா…, என்னாமா பொய் சொல்லுற…, உன்னெல்லாம் மாறன் மச்சான் எப்படி சமாளிக்க போறாறோ…, கடவுளே அந்த பச்சகுழந்தைய இவகிட்ட இருந்து காப்பாத்து…,’ இருவரும் சண்டையும்,கேலியும் செய்துகொண்டு திருமூர்த்தியின் வீட்டுக்குள் நுழைந்தனர்… அப்பொழுது கீர்த்தியை பார்த்து ஒரு பெண்மணி பேச…, அவள் நின்று பேசிகொண்டிருப்பதை கவனிக்காமல்…, கார்த்தி உள்ளே நுழைந்தான்..’

“செடிகளுக்கு தண்ணீர் ஊற்றிகொண்டிருந்தவரை பார்த்த கார்த்திக், “பெரியவரே.. உள்ள ஐயா இருக்காங்களா…” அவரிடம் கேட்டான்… ‘நீங்க யாருப்பா…, ‘… “ஐயாவுக்கு ரொம்ப நெருங்கின சொந்தம் பெரியவரே…, அவருக்கு நாங்க… பாதியில் நிறுத்தியவன்…. இதெல்லாம் உங்களுக்கு எதுக்கு பெரியவரே… அவரு இருக்காறா… இல்லை வெளிய போயிருக்காறா..அதை சொல்லுங்க…, அப்படியே குடிக்க எதுவும் இருந்தா கொடுங்க பெரியவரே… தண்ணீர் தவிக்குது…’அவருக்கு ஒரு வேலையையும் வைத்தான்…., “இருப்பா குடிக்க எடுத்துட்டு வரேன்.. “.. அவர் குடிக்க அவனுக்கு எடுத்து வருவதை பார்த்த கீர்த்தி.. “ஐயா… நீங்க எதுக்கு இதெல்லாம் பண்ணுறேங்க…, எங்க பிரகாஷ் அண்ணாவா…இப்போ யாருக்கு இதை எடுத்துட்டு போறீங்க…,

இந்த சோம்பேறிக்கா..., டேய் எதுக்குடா ஐயாவ வேலை வாங்குற..''.. கீர்த்தி சொன்னதும் தான் அந்த பெரியவரின் முகத்தை பார்த்தான்....'

''அய்யோ ஐயா.. நீங்களா..., தெரியாமா உங்களை பேசிட்டேன்... ஐயா அதுவும் இல்லாம உங்களவே வேலை வாங்கிட்டேன்... மன்னிச்சுருங்க ஐயா..., திருமூர்த்தியின் காலில் சாஷ்ட்ராங்கமாய் விழுந்தான்.. கார்த்திக்..,''

'வேலை வாங்குறதையும் வாங்கிட்டு இப்போ காலுல விழுகுற மாதிரி நடிகிறையா..., எழுந்திரிடா..'

''விடும்மா கீர்த்தி, அவன்,நீயும், என்னை பார்த்து நாலு வருசம் ஆச்சு, அடையாளம் மறந்திருக்கும் விடும்மா..., ''கார்த்தி எழுந்திருப்பா..., யாரை வேலை வாங்குன உனக்கு பிடிச்ச ஐயாவ தானே... எழுந்திரிப்பா,..'' அவனுக்காக பரிந்து பேசி அவனை எழுப்பிவிட்டார்... ''எப்போ ஊருக்கு வந்தீங்க... ரெண்டு பேரும், நல்லா இருகீங்களா...படிபெல்லாம் முடிஞ்சதா...''

'நல்லா இருக்கோம் ஐயா, படிபெல்லாம் நல்லபடியா முடிஞ்சது, நீங்க எப்படி இருக்கீங்க..., ஊருல இருந்து நேத்து தான் வந்தோம் ஐயா, உடம்புக்கு எப்படி இருக்குங்க ஐயா.., கீர்த்தியும், கார்த்தியும் மாறி,மாறி கேட்க...'

“எனகென்னமா…, நல்லா இருக்கேன்…, ’என்னது ஊருல இருந்து நேத்து இவங்க வந்தாங்கனா இன்னும் இவங்களுக்கு பஞ்சாயத்து நடந்தது தெரியாது போல அப்படியே இருக்கட்டும்’ மனதில் நினைத்துகொண்டார்..”அவர்களிடம் பேசிவிட்டு வீட்டின் தோட்டத்தில் சாய்வு நாற்காலியில் அமர்ந்து பஞ்சாயத்துல நடக்க போகும் முன் வள்ளி பேசியதை நினைத்துப்பார்த்தார் திருமூர்த்தி.

‘வீட்டில், நுழைந்ததும்.., புதிய பெண்ணை பார்த்ததும் இருவருக்கும் எங்கோ பார்த்தது போல் இருக்க…, தெய்வாவை நோக்கி இருவரும் சென்றனர்., “யார் நீ” கீர்த்தி தெய்வாவை பார்த்து கேட்க.. “குரல் வந்த திசையில் திரும்பி அவர்களை பார்த்தாள்.. “உன்னை தான்மா யாரு நீ???” இப்போ கார்த்தி கேட்க. அவர்கள் இருவரையும் பார்த்த தெய்வா.., ‘நான்..,நான் பிரகாஷோட தங்கை..’ நீங்க யாரு’..

“என்ன கலாய்கிறையா…, ஐயாவுக்கு ஒரு மகன் மட்டும் தான்…, எங்கிருந்து வந்த நீ…, உன் பேர் என்ன…, உன் ஊர் என்ன????” அவளை பேசவிடமல் கார்த்திக் கேள்விமேல் கேள்வி கேட்க… அவர்களுக்கு பதில் சொல்ல திணறி போனால்.. தெய்வா…’

“ஓய் வாலுங்களா… வந்தவுடனே என் தங்கச்சிய கலாய்க்குறேங்களா…, ஆமாம் கோவிலுக்கு போயிட்டுவர இவ்வளோவு நேரமா உங்களுக்கு…”வள்ளி வர…

‘அது இருக்கட்டும் அண்ணி, இந்த பொண்ணு எப்படி உங்களுக்கு தங்கச்சியா இருக்க முடியும், உங்களுக்கு ஒரு அண்ணா தானே…அப்புறம் எப்படி உங்களுக்கு தங்கச்சி வரும்…’ கீர்த்தி யோசிக்க,கார்த்திக் அதை கேட்டுவிட்டான்..

“ம்ம்ம்…அது எல்லாம் அப்புறமா சொல்லுறேன்…, இப்போ உங்களை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்…, “தெய்வா…, இவங்க ரெண்டு பேரும் அத்தானோட தம்பி,தங்கை,..., இவன் பேரு கார்த்திகேயன், இவ பேரு கீர்த்திகா..,கீர்த்திக்கும், என் அண்ணாவுக்கும் தான் கல்யாணம் முடிவும் பண்ணிருக்கோம்,”தெய்வாவிற்க்கு அறிமுகப்படுத்த…, அவளோ “ஹாய்.., கீர்த்தி, கார்த்தி.. கைகொடுத்து அறிமுகமானாள்.”

‘கீர்த்தி,கார்த்தி, இவ என் சித்தி பொண்ணு, ஊருல இருந்து வந்திருக்கா, பேரு தெய்வப்ரியா…,ஐயாவோட தம்பி பொண்ணு மாதிரி.. இருவரிடமும் பாதி உண்மைய மறைத்தாள்…, கூறினால் வள்ளி… “ஹாய் ப்ரியா,” கீர்த்தி தெய்வாவை கட்டியணைத்து வரவேற்றால்…, “ஹாய் ப்ரியா…” கார்த்தியும் கீர்த்தி செய்தது

போல் தெய்வாவை கட்டியணைக்க போக… ‘கார்த்தி, அவளுக்கும், தென்னவன் அண்ணாவுக்கு கல்யாணம் முடிவாகிருக்கு அதனால நீ இப்படி பண்ணக்கூடாது அவனது சேட்டைய அடக்கினால்..’

“ஒ மை காட் அண்ணி…, இப்படிப்பட்ட அழகிக்கு நான் கொடுத்து வைக்கல இட்ஸ் ஓகே…, என்ன இருந்தாலும் நீயும் எனக்கு இன்னொரு அண்ணினு சொல்லமாட்டேன்…, வேணா.., என் ஃப்ரண்டா இருந்துகோ.., ஒகே…” அவளிடம் கைகொடுத்தான்.. “அவளும் சிரித்துகொண்டே…, உனக்கு ஃப்ரண்டா இருக்குறதைவிட தங்கச்சியா இருக்கேனே கார்த்தி… இது நல்லா இருக்குல அக்கா..” தெய்வாவும் கேலி செய்ய…, “நோ நோ… எனக்கு கீர்த்தியும்,மலரும் மட்டும் தான் தங்கச்சி, நீ என் அத்தை, பொண்ணு அதுனால முறை மாறக்கூடாதுமா..” அவனும் அவளுக்கு சரிசமாமாய் பேசினான்…”

‘கார்த்தி, உன்னவிட தெய்வா ஒரு வயது மூத்த பொண்ணு, அதுனால மரியாதை கொடுக்கனும்…, சரியா…, இப்படியெல்லாம் பேசக்கூடாது, அத்தான் மாதிரி தான் தென்னவனும் உனக்கு அண்ணன், அப்படி இருக்க, தெய்வாவ கேலி பண்ணக்கூடாது கார்த்தி” பாசமான கண்டிப்புடன் சொன்னால் வள்ளி..

‘‘சரிங்க அண்ணி…, இனிமே அப்படி பேசமாட்டேன்.., தெய்வா.. சாரி சாரி அண்ணி…,’’ அவனும் வள்ளியின் சொல்லுக்கேற்ப தெய்வாவுக்கு மரியாதை கொடுத்தான்…

‘அதற்கடுத்து கார்த்திகிடமும், கீர்த்தியிடமும், காலையில் நடந்தவற்றை, பரிசம் போடும் நாளும்,, அதே நாளில், பிரகாஷிற்க்கும், தெய்வாவிற்க்கும் நடக்கும் பரிசம் போடுவதையும், அதே நாளில் கல்யாண தேதியை குறிக்கப்படுவதை சொல்லிமுடித்தாள் வள்ளி….’

’’பஞ்சாயத்து நடக்கும் முதல் நாள், வள்ளி திருமூர்த்தியின் வீட்டுக்கு சென்றால், அவரும் வள்ளி எதற்க்கு தேடி வந்திருப்பால், கொஞ்சம் யோசனையாக இருந்தார்…’

‘‘வாம்மா, வள்ளி எப்படி இருக்க???’’

‘நல்லா இருக்கேன் ஐயா’’

‘‘உங்ககிட்ட பேசனும் ஐயா,’’

‘‘தெரியும்மா, சொல்ல வந்த விசயத்தை சொல்லும்மா’’

‘பஞ்சாயத்தை கூட்ட சொன்னது, நான் தான் ஐயா’

‘‘தெரியும்மா’’

'நாளைக்கு நடக்குப்போற பஞ்சாயத்துல...., எல்லாம் உண்மையும், வெளிவரப்போகுது ஐயா..., ஆனா..., இதுல தெய்வா பாதிக்கபடக்கூடாது ஐயா''

'சரிம்மா, அதுக்கு என்ன பண்ணலாம்,'

''அதுனால.. தெய்வாவுக்கும்,தென்னவனுக்கு கல்யாணம் பண்ணிவைக்கனும்,''

'சரிம்மா'

''ஐயா, நான் இதெல்லாம் எதுக்கு செய்யுறேனு நீங்க யுகிச்சுருப்பேங்க, ஆனா தெய்வா உயிரை,காப்பாத்த இதைவிட வேற வழி எனக்கு தெரியலை ஐயா,''

''இன்னும் முழுசா விசயத்தை சொல்லலையேம்மா..''

'தெய்வாக்கு ஆபத்து கழுத்துல இருக்குற கத்தி போல, எப்போ அவள் கழுத்தை அறுக்குனு சொல்லமுடியாதுங்க ஐயா, அதான் தெய்வாமேல ஆசைப்பட்ட தென்னவனுக்கே அவளை கல்யாணம் செஞ்சு வைக்காலானு முடிவு பண்ணிருக்கேன்..., இதை உங்ககிட்ட சொல்ல தான் வந்தேன் ஐயா, இன்னொரு விசயமும் இருக்குங்க ஐயா... அது.., மலரும்,பிரகாஷ் அண்ணாவும் விரும்புறது உங்களுக்கு தெரியும் அவங்க இன்னும் எத்தனை

நாளைக்கு தான் பிரிஞ்சு இருப்பாங்க ஐயா.., அவங்க இரண்டு பேரும் உங்க முடிவுக்காக தான் காத்திருக்காங்க ஐயா… அதுக்கும் ஒரு நல்ல முடிவ எடுக்கனும் நீங்க..’

‘‘சரிம்மா, அதையும் நான் ஏத்துகிறேன், ஆனா நீ ஏன் மா இந்த விசயத்தை என்கிட்ட மறைச்ச…’’

‘ஐயா.. இது என் அத்தைக்கு, எனக்கும் மட்டும் தான் தெரியுமுனு நினைச்சேன் ஆன உங்களுக்கு எப்படி தெரிஞ்சது ஐயா’ பாண்டியனிடம் கூட சொல்லாத விசயம் இன்று இவருக்கு எப்படி என, அவள் சிந்தித்து கேட்க.

‘‘பாண்டியன், ஊருக்கும் வந்த போதே எனக்கும் தெரியும்மா, ஆனா அந்த சூழ்நிலையில எதையும் நானும் கேட்கமுடியலை, எப்போ பாண்டியனுக்கும், குடும்பத்துக்கும் சொல்லப்போறம்மா.’’

‘பஞ்சாயத்து நல்ல படியா முடிஞ்ச பின்னாடி சொல்லானும் ஐயா’

‘‘என் மகள்மேல கோவம் படாம இந்த மூனு நாளும் நல்லா பார்த்திருக்க, அவளுக்கு கூட பிறந்த அக்காவ எப்பவும் நீ தெய்வாவுக்கு இருக்கனும்மா வள்ளி, எனக்காக ‘‘

'சொன்னாலும், சொல்லாட்டியும், தெய்வா என் சித்தி பொண்ணு தானே ஐயா..' அவள் உண்மையை சொல்ல... அவருக்கோ.. எப்படி வள்ளிக்கு தெரியும் அவர் யோசிக்க..

"ஐயா..., எனக்கும் எல்லாம் தெரியும்..., நாளைக்கு நடக்க போற பஞ்சாயத்துல இன்னொன்னும் நடக்கும் ஐயா, ஆனா அதை இப்போ சொல்லமாட்டேன் ஐயா" அவள் சொல்லிச் சென்றாள்... அதற்க்கு பின் எல்லாம் நடந்தவற்றை எல்லாம் கனவு போல் இருந்தது அவருக்கு...., "

'பிரகாஷுக்கு, அவனின் தந்தையை நம்ப முடியவில்லை, மலரின் தந்தைகூட சண்டை போட்டது என்ன, இப்போது அவரிடமே, பெண் கேட்பது என்ன, அனைத்து அதியமாக இருந்தது..., அவனுக்கு. காலையில் நடந்ததை நினைத்தவன், மலரிடம் பேசவேண்டும் போல் இருந்தது.., ஆனால் இடையில் தெய்வாக்கும் ஏன் தென்னவனை கல்யாணம் செய்து வைக்க வேண்டும், அவன் பேசுவதற்க்கே காசு கேட்ப்பவன் எப்படி தெய்வாவிடம் சகஜமாய் பழகுவான்.., ஒரு அண்ணாய் யோசிக்க.., அப்பொழுது மலர், பிரகாஷிற்க்கு அழைத்தால்.., அவளிடம் பேசும் ஆவலில், தெய்வாவின் நினைவை ஒதுக்கிவத்தான்...'

“ பரிசம் போடும் நாளுக்காக மணப்பெண்களும், மாப்பிள்ளைகளும் அந்த நாளுக்காக காத்திருந்தனர்”…

# அத்தியாயம் 15

''எல்லாம் நார்மலா இருக்கு, மிசஸ்.பாண்டியன்..., குழந்தை ஆரோக்கியமா இருக்கும்மா வள்ளி. நான் எழுதி தர மாத்திரைய மட்டும் வேளா வேளைக்கு சாப்பிட்டு எடுத்துக்கோங்க, அப்புறம் மார்னிங் சிக்னஸ் இருக்கா தான் செய்யும், அதுனால் வாந்தி எடுத்தாலும் பரவாயில்லை அடுத்து, ஜூஸ் குடிங்க..., அடுத்த மாசம் இதே தேதிக்கும் வாங்க ஸ்கேன் எடுத்துக்கலாம்..., மிஸ்டர். பாண்டியன்.., அவங்களை பத்திரமா பார்த்துக்கோங்க.., அப்புறம், ஒரு ரெண்டு மாசத்துக்கு உங்களுக்குள்ள எந்த தொடர்பு வேணாம்... சரியா...,'' மருத்துவர், வள்ளியை பார்த்து சொன்னார்..

'வள்ளியின் முதல் மாத செக்கபிற்கு அழைத்து வந்திருந்தான் பாண்டியன். அவள் தினமும் எடுக்கும் வாந்தியல் பாண்டியன் பயந்துவிட்டான்...,அதிலும் வள்ளி வழக்கத்தை விட தாமதமாக எழும் போதும்,அவளின் கையால் காஃபி கொடுப்பதும், அவனுக்கு சாப்பாடு வைப்பதும், அவனின் உடையை எடுத்து கொடுப்பதும், என அனைத்தும் தவறியது..., இதனால்,வீட்டில் உள்ளவர்கள் பதிக்கப்பட்டார்களோ இல்லையோ, பாண்டியன் மிகவும் பாதிக்கப்பட்டான்.., வள்ளியின் இந்த சோர்வு அவனை மிகவும் பாதித்தது.., இரவு நேரம் அவர்களுக்கான நேரம்,

அவர்களின் அன்றைய நாளை இருவரும் பகிர்ந்துகொண்டு பேசுவதும், இடையில் வள்ளி, பாண்டியனை தூங்க வைப்பதும், இவை எல்லாம் இருந்தது, ஆனால் வள்ளியின் மசக்கையால் இரவு, அவன் பேசிகொண்டிருக்கும், போதே அயர்ந்து உறங்கிவிடுவாள், இதனால் பாண்டியன் தவித்து போனான் இதை மனதில் வைத்துகொண்டு பாண்டியன், முத்தையாவிடம், பரிசம் போடும் தேதியை தள்ளி வைக்கலாம் என அவரிடம் சொல்ல, அவரோ அவனின் மனைவியின் மீது அக்கரையில் சந்தோஷம் கொண்டாலும், பரிசம் போடும் நாள் இன்னும் இரண்டு நாளே உள்ளதால்…அவர் அவனுக்கு புரியவைத்தார்…, அதற்க்கு பின் தான் வள்ளியை மருத்துவரிடம் அழைத்து வந்தான்..,''

''காரில், வள்ளி பாண்டியனுடன், பேசிகொண்டே வர அவனோ… ம்ம்ம்… சொல்லிகொண்டே வந்தான்.., வள்ளி, அவனது ''ம்ம்ம்'' சொல்லுவது வைத்தே அவனை புரிந்துகொண்டால், பாண்டியன் வேறு சிந்தனையில் உள்ளான் என்பதை, அதையும் அவனிடம் நேரே கேட்டால்… அதற்க்கு அவன் பதிலோ குழந்தை தனமாக இருந்தது…''

''இப்போ எதுக்கு அத்தான் அமைதியா வரேங்க…''

''இல்லைங்க வள்ளியம்மா, நான் பேசிட்டே தான் வரேன்..''

“ஆமா, நீங்க சொல்லுற.. “ம்ம்ம்” தான் உங்கள் ஊருல பேசுறதா.. இப்போ என்னனு சொல்லப்போறீங்களா இல்லையா அத்தான்”

“அது வள்ளியாம்மா..., இப்போ எல்லாம் நீங்க என்னை கண்டுக்கவே இல்லை, இரவுல நாமா எவ்வளோ நேரம் பேசிட்டு, என்னை உங்க மடியில படுக்க வச்சு தூங்க வைப்பேங்க ஆனா, இப்போ நான் பேசிட்டு இருக்கும் போதே தூங்கிடுறேங்க, அது மட்டுமா..., காலையில் கொடுக்கும் காஃபி யில் இருந்து அவனுக்கு செய்யும் ஒவ்வொன்றையும் பள்ளி குழந்தை ஒப்புவித்தான் வள்ளியிடம்...., “ இதெல்லாம் கூட தாங்கிருவேன் வள்ளியம்மா, ஆனா அந்த டாக்டர்.., உங்ககூட தொடர்புலேயே இருக்ககூடாதுனு சொல்லுறாங்க அதை தான் என்னால் தாங்க முடியலை வள்ளியம்மா.., நீங்க, என்கூட இருக்க போய் தான், எனக்கு சந்தோஷமா இருக்கு, ஏற்கனவே.. உங்களைவிட்டு என் படிப்புக்காக, பிரிஞ்சு,வேலைக்காக பிரிஞ்சு, தாமரை அத்தைக்காக பிரிஞ்சு இப்போ தான் உங்ககூட இருக்கேனு சந்தோஷமா இருக்கேன் வள்ளியம்மா. ஆனா அந்த டாக்டர் அப்படி சொல்லுறாங்க அதான்...,” அவனின் முழு ஏக்கத்தையும் சொல்லிமுடித்தான்..., அந்த மருத்துவர் தொடர்பு இருக்ககூடது என சொன்னதும் அவன், வள்ளி தன்னுடன் ஒரே அறையில்

இருக்கமாட்டால் , பேசாமல் இருப்பது என பாண்டியன் நினைத்துகொண்டான், ஆனால் அவர் சொன்னது “அந்த தொடர்பு” என அவனுக்கு தெரியவில்லை

“இதை கேட்ட வள்ளிக்கோ, பாண்டியனை இவ்வளவு தூரம் ஏங்க வைத்துள்ளோம் என்பதை புரிந்துகொண்டால்.., அதிலும், அவனின் படிப்பைவிட, வேலைக்காக பிரிந்தது தான் அவர்கள் இருவருக்கும் வேதனை அதிகமாக இருந்தது…, கல்யாணம் புதிதில் பாண்டியன், வள்ளியிடம் செலவிட்ட நேரமும் கொஞ்சம் குறைவு தான் ஆனால்…, அதை நிறைவு செய்யவே, பாண்டியன் அவளிடம் முன்பைவிட அதிக காதலுடனும், அன்புடனும் இருந்தான்…,.., ஆனால் வள்ளி அதை புரிந்துகொண்டு தான் இருக்கின்றால்.., மசக்கையினால், பாண்டியனை கவனிக்க தவறினால்…, பாண்டியன், வள்ளியிடம் இப்படி கூறியது, தன் காதல் குழந்தையின் வரவால் அவனை, மிகவும் ஏங்க வைத்ததை நினைத்து, அவள், கவலைகொண்டால்.., இனியும், அத்தானை ஏங்க வைக்கக்கூடாது.., முடிவுடன் அவனிடம் பேச ஆரம்பித்தால்…,”

“அத்தான்.., உங்க பொண்ணு படுத்துறப்பாட்டுல, என்னால ஒருவேளையும் செய்ய முடியலை, நீங்களே என்னை பார்த்தேங்கள…, நான் சோர்வா இருக்குறது.., இனி என் அத்தான

நான் கவனிக்காம இருக்க மாட்டேன்.., இரண்டாம் மாசம் ஆகிருச்சுனா.., எனக்கு இந்த சோர்வு இருக்காது.., அத்தான்.., அதுவும் இல்லாம அந்த டாக்டர்.., அப்படி சொன்னா, நமக்குள்ள இருக்குற காதல் குறைஞ்சுரும்மா என்ன…, அவங்க அப்படி தான் சொல்லுவாங்க ஆனா, நான் அப்படி சொல்லலையே,…,. அத்தான்…, யார் என்ன சொன்னாலும், உங்க காதலும்,என் காதலும், நாளுக்கு நாள் கூடுமே தவிர, குறையாது, குறையவும் விடமாட்டேன்…, சரியா…,'' அவனின் கையுடன்,கையை சேர்த்து அவனை மகிழ்ச்சிப்படுத்தினால்.. வள்ளி..,

''பரிசம் போடும் நாளும் வந்தது.., பரிசம் போடும் நாள் அன்று காலை தான் மாறன் ஊருக்கே வந்தான்.., வள்ளியை பார்க்க, மாறன் புறப்படும் போது, செல்வி அவனை தடுத்தார்.., ஏன் எனக்கேட்டதற்க்கு, பரிசம் போட மாலையில் செல்வோம், அப்போது உன் தங்கையை பார்த்துகொள்ளலாம்…, அது வரை வெளியில் செல்லக்கூடாது என சொல்லிவிட்டார்.., மாறனுக்கும், அதுவே சரி எனப்பட.., அவனும் செல்லவே இல்லை..,''

''இரண்டு ஊர் மக்களும், மூன்று வீட்டு மாப்பிள்ளைகளும், மூன்று வீட்டு குடும்பமும், அந்த சபையில் அமர்ந்திருந்தனர்.., பிரகாஷிற்க்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.., எப்பொழுதுடா…, மலரை பார்ப்போம் என்று, மாறனுக்கும் மகிழ்ச்சி தான்.., ஆனால்

கீர்த்தியை சிறுவயதில் பார்த்தது.., இப்போ அவள் எப்படி இருப்பாள் எனத்தெரியவில்லை, அவனும் அவளுக்காக தான் காத்திருந்தான்.., தென்னவனோ.., மனதில் நடுக்கத்துடன், வெளியில் அமைதியுடன் இருந்தான்…, தெய்வாவின் சம்மத்துடன் நடந்தாலும், அவளின் முழு விருப்பத்தையும் அறிந்துகொள்ள விரும்பினான்..,., மாப்பிள்ளைகள் இவ்வாறு நினத்துகொண்டிருக்க, மூன்று வீட்டு குடும்பமோ, சந்தோஷம், ஆனந்தக்கண்ணீருடன் தென்பட்டது…, வந்திருந்த விருந்தாளிகளை கவனிக்கவும், சமையல் நடக்கும் இடத்தில் கவனிக்கவும், இரண்டு தங்கைகளின், மற்று, அத்தை மகளின் நிச்சிய விழாவில் குறை ஏதும் நிகழ்ந்துவிடக்கூடாது என பார்த்து, பார்த்து வேலைகளை செய்துகொண்டும், வேலை ஆட்களை அன்புடன் வேலை வாங்கிகொண்டு இருந்தான் பாண்டியன்…,’’

‘‘நிச்சயப்பெண்களை, தன் கைவண்ணத்தால் அலங்கரித்துகொண்டிருந்த வள்ளி, ஒவ்வொருவருக்கு, பரிசச்சேலை கொடுப்பதற்க்கு முன், சாதாரண பட்டு சேலையை தேர்வு செய்து, அவர்களுக்கு கொடுக்கவும், நிச்சய பெண்களின் கூடவே இருந்தாள்.., வள்ளி.., மலர், கீர்த்தி என இருவரும் அவர்களுக்குள்ளே கிண்டல் செய்துகொண்டிருந்தனர்..,

தெய்வாவோ.., அவர்களின் கிண்டலை பார்த்து சிறித்துகொண்டிருந்தால்..,.,''

''மலர் அண்ணி, உங்களுக்கு பரிசம் போடாத அப்பவே, அண்ணாக்கூட டூயட் ஆடுவேங்க..., இன்னைக்கு பரிசம் போட்டவுடனே எந்த பாட்டுக்கு டூயட் ஆடுவேங்க..,'' கீர்த்தி கேலி செய்ய...,

''வேணாம் கீர்த்தி, என்னை கேலி செஞ்சா உனக்கு தான் சேதாரம் அதிகம், மலர் சொல்ல..''

''நீங்களும் என்னை சேதாரம் ஆகிட்டாலும், உண்மைய சொல்லுங்க, நீங்களும் அண்ணாவும், ஒரே ஊருல தான் இருக்கேங்க, பார்த்துகிறேங்க, பேசிக்கமட்டும், உங்களுக்குனு மாந்தோப்பு தான் ரொம்ப பிடிக்குமாமே.. உண்மையா அண்ணி..'' கீர்த்தி, மலரை அதிகமாய் கேலி செய்ய..., தெய்வாவோ இதுவேறையா என்ற பார்வையில் மலரை பார்த்து கொண்டிருந்தால்,

''மதினி, உங்க நாத்தனார் என்னை ஓட்டுறா...,நீங்களும் பார்த்துகிட்டு சிறிக்குறேங்க..., அவளை திட்டுங்க மதினி..., ''மலர் வள்ளியிடம் புகார் வாசிக்க...

‘‘கீர்த்திமா.., மலரை ஓட்டாத…,’’ வள்ளியின் அன்பு கோவமும் கீர்த்திக்கு பழகியது…. கீர்த்தி, மலரிடம், ஆரம்பித்து, வள்ளியின் காதலை ஓட்ட, பிராகாஷின் காதல் வரையில் வந்தி நின்றாள்.’’

‘‘மலர்… ‘‘தெய்வாவ மட்டும் விட்டு வச்சுருக்க…, அவங்களையும் கிண்டல் பண்ணவேண்டியது தானே..’’ மலர் கேட்க..

‘‘அவங்க அமைதியா, இருக்காங்க.., முக்கியமா அவங்க காதல் செய்யவே இல்லை, தென்னவன் அண்ணாவும் அப்படிதான்.., அதுனால இரண்டு பேருமே இனி கல்யாணத்துக்கு அடுத்து தான் காதல் பண்ணப்போறாங்க அப்போ கிண்டல் செய்யலாம்… என்ன அண்ணி நான் சொன்னது சரி தான…’’ மலர் கேட்டதுக்கு, தெய்வாவிடம் பதில் சொன்னால்..

‘‘ம்ம்ம்.., ஆமாம் கீர்த்தி.., என் வாழ்க்கையில.., யார் மீதும் காதல் ஏற்ப்படலை,’’

‘‘நீ வேணா பாருங்க மதினி, என் அண்ணா தான் உங்ககிட்ட காதலை சொல்லப்போறாங்க…’’ மலர், தெய்வாவை சொல்ல ’’என்ன கீர்த்தி..’’

‘‘ஆமாம்.. அண்ணி, மலர் அண்ணி சொல்லறது சரி, அமைதியா இருக்கறவங்க தான் காதல் பண்ணு வாங்களாம்.., ஏன் என் அண்ணா பண்ணலை..’’ மறுபடியும் கிண்டலை ஆரம்பிக்க.., சபையில் நிச்சயப்பெண்களை அழைத்து வரச்சொல்லி, அழைப்பு வந்தது…. பெரியவர்களிடம் இருந்து’’

‘‘மாப்பிள்ளை வீட்டார் ஒரு பக்கமும், பெண் வீட்டார் ஒரு பக்கமும் அமர்ந்திருந்தனர்…, வயதில் மூதத்வர்.., அதாவது.. நாலு,ஐந்து தலைமுறையை பார்த்தவரை, பெரிய தலைகட்டு எனகூறுவர்…, அவரின் முன்னிலையில்.., ஆரம்பித்தார்கள்…, இருவீட்டினர் பக்கமும் பெரிய தலைக்கட்டுடன்.., நிச்சிய விழா தொடங்கியது…’’

‘‘எல்லோருக்கும் வணக்கம்…, நீங்க எதுக்காக எங்க வீடு தேடி வந்தீங்கனு நாங்க தெரிஞ்சுக்கலாம…, என்ன விசயம்னு சொல்லுங்க’’ ஒரு பெரியவர் மூன்று குடுபத்துக்கும் சேர்த்து, பெண்வீட்டு பக்கம் இருந்து பேச…’’

‘‘வணக்கம், நாங்க கோட்டையூர் பக்கம் கிராமம்.., எங்க மூனு குடுப்பத்து பசங்களுக்கு உங்க மூனு வீட்டு பொண்ணுங்களை, பொண்ணு கேட்டு வந்துருக்கோம்,அதுவும் இல்லாம இந்த பசங்களோட குடும்பமும், பொண்ணு வீட்டுக்கு

நெருங்கின சொந்தம்…, பொண்ணு தட்டி வேற யாருக்கும் போக கூடாதுனு தான் நாங்க விரசா நல்ல நாள் பார்த்து, பொண்ணு கேட்டு வந்திருக்கோம்.., உங்க பொண்ணு தான் எங்க மூனு வீட்டு மருமகளுங்க..,'' மாப்பிள்ளைகளின் குடும்பத்து பக்கம் அவர் பேச.

''ரொம்ப சந்தோஷம்…, எங்க பக்கம் இருந்து பொண்ணுக்கு என்ன செய்யமுடியுனு நாங்க சொன்னதுக்கு பின்னாடி.., உங்க சம்மதத்தை சொல்லுங்க…,எங்க வீட்டு மூனு பொண்ணுங்களுக்குமே, அம்பது பவுனு நகை தான்,அதுக்கு மேல வெள்ளி,பித்தலை, சில்வர், மாப்பிள்ளைகளுக்கு, பத்து பவுனு தான்…, அப்புறம்.., கல்யாண விருந்துக்கு வந்தாங்கனா அதுக்கு ஏத்த மாதிரி சீர் செய்வோம்.., உங்களுக்கு எப்படி…., இதில சம்மதமா''

''உங்க பொண்ணு, எங்கவீட்டுக்கு மருமகளா வந்தா போதும், நாங்க சீர்செனத்தி எதிர்ப்பார்க்கலைங்க, கட்டின புடவையோட…, அனுப்பி வச்சாலும் எங்களுக்கு சம்மதம் தான்..,''

''அப்போ சரி…, எங்களுக்கும் இந்த சம்பந்த்துல, சம்மதம்…, இரண்டு பக்கமும் மூனு வீட்டு சம்பந்தம் இருக்குது.., மூனு வீட்டு

சார்பா.., ஒருத்தர் தட்டு மாத்துங்க..., மாப்பிள்ளை பக்கம்.., யாரு இருக்கேங்க.., அவர் கேட்க...,''

''எங்க மூனு வீட்டு சார்பா... தமிழ்செல்வியும்,முருகவேலும், மாப்பிள்ளை பசங்களுக்கு அம்மா அப்பா இருந்து தட்டு மாத்துவாங்க...,'' அந்த பெரியவர் சொல்ல..

'' பொண்ணு வீட்டு பக்கம், முத்தையாவும்,மீனாட்சியும், பொண்ணுங்களுக்கு அம்மா, அப்பாவா இருந்து தட்டு மாத்துவாங்க...,'' அவர் சொல்ல.. இரண்டு வீட்டு பக்கமும், மகிழ்ச்சியுடன்.. அதை வாங்கியும்,கொடுத்தும் கொண்டனர்.., இதை எல்லாம், அழகாக.. படம் பிடித்தான்.. கார்த்தி...''

''சரிங்க, பொண்ணு அழைச்சுட்டு வாங்க.., எங்க குடும்பத்து சார்ப்பா பொண்ணுங்களுக்கு, பரிசச்சேலையும், தாலிக்கொடியும், மாப்பிள்ளை பசங்களும்,பொண்ணுங்களும் மாத்திக்க மோதிரமும் எடுத்துட்டு வந்திருக்கோம்.., அதை போடனும்.., '' அந்த பெரியவர் சொல்ல...,

''சரிங்க..., இதோ அழைச்சுட்டு வரச்சொல்லுறேன்...,''... '' ஏம்மா, மீனாட்சி..., உன் மருமக.. வள்ளியை அந்த

பொண்ணுங்களை அழைச்சுட்டு வரச்சொல்லு…,'' பெரியவர் சொல்ல… ''இதோ இப்பவே சொல்லுறேன் ஐயா..''

''மூன்று பெண்களும், வந்தனர்.., இருப்பக்கமும், வள்ளியும், வாணியும் அவர்களை அழைத்து வந்தனர்…சபைக்கு…,'' மூவ்வருக்குமே, கொஞ்சம் பயமாக தான் இருந்தது.., அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல்.., சபையில் நின்று ஊர் மக்களுக்கு, பெரியவர்களுக்கும், வணக்கம் சொல்லி, ஆசீர்வாதம் வாங்கினர் மூவரும்..''

''வணக்கம் பொண்ணுங்களா…, நாங்க தான் மாப்பிள்ளை வீட்டுக்காரவாங்க…, எங்க வீட்டு பசங்களுக்கு தான் உங்களை பொண்ணு கேட்டு வந்து, இப்போ உங்களை எங்க வீட்டு மருமகளா அனுப்ப.., உங்க வீட்டுலையும் சம்மதம் சொல்லி தட்டு மாத்திட்டோம்.., உங்களுக்கு இந்த கல்யாணத்துல சம்மதமா பொண்ணுங்களா'' அந்த பெரியவர்.. மூவரிடம் கேட்க…

''எங்க அம்மா, அப்பா, பார்த்து எது செஞ்சாலும் அதுல எங்களுக்கு சம்மதம் ஐயா…'' மூவருமே ஒன்றாக கூறினர்…

''இப்படி தான் பொண்ணு இருக்கனும், நல்ல வளர்ப்பு முத்தையா, உங்க சம்மதமே அவங்க சம்மதம்னு சொல்லிட்டாங்க, இனி எங்க வீட்டு பசங்க ஒவ்வருத்தரா… பொண்ணுக்கு சீர்

செய்வாங்க..., முதல "மலைமாறனுக்கும் —கீர்த்திக்கும்" சீர் செய்யுங்க அவர் சொல்ல.."

" மாறன், கீர்த்தியிடம் தாம்பூழத்தட்டில் "பரிசச்சேலையில், வெற்றிலை,பாக்குடன்" அவளிடம் கொடுத்தான்.., அதை பின்பற்றி பிராகாஷும், தென்ன்வனும் கொடுக்க..., அதை மூவரும் வாங்கி கொண்டு, பரிசச்சேலை கட்டி வந்தனர்...,"

"மாறன், கீர்த்திக்கு மாலையிட்டு, அவளுக்கு வாங்கிருந்த தாலிகொடியயும் போட்டுவிட்டான்..., பின் இருவரும் மோதிரம் மாற்றிகொண்டனர்..,",... பிரகாஷூ, மலருக்கு மாலையிட்டு, தாலிகொடி போட்டுவிட்டான்.., மோதிரம் மாற்றிகொண்டனர்.. இருவரும்..., அடுத்து தென்னவனும்,தெய்வாவின் ஜோடி மட்டுமே பாக்கி.."

"பெரியவர்... "என்னப்பா.. தென்னவா.. அடுத்து நீதான்... போ.. பொண்ணு உனக்காக காத்திருக்கு" அவர் சொல்ல... அவனும்.. தெய்வாவின் அருகில் சென்று நின்றான்..., செல்வி அவனிடம் மாலையை கொடுக்க..., அதை வாங்கி அவளுக்கு போடும் பொழுது அவனது கை நடுங்கியது..., இதை பார்த்த ஒருவர்.. "ஏம்ப்பா... இப்படி நடுங்குனா.., பொண்ணு கொடுக்க மாட்டாங்க... தைரியமா நில்லுப்பா..." அவனை கேலி செய்ய....

மற்றிவரின் கண்ணுக்கு தான் அப்படி தெரிவது அவனுக்கு வெக்கமாக போனது…, அடுத்து அவனது கையில் தாலிகொடியை கொடுக்க…, அதை கையில் வாங்கியவன்.., அவள் கழுத்துக்கு அருகே கொண்டு செல்லும் போது…, தெய்வாவின் அருகில் வந்து நின்றால்.. வள்ளி…, வள்ளி, தென்னவனை பார்த்து, கண்ணசைவில் அவனை தைரியப்படுத்தினால்.., அவனும்.. வள்ளி அருகே இருப்பதால்.., தெய்வாக்கு கையில் வைத்திருந்த தாலிக்கொடியை போட்டுவிட்டான்…, மோத்திரத்தை எடுத்து அவளின் கையின் அருகே.. செல்ல.., தெய்வா அவளது கையை தானாக அவனிடம் கொடுத்தால்…, அவனும்.. கொஞ்சம் அதிசயமாக பார்த்தான்…, தாமதிக்காமல் அவளின் விரலில் மோதிரத்தை போட்டுவிட்டு, அவளை தனக்குறியவளாக்கினான் தென்னவன்..’’

’’ மூனு பொண்ணுக்கும் சீர் செஞ்சாச்சு, அடுத்து… கல்யாண தேதி அறிவிப்பை சொல்லிடலாம்… என்னங்க நான் சொல்லுறது சரியா..,’’ அவர் கேட்க..

‘‘சரிதானுங்க… கல்யாண தேதி குறிச்சுட்டா, அதுக்கான வேலையை ஆரம்பிக்கனும்ல…, சொல்லுங்க…’’

‘‘ஸ்ரீ விளம்பி வருடம், அங்காளஈஸ்வரி,கருப்பணச்சாமி.. இவர்களின் ஆசீர்வாதமும், எல்லா தெய்வங்களின் சாட்சியாகவும்,

திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த..ரத்தினவேல், ராக்காயின் பேரனும், முருகவேல் — தமிழ்செல்வியின் மகனுமாகிய… செல்வன். மலைமாறனுக்கும். திண்டுக்கல் மாவட்டம், கோட்டையூரை சேர்ந்த, சேதுபதி —ராஜாகுமாரியின் பேத்தியும், முத்தையா —மீனாட்சியின் மகளுமாகிய செல்வி, கீர்த்திக்கும் வருகிற.. கார்த்திகை மாதம், நவம்பர் 28 தேதி திருமணம் நிச்சயம் செய்யப்படுகிறது… அதே போல், மருதமலை — தெய்வானையின் பேரனும், திருமூர்த்தி —தெய்வத்திரு . கங்காதேவியின் மகனுமாகிய செல்வன் . பிராகாஷ் என்கிற பிரம்மமூர்த்திக்கும், அதே ஊரை சேர்ந்த, தெய்வத்திரு ராஜாவேலன் —வேலாம்மாள் பேத்தியும், சிவநாதன் — தெய்வத்திரு நாகலெக்சுமியின் மகளுமாகிய செல்வி தங்கமலருக்கும், கார்த்திகை மாதம், நவம்பர் 28 தேதி ஒரே நாளில் இரு ஜோடிகளின் திருமணம் நிச்சயக்கப்படிகிறது….,''

‘‘கோட்டையூரை சேர்ந்த, சிவநாதன் — தெய்வத்திரு நாகலெக்சிமியின் மகன், செல்வன் தென்வனுக்கும், அதே ஊரை சேர்ந்த, திருமூர்த்தி — தெய்வத்திரு கங்காதேவியின் மகள் செல்வி. தெய்வப்ரியாவுக்கும், வருகிற.., கார்த்திகை மாதம், டிசம்பர் 9 தேதி திருமணம் நிச்சயம் செய்யப்படுகிறது… என் இரு வீட்டு பெரியவர்களின் சம்மத்துடன் உறுதி செய்யப்படுகிறது.''

“என்னப்பா…, இதுல எல்லாருக்குமே சம்மதம் தானே…,”

“சம்மதம்..ஐயா”

“ அப்படின்னா கல்யாணத்துக்கு இன்னும் மூனு வாரம் தான் இருக்கு, ஒன்னுக்கு இரண்டு கல்யாணம்.., அடுத்த கல்யாணத்து இன்னும் ஒரு வாரம் அதிகமாவெ இருக்கு, இரண்டு வீட்டு பக்கமும் நிதானமும்,வேகமாகவும், கணபதியை கும்பிட்டு வேலையை ஆரம்ப்பிங்கப்பா” இரு பெரியவர்களும் ஒரு சேர கூறினர்.”

“இவை அனைத்தையுமே மிஸ் செய்யாமல்…, ஒவ்வொரு இடத்திலும் அவர்களின் நிச்சயதார்த்தம் நடந்த தருணத்தை படம் பிடித்தான் கார்த்திக்”

“ பாண்டியனும், தன் குடும்பத்தின் மகிழ்ச்சியையும் அதற்க்கு காரணமாக இருந்த வள்ளியையும் பார்த்துகொண்டிருந்தான்.., அனைவரும்மே மகிழ்ச்சியில் இருந்தனர்…, வந்திருந்த மாப்பிள்ளை வீட்டாருக்கும், ஊர் மக்களுக்கு, விருந்து வைத்தனர்..”

“தெய்வாக்கு தான் மனதில் சொல்ல முடியாத உணர்வு, இருந்தும் அதை வெளிக்காட்டவில்லை…, இரு ஜோடிகளும்,

தங்களுக்குள் இருக்கும் சந்தோஷத்தை அவரவர் இணைகளிடம் பேசிகொண்டே, பகிர்ந்தனர்..., ஆனால் ஒரு ஜோடி மட்டும் என்ன பேசுவது என தெரியாமல் இருவரும் அமைதியாக இருந்தனர். இவர்களை பார்த்த கார்த்திக், ‘‘தென்னவன் அண்ணா, நீங்க ரெண்டு பேர் மட்டும் ஏன் சிரிக்காம இருக்கீங்க..., அங்க பாருங்க அந்த இரண்டு ஜோடியும் என்ன செய்யுறாங்கனு, என்னமோ இவங்களை இத்தனை வருசமா பிரிச்சு வச்சு, இப்போ தான் சேர்ந்த மாதிரி, வந்தவங்களை கூட கவனிக்காம எப்படி சிரிச்சு பேசிட்டு இருக்காங்கனு பாருங்க,... மாறன் மாமா கூட இன்னைக்கு வந்தாரு, அவரை விடுங்க..., இந்த பிராகாஷ் மாமா என்ன அலும்பு பண்ணறாங்கனு பாருங்க..., மலர் அக்காவ இன்னைக்கு தான் பார்க்குறதை போல விடமா பேசிட்டு இருக்காரு, நீங்க ரெண்டு பேரு மட்டும் ஏன் அமைதியா இருக்கீங்க..., தெய்வா... சாரி...சாரி அண்ணி..., நீங்களாச்சும் அண்ணாக்கிட்ட பேசவேண்டியது தானே..., அப்போ தான் நான் போட்டோ எடுக்க நல்லா இருக்கும், இப்போ இரண்டும் பேரும் ஒருத்தர், ஒருத்தர் எதிர்ச்சியா பார்க்குற மாதிரி பாருங்க..., அண்ணா நீங்க மட்டும் கொஞ்சமா ஸமைல் பண்ணுங்க..., “ கார்த்தி சொல்ல..., தென்னவனுக்கோ.., ’’பெரிய சோதனையா.. இருக்கே... இந்த கார்த்தி வேற என்ன்னையும், அவளையும் இப்படி பண்ண சொல்லுறானே..., அவளுக்கு பிடிக்குமோ,

பிடிக்காதோ..., " தென்னவன் மனதில் பேசிக்கொண்டிருக்க..., கார்த்திக், மறுபடியும் அவர்களை போஸ் கொடுக்க சொல்ல..., வேறுவழியில்லாமல்..., தென்னவன், தெய்வாவை பார்க்க, அவளும் அவனை மெதுவாக பார்த்தாள்..., "அண்ணா, கரெக்டா செய்யுறேங்க...,.., அப்படியே கொஞ்சமா சிரிங்க...," கார்த்திக் சொல்ல.., தென்னவனின், மனதில் அவளை முதல் முதலாய் பார்த்த நினைவை மனதில் நிறுத்திக்கொண்டு, இதழ் ஓர சிரிப்பை அவளை பார்த்து சிரித்தான்..., அதை அழகாக கார்த்திக், போட்டோ எடுத்தான்..., " அண்ணா, சூப்பர்.. ரொம்ப அழகாக போட்டோ விழுந்துருக்கு, பாருங்களேன்..," அவனின் மோன நிலையை கலைத்தான்.... தெய்வாக்கோ... அவனின் சிரிப்பு, கொஞ்சம் கொஞ்சமாய் மனதில் பதிய வைக்க நினைத்தாள்...,"

"வந்திருந்த மாப்பிள்ளை வீட்டாரும் தவிர, அவர்களின் சொந்தம், பந்தகளும், பரிசம் போட்ட கையுடன், கிளமபினர்..., மாறன் மட்டும், வள்ளியை பார்த்து பேசிகொண்டிருந்தான்.. அவன், மாமான் ஆன மகிழ்ச்சியில் அவளிடம், வெளிபடுத்திகொண்டிருந்தான்.. "எப்போ சொல்லுற ஸ்ரீமா.., அண்ணாகிட்ட வந்த போதே சொல்லிருக்களாமே..., ஏன் மா.., அம்மாகூட என்கிட்ட, நீ மாசமா இருக்குறதை சொல்லவே இல்லையே" அவன் வருத்தமாய் பேச.."

“அண்ணா, சொல்லகூடாதுனு இல்லை..., நீங்க எப்படியும் ஊருக்கு வருவேங்கனு தெரியும் அதான், வந்ததும் சொல்லிக்கலாம்னு விட்டேன்.., இதுக்காக ஏன் அண்ணா, வருத்தப்படுறேங்க...,.,” அவள் சமாதானம் படுத்த.. “ மாறனோ, வள்ளியை தோளோடு அணைத்து, வள்ளியின் தலையை கோதிவிட்டான்.., இதை பார்த்த, அனைவரும் சந்தோஷமாக இருந்தனர்..”

“தென்னவனுடன் தெய்வாவை பார்த்தவள், அவளை அருகில் வரசொன்னால் வள்ளி...,..., “ அண்ணா, இவ.. தெய்வப்ரியா.., ஐயாவோட பொண்ணு, பிரகாஷ் தங்கச்சி, இவளும் உனக்கு என்னை மாதிரி தங்கச்சிதான்...,” மாறனுக்கு அறிமுகம் செய்துவைத்தாள்..., “தெய்வாம்மா, இவங்க என் அண்ணா..., மலைமாறன் அண்ணா, உனக்கும் பிராகாஷ் அண்ணா மாதிரி தான், இவங்களும், நீயும் இனி இவங்களை, அண்ணானு தான் சொல்லனும்.. சரியா” வள்ளி தெய்வாக்கு சொல்ல.., இருவரும் பேசிகொண்டனர்.., “வள்ளி சொன்ன மாதிரி நீயும் எனக்கு, வள்ளி மாதிரி தான்மா ப்ரியா.., சரியா..,” அவன் இயல்பாய் பேச.., “அவளோ, சரிங்கண்ணா,” அவனுடன் பேசினால்...,

‘‘இப்பொழுது மாப்பிள்ளை வீட்டாரும் கிளம்ப ஆரம்பித்தனர்….’’.. ‘சரிங்க அண்ணா, நாங்க கிளம்புறோம், எல்லோருக்கும் போயிட்டு வரோம், அண்ணி, வள்ளி உடம்ப பார்த்துக்கோ, தெய்வா, கீர்த்தி, கார்த்தி மாப்பிள்ளை, போயிட்டுவரோம்…., ஐயா, மாமா, தென்னவா, மலர்.. போயிட்டுவரோம்.., தமிழ்செல்வியும்,முருகவேல்,மாறன் மூவரும் கிளம்பினர்..,’’

‘‘முத்தையா, நாங்களும், கிளம்புறோம்.., தெய்வா,அண்ணன அழைச்சுட்டு வா.., போகலாம்.., திருமூர்த்தி ஐயாவும் அனைவரிடம் சொல்லிகொண்டு கிளம்பினார்.., அதை தொடர்ந்து, சிவநாதனு, தென்னவன், மலரை அழைத்துகொண்டு புறப்பட்டனர்..’’

‘‘அறையில், உடையை மாற்றிவிட்டு சாய்ந்து படுத்து இருந்த பாண்டியன், இன்று நடந்த விழாவை நினைத்துகொண்டிருந்தான்.., அப்பொழுது குளியல் அறையில் இருந்து உடையை மாற்றிகொண்டு வந்த வள்ளி, அணிந்திருந்த பட்டுபுடவை, மடித்து, தொங்கவிட்டாள்…, கழட்டி வைத்த நகையை பீரோவில் வைத்துவிட்டு, பாண்டியன் அருகில் நெருக்கமாகா அமர்ந்தால் வள்ளி.., ’’

“ என்ன அத்தான், யோசனையா இருக்கேங்க…, இன்னைக்கு நடந்த நிச்சய விழாவை நினைச்சுட்டு இருக்கேங்களா..,”

“ இல்லைங்க வள்ளியம்மா.., நமக்கு நடந்த நிச்சய விழாவை நினைச்சு பார்த்துட்டு இருந்தேன்.., அதுவும் இல்லாம, பரிசம் போட்ட போது நான் கொடுத்த பரிசச்சேலைய தானே இன்னைக்கு உடுத்தி இருந்தேங்க, அதுல உங்களை பார்த்ததும்.., எனக்கு நம்மக்கு நடந்த நிச்சயதார்த்தம் ஞாயபகம் வந்திருச்சு.., அதான் நினைச்சு பார்த்துட்டு இருந்தேன்..,” அவனும், வள்ளியை நெஞ்சில் சாய்த்துகொண்டு, விரலை பிடித்து சொல்லிகொண்டிருந்தான்…,.

“ வள்ளி, முன்பைவிட இன்னும் அதிக நெருக்கத்துடன்.. அவனை நெருங்கி, அமர்ந்தால்.., வள்ளியின், இந்த நெருக்கத்தை பார்த்தவன்…, வள்ளியிடமும் கேட்டான்.. “ என்னங்க வள்ளியம்மா, ஏதோ சொல்ல வரேங்க…, ஆனா சொல்ல முடியாத நிலையில இருக்குறது போல தெரியுது.., சொல்லுங்க வள்ளியம்மா..,” அவன், கேட்கவும்.., அவளும் பதில் சொன்னால்..

“ அத்தான்…, உங்ககிட்ட நான் சொல்லாம சில காரியம் பண்ணிட்டேன்.., அதை இப்போ சொன்னா, நீங்க எப்படி எடுத்துக்குவேங்கனு தெரியலை, அதை சொல்லுறேன் அத்தான்…, பஞ்சாயத்துல நடந்ததுக்கு முன்னாடி,” அவள் சொல்ல வருவதை,

ஒருவிரல் கொண்டு அவளி உதடுகளை மூடினான்.., ‘‘எனக்கு எதுவும் தெரியாவேணாம், வள்ளியம்மா…, நீங்க எது செஞ்சாலும் அது என்க்கும், நம்ம குடும்பத்துக்கும் நல்லாத தான் இருக்கும், வள்ளியம்மா. நீங்க எதுவும் சொல்ல வேண்டாம், சரியா..,’’ அவன், வள்ளியை சொல்லவிடாமல் தடுக்க.., வள்ளிக்கோ.., ‘‘இப்போ தெரியாம, அத்தானுக்கு, பின்னாடி வேற சூழ்நிலையில தெரிய வந்தா.., ரொம்ப பிரச்சனை ஆகிடுமே, அத்தான் ஏன் சொல்ல வருவதை தடுக்குறாங்க…,’’ வள்ளிக்கு கவலையாக இருந்தது…

‘‘வள்ளியம்மா, இப்போவே மணி பதினொன்னு ஆகப்போகுது, இவ்ளோ நெரம் தூங்காம இருந்தா, உங்களுக்கும்,பாப்பாவுக்கும், நல்லது இல்லை..,’’ பாண்டியன் சொல்ல.., வள்ளியோ.., ஏற்கனவே.., அத்தனை ஒருவாரம் ஏங்க வைத்துவிட்டோம், இன்று.. என் உடல் நிலையை கருத்தில் கொண்டு அத்தான் பேசுவது.., அவளுக்கு சந்தோஷமாக இருந்தாலும், அவனை உறங்க வைக்கும், பொறுப்பு வள்ளியுடையதாகும், ‘‘ அத்தான்.., உங்க பொண்ணு சமத்தா இருக்கும், அவளுக்கு ஒன்னும் ஆகாது, நீங்க தூங்குங்க வாங்க.., அவன் தலையை மடியில் சாய்த்து, தலை கோத்திகொண்டே

# காதலின் இரு துருவங்கள்

அவனை தூங்க வைத்தாள்.., அப்பொழுதுதான் அவளுக்கு அந்த பாட்டின் வரிகள்.., நினைவில் வந்தது..,

*“ஒரு பிள்ளை கருவில் கொண்டு*

*ஒரு பிள்ளை கையில் கொண்டு*

*உறவாடும் யோகம் ஒரு தாய்கின்று*

*மழலை போல் உந்தன் நெஞ்சம்*

*உறங்கட்டும் பாவம் கொஞ்சம்*

*தாய்க்கு பின் தாரம் நான் தான் அய்யா*

*தாலேலோ பாடுவேன் நீ தூங்கடா*

*தாயாக்கி வைத்ததே நீயடா நீ யடா*

*தலைவா நீ எந்தன் தலைசன் பிள்ளை*

*பாடுகிறேன் நான் தாலோ*

*கனிசே பூ விழி தாலோ*

*பொன்மணி தாலேலோ*

*நிலவோ நிலத்தில் இறங்கி*

*உன்னை கொஞ்ச என்னுதே*

*அதிகாலை சேவல் கூவும் அதுவரை*

*வஞ்சி நெஞ்சில் நீயும் உறங்கிடு*

*தலைவா*

*நீ எந்தன் தலைசன் பிள்ளை*

*பாடுகிறேன் நான் தாலோ*

*கனிசே பூ விழி தாலோ*

*பொன்மணி தாலேலோ*

*பொன்மணி தாலேலோ?"*

அந்த பாட்டை பாடிகொண்டே.., அவனை உறங்க வைத்துவிட்டு அவளும், பாண்டியனின் கையை வயிற்றில் வைத்துகொண்டு…,தூங்கிப்போனால்…''

''உறக்கம் வராமல், அறைக்குள்ளேயே நடந்துகொண்டிருந்த தெய்வாக்கு, இன்று நடந்த நிச்சயதார்த்தம், மகிழ்ச்சியை தரவில்லை, மாறாக யோசனையை தான் தந்தது.., அவன் என்னை பார்த்து சிரித்தது, ஏற்கனவே என்னை பார்த்தது போல் இருந்தது.., ஆனால், எனக்கு ஏன் இப்படி தோன்ற வேண்டும், அவன் தான் இனி என் வாழ்க்கையின் எல்லாம் ஆகா மாறப்போகிறான், எனக்கும் மட்டும் அவனை, நினைத்து யோசனை ஏன் இவ்வளவு தூரம் வரவேண்டும்.., தெய்வா.., யோசித்துகொண்டே, ஜன்னலின் அருகே செல்ல, அங்கு.. தென்னவன் போவது போல் தெரிந்தது.., அவன் தானா.. என ஒரு நிமிடம் நன்றாக பார்த்தாள்.., ஆனால்

அவன் இல்லை.. “ ”ச்சே.., ஏன் எனக்கு இப்படி அவன் ஞாயபகம் வருது…, போய் தூங்கலாம்..,” படுத்து கண்ணை மூடினால்.., அவளது அறையின் பால்கேனி கதவு தட்டும் ஓசை கேட்டது…., முழித்து பார்த்தாள்.., ஆனால் அந்த ஓசை கேட்கவில்லை.., தெய்வாவோ,பிரகாஷின் அறை கதவின் ஓசையாக இருக்கும் என நினைத்துகொண்டால்.., மறுபடியும் அவளது பால்கேனியின் அறை கதவு தட்டும் ஓசை கேட்டது.., இப்பொழுது எழுந்து அந்த கதவின் அருகில் சென்று நின்றுகொண்டால்.., மெதுவாக, தட்டும் ஓசை கேட்டது.., தெய்வாவுக்கோ, பயமாக இருந்தது.., யார் இந்த நேரத்தில் இந்த வழியாக வந்திருப்பது, அவள் யோசிக்க.., “தேவி, நான் தென்னவன் வந்திருக்கேன்.., கதவ திறக்க முடியுமா..,” தென்னவன் கேட்க.., அவளுக்கோ.., ஒரு நிமிடம் அதிசியாக இருந்தது.., ஆனால் அவன் எதுக்கு இந்த நேரம் இங்க வரவேண்டும்.., அவள் நினைக்க, அவனோ “ பிளீஸ், தேவி கதவை திறங்க உங்ககிட்ட பேசனும், நீங்க கதவுக்கு அருகில் தான் நிக்குறேங்கனு எனக்கு தெரியுங்க, யாரவது பாக்குறதுகுள்ள, கதவை திறங்க..” அவன் சொல்ல, மெதுவாக கதவை திறந்து அவனை உள்ளே வர வழிவிட்டாள்.”

‘‘முதல நான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்டுகிறேன், இங்க இந்த நேரத்துல வந்தது என் தப்பு, ஆனா உங்க பதில தெரிஞ்சுக்காம என்னால தூங்க முடியலை, அதான் நேரத்தை பார்க்காம வந்துட்டேன்.., சாரிங்க.., ‘‘ வந்தவன் மன்னிப்பு கேட்டதும், அதற்கான காரணத்தை சொன்னதும், அவளுக்கு அவன் மீது உள்ள, நன்மதிப்பை உண்டாக்க, அடுத்து அவன் பேசியது, அவளின் பதிலை எதிர்பார்த்து வந்திருப்பதை, உணர்த்த.., அவளோ என்ன பதில் என்று நினைத்தாள்.

‘‘என்…என்ன பதில்.., எனக்கு… புரியலை.., தெளிவாகா சொல்லுங்க..’’

‘‘என்னங்க, இது..,, நமக்கு, நிச்சயதார்த்தம் முடிஞ்சது, ஆனா உங்களுக்கு இன்னும் என்னை பிடிச்சுருக்குதா, இல்லையானு சொல்லாவே இல்லை நீங்க அதான்.., அதுவுமில்லாம.. நீங்க என்னை மனசார ஏத்துகிட்டாங்களானு எனக்கும் தெரியனும்…, சொல்லுங்க..’’

‘‘அவளோ, இந்த கேள்விக்கு தான் பதிலை எதிர் பார்த்து, இந்த நேரத்தில் வந்திருக்கானா.., இதுவும் நல்லா இருக்கிறது, ஒரு ஆண் மகன், அவனுக்கு நிச்சியக்கப்பட்ட பெண்ணின் மனதை அறிய, நேரம், பார்க்காமல்.., வந்திருப்பது தெய்வாக்கும் மகிழ்ச்சி

என்றாலும், இன்றே சொல்லவேண்டும் என்னும் நிலையில் அவன் சொல்லுவது அவளுக்கு கொஞ்சம் கூச்சமாக இருந்தது, அவளுக்கும் அவனை பிடித்திருக்கிறது என சொல்லவேண்டும் போல் உணர்வு ஏற்பட்டது, ஆனால் அவளுக்குள் ஏதோ ஒன்று தடுத்தது.., அதை சொல்லவிடாமல்.''

''என்னங்க, நான் வந்து அரைமணி நேரம் ஆக போகுது, நீங்க எதுவும் சொல்லாம அமைதியா நிக்குறேங்க…, உங்க அமைதிய பார்த்தா, நான் நினைச்சது சரி தான் போல.., சரிங்க.., நாளைக்கு, குளக்கரை கோவில்ல உங்களுக்காக நான் காத்திருப்பேன், வருவதும்,வராததும் உங்க விருப்பம்.., நான் கிளம்புறேன் தேவி..''அவளின் பதிலை எதிர்பார்த்து வந்தவன், அவளின் அமைதியை பார்த்து, கவலையுடன் திரும்பி சென்றான் தென்னவன்…

''குளக்கரையில் காத்திருந்தான் தென்னவன்''

# அத்தியாயம் 16

‘‘சரிம்மா வள்ளி பார்த்து இரும்மா.., நாங்க போயிட்டு வர எப்படியும் ராத்திரி ஆகிடும் நீயும், தம்பியும் பார்த்து இருங்க… உனக்கும், தம்பிக்கும் நாங்க புடவை எடுத்து கார்த்தியோட போன்ல இருந்து வாட்ஸ்ப் பண்ணுறோம், அதுல உனக்கு எது பிடிச்சிருக்கோ அதை சொல்லு சரியா.., வேலை எல்லாம் நீயே செய்யாதா வாணிக்கிட்ட சொல்லு, அப்புறம் வாந்தி அதிகமா வந்தா மட்டும் மாத்திரை எடுத்துக்கோ.. சரியாம்மா வள்ளி, தம்பி இன்னும் கொஞ்சம் நேரத்துல வயல இருந்து வந்திரும். சூதானமா இரும்மா.., வேணா நான் உன்கூட துணைக்கு இருக்கவா.., அவங்க மட்டும் போய் துணி எடுத்துட்டு வரட்டும்’’

‘‘அத்தை…, நீங்க தான் முக்கியமா அங்க இருக்கனும், மூனு பொண்ணுக்கும், மூனு மாப்பிள்ளைகளுக்கும் தான கல்யாண துணி எடுக்குறோம்.., அதுக்கு பெரியவங்க நீங்க எல்லாம் இருந்தா தானே நல்லா இருக்கும், எனக்கு துணைக்கு தான் அத்தான் இருக்காங்களே அப்புறம் என்ன… பத்திரமா போயிட்டு வாங்க…, கீர்த்தி, மலர்,தெய்வா, மூனு பேருக்கும் பிடிச்சமாதிரி கல்யாண சேலையும், நிச்சிய சேலையும் எடுங்க, தாலிகட்டு சேலை நம்ம

ஊரு வழக்கப்படி மஞ்சள்ல கூரைச்சேலை எடுத்துருங்க.., சரியா.., நீங்க எல்லாம் பார்த்து பத்திரமா போயிட்டு வாங்க..,''

''சரிம்மா…, போயிட்டுவரோம்..,''

''சரிங்க அத்தை…,''

''தென்னவன் மாமா…, இங்க வாங்களேன் கொஞ்சம்'' வள்ளி அழைக்க.

''சொல்லுங்க அண்ணி…''

''தெய்வாவ பார்த்துக்கோங்க….., அவளை தனியா எங்கயும் அனுப்பாதீங்க மாமா.., சரியா…''

''சரிங்க அண்ணி.., நான் பத்திரமா பார்த்துகிறேன்..''

''சரிங்க மாமா பார்த்து போயிட்டு வாங்க''

''அம்மா.., கல்யாணச்சேலையும், நிச்சிய சேலையும் பொண்ணையும், மாப்பிள்ளையும் செலக்ட் பண்ணட்டும்.., நீங்க தாலிகட்டு சேலையும், மாப்பிள்ளைக்களுக்கான துணியும், மற்ற சொந்தக்காரங்களுக்கு எடுக்குற துணியும் நீங்க எடுங்க…, அத்தைகிட்ட சொல்லிருக்கேன்.., அதான் உங்களுக்கு சொன்னேன்.. சரியா..''

‘‘சரி வள்ளி..’’

‘‘அண்ணி, நாங்களும் உங்ககூடவே இருக்கோமே, நீங்க இல்லாம கல்யாண துணி எடுக்க நல்லாவே இருக்காது..,’’ கீர்த்தி புலம்ப..

‘‘ஆமாம் மதினி.., அத்தை, மாமா, எல்லோருமே போறாங்களே அவங்களே எங்களுக்கு பார்த்து எடுத்துட்டு வரட்டும்.. நாங்க உங்ககூடவே இருக்கோம்..’’ மலர் சொல்ல

‘‘ஆமாம் அக்கா..,’’ தெய்வாவும் அவர்களுடன் சேர்ந்து ஆமாம் போட..., அந்த பக்கம் இருந்து மூன்று பேரின் காதில் புகை வந்தது..., அது யார் என சொல்லவேண்டுமா என்ன.., பிரகாஷ்,மாறன்,தென்னவன்.. இவர்கள் மூவரும், பெண்கள் மூவரையும் பார்த்து முறைத்து கொண்டிருக்க, அதை பார்த்த வள்ளி., நம்முட்டு சிரிப்புடன், பெண்களிடம் ‘‘உங்க கல்யாணத்துக்கு நீங்க தான் துணி செலக்ட் பண்ணனும், என் கல்யாணத்துக்கு நானும், அத்தானும் தான் சேர்ந்து துணி எடுத்தோம், அதே மாதிரி தான் உங்களுக்கும்.., போங்க சமர்த்தா போய் கார்ல உக்காருங்க..,’’

‘‘சரிம்மா வள்ளி கிளம்புறோம், ஏய் பொண்ணுகளா வாங்க வந்து வண்டியில ஏறுங்க.., மீனாட்டிசியும்,செல்வியும் சத்தம்

போட.., வள்ளிக்கு டாட்டா காட்டிக்கொண்டே மதுரைக்கு கல்யாணத்துணி எடுக்க..., மூன்று மாப்பிள்ளை, மூன்று பெண்களுடன், மீனாட்சி, முத்தையா,செல்வி, முருகவேலும், புறப்பட்டனர். வள்ளிக்கு இது இரண்டாம் மாதம் தொடக்கம் என்பதால் அவள் போக்குவரத்தில் ஈடுபடக்கூடாது என்றும், அலைச்சலால் குழந்தைக்கு ஆபத்தும் இருக்கும் என்பதால்.., அவளையும், பாண்டியனையும் தவிர்த்து மற்றவர்கள் கிளம்பினர்.''

''வாணி, மதிய சமையல் முடிஞ்சதா...''

''ம்ம்... முடிஞ்சது தாயி.., இந்தாங்க உங்களுக்கு சக்கரை குறைச்சு போட்டு ஜூஸ் கொடுக்க சொன்னாங்க, பெரியம்மா..., சாப்பிட்டு நீங்க தூங்குவேங்களாம் தாயி, அம்மா சொல்லச்சொன்னாங்க தாயி.''

''சரி... எல்லாமே நான் பார்த்துகிறேன்.., நீங்க கிளம்புங்க வாணி இன்னைக்கு உங்களுக்கு விடுமுறை, நாளைக்கு காலையில வேலைக்கு வந்தா போதும்'' வள்ளி சொல்ல.

''ஏன் தாயி..., பெரியம்மா உங்க பக்கத்துலயே இருக்க சொன்னாங்க, நீங்க என்னான, என்னை கிளம்பச்சொல்லுறேங்க.''

“வாணி, இன்னிக்கு தான் நானும், என் அத்தானும் தனியா இருக்க போறோம், ரொம்ப நாள் கழிச்சு எங்களுக்கு இந்த தனிமை கிடைச்சுயிருக்கு, வாணி சொன்னா புரிஞ்சுக்கோ” வள்ளி, அவளுக்கு புரியும்படி சொன்னாள்.

“சரிங்க தாயி.., இதோ கிளம்புறேன், ஆனா எந்த வேலையும் செய்யக்கூடாது, சரிங்களா தாயி…,”

“சரி வாணி…” வள்ளி, வாணியை அனுப்பிவிட்டு, அவர்களின் அறைக்கு சென்றாள்.., அங்கு கொஞ்சமாய், டேபிள் சேரை மாற்றி வைத்து, அதில் ஒரு சில இடத்தில் கேண்டில் ஏற்றி வைத்தாள். பின் அவர்கள் இருவரும் எடுத்துகொண்ட போட்டோ, கல்யாணத்துக்கு முன், காதலர்களாக இருந்த போது எடுத்த போட்டோவை ஒவ்வொன்றையும் அந்த அறையில் மாட்டிவைத்தாள், கொஞ்சம் குழந்தையின் வால்பேப்பர்களும் அதில் இடம் பெற்றது.., அவர்கள் இருவருக்கும் பிடித்தமான பாடல்கள், மீயுசிக் சிஸ்டத்தில் போட்டுவிட்டு சரியாக, பாண்டியன் அறையில் கால் எடுத்து வைக்கும் போது அந்த பாடல் ஒலிப்பது போல் செட் செய்து வைத்தாள். எல்லாத்தையும் ரெடி செய்துவிட்டு அவள் குளித்துவிட்டு, பாண்டியன் அவளுக்கு எடுத்துகொடுத்த, டிசைனர் சேலையை அவன் நினைவுடனே கட்டினாள், தலையை உலர்த்திகொண்டு இருக்கும் போதே பாண்டியனின் பைக் சத்தம்

கேட்கவும் சரியாக இருந்தது..., அவன் வருவதற்க்குள், அலாங்காரம் செய்துகொண்டு அவனுக்காக அறையில் காத்திருந்தாள்.

‘‘என்ன, வீட்டுல யாரையும் காணாம்.., எங்க போயிட்டாங்க, அவன் தேடிகொண்டே வந்தவன், மாடிப்படியில் கால் எடுத்து வைக்கும் போது ஒரு துண்டு தாளில் குறிப்பு எழுதி இருந்தது.. ‘‘உனக்காக காத்திருக்குறேன்’’ என்று.. ‘‘கண்டிப்பா வள்ளியம்மா தான்’’ அவன் சரியாக நினைத்து, அவர்களின் அறைக்கு அருகில் செல்லும் போது, இன்னொரு குறிப்பு, இருந்தது.. அதில் ‘‘காத்திருக்கிறேன் காதலியாக’’ அதை படித்தவன், சிரிப்புடன்.., ‘‘ நானும் தான்’’ வேகமாக, அவர்களின் அறைக்குள் நுழைந்தான்.

‘‘அங்கு, சுற்றிலும் சிறி வெளிச்சத்துடன் கூடிய மின்விளக்கும், அதனுடன் மெழுகுவர்த்தியும் எரிந்துகொண்டிருந்தது., அவன் அறைக்குள் நுழந்தவுடன் மெல்லிய இசையில், மீயுசிக் சிஸ்டத்தில் இருந்து பாடல் ஒலிப்பரப்பானது. சுவர் முழுவது, அவர்களின் போட்டோவை பார்த்ததும் அவனுக்கு காதலித்த நினைவுகள் தான் வந்தது., அதை பார்த்துகொண்டிருக்கும் போதே கொலுசின் ஒலி அவனுக்கு கேட்க ஆரம்பித்தது...’’

‘‘பின்னிருந்து அவனை கட்டி அணைத்தாள் வள்ளி. அந்த சமயத்தில் ஒரு பாடல், ஒலித்தது அது இருவருக்கும் மிகவும் பிடித்த பாடல்.

*“நீ பாதி நான் பாதி கண்ணே*
*அருகில் நீயின்றி தூங்காது கண்ணே*
*நீ பாதி நான் பாதி கண்ணே*
*அருகில் நீயின்றி தூங்காது கண்ணே*
*நீயில்லையே இனி*
*நானில்லையே உயிர் நீயே*
*நீ பாதி நான் பாதி கண்ணா*
*அருகில் நீயின்றி தூங்காது கண்ணே*

*இடது விழியில் தூசி விழுந்தால்*
*வலது விழியும் கலங்கி விடுமே*
*இருட்டில் கூட இருக்கும் நிழல் நான்*
*இறுதி வரைக்கும் தொடர்ந்து வருவேன்*
*சோகம் எதற்கு என் பொன்னுலகம்*
*பெண்ணுருவில் பக்கம் இருக்கு கண்ணே வா*

*இந்த மனம்தான் என் மன்னவனும்*

*வந்து உலவும் நந்தவனம் தான் அன்பே வா*

*சுமையானது ஒரு சுகமானது*

*சுவை நீ தான்''*

‘‘வள்ளியம்மா, எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு..., இந்த மாதிரி நான் உங்களுக்கு செய்யனும், உங்களை அப்படியே என் கையில அணைச்சு தூக்கிட்டு வரனும்னு நினைச்சேன், இப்போ தலைகீழா மாறிடுச்சு, ஆனா இதுகூட நல்லா தான் இருக்குங்க வள்ளியம்மா.'' அவளை பார்க்காமலேயே பேசினான்.

‘‘ சாப்பிட்டேங்களா அத்தான்..., வாங்க..''அவனை, அழைத்து சென்று அவள் செட் செய்திருந்த டேபிள் சேரில் அமர்த்திவிட்டு, அவளும் அவனுக்கு அருகில் அமர்ந்தாள். ஒவ்வொரு பதார்த்தையும் அவனுக்கு பார்த்து, பார்த்து வைத்தாள். பாண்டியனோ அவளை காதலா பார்த்துகொண்டே சாப்பிட்டும், அவளுக்கு ஊட்டியும் விட்டான்''

‘‘வீட்டுல யாரும் இல்லைங்க அத்தான்'' மெல்லிய குரலில் வள்ளி சொல்ல,

“வரும்போதே பார்த்தேங்க வள்ளியம்மா, எல்லோரும் எங்க போனாங்க வள்ளியம்மா”

“கல்யாணத்துக்கு துணி எடுக்க, போயிருக்காங்க அத்தான்.., எல்லோருமே” வள்ளி எல்லோரில் அழுத்தி சொல்ல, அவனுக்கு புரியாமல் இருக்குமா என்ன..

“ அப்போ நாமா ஆரம்பிக்கலாம வள்ளியம்மா..., தடை ஏதும் இல்லையே...,” பாண்டியன் கேட்க.

“ஆனா.... அத்தான்” அவள் இழுக்க...

“வாங்க வள்ளியம்மா, மெதுவா ஆரம்பிக்கலாம்” அவளை தூக்கிகொண்டு அவர்களின் அறையின் நடுமையத்தில் இரக்கிவிட்டான்.., பாடல் மெதுவாக ஒலிக்க ஆரம்பித்தது.

*“ஒரு வீட்டில் நீயும் நானும்*

*ஒன்றாக வாழும் நேரம்*

*எதிர் பார்த்தே இருந்தேன் பலகாலம்*

*இதுநாள் வரையில்*

*கனவெல்லாம் இனிதாய் நினைவாகும்*

## இரவின் மடியில்

உதடுகளின் அசைவுகள் என்றாய்

பேச்சேனவே அறிந்திருந்தேன்

ஒலிகளில்ல இனி ஒரு வேலை

நீ கொடுத்தாய் தெரிந்து கொண்டேன்

இதுவே குறைவு இனிமேல் இருக்கு

இனிதாய் தொடரும் முதல்நாள் கிறுக்கு

உடலின் தசைகள் உயிரின் கசைகள்

மறந்தேன் பல நாட்கள்

ஒரு வீட்டில் நீயும் நானும்

ஒன்றாக தூங்கும் நேரம்

எதிர் பார்த்தே எழுந்தேன் தினந்தோறும்

முதல்நாள் வரையில்

*இனி எல்லாம் முழுதாய் அரங்கேறும்*

*விரும்பும் வகையில்...*

பாடலின் வரிகளுக்கேற்ப பண்டியனும்,வள்ளியும் மெதுவாக நட னம்ஆடினர், அந்த பாடல் இடையில் முடிய, அதற்கடுத்த பாடல்,

***"காலை அணைப்பின் வாசமும்***
***காதில் கிருங்கும் சுவாசமும்***
***சாகும் போதும் தீர்ந்திடாது வா உயிரே.***

***காதில் உதைக்கும் பாதமும்***
***மார்பில் கிடக்கும் நேரமும்***
***வாளும் வரைக்கும் தேய்ந்திடாது வா உயிரே.***

***ஆணில் தாய்மை கருவாகும்***
***ஈரம் பூத்து மழையாகும்.***

***கண்ணீர் சுகமாய் இமை மீறும்***
***காலம் உந்தன் வரமாகும்.***

***சின்ன சின்ன கண்ணசைவில்***

உன் அடிமை ஆகவா.

செல்ல செல்ல முத்தங்களில்

உன் உயிரை வாங்கவா.

லாலி லாலி நானும் தூளி தூளி.

மெல்ல மெல்ல என்னுயிரில்

உன்னுயிரும் ஆசையுதே.

துள்ள துள்ள என்னிதயம்

நம்முயிருள் நிறையுதே.

லாலி லாலி நீ என் தூளி தூளி.

உன்னை அள்ளி ஏந்தியே

ஒரு யுகம் போகவா.

தலைமுதல் கால்வரை

பணிவிடை பார்க்கவா.

*லாலி லாலி நீ என் தூளி தூளி*

*லாலி லாலி நீ என் தூளி தூளி.”*

வள்ளியின் கையை பிடித்துகொண்டு, என் காதல் மொத்தமும் அவளுக்கே சொந்தம். என்னும் ரீதியில் அவளுடன், காதலாக நடனம் ஆடினான். ஓர் நிலையில் வள்ளியால் அவனுக்கு ஈடாக ஆட முடியவில்லை.., அதை பார்த்த பாண்டியன் அவள் எதிர்பாரத வேளையில் கையில் தூக்கிகொண்டு அவர்களின் அறையின் மெத்தையில் இரக்கிவிட்டான்.

“வள்ளியின் மடியில் படுத்துகொண்டே…, கடந்து வந்த காதலின் பாதைகளை பேசிகொண்டும், வள்ளியை சீண்டிகொண்டும் இருந்தான். இந்த காதல் ஜோடி, காதலில் மூழ்க. பயணத்தில் இருக்கும் மூன்று ஜோடிகள் என்ன செய்கின்றனர் என பார்ப்போம்.”

”முருகவேல் டிரைவர் சீட்டில் அமர்ந்திருக்க, பக்கத்தில், முத்தையா இருக்க பின் இருக்கையில் மீனாட்சி,செல்வி, அமர்ந்திருந்தனர். பெரியவர்கள் ஒரு காரில், சிரியவர்கள் மற்றொரு காரில் சென்றனர்.. “அதில், டிரைவர் சீட்டில் தென்னவன்

இருக்க, பக்கதில் தெய்வா, நடு இருக்கையில் மாறன், கீர்த்தியும், கடைசி இருக்கையில், பிரகாஷ், மலர் அமர்ந்திருந்தனர்''

''தென்னவனுக்கு, கொஞ்சம் மகிழ்ச்சியாய் இருந்தாலும், நான் பேசியதற்க்கு இன்னும் பதில் இல்லாமல் போனது அவனுக்கு ''இவள் என்ன நினைக்கிறாள்'' எனப்புரியாமல் இருந்தான்...''

'' மாறனோ, இத்தனை வருடத்தில் கீர்த்தியை, மாமான் மகளாகவே பார்த்துவிட்டு, இப்பொழுதோ தனக்கு சொந்தமாய் வரபோகும் மனைவியாக இன்று தான் பார்க்கிறான் மாறன், அதனால் அவளிடம், காதல் மொழி குறையாகவும், வாழ்க்கையின் மொழி அதிகமாகவும் பேசிகொண்டே வந்தான்.''

''பிரகாஷூக்கு சொல்லவா வேண்டும், மலரின் கையை, தன் கையில் வைத்துகொண்டே..., கல்யாண வானில் சிறகில்லாமல் பறந்து கொண்டிருந்தனர் அந்த ஜோடி, மலரோ.. காதல் கைகூடிய சந்தோஷத்தில் அவனுடன் சிரித்துப்பேசிகொண்டு வந்தாள்''

''பொண்ணுங்களா...., நீங்களும், மாப்பிள்ளைகளும் சேர்ந்து, உங்களுக்கு பிடிச்ச கல்யாண துணி எடுங்க, நாங்க உங்களுக்கு தாலிக்கட்டு சேலையும்,பட்டு சட்டை, பட்டு வேஷ்டியும் எடுக்குறோம், சரியா...,''

‘‘இரண்டு ஜோடிகளும் சந்தோஷத்தில் சரியென்று சொல்லிவிட்டு, அவரவர் ஜோடியை அழைத்துகொண்டு பட்டு சேலை பக்கம் சென்றனர். ஆனால், ஒரு தென்னவன்,வள்ளி ஜோடி மட்டும் என்ன செய்வதென்று தெரியாமல், அமைதியாக நின்றிருந்தனர். அதை பார்த்த மீனாட்சி, தெய்வாவின் அருகில் சென்று’’

‘‘என்ன, தெய்வா இங்கயே நின்றிருக்க…. நீயும் உனக்கான ட்ரெஸ் எடுக்க போம்மா, தென்னவா, என் மருமகளை கூட்டிட்டு போப்பா.., அங்க பாரு இரண்டு ஜோடியும் போட்டி போட்டுகிட்டு ட்ரெஸ் செலக்ட் பண்ணுறாங்கனு நீங்களும் உங்களுக்கு பிடிச்ச ட்ரெஸ் செலக்ட் பண்ணுங்க…, போங்க..’’ இருவரையும் அனுப்பி வைத்தார்.

‘‘சொல்லுங்க சார் என்ன விலையில பட்டு சேலை பார்க்குறேங்க…’’ கடை ஊழியர் கேட்க.

‘‘கல்யாணப்பட்டு எடுத்துப்போடுங்க, அது மூப்பதாயிரத்துக்கு மேல இருக்கனும் சார்’’ தென்னவன் சொன்னான்.

‘‘சரிங்க சார்….,’’

“தாழம்பூ குங்குமம் கலரில் பட்டுச்சேலைகள் நிறைந்து இருந்தது…, அதில் அவளுக்கு எது பிடிக்கும் என்று ஒவ்வொன்றாக பார்த்து,பார்த்து தேடினான். அவளோ அவன் சேலை எடுப்பதையே பார்த்துகொண்டிருந்தாள். நாங்கு, ஐந்து சேலைகளுக்கு நடுவே, தாழம்பூ குங்குமம் கலரில் மயில் டிசைனுடன், ஒரு பெண், கையில் அன்னத்தை வைத்திருப்பது போல் இருந்த ஒரு பட்டுச்சேலையை தேர்ந்தெடுத்தான் தென்னவன், அதை அவளிடம் காட்டினான்….”

“தேவி, உனக்கு இந்த சேலை பிடிச்சு இருக்கா,”

“ம்ம்ம்… பிடிச்சிருக்கு” அந்த சேலையை பார்த்துகொண்டே கூறினாள்.

“சார் பிரிச்சி காட்டாவா சேலையை…” கடை ஊழியர் கேட்க,

“சரி.. பிரிச்சுக்காட்டுங்க..”

“சார்…, பார்டர்ல தங்க கம்பி போட்டு இதுல நெஞ்சுருக்காங்க…, கீழ குட்டி, குட்டி மயில் இருக்குல அதுல எல்லாம் வெள்ளிக்கம்பில நெஞ்சுருக்காங்க, அப்புறம் சார்…, உங்க ரெண்டு பேருக்கும் தானே கல்யாணம்.”

“ஆமாம்.. ஏன்”

‘‘உங்க ரெண்டு பேர் சொன்னா, முந்தானை, பார்டர்ல உங்க ரெண்டு பேரோட பேர் போட்டு நாங்க கொடுக்குறோம், சார்.., இது இப்போ உள்ள ட்ரெண்டிங் சார்.’’

‘‘ம்ம்ம்…, இந்தாங்க இது தான் எங்க பேர்…,’’ தென்னவன் ஒரு தாளில் அவர்கள் இருவரின் பெயரையும் எழுதிக்கொடுத்தான்.

‘‘மாறனும்,கீர்த்தியும், அவர்களுக்கு பிடித்த பட்டுச்சேலையை எடுத்தனர், பின் மாறன் கீர்த்திக்கு நிச்சிய சேலையும், அவளுக்கு முதல் முதலாய் பரிசளிப்பதற்க்கு டிசைனர் சேலையும் எடுத்தான்.’’

‘‘பிரகாஷூக்கு, எந்த சேலை எடுத்தாள் நன்றாக இருக்கும் என கடை ஊழியரை போட்டு, ஒரு வழிப்படுத்திக் கொண்டிருந்தான்…, மலரோ, நிச்சிய சேலையை அவளே தேர்ந்தெடுத்து அதை பிரகாஷிட காட்ட வந்தாள்.., ஆனால் பிரகாஷ் பட்டுத்தும் பாட்டிற்க்கு அந்த ஊழியர் மிகவும் நொந்து போய்விட்டார். இறுதியில், அவளே சேலையை தேர்வு செய்து அந்த ஊழியரை காப்பாற்றினால்.’’

’’இப்படியாக ஒவ்வொருவரின் ஷாப்பிங்கும் முடிந்தது…, கடைசியில் வள்ளிக்கும், பாண்டியனுக்கும் எப்படி துணி எடுத்தாள். நன்றாக இருக்கும் என ஒவ்வொருவரும் யோசிக்க,

முடிவில் மீனாட்சி தான், அவர்களுக்கு பிடித்த துணி எடுத்துகொண்டு, அந்த ஜவுளிக்கடையை விட்டு வெளியேறினர்.''

''ஏங்க, இந்த போட்டோவுல இருக்குறவங்களை பார்த்துருக்கீங்களா..., இப்போ அவுங்க எங்க இருக்காங்கனு உங்களுக்கு தெரியுமா..'' ஒரு புகைபடத்தை காட்டி ஒருவரிடம், ஒரு பெரியவர் கேட்க.

''இவங்க, தாமரை அக்காவாச்சே...., இந்த அக்கா இறந்து போய் தான் ஒரு மாசம் ஆக போகுதே..., இவங்களை ஏன் கேக்குறேங்க, அவங்களுக்கு நீங்க என்ன வேணும்,''

'' என்ன..., இறந்துட்டாங்களா..., அப்போ என் பொண்ணு எங்க போனா.., அய்யோ என் குடும்பத்தை தொலைச்சுட்டு இப்போ நிக்குறேனே..., என்ன பண்ணுவேன்...,'' அவர் புலம்ப,

''அந்த பொண்ண.. இரண்டு பசங்க அவங்களோடவே அழைச்சுட்டு போனாங்க, ஆனா எங்க அழைச்சுட்டு போனாங்கனு தெரியலைங்க..., இவ்ளோ அழுகிறேங்க ஆனா அவங்களுக்கு, நீங்க ரொம்ப சொந்தமாங்க...,'' அந்த வீட்டின் ஒனர் பெண்மணி கேட்க.

‘‘இவ என் மனைவிம்மா…, அவகூட இருந்தது என் ஒரே மக, அவங்களை இப்படி தவிக்கவிட்டுட்டு நான் இத்தனை வருசம் பிரிஞ்சு இருந்ததுக்கு, அந்த கடவுள் கொடுத்த தண்டனை தான் எனக்கு,’’ அவர் தலையில் அடித்துகொண்டே அழுக ஆரம்பித்தார்.

‘‘ஐயா…, உங்க பொண்ணு கண்டிப்பா நல்ல இடத்துல தான் இருப்பாங்க.., நீங்க உங்க சொந்த ஊருல இருக்குறவங்களை கேட்டுப்பாருங்களேன்…, ஒரு வேளை அங்க உங்க பொண்ணு இருந்தா…,’’ அந்த பெண்மணி அவருக்கு ஆறுதல் வார்த்தை சொல்லி,அவருக்கு அறிகுறியும் காட்டினார்.

‘‘என் சொந்த ஊரைவிட்டு வந்து தான் பலவருசம் ஆச்சே…, மறுபடியும் நான் போனா என்னை, அந்த ஊருகாரவங்க ஏத்துக்கனும், என் அண்ணா என்னை மன்னிச்சு ஏத்துக்கனும், இதை எப்படி என்னால செய்யமுடியும்.’’ மனதுக்குள் பேசிகொண்டார்.

‘‘ஐயா…, ஐயா.. அந்த பெண்மணி அழைக்க…, அவரோ யோசனையில் இருந்து விடுப்பட்டார்…, ‘‘சொல்லுங்கம்மா’’

“ஒரு முறை, உங்க ஊருப்பக்கம் போய் தேடிப்பாருங்க ஐயா…, உங்க பொண்ணு கிடைப்பா..,” அவர் சொல்லிவிட்டு சென்றார்.

“அந்த பெரியவரோ ஒரு முடிவுடன், சொந்த ஊருக்கு செல்ல முடிவெடுத்தார். ஆனால் அவர் சென்ற நேரம்…

“அங்கு இரு ஜோடிகளின் கல்யாணம் சிறப்பாக நடந்து முடிந்தது, அடுத்த வாரம் நடக்கவுள்ள தென்னவன், தெய்வாவின் கல்யாணத்திற்க்கு, அடுதடுத்த வேலையை பார்க்க ஆரம்பித்தனர்..

”ஆனால் தெய்வாவின் மனதில் ஒரு சஞ்சலம் நிலவிகொண்டே இருந்தது. அது என்னவென்று தான் தெரியவில்லை..,”

# அத்தியாயம் 17

”மதுரை மீனாட்சியம்மன் சித்திரை திருவிழாவை அங்குள்ள மதுரை மக்களும், அதை சுற்றியுள்ள ஊர்களிலும் உள்ள மக்களும் எவ்வாறு கொண்டாடுவார்களோ, அதிலும்… மீனாட்சியம்மனின் திருக்கல்யாணத்தை போல, முத்தையாவின் மகள் கீர்த்தி,மாறனின் கல்யாணமும், பிரகாஷ், மலரின் கல்யாணமும், ஊர் மக்களின் ஆசீர்வாதத்துடன், முப்பத்து முக்கோடி தேவர்களின் ஆசீர்வாதத்துடனும், பெற்றோர்களின் ஆசீர்வாதத்துடன் நடந்து முடிந்தது…”

“கீர்த்தியின் நாத்தனாராக, வள்ளி, கீர்த்திக்கு நாத்தனார் முடிச்சு போட்டு அவளுக்கு செய்யும் சீர்வரிசையும் செய்தாள் வள்ளி.”

“அடுத்து மலருக்கு, நாத்தனாராக தெய்வாவை முன் நிறுத்தி நாத்தனார் முடிச்சு போட்டாள். மலருக்கு செய்யவேண்டிய சீர்வரிசகளை, தெய்வாவே செய்தாள்.”

“இரு ஜோடிகளின் கல்யாணத்தை அவரவர் பெற்றோர்கள், ஆனந்த கண்ணீருடன் பார்த்தனர். பாண்டியனோ, கீர்த்தியை கையில் எடுத்து வளர்த்த போது சிறுப்பெண்ணாக இருந்தவள்,

இன்றோ வளர்ந்து வேறு குடும்பத்தில் மருமகளாக செல்கிறாள் தங்கை மீது உள்ள பாசத்தில் கலங்கி நின்றான். அவனுக்கு ஆதரவாய், வள்ளி அவனருகில் வந்து நிற்க, அவனோ யாரும் அறியாமல் கண்களில் உள்ள கண்ணீரை துடைத்துக்கொண்டான்.''

'' மணமகனுக்கு செய்யவேண்டிய, சீர்களை அதாவது..., தங்கையின் கணவனுக்கு பத்து பவுன் தங்க செயினும், இரண்டு பவுன் மோதிரமும்,கைச்செயின் ஐந்து பவுனும், பிளாட்டினத்தில் ஒரு மோதிரமும் என அந்த வீட்டு மாப்பிள்ளைக்கு சீரை அடுக்கினர், பாண்டியனும், கார்த்திக்கும்.''

'' சிவநாதனோ, அதே போல், பிரகாஷூக்கும், மாப்பிள்ளைக்கான சீர்வரிசை, தென்னவனும், பாண்டியனும் செய்தனர்.., ஆனால் பிளாட்டினத்தில் இருவருக்கும் ஒரே மாதிரி மோத்திரத்தை பரிசளித்தான், தென்னவன்.''

''மாப்பிள்ளைகளுக்கும், மணப்பெண்களுக்கும், பால் பழம் கொடுக்கும் சம்ப்ரதாயம் நடந்தது.., வள்ளியும், தெய்வாவும் ஒருசேர்ந்து மணமக்களுக்கு முதலில் அவர்களை ஏமாற்றிவிட்டு, அதற்கடுத்து கொடுத்தனர்.''

‘‘கார்த்திக்கும், அவர்களை ஒவ்வொரு நிமிடமும் கேலிசெய்துகொண்டும், பிரகாஷை மட்டும் வம்பு இழுத்துகொண்டும் இருந்தான்’’.

‘‘என்ன பிரகாஷ் மாமா, கல்யாணம் முடிஞ்சது.., அடுத்து எங்க ஹனிமூன் போறீங்க…, நீங்க தான் காதல் செய்யறப்போவே ஹனிமூன் போயிட்டு வருவீங்கள, நான் தெரியாம கேட்டுட்டேன்.., மாமா.’’

‘‘டேய், கொஞ்சமாச்சும் மாமானு மரியாதை கொடுடா.., இப்படி கலாய்ச்சா அப்போ நானும் உன்னை கலாய்ப்பேன்..’’

‘‘சும்மா, நடிக்காதீங்க மாமா…, நீங்க செஞ்ச சேட்டையெல்லாம், எனக்கு தெரியாதா என்ன…,’’

‘‘அப்படி என்னடா உனக்கு தெரியும்’’

‘‘அக்காவ பார்க்க, நீங்க மாந்த்தோப்புக்கு தானே வரச்சொல்லுவீங்க… அது எனக்கு தெரியாதா மாமா’’ அவனின் ரகசியத்தை போட்டு உடைக்க.

‘‘டேய்.., என் அப்பா இருக்காருடா.., கொஞ்சம் மெதுவா பேசு.., உனக்கு எப்படி இந்த விசயம் தெரியும்..’’

" நாங்க நாலு வருசம் கழிச்சு ஊருக்கு வந்தாலும், எல்லா விசயமும் என் கையில இருக்கு..., அப்புறம் நீங்களும், அக்காவும்.., அந்த ஆத்தங்கரையில" கார்த்தி ஆரம்பிக்க.., அவன் வாயில் வாழைப்பழத்தை வைத்து அடைத்தான் பிரகாஷ்.

"மணமக்கள் அவரவர் இல்லத்துக்கு செல்ல நேரமும் வந்தது...., கீர்த்திக்கும், மலருக்கும், கண்ணீர் முட்டிக்கொண்டு வந்தது..., அதை யாரிடமும் காட்டாமல் அவர்களுக்குள்ளே அடக்கிக்கொண்டனர்."

"வெள்ளி, பித்தலை, சில்வர், என இரண்டு வீட்டு மணமக்களுக்கும், சீர்வரிசை இரண்டு லாரிகளிலும், மரக்கட்டில், மரப்பீரோ,அலங்காரக்கண்ணாடி, சோபா செட், என வீட்டிற்க்கு தேவையான அனைத்து உபயோக பொருளும், மேலும் இரண்டு லாரிகளில் இருந்தது...,"

"முத்தையா,மீனாட்சியும், முருகவேல் — தமிழ்செல்வியிடம், "மாமா, செல்வி, என் பொண்ணுக்கு, நான் மட்டும் இல்லாம என் மகன்கள் ரெண்டு பேரும் சேர்ந்து, எங்களால முடிஞ்ச சீர்வரிசையை கொடுத்துருக்கோம் இதுல குறை இருந்தா சொல்லுங்க..., அப்புறம் கீர்த்திகிட்ட இப்போ எங்க வீட்டு சார்பா ஒரு பித்தலை குத்துவிளக்கும், வெள்ளிக்குத்துவிளக்கும், இருக்கு.

பித்தலை குத்துவிளக்காளா தான், உங்க வீட்டுல விளக்கு ஏத்தனும், வெள்ளி குத்துவிளக்கு சீர்வரிசையோட., அப்புறம். பொண்ணுக்கும், மாப்பிள்ளைக்கும், சேர்த்து நூறு பவுன் நகையும், செஞ்சிருக்கேன்.., பலாகாரக்குடம் மட்டும் இப்போ சாமிகும்பிட்டு, நல்ல நேரம் முடியிரத்துக்குள்ள, உங்க வீட்டுக்கு அழைச்சுட்டு போங்க.''

'' உங்க வீட்டு பொண்ண தான் நாங்க என் வீட்டுக்கு மருகளா அழைச்சுட்டு போகனும் சொன்னே தவிர, இந்த சீர்வரிசை இல்லை மச்சான். இப்போ செய்தது எல்லாம் கீர்த்திக்கும், மாறனுக்கும் மட்டுமே சொந்தம் தவிர எங்களுக்கு உங்க பொண்ணு மட்டும் தான் சொந்தம்., இதை நாங்க இப்பவே மறுத்துருக்க முடியும் ஆனா, கீர்த்திக்கு நீங்க செய்யிற பாசமான, அன்பளிப்பு.

''சிவாநாதனும், திருமூர்த்தியிடம், முத்தையா, கூறியது போல் சொல்லிவிட்டு. அவரும் மலருக்கு செய்யவேண்டிய சீர்வரிசை இரண்டு லாரிகளிலும், வீட்டு உபயோக பொருள் உள்ள லாரிகளிலும், தயராக இருந்தது.''

''சாமியிடம் வைத்து எடுத்து வந்த பலாகரக்குடத்தை மீனாட்சியும், முத்தையாவும் எடுத்து கொடுக்க, கீர்த்தியும்,மலரும்

வாங்கிகொண்டனர்.., பலகாரக்குடத்தை காரில் வைத்துவிட்டு, அனவரிடமும் சொல்ல வந்தனர்.''

''கீர்த்தியோ, பாண்டியனையும்,கார்த்தியையும் பார்த்து கண்ணீரை மறைத்து கொண்டு அவர்களிடம் இருந்து விடைபெற்றாள். வள்ளியிடம் வந்த கீர்த்தி ''உங்களை ரொம்ப மிஸ் பண்ணுவேன் அண்ணி'' வள்ளியை கட்டிக்கொண்டு அழுக ஆரம்பித்தாள். முத்தையாவும், மீனாட்சியும், ''கீர்த்தியின் தலையி ஆதரவாக தடவிகொடுத்து, பார்த்து இரும்மா, எல்லோரும் மனசு அறிஞ்சு நடந்துக்கனும் கீர்த்தி'' மீனாட்சி பாசத்துடன் சொன்னார்.''

''மலரோ, தென்னவனிடம்.. ''அப்பாவ பார்த்துக்கோண்ணா…., நான் தினமும் வந்துட்டு போறேன்..,''… ''போயிட்டுவரேன்ப்பா…,'' ஒரே ஊரில் இருக்க போகும் மகிழ்ச்சியில் அவளுக்கு ஆனந்த கண்ணீர் வந்தாலும், இனி நான் வேறு வீட்டு பெண்ணாகிவிட்டேனே என்று அவளுக்கு இருந்தது.''

''ஐயாவ நல்லா பார்த்துக்கோம்மா.., மாப்பிள்ளையையும் பார்த்துக்கோ…, அவங்க தான் இனி உனக்கு எல்லாமே.., சரியா..,'' சிவநாதனும், தென்னவனும் சொல்ல, மலர் அதை கேட்டுக்கொண்டால்.

“அனைவரிடமும் விடைபெற்றுகொண்டு இரு ஜோடிகளும் அவரவர் புதிய இல்லத்துக்கு தங்களின் துணைவிகளோடு சென்றனர்., கண்ணீருடன் அவர்களை அனுப்பி வைக்காமல், மிழ்ச்சியுடன் அவர்களை வழியனுப்பி வைத்தனர்.”

“திருமூர்த்தி, ”தெய்வா கிளம்பளாமா…, நீதான் வீட்டுக்கு வந்திருக்கும் மாப்பிள்ளை பொண்ணுக்கு திருஷ்டி எடுக்கனும்…, வாம்மா..” தெய்வாவை அழைக்க.

“ஐயா…, தெய்வா இப்போ உங்கூட வந்து, அவங்களுக்கு திருஷ்டி எடுத்துட்டு நம்ம வீட்டுக்கு அனுப்பிவச்சுடுங்க.. ஐயா..” வள்ளி கூற.

“ஏன் மா…”

“ஐயா.. புதுசா கல்யாணம் ஆனவங்க…, அவங்க இருக்கும் போது தெய்வா அங்க இருந்த நல்லா இருக்காது…, அதுவுமில்லாம இன்னும் ஒரு வாரம் தான் தெய்வா கல்யாணம் இருக்கு, மூனு நாள் முன்னாடி தெய்வாவ வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன் ஐயா…” வள்ளி தயங்கி தயங்கி கூறினால்.

“ஓ…ஓஓ.. சரிம்மா…, அவங்களுக்கு ஆராத்து எடுத்ததும், கார்த்திக்கூட அனுப்பி வைக்கிறேன்.., கார்த்தி நீயும் என்கூட வாப்பா..”

“சரிங்க ஐயா…., நான் கார் எடுக்குறேன்.. ஐயா, உக்காருங்க,” கார்த்தி, தெய்வாவையும் ஐயாவையும் அழைத்துகொண்டு சென்றான்.

” நேற்று வரை, கேலி, கிண்டல், ஆட்டம்,பாட்டம் கலைகட்டிய கல்யாணம் நல்ல படியாக முடிந்து அவர்களை நல்ல முறையில் வழியனுப்பி வைத்து, இப்போது வீடே கலை இழந்தது போல இருந்தது.., இதற்க்கு தான் வீட்டில் ஒரு பெண்பிள்ளை வேண்டும் எனக்கூறுவர். அவர்கள் இருந்தால் எப்பொழுது வீடு கலையாக இருக்கும்..,

“ அத்தை, கீர்த்திக்கும்,மலருக்கும் ராத்திரி துணைக்கு இருக்க, சுசீலா அக்காவும், ரத்தினம் அக்காவையும் அனுப்பிருங்க, நான் இந்த நேரத்துல எங்கயும் போகக்கூடாதுனு டாக்டர் சொல்லிட்டாங்க, பாவம் பிள்ளைக அதுகளுக்கு என்ன தெரியும், பெரியவங்கனு இருந்த்தா நாம கவலைப்பட தேவையில்லை, அதான்…, கீர்த்திக்கு சுசீலா அக்கா துணைக்கு போகட்டும், மலருக்கு ரத்தினம் அக்கா போகட்டும், சரிங்களா அத்தை…”

“ஆமாம் வள்ளி..., நான் மறந்தேன் போயிட்டேன் நான் சுசீலாகிட்ட ராத்திரி நடக்க போற சடங்குக்கு, எல்லா பொருளும் வாங்கி கொடுத்துவிட்றேன், நீ மலருக்கு, வாங்கி கொடுத்துவிடு ரத்தினத்துகிட்ட..,”

“அத்தை, நீங்க கீர்த்திக்கும்,மலருக்கும், நீங்களே வாங்கி கொடுத்துவிடுங்க உங்க கைராசி தான் நல்லா இருக்கும், உங்க கையில ஆரம்பிக்கிற அவங்க வாழ்க்கை, அடுத்த பத்தாவது மாசம் , அவங்களுக்கும் குழந்தை பிறக்கனும் அதான், நீங்களே வாங்கி கொடுத்துவிடுங்க அத்தை”

“சரிம்மா..., நானே வாங்கி கொடுத்துவிடுறேன்”

“பயமா இருக்கு, வள்ளி”

“ஏன், என்னாச்சு... எதை பார்த்து உங்களுக்கு பயம் மாமா”

“தெய்வாவோட அப்பா, சென்னைக்கு வந்திட்டாராம் வள்ளி, அவரு தெய்வாவோட பழைய வீட்டுல போய் விசாரிச்சுருக்காரு, ஆனா எந்த தகவலும் கிடைக்கல...., “

“கிடைக்கலைல, அப்புறம் என்ன விடுங்க மாமா...”

“இல்லை வள்ளி, அவரு யோசிச்சு கடைசியா பொண்ணு நம்ம சொந்த ஊருல தான் இருக்கானு தெரிஞ்சா, என்ன பண்ணறது”

“தெரிஞ்சா தெரியட்டும், வந்தா வரட்டும், அப்படியே உங்க கல்யாணத்துக்கு வந்து ஆசீர்வாதம் செய்யட்டும், இதுக்கு ஏன் இவ்வளோ கவலை மாமா”

“உனக்கு புரியுதா, வள்ளி.. நான் என்ன சொல்ல வரேனு, ஒரு வேளை அவருக்கு பாண்டியனுக்கு, தெய்வாவ கல்யாணம் பண்ணி வச்சது தெரிஞ்சா, இந்த கல்யாணத்தை நிறுத்தமாட்டாரா..”

“அவருக்கு, மட்டும் இல்லை... கார்த்தி, கீர்த்தி என் அண்ணா மாறனுக்கு கூட இன்னும் விசயம் தெரியாது..., ஊருக்காரவங்க நம்ம குடும்பத்து மேல வச்சுருக்குற நம்பிக்கை தான், இன்னும் அவங்களுக்கு தெரியாத காரணம்.. இல்லைனா அவங்க மூனு பேரும் ஊருல கால் எடுத்து வச்சதும், நம்ம ஊரு மக்கள் சொல்லிருப்பாங்க, ஆனா ஏன் சொல்லல, நம்ம குடும்பத்துக்கு அவளோ மரியாதை.. அதான் காரணம்”

“ எவ்வளோ நாள் மூடி மறைச்சாலும், விசயம் தெரியாம்ம போகுமா வள்ளி”

“தெரியவரும் போது நாம பார்த்துக்கலாம் மாமா”

“தெய்வாவோட அப்பா, ஊருக்கு வந்த அவருக்கு புரியிர மாதிரி உங்க கல்யாணத்தை சொல்லலாம், அவருக்கு யார் மூலமா பஞ்சாயத்து விசயம் தெரியவரும்முனா அது பழனிச்சாமி குடும்பத்தால மட்டும் தான் ஆனா, அவரு தான் ஊருலயே இல்லையே, அப்புறம் அந்த திவாகரன், இந்த ஊரு பக்கமே தலைவச்சு படுக்கமாட்டான்.., இன்னேரம் ஜெயில இருப்பான்..”

“ஆனா வள்ளி, ஒவ்வொரு நாளும் நெருங்க, நெருங்க எனக்கு பயமா இருக்கு,”

“பாருடா எங்க பேராசிரியக்கூட பயம் வருது, நீங்களா எப்படி படிச்சு கோல்டு மெடல் வாங்கினேங்களோ மாமா…, அதுவும் நாலு வருசக் காதல் உங்களோடது.., பாவம் தெய்வா..ச்சு…ச்சு..”

“ம்ம்ம்…, நீங்க என்னமா, காதலிச்சேங்க வீட்டுல சொல்லி, கல்யாணமும் பண்ணிட்டேங்க, ஆனா நான் அவகிட்ட சொல்லப்போறப்ப தான், அவளுக்கு பிரச்சனை மேல பிரச்சனை வருது என்ன பண்ண,” அவன் கவலைப்பட.

‘‘வருத்தம் படாதீங்க மாமா.., இன்னும் மூனு நாள் தான் இருக்கு கல்யாணத்துக்கு, வெளிய சுத்தாம போய் மாப்பிள்ளையா லட்சணமா, பொண்ணுக்கு, தாலிகட்டி தினமும் உங்க காதல் கதையை அவகிட்ட சொல்லி புரியவைக்க முயற்சி பண்ணுங்க சரியா.., அத்தான் வந்துருவாங்க நான் கிளம்புறேன்.., நாளைக்கு கீர்த்தியும் என் அண்ணாவும் மறுவீட்டுக்கு வந்துட்டு, உங்க கல்யாணம் முடிஞ்ச பின்னாடி தான் கிளம்புவாங்க, அதுக்கு ஏற்பாடு பண்ணனும் நான் போயிட்டுவரேன் மாமா..’’

‘‘சரிம்மா வள்ளி, பார்த்து போ...’’ வள்ளியை அனுப்பிவிட்டு, வீட்டுக்கு புறப்பட்டான் தென்னவன்.

’’தென்னவன், பொறியியலில் டாக்டர் பட்டம் பெற்று, கல்லூரியில் முதல் மாணவனாக திகழ்ந்தான். அவனுக்கு வேலையும் அதே அவன் படித்த கல்லூரியில் கிடைக்க, அங்கேயே வேலை பார்த்துகொண்டான், தென்னவன் இருப்பதால், பாண்டியன் வள்ளியையும், மலரையும் அங்கு படிக்க அனுப்பி வைத்தான், வள்ளிக்கோ பாண்டியனை பிரிய மிகவும் வருத்தம் கொண்டால்., ஆனால் பாண்டியன் சொன்ன வார்த்தைக்காக அவள் அங்கு சென்று படிக்க ஆரம்பித்தால். அப்பொழுதான் அவர்களின் பொறியியல் அறிவு திறனை நிருபிக்க, ஒரு போட்டி வந்தது, அதில் இவர்கள் படிக்கும் கல்லூரிக்கு வந்தது, அதில்

கலந்துகொள்ள, தென்னவன், நன்றாக படிக்கும் மாணவர்களை தேர்வு செய்து அவர்களுடன் அவனும் அந்த போட்டி நடக்கும் கல்லூரிக்கு, அழைத்து சென்றான். அப்பொழுது தான் தெய்வாவை அங்கு வைத்துப் பார்த்தான், அவளோ, குழுவின் தலைவி என்ற முறையில் அவளும் அதில் பங்குபெற்றாள், எல்லா கல்லூரியிலும் தென்னவன் கல்லூரி தான் முதல் இடத்தைப்பெற்றது, இரண்டாம் இடத்தை வேறு கல்லூரி யும், மூன்றாவது இடமாக தெய்வாவின் கல்லூரி இடம் பெற்றது…, தென்னவன் மூன்று கல்லூரி மாணவர்களுக்கு, கைகொடுத்து அவர்களின் மகிழ்ச்சியில் பங்கெடுத்துகொண்டான், இறுதியாக தெய்வாவின் கல்லூரியி ஆசிரியரை பார்த்து அவரிடம் பேசி, அவரின் மாணவர்களிடமும், அவர்களின் மூன்றாவது பரிசை பெற்றாலும், அவர்களுக்கு இன்னும் அதிகமாய் மோட்டிவேட் செய்தான்.., ஆனால் அதில் தெய்வா இல்லை. தனியாக சென்று, மூன்றவது பரிசு கிடைத்தாலும் அவளுக்கு வருத்தமாக தான் இருந்தது, அவளின் வருத்தை பார்த்தவன், முதலில் அவளின் கண்ணீரை கண்டது தான், ''அவளுக்கு ஆறுதலாய் நான் இருக்க வேண்டுமே'' அவன் யோசித்தை நினைத்து அவனுக்கே, ஒன்றும் புரியவில்லை. அதற்க்கு பின் அவளை பார்க்கவில்லை.''

“இப்படியாக, நான்கு மாதம் கழிய அவனுக்கு தெய்வாவின் நினைவும் கொஞ்சமாய் வந்தாலும் அடுத்து இருக்கும் அவனது வேலை பழுவினால் மறந்துவிடுவான் இப்படியே இரண்டு வருடம் செல்ல, தெய்வவை மறுபடியும் சந்திக்கும் நாள் வந்தது.”

“வள்ளி,மலர் இவர்களின் ப்ராஜெக்ட்டுக்காக, அவர்களுக்கு தேவையான புத்தகம், தேடிகொண்டிருந்த போது தான், அவளின் குரல் தெளிவாக கேட்டது.”

“இல்லை டி, முக்கியமான புத்தகத்தை தேடிட்டு இருக்கேன்.”

“………….”

“ நான் தான் அந்த காலேஜ்விட்டு வந்து ரொம்ப நாள் ஆச்சே, வேற காலேஜ்ல முதல் வருசத்துல இருந்து படிக்குறேன்…, ஏன்னு உனக்கு தெரியாதா”

“ அவளின் தோழி என்ன கூறினாளோ”

“இல்லைடி படிப்பு தான் முக்கியம், திருநெல்வேலில இருந்து போன மாசம் தான் வந்தேன், அம்மா தீடீருனு வந்து சென்னைக்கு போகனும் சொன்னாங்க காலேஜ்ல பாதியில படிப்பு நிறுத்திட்டு சென்னை போக காரணம் கேட்டாங்க அதுக்கு என் அம்மா

சொன்ன பதில் இருக்கே, நீயும் பக்கத்துல தான இருந்த அப்பறம் என்ன டி..,’’

‘‘இங்க வந்து காலேஜ்ல சேர்ந்தா, பாதியில படிப்பவிட என்ன காரணம் எல்லாம் எங்களுக்கு தேவையில்லை, நீங்க இங்க முதல் வருசத்துல இருந்து படிக்கிறதா இருந்தா, நான் காலேஜ்ல படிக்க சீட் கொடுக்கிறேன் சொன்னாங்க அதுவே போதும்னு நான் சரி சொல்லிட்டேன் டீ..’’

‘‘சரி நான் வேற புக் ஷாப்ல, தேடனும்.., அம்மா காத்திருப்பாங்க வைக்குறேன் டீ’’

‘‘தெய்வாவின் முழுப்பேச்சையும் கேட்ட பின் தான், தென்னவனுக்கு என்னவோ புரிவது போல இருந்தது., ஆனால் அவனால் யூகிக்க முடியவில்லை, அன்று முதல் முறை அந்த போட்டியின் போது பார்த்தது, அன்றுவிட இன்று உடல் மெலிந்தும், அவளின் அழகும் குறைந்தது போல இருந்தது.’’

‘‘தெய்வாவை, பார்த்துவிட்டு வந்தவன் அமைதியாகவே இருந்தான், அடுத்து தெய்வாவை எப்பொழுது பார்ப்போம் என்று அவனுக்கு ஆவலாய் இருந்தது. அதுவும் விரைவில் அமைந்தது.’’

‘‘மலரும், வள்ளியும், கல்லூரியின் இறுதி வருடம் படிப்பு முடிய இன்னும் ஒரு மாதம் இருந்த நிலையில், அவர்களும் வெளியே சென்றான்., அப்பொழுது தான் ஷாப்பிங்க் மாலில் தெய்வாவை பார்த்தான். ஒரு உடையை அணிந்துகொண்டு அவள் யாரிடமோ உடையை சுற்றி சுற்றி காட்டிகொண்டிருந்தாள், ஆனால் அவள் எதிர் நின்றவர் இவனுக்கு தெரியவில்லை.’’

‘‘தென்னவன் பார்வையை பார்த்த வள்ளி, அவனை பின் தொடர்ந்து அவளும் பார்த்து அதிர்ந்து நின்றாள். ஏனெனில் தெய்வாவின் சாயல், திருமூர்த்தியின் சாயல் போன்றே இருந்தது…, அதன் பின் தான், தென்னவனிடம் எல்லாம் விசயத்தை, கேட்டு தெரிந்துகொண்டால்..,, வள்ளி, தென்னவனின் காதலுக்கு உதவினாலும் ஒரு குடும்பம் சேர்வதற்க்கான சூழ்நிலையை தான் உருவாக வேண்டும் என்று தான்.., பாண்டியனிடம் நேரில் தெய்வாவை பற்றி கூறாமல் திருமூர்த்தியின் மூலம், தெய்வாவை பார்த்தது, அவளின் அம்மாவுடம் அவள் இருப்பதும், தாமரையை எப்படியாவது குடும்பத்துடன் இணைக்க வேண்டும் என்று தான், திருமூர்த்தி, பாண்டியனின் துணையை நாடியதும், அதற்க்கு பின் நடந்த அத்தனை சம்பவத்திற்க்கும் முக்கிய காரணம் வள்ளி, திருமூர்த்தி, தென்னவன்..’’

‘‘தென்னவன், தெய்வாவின் நிழல் போல் அவள் பின்னே சுற்றினான், அவளை திவாகரனின், அடியாள் ஒருவன் பின் தொடர்வதை கண்டவன், அவனை அடித்து நொருக்கிவிட்டான், தெய்வாவை கடத்தும் முதல் நாள் அன்று’’

‘‘அனைத்து நிகழ்வுகளை நினைத்துக்கொண்டே வீடு வந்து சேர்ந்தான்.. தென்னவன்.., அவனை பார்த்த சிவநாதன்’’

‘‘என்ன தென்னவா, ஏன் இவ்ளோ நேரம்... வயலுக்கு தான போன’’

‘‘ஆமாம்ப்பா, அப்படியே தோப்பையும் பார்த்துட்டு, தண்ணீ கட்டிட்டு வந்தேன், நாளையில இருந்து அதுக்கான ஆளையும் போட்டுவந்தேன்’’

‘‘சரிப்பா, கல்யாணத்துக்கும் இன்னும், மூனு நாள் இருக்கு நாளையில இருந்து வெளிய போகாத, மலரும் மாப்பிள்ளையும் நாளைக்கு வந்துருவாங்க..., அவங்களுக்கான ஏற்பாடு பார்க்கனும் சரியா.., ‘‘

‘‘சரிங்கப்பா..., நான் பார்த்துகிறேன்..’’

‘‘தென்னவனின் காதலுக்கு கிடைத்த பரிசாய், தெய்வா அவனுக்கு முழுமனதுடன், அவன் கட்டிய தாலியை தன் கழுத்தில்

எந்தவித சஞ்சலமும் இல்லாமல் வாங்கிக்கொண்டால், இப்போது தெய்வ்ப்ரியா தென்னவனின் காதல் மனைவியாகிவிட்டாள்.,''

''அப்பொழுது, திடிரென்று, ''என் பொண்ணுக்கு, என்னை கேக்காம யார் கல்யாணம் பண்ணி வைக்க நீங்க யாரு'' திருமூர்த்தியை பார்த்தும், முத்தையாவை பார்த்தும் கேள்வியை கேட்டார், தெய்வாவின் தந்தை.

# அத்தியாயம் 18

’’ஐயர் மந்திரத்தை சொல்லிகொண்டிருக்க, மணமகனின் அறையில் மாப்பிள்ளை தயராக, மணமகளை அலங்கரித்துக்கொண்டிருக்கும் பெண்களும், கல்யாணத்திற்க்கு வந்த சொந்தங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்க்கும், மாப்பிள்ளை வீட்டாரும், மணமகளின் வீட்டாரும். புதிதாக திருமணம் முடிந்தாலும், இப்பொழுது நடக்கும் திருமணத்தை பார்க்கையில் அவர்களின் திருமணமும் நினைவு வராமல் இருக்குமா என்ன???, தலைவாழை இலை போட்டு மூனு நேரமும் பந்தி நடக்குறது கிரம்மத்து கல்யாணத்துல மட்டும் தான், அதே மாதிரி தான் திருமூர்த்தியின் மகளின் கல்யாணமும் இன்னும் சற்று நேரத்தில் நடக்கவுள்ளது’’.

’’மாப்பிள்ளையை அழைச்சுட்டு வாங்கோ’’ ஐயர் சொல்ல.

‘‘பிரகாஷும்,மாறனும், கை பிடித்து, தென்னவனை அழைத்து வந்தனர்’’

‘‘மாப்பிள்ளையோட தாய்மாமா, இங்க வாங்க’’

‘‘சொல்லுங்க ஐயரே’’ வள்ளியின் தந்தை வந்து நிற்க.

“மாப்பிள்ளைக்கு, மாலை போட்டு, இந்த பட்டு வேஷ்டி,சட்டைய கொடுங்கோ”

“தென்னவனோ, முருகவேலின் காலில் விழுந்து, அவர் கொடுத்த உடையை வாங்கிகொண்டு சென்றான்.

“இதே போல், தெய்வாவுக்கும் இந்த சடங்கு நடந்தது, முத்தையா, அவளுக்கு மாலை அணிவித்து, அவளிடம் கல்யாண உடையை கொடுத்தார்.”

“மாப்பிள்ளையை அழைச்சுட்டு வந்து, இந்த மனையில அமர்த்துங்கோ”

“தென்னவனை, மனையில் அமரவைத்து, அருகிலேயே பிரகாஷும்,மாறனும் நின்றுகொண்டனர்.”

“பொண்ணை அழைச்சுட்டு வந்து, மனையில அமர்த்துங்கோ”

“கீர்த்தியும்,மலரும், தெய்வாவை அழைத்து வந்து, மனையில் அமரவைத்து அவளின் அருகிலேயே நின்றனர்.”

“வள்ளியின், உடல் நிலைக்காக, அவள் எல்லா பொறுப்பையும், கீர்த்தியிடமும், மலரிடமும், கொடுத்துவிட்டாள். பாண்டியனும், வள்ளியின் அருகில் அமர்ந்துகொண்டான்.”

“இந்த மாங்கல்யத்தை எல்லோரிடம், கொடுத்து ஆசீர்வாதம் வாங்கிட்டு வாங்கோம்மா” ஐயர், மாங்கல்யத்தை தட்டை கொடுக்க. கீர்த்தி அதை வாங்கிகொண்டு, அனைவரிடமும் ஆசீ வாங்க சென்றால்.

“தம்பி, பெரியவங்க இருந்தா வரசொல்லுங்கோ,” கார்த்தியை பார்த்து சொன்னார்.

“கார்த்தியோ, முத்தையா, மீனாட்சி, திருமூர்த்தி, சிவநாதன் செல்வி, முருகவேலை, அழைத்துகொண்டு மேடையை நோக்கி போனான்.

“கெட்டி மேளம், கெட்டி மேளம்” ஐயர் சொல்ல, மந்திரம் முழுங்க, தென்வ்வனின் கையில் மாங்கல்யத்தை கொடுத்த ஐயர், “கட்டுங்கோ தம்பி”, சொல்ல, மஞ்சள் கயிறில், சிவனும், பார்வதியும் அந்த மாங்கல்யத்தி இருக்க, அதை வாங்கிய தென்னவன், தெய்வாவின் கழுத்தில், கட்டி இரண்டு முடிச்சு போட, மூன்றாவது முடிச்சை, மலருக்கு கொடுத்தான்.”

“தெய்வாவின் கல்யாணத்தை பார்த்த முத்தையா, தன் தங்கையின் கல்யாணத்தை மறுமுறை பார்ப்பது போல் உணர்வு,”

“விழிகளில் கசிந்த நீரை, தன் துண்டினால், துடைத்துக்கொண்டார் திருமூர்த்தி, மகளின் திருமணத்தில், பார்க்கும் பெற்றோர்களுக்கு வரும் அந்த கண்ணீர் திருமூர்த்திக்கும் வந்தது.”

“மீனாட்சியும், செல்வியும், தெய்வாவின் கல்யாணத்தை கண்டு மிகவும் மகிழ்ந்தனர்.”

“வள்ளியின் மனதில், தெய்வாவின் கல்யாணம் நல்ல படியாக முடிந்தது, சந்தோஷத்தில் இருந்தாள்.”

“வாழ்க்கையில், நீயும், நானும், இனி சரிசமம்”

“ நீ, நான்னு, பிரிவு எதுவும் இனி இல்லை

வாழ்க்கைய நாமா இரண்டு பேரும் அழகாக வாழ்ந்து காட்டலாம்

உன், துன்பமும், இன்பமும் அதில் எனக்கும் பங்கு உண்டு

தாம்பத்தியம் மட்டுமே வாழ்க்கையில்லை, அதையும் தாண்டி அன்பு, விருப்பு, வெறுப்பு, மகிழ்ச்சி, இதை குறிக்கிறது தான் வாழ்க்கை

வா… வாழ்ந்து பார்ப்போம் அந்த அழகான வாழ்க்கையை”

‘‘இந்த நிமிடம் முதல், தெய்வா எனது மனைவி, அவளுக்கு யாரலும் துன்பம் நேர்ந்தாலும், அத் என்னை தாண்டி தான் போகனும், இனி கடவுள் துணை எனக்கு இருக்கோ இல்லையோ, தெய்வாவுக்கு, அந்த கடவுள் துணை இருக்கனும்’’

‘‘மப்பிள்ளை, பொண்ணுக்கு கால்ல மிஞ்சி போட்டு, அருந்ததிய பாருங்கோ,’’

‘‘இந்த அக்னி குண்டத்தை மூனு முறை சுற்றி வாங்கோ,’’ ஐயர் ஒவ்வொரு சடங்கையும் சொல்ல, அதை மகிழ்ச்சியுடன் செய்தான் தென்னவன்.

‘‘அப்போது யாரும் எதிர்பார்க்காத குரல், அந்த மகிழ்ச்சியை கலைத்தது’’

‘‘யாரை கேட்டு என் பொண்ணுக்கு கல்யாணம் செஞ்சேங்க’’ மண்டபம் அதிர பேசினார். குரல் வந்த திசையை பார்த்த அனைவரும் அதிர்ச்சியாக இருந்தனர். வள்ளியை தவிர.

‘‘வாங்க, மச்சான் எப்படி இருக்கேங்க, எங்க போனேங்க இத்தனை வருசமா’’ பாசத்துடன் முத்தையா ஓடி வந்து அவரின் கை பிடித்து கேட்க.

“ நான் வருவது இருக்கட்டும், இந்த கல்யாணத்தை நிறுத்துங்க முதல”

“எல்லாம் முடிஞ்சது குரு, இனி தெய்வா உன் மக இல்லை, தென்னவன் மனைவி” திருமூர்த்தியின் குரல் ஓங்கி ஒலிக்க.

“அவருக்கோ, தன் ஒரே மகளின் திருமணத்தை பார்க்க முடியாமல் போனதே என்று சிறு வருத்தம் இருந்தாலும், தன் மனைவியின் சாவுக்கு இந்த குடும்பம் தான் காரணம், தவறான எண்ணத்தில் ஊருக்கு வந்தார்., ஆனால் அவர் வருவதற்க்குள் எல்லாம் முடிந்துவிட்டது.”

“என் மனைவி சாவுக்கு நீங்க தான காரணம், அண்ணா”

” நானா…, என்ன உளறல் இது குரு, தாமரை இறந்தது ஒரு விபத்து அதுக்கு காரணம் யாரும் இல்லை அதை புரிஞ்சுக்கோ” திருமூர்த்தி அனைவரும் இருக்கும் காரணத்தால், தாமரையின் இறப்பை மறைத்தார்.

“அங்கு இருந்த, கீர்த்தி, கார்த்தி, மாறன், மூவருக்கும் இந்த விசயம் கொஞ்சம் அதிர்ச்சி தான், ஆனால்…, குருமூர்த்தியின் வருகை அவர்களை அதிகமாக பாதித்தது. அவர்கள் மனதில்

“தாமரை, அத்தை இறந்ததுக்கு ஐயா காரணமா என்ன சொல்கிறார் இவர், அப்போ தெய்வா, இவரின் மகளா” அவர்கள் யோசிக்க.

“தெய்வாவோ, சிறுவயதில் பார்த்த தந்தையை இன்று தான் பார்க்கிறாள், ஆனால் அவள் மனதில் தந்தையாவது கல்யாணத்தில் கடைசி நேரத்தில் வந்தாரே, அதுவே அவளுக்கு நிம்மதியாக இருந்தது. ஆனால் தாயின் மரனத்திற்க்கு ஏன் பெரியப்பாவின் மீது பழி போடுவது அநியாயமாக இருந்தது”

“ஆமாம் என் மனைவி இறந்ததுக்கு காரணம் நீங்க தான், நீங்க தான் உங்க மகனையும், அதோ நிக்கிறானே பாண்டியனையும் சென்னைக்கு அனுப்பி அவங்களை தேடி கண்டுபிடிச்சு கொலைசெய்ய சொன்னது நீங்க தானு, எனக்கு தெரியும்” தவறாய் கூறினார்.

“குரு, தாமரை இறந்தது கொலை தான், ஆனா அதுக்கு காரணம் என் மகனும், பாண்டியனும் இல்லை, திவாகரன் தான் காரணம், இது புரியாமா பேசாத.”

“தெரியும் நீங்க அந்த திவாகரன் மேல தான், பழி போடுவேங்கனு எனக்கு தெரியும், ஏன்னா, அவன் தான் எனக்கு சென்னையில நடந்த எல்லா விசயத்தை என்கிட்ட சொல்லிட்டான். ஆனா அவன், கொலை செய்யலை உங்க மகனும், அவனும் தான்

காரணம், தேவை இல்லாம அவனை ஜெயிலுக்கு அனுப்பிட்டேங்க, உங்களை விடமாட்டேன் அண்ணா, என் மனைவி இறந்ததுக்கு, நீங்களும், அதோ நிக்கிறானே அவனும் பதில் சொல்லனும், என் பொண்ணையும், என் மனைவியையும் என்கிட்ட பிரிச்சதுக்கு பதில் சொல்லனும் நீங்க, செய்யாத குற்றத்துக்கு என் குடும்பத்தை இந்த ஊரைவிட்டு அனுப்புனீங்கள, உங்களை விடமாட்டேன்'' அவர் சாபம் விட்டார் குருமூர்த்தி.

‘‘ குரு, நீ குடும்பத்துக்கு ஆகாதவங்க பேச்சை கேட்டு, இப்படி பேசாத... சென்னையில என்ன நடந்ததுனா.'' அவர் சொல்லுவதற்க்குள்,

‘‘போதும் நிறுத்துங்க அண்ணா, என் மனைவிய கொன்னு, என் மகளை ஏற்கனவே கல்யாணமானவனுக்கே இரண்டாவது கல்யாணம் பண்ணி வச்சு, இப்போ ஊர் அறிய அவளுக்கு வேற ஒருத்தனோட இன்னொரு கல்யாணம், நினைக்கவே வேதனையா இருக்கு, எந்த பொண்ணுக்கும், என் பொண்ணு மாதிரி வாழ்க்கை அமையக்கூடாது, ஆனா எங்களை இப்படி பழிவாங்கிட்டீங்களே அண்ணா..'' குருமூர்த்தி, அந்த விசயத்தையும் போட்டு உடைத்தார்..., இதை எதிர்ப்பார்க்காத வள்ளி அதிர்ந்தாள். அவளுடன் சேர்ந்து அந்த மூவரும் அதிர்ச்சியாக பார்த்தனர்.

‘‘குரு… ஒரே கத்தலில் அவரின் வாயை அடக்கினார்’’

‘‘என்ன சொல்லப்போறீங்க, என் மனைவியோட கடைசி ஆசைனு சொல்லப்போறீங்களா, இல்லை அவ பேருல இருக்குற சொத்தை அடையிறத்துக்கு இது நல்ல நேரம்னா…’’ அவர் மீண்டும் பேச ஆரம்பிக்க.

‘‘இந்த முறை, முத்தையாவும், முருகவேலும் சேர்ந்து அவரை அடக்கினர்…, திருமூர்த்தியின் நிலையோ வேறு மாதிரி இருந்தது. அவரை கவனித்த பிரகாஷ், முதல் முறையாக அவரை தந்தையாய் அழைத்தான்.

‘‘அப்பா…, என்ன செய்யுது உங்களுக்கு, அவன் தாங்க போக, அதற்க்குள் அவருக்கு இரத்தழுத்தம் அதிகமாகி, கீழே சரிய போக, பிரகாஷும், பாண்டியனும் அவரை தாங்கினர்.

‘‘மண்டபமே, அதை அதிர்ச்சியாக பார்க்க, மணமக்கள் இருவரும் மாலையை கழட்டி போட்டுவிட்டு அவரின் அருகில் வந்தனர்.., அனைவருக்கும் பதற்றமாகி போக, அவர்களை சமாதான் செய்ய ஊர் மக்கள் மட்டுமே அருகில் இருந்தனர்.’’

‘‘குருவோ, என் மனைவிய கொன்னதுக்கு தான் கடவுள் உங்களுக்கு தண்டனை கொடுத்தாரு,’’ மனதுக்குள் நினைக்க.

அவரை தவிர அனைவரும் திருமூர்த்தி என்னாவானதோ, ஏதானதோ என பதறிக்கொண்டு சென்றனர்.

''அவருக்கு, பிரஷர் அதிகமாகிடுச்சு...., அதுனால அவரை ஒரு நாள் ஹாஸ்பிட்டல இருக்கட்டும், நாளைக்கு அவரோட உடல் நிலையை பரிசோதிச்சுட்டு அப்புறம் பார்க்கலாம்.'' மருத்துவர், பிரகாஷிடமும், பாண்டியனிடமும் சொல்லிகொண்டிருந்தார்.

''வேற எதுவும் இல்லையே டாக்டர்....'' பிரகாஷ் பதற்றத்துடன் கேட்க..

'' நத்திங்க் பிரகாஷ்.., நீங்க பயப்படாம இருங்க, அவருக்கு கொஞ்ச நாள் ஓய்வு தேவை புரியுதா.., '' மருத்துவர் அவனுக்கு தைரியம் சொன்னார்.

''பிரகாஷ், மலரை தவிர மற்றவர்கள் விட்டுக்கு போகச்சொல்லி, செவிலியர் சொல்ல மற்றவர்கள் கிளம்பினர்.

''முதல் முதலில் மணமக்களை அழைத்துகொண்டு மணமகன் வீட்டுக்கு செல்வார்கள், ஆனால் இன்று காலையில் நடந்தை, நினைத்து அனைவரும் புது மணமக்களை மறந்திருந்தனர்.''

''அனைவரும், முத்தையா வீட்டில் இருக்க.., கார்த்திக் பேச்சை ஆரம்பித்தான். '' நாங்க ஊருல இல்லாதப்ப என்ன

நடந்ததுனு சொல்லுங்கப்பா…, தாமரை அத்தை இறந்ததுக்கு ஏன் அண்ணாவையும், ஐயாவையும் சொல்லுறாங்க. அத்தை எப்படி இறந்தாங்க, அப்புறம் தெய்வா நம்ம வீட்டு பொண்ணா, அவளை அண்ணா, இரண்டாவது கல்யாணம் செஞ்சுகிட்டாங்களா…, என்ன சொல்லுறாங்க அப்பா…, சொல்லுங்கப்பா…., " முத்தையாவிடம் கேட்க.

''அவருக்கு இருந்த வேதனையில், எல்லாம் உணமையும் சொல்லி முடித்தார், பாண்டியனும், பிரகாஷும் எதற்க்கு சென்னை சென்றார்கள் என்பதையும், அதில் பாண்டியன் தாமரையை தேடி சென்றதும், அவர்கள் குடும்பத்தை தன் குடும்பத்துடன் சேர்க்க எண்ணியதும், அதில் திவாகரனின் சதியால் தாமரை உயிர் விட்டதும், இறுதி நேரத்தில் தாமரையின் கடைசி ஆசையாய் தெய்வாவின் கல்யாணத்தை பாண்டியனுடன் பார்க்கவேண்டிய நிலையை எடுத்து கூறினார். தங்களுக்கே, பஞ்சாயத்தில் தான் எல்லா விசயங்களும் தெரிந்ததும், அதையும் கூறினார்.'' ஆனால், கார்த்தியோ கோபமாக பாண்டியனிடம் பேச ஆரம்பித்தான்..

"முத்தையா சொன்னதை கேட்ட, கீர்த்தியும், மாறனும் பாண்டியனின் செயல், வருத்ததை அளித்தாலும், வள்ளியின் வாழ்க்கையில் இப்படி ஒன்று நடந்ததை ஏன் யாரும் எங்களிடம் சொல்லவில்லை என்பதும், ஒரு பக்கம் கோபம் இருந்தாலும்,

அவர்களால் கோபப்படவில்லை காரணம் வள்ளி, பாண்டியனின் காதல் தான்''

‘‘எப்படிண்ணா, அண்ணிக்கு உங்களால துரோகம் செய்ய முடிஞ்சது…, அவங்க மேல நீங்க வச்சுருக்குற காதல் இது தானா… தாமரை அத்தை கேட்டாங்கனா சொல்லவேனடியது தானே உங்களுக்கு கல்யாணம் ஆகிருச்சுனு, ஏன் சொல்லல அண்ணா.., சொல்லுங்க, நீங்களாம் என்ன காதல் செஞ்சேங்களோ, அண்ணியும் உங்களை நம்பிட்டு இருக்காங்களே…, இப்போ அந்த பொண்ணு தென்னவன் அண்ணாவ கல்யாணம் செஞ்சா நீங்க அவளை கல்யாணம் செஞ்சது இல்லைனு ஆகிடும்மா… நீங்கல்லாம் அவன் அடுத்து பேசுவதற்க்குள்…''

‘‘ நிறுத்துட, யாரை பார்த்து என்ன வார்த்தை பேசுற, அவன் உன் அண்ணா அவன்கிட்ட இப்படி தான் பேசிவியா…, சொல்லு…, அதான நீ என் பிள்ளையா இருந்தா இப்படி பேசிருக்கமாட்டா, நீ, யாரோ பெத்த பிள்ளைனு இன்னைக்கு நிருப்பிச்சுட்ட…'' மீனாட்சி உண்மையை போட்டு உடைக்க..

‘‘மீனாட்சி., அத்தை…, அம்மா…..'' முத்தையா, வள்ளி, பாண்டியன் அவரை தடுத்து நிறுத்துவதற்க்குள், எல்லாம் உண்மையையும் போட்டு உடைத்தார்.

“அம்மா…, நான் …. உங்க… உங்க மகன்… இல்லையா…, அப்போ அண்ணா, எனக்கு அண்ணா இல்லையா…., அப்போ நான் யாரு…. உங்க செல்ல மகன் இல்லையா…,” கார்த்திக்கு தனது பிறப்பின் உண்மை இந்த நேரத்தில் வெளிவரும் என கனவிலும் நினைக்கவில்லை.,”

“அப்பசியெல்லாம், இல்லை கார்த்தி… நீ என் தம்பி தான், நீ இந்த வீட்டு வாரிசு டா…, நான் உன் அண்ணாடா கார்த்தி.. கார்த்தியை தேற்ற…,”

“ வள்ளியோ, பக்கதில் இருக்கும் கீர்த்தியை நினைத்து பார்த்தாள், ஏன்னென்றால் அவளும், மீனாட்சிக்கும், முத்தையாவுக்கும் பிறக்கவில்லையே…,”

” முத்தையாவோ, அம்மா கோபத்துல சொல்லிட்டா கார்த்தி… நீ என் மகன் டா.. என் மூத்த மகனுக்கு தம்பி டா… அம்மா சொன்னதை நினைச்சு எதுவும் மனசுல வச்சுக்காத… கார்த்தி…” அவரும் அவனை தேற்ற.

”கார்த்தியும், கீர்த்தியும் இதை கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை என அவர்களின் நிலையை பார்த்தே தெரிந்துகொண்டனர்.

“இன்னும் எத்தனை நாளைக்கு இந்த விசயத்தை மறைக்கமுடியும், விடுங்க..., நான் சொல்லுறேன்... “ நீயும், கீர்த்தியும் எனக்கும், இவருக்கும் பிறக்கலை, அவரின் கடந்த கால நினைவை கூற ஆரம்பித்தார்....”

“காமாட்சியின் இறப்பி போது, மீனாட்சியை அழைத்த காமாட்சி..., பாண்டியனுக்கு மீனாட்சி தான் அன்னையாக இருக்கவேண்டும் என்பதையும், அதற்க்கு, முத்தையாவிடம், மீனாட்சியை இரண்டாம் தாரமாக ஏற்று வாழவேண்டும் என்பதையும் காமாட்சி இருவரிடமும் சத்தியம் வாங்கிகொண்டு கண்மூடினார் , இது திருமூர்த்தி, செல்வி, தாமரைக்கு, முருகவேலுக்கு தெரியும்.”

“அடுத்த நாளே, வீட்டில் வைத்து தாலிகட்டினார் முத்தையா..., ஆனால் அவரோ மீனாட்சியிடம் எப்பொழுதும் என் மூலமாக குழந்தை வாய்ப்பு உனக்கு கிடையாது என்பதையும், அதையும் ஏதாவது நடந்து குழந்தை வந்துவிட்டால், முத்தையாவின் மனது பாதிக்கபடும் என்பதால் தன் கர்ப்பையை எடுத்துவிட்டார் மீனாட்சி..., இது தெரிந்த முத்தையா..., அதிர்ந்தே போய்விட்டார்..., என்ன தான் அவர்களுக்குள் இந்த முடிவு இருந்தாலும், ஊரின் பேச்சால், இருவரும் மருத்துவமனைக்கு செல்லும் போது, ஒரு பெண்ணை பார்த்தனர்.., அவரின் நிலையை

உணர்ந்து, அவருக்கு பிறக்கும் குழந்தையை, தாங்கள் தத்து எடுத்துகொள்வதாகவும், அவருக்கு உறுதி அளித்தனர்..., அதன் படி, அந்த பெண்ணுக்கு குழந்தை பிறக்கும் வரை மீனாட்சி அவருடனே இருந்தார்..., குழந்தை பிறந்தது அதுவும் இரட்டை குழந்தையாய் ஆண், பெண் என பிறந்தது..., குழந்தை பிறந்ததும், அவர் இறந்துவிட..., அந்த குழந்தைக்கு தாய் ஆனார் மீனாட்சி...''

''ஊரும் , குழந்தைக்காக தான் மீனாட்சி.., மருத்துவனையில் இருந்தார் என்பதையும் ஊர் மக்கள் நினைத்துகொண்டனர்.., குழந்தையின் வரவால் பாண்டியனும் மகிழ்ச்சி கொண்டான்..., ஆனால் இவர்கள் ரகசியம், தெரிந்தது நால்வருக்கு மட்டுமே, அது வள்ளி, பாண்டியன், முத்தையா.., திருமூர்த்தி, இன்று, உண்மை அனைவருக்கு தெரிந்தாலும், அதை ஏற்க்கும் பக்குவத்துடன் அனைவரும் இருக்கின்றனர்..., ஆனால் கீர்த்தி, கார்த்தியின் மனநிலை எவ்வாறு இருக்கும்..''

''அவ இந்த வீட்டு பிள்ளை, நீ அவளை பற்றி பேசுனதுக்கு உனக்கு என்ன தகுதி இருக்கு, இனியும் என் நாத்தனார் பிள்ளைய பேசுன..., உன்னை... அவர் சொல்லிகொண்டே..., கீர்த்தியை பார்த்தார்... ''அய்யோ, கீர்த்தி..., அம்மா தெரியாம சொல்லிட்டேன்ம்மா..., நீ என் பொண்ணு தான் அதை யாரலும்

மாத்த முடியாதும்மா…, “ அவளை கட்டிகொண்டு அழ… அவளோ…”

“ நான் வேற வயித்துல பிறந்தாலும், என் அம்மா நீங்க தான்ம்மா., என்னை விலக்காதேங்கம்மா…., நான் உங்க பொண்ணு இல்லையா…, அப்போ மாமா எனக்கு சொந்த மாமா இல்லையா…” மாறனை சுட்டிக்காட்ட…

“யார் என்ன சொன்னாலும் நீ, முத்தையா மாமா பொண்ணு, இப்போ என் மனைவி… கீர்த்தி…” அவனும் அவளின் தோளை அணைத்து பதில் கூறினான்..

“இல்லை…, நான் யாரோ பெத்தவங்க மகன் தானே…., அதான் அம்மாவே சொல்லிட்டாங்களே…, இனி எனக்கு இந்த வீட்டுல இடம் இல்லை…, அதுக்கு முன்னாடியே… நான் வெளிய போறேன்…,” கார்த்தி.. அழுதுகொண்டே.. வாசலை நோக்கி போக…,

“ நில்லு கார்த்தி….” வள்ளி சொல்ல….. அவளின் பேச்சை கேட்க்காமல் நடந்துக்கொண்டிருந்தான்…. “அண்ணி சொன்னா கேட்க்கமாட்டீயா கார்த்தி..” வள்ளி சொல்ல…, அவன் கால் வாசலை தாண்ட இருந்தது…

“அண்ணி சொல்லுறேன்…, என்னைக்கும் நீ இந்த வீட்டு பையன் தான்…, அதுவும் என் அத்தானுக்கு தம்பி தான்…., அத்தை, அத்தானை நீ புரிஞ்சுக்காம பேசிட்டேனு கோபம், அதான்…, வா உள்ள…,”

“இல்லை…., நான் வரமாட்டேன்…,”

“அண்ணி பேச்சுக்கு மரியாதை கொடுப்பியா இல்லையா…. சொல்லு..” அவளின் வார்த்தைக்கு மரியாதை கொடுத்து…. அழைத்து சென்றால் வள்ளி…, அத்தான் கார்த்திய அழைச்சுட்டு போங்க…”

“தென்னவன் மாமா…, தெய்வாவ மேல இருக்குற இரண்டாவது ரூம்க்கு அழைச்சுட்டு போங்க…, கொஞ்சம் நேரம் ஓய்வு எடுங்க…,”

“அண்ணா, கீர்த்திய அழைச்சுட்டு அவ ரூம்க்கு போங்க…”

“மாமா, அத்தைய கூப்பிட்டு போங்க…, நான் எல்லோருக்கும் குடிக்க எடுத்துட்டு வரேன்…” அவள் சமையல் அறைக்கு செல்ல…, அங்கு வாணி தயராக வைத்திருந்தால்…, காஃபியை…

“என்னை மன்னிச்சுருங்கண்ணா…., நான் தெரியாமா பேசிட்டேன்…, அதுக்காக நான் உங்க தம்பி இல்லைனு

சொல்லாதீங்கண்ணா..., எப்பவும் நீங்க என் அண்ணா தான், நானும் கீர்த்தியும் உங்க தம்பி, தங்கச்சி தான்...,.. கார்த்தி, பாண்டியனை கட்டியணைத்து அழுக...'' பாண்டியனோ... ''அம்மா கோபத்துல சொல்லிட்டாங்க... எப்பவும் நீங்க தான் இந்த வீட்டு பிள்ளைங்க.. சரியா.. அண்ணா மறந்துட்டேன் கார்த்தி... நீ பேசுனது எல்லாம் சரியா..., இப்போ அமைதியா இருடா..'' அவனின் தலையை கோதினான்.

''என்னால, எல்லோருக்கும் நிம்மதி இல்லங்க...., பேசாம நான் இந்த ஊரைவிட்டு போயிடவா...,'' தென்னவனை பார்த்து கேட்டால்..., அவனோ.., ''ஏன் என்னை விட்டு போறதில இவ்வளவு சந்தோஷமா..., தேவி'' அவன் கவலையாய் கேட்க..., அவனின் பதிலில் அதிர்ந்தாள் தெய்வா...

''கீர்த்தியின் அமைதியை பார்த்த மாறன்..., அவளை இப்படியே விட்டால் சரிவராது என..., அவன் அவளின் முகத்தை நிமிர்த்தி ''என்னமா கீர்த்தி, ஏன் அமைதியா இருக்குற..., எப்பவும் நீ அத்தைக்கு பொண்ணு தான், என் மனைவி தான் சரியா...'' அவன் பேச..., அவளோ, மாறனின் நெஞ்சில் தஞ்சம் புகுந்தாள்..,'' அவளின் முதுகை தடவிக்கொடுத்து, அவளுக்கு ஆறுதல் அளித்தான்..''

“ என்னை, மன்னிச்சுருங்க..., அவன் தம்பிய பற்றி புரியாம பேசுனத்துக்கு தான், என் வாய் தவரி எல்லாம் உண்மையும் வந்துருச்சு..., என்னை மன்னிச்சுருங்க...” முத்தையாவின் காலில் விழுந்தார்.

“முதல் முறையாக மீனாட்சியை தொட்டு தூக்கினார், முத்தையா..., அவரின் தொடுதலை.., காமாட்சிக்கு செய்யும் துரோகமாக நினைத்து.., அவரின் தொடுதலை நிராகரித்தார்..., அவருக்கு தெரியும், காமாட்சியின் மீது முத்தையா எவ்வளவு, காதல் வைத்திருப்பது”

“மீனாட்சியின் நிராகரிப்பு, அவருக்கு பாதிப்பு ஏற்படவில்லை..., ஆனால் அவருக்கு பெருமிதம் தான் இருந்தது..., சிறு தீண்டலை கூட தன்னிடம் எதிர்ப்பார்க்கவில்லை என்று அவருக்கு உணர்த்தினார்... மீனாட்சி..”

“இப்போ அழுகுறதுக்கு, ஏன் உண்மைய சொன்ன..., அவன் சின்ன பையன்ம்மா.. எடுத்து சொன்னா புரிஞ்சுக்குவான்.., நீ தான் பாண்டியன் மீது உள்ள அதிக பாசத்தால்.., உண்மைய சொல்லிட்டா. விடும்மா அவன் எங்கயும் போகமாட்டான் எப்பவும் நமக்கு மூனு பிள்ளைங்க தான்.. சரியா, அவரின் மனதில் இருப்பதை தெளிவாக கூறினார்..”

''எல்லாரின் வேதனையும் முடிந்து, திருமூர்த்தி ஐயா.. நல்ல படியாக வீட்டிற்க்கு வந்தார்.., அவரைக்காண.., அனைவரும் சென்றனர். ஆனால் குருவின் வருகையால் அனைவரும் பயந்து இருந்தனர்.''

''புது மணமக்களை…, எல்லா சீர்வரிசைகளுடன் மாப்பிள்ளையின் வீட்டுக்கு அழைத்து சென்றனர்…, கீர்த்தியும், மலரும்..'' தென்னவனும், தெய்வாவை மகிழ்ச்சியுடன் அழைத்துச்சென்றான்..,''

'' ஆனால்…, குருமூர்த்தியின் பார்வையில், பாண்டியனும், திருமூர்த்தியும் கொலைகாரானக தெரிந்தது…, அவர் இப்படி நினைக்க, திவாகரனின் சதியால் அடுத்த சம்பம் நிகழ்ந்தது..''.

# அத்தியாயம் 19

''மல்லிகைப் பூவின் வாசமும்,ரோஜாவின் பூவின் வாசமும், அந்த அறையின் கட்டிலில் சூழ்ந்திருக்க, கட்டிலின் பக்கத்தில் பழம்,பலகாரம், மல்லிச்சரம் என டேபிளில் இருக்க, இதையெல்லாம் ரசித்துப்பார்க்கும் மனநிலையில் தென்னவன் இருந்தாலும், அவன் மூளையில் தெய்வா, குளக்கரையில் சொல்லிசென்றது அவனது நினைவைவிட்டு நீங்காத இடம் பிடித்தது…''

''வரச்சொன்னீங்களே…'' அவனின் அமைதியை கலைத்தது, தெய்வாவின் குரல்.

''அன்னைக்கு, ராத்திரினு கூட பார்க்காம நான் உன் ரூம்க்கு வந்துட்டேன், சாரி..''

''ம்ம்ம்… சரி, வேற''

''என்னை பிடிச்சுருக்கானு கேட்டேனே, தேவி… பதில் சொல்லு''

''பிடிச்சிருக்கு… ஆனா''

‘‘ஆனா,’’

‘‘என் மனசு முழுக்க நீங்க இருக்கீங்களானு கேட்டா எனக்கு சொல்ல தெரியலைங்க..., ஏதோ எதிர்ப்பார்க்கிறேன்..., ஆனா சொல்லத்தெரியலைங்க’’

‘‘மனசு குழப்பமா இருக்கா தெய்வா’’

‘‘அப்படியும் இருக்கு, ஆனா நீங்க என் வாழ்க்கையில வந்தா நான் உங்க கூட இயல்பா பேசவும், பழகவும் முடியுமானு கேட்டா.., அது தெரியலை..’’

‘‘இந்த கல்யாணத்துல உனக்கு விருப்பமா தெய்வா’’

‘‘விருப்பம் தான், ஆனா ஏதோ ஒன்னும் நடக்கப்போகுதுனு எனக்கு தோனுது அது நல்லதா, கெட்டதானு எனக்கு தெரியலை..’’

‘‘அவளை, திருப்பி நேருக்கும் நேராய் நிற்க வைத்து, ‘‘ என்னை பார்த்து சொல்லு தெய்வா.., என்னை கல்யாணம் பண்ணிக்க சம்மதமா, வாழ்க்கை முழுக்க நான் உன்னையும், நீ என்னையும் காதலிக்க தயரா..,

‘‘அவனின் கண்களில் தொலைந்து போன காதல் இன்று அவன் கண் முன் இருப்பது போல் இருந்தது அவளுக்கு, ஆனால்

அவளின் வார்த்தைக்காக ஒருவன் காத்திருப்பதும், இன்னும் ஏதோ ஒன்று அவளிடம் எதிர்பார்க்கிறான், அது அவளின் காதல் மட்டும் தான், ஆனால் இது அவளுக்கு தெரியாது.., அவனால் காதலை உணரவைக்க முடியுமே தவிர அவள் காதலை சொல்லவைக்க முடியாது''

''சம்மதம்'' இந்த வார்த்தை மட்டும் போதும் என்று நினைத்தவன், அவளிடம் தனக்கான காதல் இருக்கிறதா என்று கேட்க மறந்துவிட்டான்...

''சரி நேரம் ஆச்சு, கிளம்புலாமா''

''ம்ம்ம்...''

'' நீ இங்க வந்தது யாருக்காவது தெரியுமா??? தேவி''

''வள்ளி அக்காகிட்ட மட்டும் சொல்லிட்டு தான் வந்தேன்''

''சரி.. நீ முன்னாடி போ, நான் பின்னாடி உனக்கு துணையா வரேன்''

''சரிங்க...''

''தேவி...'' அவளை அழைத்தான்.

''என்னங்க''

“எது இருந்தாலும், மனசுல வச்சு மருகாத எனகிட்ட சொல்லமுடியாததை, வள்ளிக்கிட்ட சொல்லு… சரியா.”

“ம்ம்ம்..சரிங்க”

“பார்த்துப் போம்மா”

“இதை நினைத்துகொண்டிருந்த வேளையில், அறையில் கதவு திறந்துகொண்டு, மெல்லிய கொலுசின் ஒலியை கேட்டுகொண்டிருந்தான் தென்னவன்… அவள் தென்னவனை நோக்கி வரும்போது, அவனும் எழுந்து நின்றுகொண்டான்”

“அவன் அருகில் வந்து நின்றவள், பால் சொம்பை பக்கதில் இருக்கும் டேபிளில் வைத்துவிட்டு, அவனின் பாதத்தில் விழுக.., அவனோ அவளின் தோள் தொட்டு தூக்கினான்..”

“இது கிரமாம்.., இப்படி சம்பிரதாயம் செய்யுறது வழக்கம் தான் ஆனா என்னைக்குமே மனைவி, கணவனுக்கு சரிசமம் தான் புரியுதா தேவி”

“ம்ம்ம்..,”

“என்னைக்குமே நீ தீர்க்கசுமங்கலியா இருக்கனும் தேவி” அவளை வாழ்த்தி கட்டிலில் அமர வைத்துவிட்டு அவளுக்கு எதிர்

சோபாவில் அமர்ந்தான்.. தென்னவன் அதை கவனித்தால் தெய்வா, அவனின் செய்கை தன் மனதை புரிந்துகொண்டு நடக்கிறான் என அவளுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது.''

'' உங்க அப்பாகிட்ட ஏன் தேவி பேசல..'' அவனே ஆரம்பித்து வைத்தான்.

''அவருகிட்ட பேசனும் ஆசையா இருந்தேன், ஆனா அவரு தேவையில்லாம ஏன் பாண்டியன் மாமா மேலையும், பெரியப்பா மேலையும் பழிப்போட்டார்னு தெரியலை, அவரு பேசுனதுக்கு பெரிப்பாக்கு உடம்பு சரியில்லாம போயிருச்சு, அது மனசுக்கு கஷ்ட்டமா இருக்கு, அப்பா இப்படி திடீர்னு வருவாங்கனு நான் நினைக்கலங்க.., வந்தவரு என்னை பார்க்காம அடுத்தவங்க மேல பழி போடுறதுக்கு தான் வந்துருக்காங்க, அப்புறம் எப்படி அவருகிட்ட பேசமுடியும்..''

''என்னையும், அம்மாவையும் விட்டுட்டு இத்தனை வருசமா எங்க இருந்தாரு, இப்போ வந்து என் மக வாழ்க்கை இப்படி பண்ணிட்டேங்களேனு அவங்கமேல கோபத்தை காட்டுருங்க.., இது என்ன நியாயம் சொல்லுங்க'' மனதில் உள்ளதை வெளிப்படையாக கூறினால்.

‘‘என்னால தான், இன்னைக்கு, கார்த்திக்கும் கீத்திக்கும் அவங்க உண்மை தெரிஞ்சது இதுவே எனக்கு பெரிய வருத்தமா இருக்கு, இதையெல்லாம் நினைக்குறப்போ என் அப்பா ஏன் தான் இந்த ஊருக்கு வந்தாரோனு இருக்கு, அதுக்கு அவரு வரமலே இருந்துருக்கலாம், நானும் கடைசி வரை என் அப்பா முக்கத்தை பார்க்காமலே இருந்துருப்பேன்’’ கண்களில் கண்ணீருடன் அவனிடம் பேசினால்.

‘‘அவளின் கண்ணீரைப்பார்த்ததும், அவனுள் இருக்கும் காதல், வெளிவந்தது அவளின் அருகில் சென்று அமர்ந்து, ‘‘ நான் ஒன்னு சொல்லட்டுமா தேவி’’

‘‘என்ன’’

‘‘உன் அப்பா இருந்த இடத்துல என் அப்பா இருந்தாருன்னா, அவருக்கு நான் புரியவைப்பேன், ஏன் என்னை விட்டு போனீங்கனு கேட்ப்பேன், எதுக்காக இத்தனை வருசமா ஏன் என்னையும், என் அம்மாவையும் விட்டு பிரிஞ்சு இருந்தீங்கனு கேட்ப்பேன், என்னை குடும்பத்துல ஒருத்தியா பார்த்த என் வள்ளிக்காவும், பெரிய்யப்பாவும் பேசரதுக்கு உங்களுக்கென்ன உரிமை இருக்குனு கேட்டுருப்பேன், இப்போ என்னை பார்க்க

வந்திருந்தா ஏன் அவங்ககிட்ட சண்டை போடுறீங்கனு கேட்டுருப்பேன் தேவி… அப்போ நீ''

''அவருகிட்ட இதெல்லாம் பேசுனா பெரியாப்பா மேலையும், பாண்டியன் மாமா மேலையும் இருக்குற கோவம் போயிடுமா..''

''தெரியலை, ஆனா உனக்காக கொஞ்சம் கொஞ்சமா மாறலாம் தேவி''

'' அவரு இப்போ எங்க இருக்காங்கனு தெரியலையே''

''மாமா, திவாகரன் வீட்டுல தான் தங்கிருக்காங்க''

''அவன் வீட்டிலயா, என் அம்மாவ கொன்னவன் வீட்டுல எதுக்கு இவரு தங்கனும்''

''ஏன்னா.. அவனுக்கு நீ தாய்மாமா பொண்ணு..,உனக்கு அத்தை பையன்'' அவர்களின் குடும்ப பின்னனியை கூறினான்..

''திருமூர்த்தி, குருமூர்த்தி இவர்களின் தங்கை நீலாவதி… நீலாவின் அழக்கும், சொத்துக்கும் ஆசைப்பட்டு பழனிச்சாமி அவளை விரும்பினான் இது தெரிந்த திருமூர்த்தி நீலாவுக்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்க்க, பழனியோ நீலாவை அழைத்துகொண்டு, ஊரின் எல்லைச்சாமி முன் திருமணம்

செய்துகொண்டனர்.., இது தெரிந்த திருமூர்த்தியும்,குருமூர்த்தியும் தங்கயை ஒதுக்கிவைத்தனர். திருமூர்த்தியின் கல்யாணத்துக்கு தங்கையின் குடும்பத்தை அழைக்கவில்லை, நீலாதான் கண்ணீருடன் திருமூர்த்தியின் கல்யாணத்தை ஒரமாய் பர்த்துவிட்டு சென்றார்.., குருமூர்த்தியின் கல்யாணம் தாமரையுடன் நடந்த போது, நீலாவுக்கு ஒரு மகன் பிறந்திருந்தான்.., இதற்கிடையில் கோவிலின் திருவிழாவின் போது, கலவரத்தை உண்டு செய்ய போட்டுருந்த திட்டதில் குருமூர்த்தியை பழி ஆடாக மாற்றினர்.., குருமூர்த்தி தான் ஊரின் திருவிழாவின் போது மக்களுக்குள் கலவரத்தை தூண்டிவிட்டது குருமூர்த்தி தான் என்பது, பழனிச்சாமி, குருமூர்த்தியின் மீது பழியை போட்டு அதற்க்கு ஆதரத்தை காட்டியதும், திருமூர்த்தி தீர விசாரிக்காமல் பிறந்த குழந்தையுடன் நின்றிருந்த தாமரையும், குருமூர்த்தியையும் ஊரைவிட்டு போகச்சொன்னார்.., இது தெரிந்த திருமூர்த்தியின் மனைவி, எவ்வளவு போராடியும் அவர்களின் மீது உள்ள பழியை போக்க முடியவில்லை.., ஒரு நாள், கோவிலில் நீலாவை சந்தித்தபோது அவர் தான், திருவிழாவின் நடந்த உண்மையை கூறினார். அதிலும் அன்று பஞ்சாயத்தின் போது, என்னால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் பழனி தன்னை அறையில் பூட்டிவைத்து விட்டு வந்தார், என்பதையும் கூறினார்.''

‘‘பழனியின் எல்லை மீற, அதை தாங்கிக்கொள்ள முடியாத நீலா, தற்கொலை செய்துகொண்டார். திருமூர்த்தியிடம் உண்மையை சொல்ல சென்றபோது அவரை கழுத்தை நெறித்து கொன்றுவிட்டு, அவரே தூக்குப்போட்டு இறந்துவிட்டார் என்று கதைகட்டிவிட்டார் பழனி.., மனைவியின் இறப்பு திருமூர்த்தியை பாதித்தது, இனி மகனிடமும் பாசம் காட்டினால் அவனும் தன்னை விட்டு புரிந்துவிடுவான் என்று தான், பிராகாஷிடம் தள்ளியே இருந்தார்.. ’’

‘‘சிறு இடத்தகராரில், சிவநாதன் மீது கோபம் ஏற்ப்பட்டாலும், அதை மறந்துவிட்டு இன்று பேசுவதற்க்கு காரணம் வள்ளி தான் என்பதையும், கூறினான் தென்னவன்’’

‘‘இப்போவும் என் அப்பா, உண்மை எதுனு தெரியாம அவங்க பக்கம் இருக்காரே, பெரியம்மாவ கொன்னது அவங்க தானு பெரியப்பாவுக்கு தெரியுமா??

‘‘ம்ம்.. தெரியும், ஆனா பிரகாஷ்க்கு எதுவும் ஆகக்கூடாதுனு தான் அமைதியா இருக்காரு.’’

‘‘வள்ளிக்கா ரொம்ப கிரேட்... எல்லா உறவுகளையும் பிரிக்காம, பிரிந்திருந்த உறவுகளை சேர்க்குறாங்க அவங்க உண்மையில நல்லா இருக்கனும்’’

“வள்ளிக்கு, பாண்டியன் தான் உலகமே, அப்படியிருக்க அவனோட உறவுகளையும், தன் உறவுகளா கொண்டாடுற வள்ளிக்கு எல்லாமே நல்லா இருக்கும்.” தென்னவன் கூறினான்.

”சரி நீ தூங்கலாம தேவி..” அவன் கேட்க.

“ம்ம் தூங்கலாம்..” இருவரும் மெத்தையில் கொஞ்சம் இடைவெளி விட்டு படுத்துகொண்டனர். படுத்ததும் தெய்வா உறங்கிவிட, தென்னவனோ அவளை பார்த்துகொண்டு படுத்திருந்தான், அவளின் குடும்பக்கதையை சொன்னவன் , தான் அவளை காதலித்த கதையை சொல்லவில்லை, சொல்லவும் அவனுக்கு காதலனுக்கு இருக்கும் தயக்கம் தான், அவள் என்ன செய்வாளோ. ஏன் என்னிடம் சொல்லிவில்லை என்று சண்டை போடுவாளா, இல்லை சொல்லிருந்தால் அவளும் தன்னை காதல் செய்திருப்பாளோ. எதுவாக இருந்தாலும் அவள் மனதில் தான் இருப்பது உண்மையா இருந்தால் என் காதல் சொல்வது வெகுதூரத்தில் இல்லை. அவன் நினைத்துகொண்டே தூங்கினான்“

”கண்விழித்து, பார்த்தார் திருமூர்த்தி காலையில் நடந்த அத்தனை சம்பமும் கண்முன் வந்து போனது, என்னவெல்லாம் நடந்துவிட்டது. கல்யாணம் முடிந்தாலாவது தெய்வா சந்தோஷமாக இருப்பால் என்று நினைத்தால், குருமூர்த்தியின் வருகை அவருக்கு

மகிழ்ச்சி என்றாலும், அவன் யாருடைய பேச்சை கேட்டு இப்படி பாண்டியன் மீது பழி போடுகிறான் என்று அவருக்கு நன்றாக தெரியும், ஆனால் தெய்வாவின் கல்யாணம் நல்லா படியாக முடிந்தது அவருக்கு சந்தோஷம் தான்.'' அவர் நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில், அவருக்கு தாகம் எடுத்தது. தண்ணீர் எடுக்க பக்கத்தில் இருக்கும் தண்ணீர் டம்பளரை எடுக்க போக, அவரின் அசைவில் விழித்த பிரகாஷ் ''என்னப்பா, தண்ணீர் வேணுமா'' அவன் எடுத்துகொடுக்க, அவரும் அதை வாங்கி பருகினார்.

''அப்பொழுது தான், அவனையும் பக்கத்தில் இருக்கும் மலரையும் பார்த்தார். பிரகாஷ் சேரில் அமர்ந்து அவரின் படுக்கையில் தலை வைத்து படுத்திருந்தான், மலரோ அவன் அருகில் இருந்த ஒற்றை சோபாவில் காலை முடுக்கி படுத்திருந்தாள். அவர்களுக்கு இப்பொழுது தான் கல்யாணம் ஆன நிலையில் இவன் தனக்காக இங்கிருந்து விழித்துகொண்டிருப்பது அவருக்கு மகிழ்ச்சி தான்.''

''என்ன பிரம்மா, உங்க அறையில படுக்காம நீயும், மலரும் இங்க எதுக்கு படுத்துருக்கீங்க.., எனக்கு உடம்புக்கு இப்போ பரவாயில்லைப்பா, மருமகளை அழைச்சுட்டு போய் உங்க ரூம்ல படுத்து தூங்குங்கப்பா..'' அவனிடம் முதல் முறையாய் பேசினார்.

“இருக்கட்டும்ப்பா, உங்க பக்கத்துல முதல இருந்து நான் இல்லை, இப்போவாது நான் இருக்கேன்ப்பா.., நீங்க எதுவும் நினைக்காம தூங்குங்கப்பா”

“மலரையாச்சும், ரூம்ல படுக்க சொல்லுப்பா பாவம் அந்த பொண்ணு, உடம்ப குறுக்கி படுத்திருக்கு”

“அவளும், உங்களுக்கு துணையா இங்கயே இருக்கேனு சொல்லிட்டாப்பா, நான் சொன்னே, ஆனா அவ கேக்கல”

“ம்ம்.., சந்தோஷமா இருக்கியப்பா” அவன் தலையை கோதிகொடுத்து கொண்டே கேட்டார்.

“சந்தோஷமா இருக்கேன்ப்பா”

“அப்பா, மேல கோபமா பிரம்மா”

“முதல இருந்துச்சுப்பா, ஆனா இப்போ இல்லை.. உங்கமேல நான் தேவையில்லாம கோவப்பட்டதுக்கு, தெய்வா பற்றி எனக்கு தெரியாதப்போ இருந்த உண்மையெல்லாம், இப்போ தெரிஞ்சதுல இருந்து கோபம் இல்லைப்பா”

“அம்மா, போனதுக்கு பின்னாடி உன்னையும் வாழ்க்கையில இழக்ககூடாதுனு தான் நான் உன்னை விட்டு விலகி இருந்தேன்

பிரம்மா. என் விலகல் உன்னை பாதிக்காம இருக்க தான் பாண்டியன் உன்கூட அளவுக்கு அதிகமா பார்த்துக்க ஆரம்பிச்சான். பாண்டியன் உன்கூட இருக்குறதுனால நான் நிம்மதியா இருந்தேன். உன் படிப்புல இருந்து, வேலை கிடைச்சதும் வரை எனக்கு சந்தோஷமாவும் பெருமையாவும் இருந்துச்சு. நான் அதை வெளிய காட்டிகலை. உனக்கும், மலருக்கும் காதல் இருந்தது வரை பாண்டியனும், வள்ளியும் என்கிட்ட சொன்னாங்க. இதில நான் எதிர் பார்க்காதது. தெய்வாவுக்கும் பாண்டியனுக்கு நடந்த கல்யாணம் தான். வள்ளி உடைஞ்சு போயிருவாளேனு நினைச்சா தைரியமா இருந்தா. அவளோட தைரியம் யாருக்கும் வராது பிரம்மா.''

''ஆமாம்.. பாண்டியன்மேல வள்ளிக்கு அவ்ளோ காதல் இருக்கு''

''அது உண்மை தான்ப்பா... வள்ளியோட அன்புக்கும், பாசத்துக்கும் எல்லோரும் அடிமை தான்.''

''விடிய விடிய தந்தையும், மகனுமாய் பேசிகொண்டிருந்தனர்... கடந்து வந்த பாதையையும், காலங்களையும் இருவரும் பகிர்ந்துகொண்டனர். அவரின் பாசத்தால் பிரகாஷூம் தந்தையை

விட்டு விலகி இருந்தது தவறோ என்று முதல் முறை வருந்தினான்.’’

‘‘காலையில் எழுந்து வந்த வள்ளி, அனைவருக்கும் காஃபி எடுத்துகொண்டு சென்றால். முத்தையாவின் அறையை தட்டினால், மஞ்சள் குங்குமத்துடன் காட்சி தந்தார் மீனாட்சி. அவரின் கையில் இருவருக்குமான காஃபியை கொடுத்துவிட்டு மேலே வந்தவள், கார்த்தியின் அறையை தட்டினால். கதவை திறந்த கார்த்தியோ, சோகத்தை மறைத்துகொண்டு அவளிடம் காஃபியை வாங்கிகொண்டான், கீர்த்தியின் அறைக்கு சென்றால், அங்கு மாறன் காஃபியை வாங்கிகொண்டான். இறுதியாக அவர்களது அறைக்கு சென்றால்.’’

‘‘காஃபியை, டீபாயில் வைத்துவிட்டு அவனுக்காக காத்திருந்தால். குளியல் அறையில் இருந்து வெளிவந்த பாண்டியனோ, வள்ளியின் அருகில் அமர்ந்து, காஃபி குடித்தனர்.’’

‘‘திருமூர்த்தி ஐயாவ பார்க்க போகனும் அத்தான்…’’

‘‘சரிங்க வள்ளியம்மா, போகலாம்.., கார்த்திகிட்ட நீங்க பேசுங்க அவன் நான் என்ன சொன்னாலும், அம்மா பேசுனதுல இருந்து அவ்ளோவா பழைய மாதிரி இருக்கமாட்டேங்கறான்..,

அப்படியே கீர்த்திகிட்டயும் வள்ளியம்மா.. மாறன் மச்சான் புலம்புறாங்க என்கிட்ட.''

''பேசுறேன் அத்தான். அதை பற்றி நீங்க கவலைப்படாதீங்க நான் பேசுறேன். அத்தையும், மாமாவும் தென்னவன் மாமா வீட்டுக்கு போயிட்டு அப்படியே திருமூர்த்தி ஐயா வீட்டுக்கு வந்திருவாங்க, நானும் இவங்களை அழைச்சுட்டு வரேன்.''

'' நீங்க பார்த்து வாங்க... இல்லைனா நானே வந்து கூப்பிட்டு போறேங்க வள்ளியம்மா''

''ம்ம் சரிங்க அத்தான்''

''அத்தை சொன்னது உங்களுக்கு பெரிய வருத்தமா இருக்கும், எனக்கும் தெரியும், ஆனா இது நாள் வரைக்கும் உங்க மூனு பேருகிட்ட என்னைக்காவது ஒரு நாள் வித்தியாசம் பார்த்திருக்காங்களா.. சொல்லுங்க.''

''உங்களை பெத்தவங்களைவிட, உங்களை வளர்த்த அத்தையும், மாமாவும் இது நாள் வரைக்கும் வருத்ததை கொடுத்து இருக்காங்களா.., சொல்லுங்க. உங்க ரெண்டு பேருக்கும் ஒன்னுனா துடிச்சு போறது முதல் ஆள் அத்தையும், மாமாவும் தான்.''

“மாறன் அண்ணாவுக்கும், உங்களை பற்றி தெரியும் எப்போ தெரியுமா, கீர்த்திய, அண்ணா காதலிச்சு, வெளிநாடு போகும் போது தான் கீர்த்தி.”

“அப்போ அண்ணா என்ன சொன்னாங்க தெரியுமா, கீர்த்தி யாருக்கு பிறந்தாலும், அவ என் மாமா, அத்தை பொண்ணு தான். அடுத்து என் மனைவி இது என்னைக்கு மாறதுனு அத்தான்கிட்டையும், என்கிட்டையும் சொல்லிவிட்டு போனாங்க கீர்த்தி”

“கார்த்தி என்னைக்குமே என் பாண்டியன் மச்சானோட தம்பி தான், எனக்கு தம்பி மாதிரி தானு சொல்லிட்டு போனாங்க.”

“அத்தான் மேல எனக்கு நம்பிக்கை இருக்க போய் தான், அவருக்கும், தெய்வாவுக்கும் கல்யாணம் ஆனா போதும், அவரு மேல வச்ச நம்பிக்கை போகல. அதுக்கு காரணம் உங்களுக்கு தெரியும் தானே” வள்ளி கேட்க அவர்கள் இருவரும் தலையை அசைத்தனர்.

”இன்னும் உங்க மனசுல, அத்தை பேசுனது இருந்தா என்மேலையும், இந்த குடும்பத்துமேலையும் நீங்க வச்சுருக்க பாசம் உண்மையில்லைனு நான் நினைச்சுகிறேன்.” வள்ளி இதுக்கு மேலையும் இவருக்கு எடுத்து சொல்லுவதற்க்கு ஒன்றுமில்லை என

அவள் நகரப்போக, கீர்த்தி, வள்ளியை கட்டியணைத்துகொண்டு அழுதால், கார்த்தியோ, ’’எங்க பாசமே நீங்களும், இந்த குடும்பமும் தான் அண்ணி’’ நான் அம்மாகிட்ட பேசுறேன் அண்ணி.’’ இருவரும் சொல்ல வள்ளிக்கு சந்தோஷம்.

’’பாண்டியனிடம் சொன்ன மாதிரி வள்ளி அவர்களின் மனதில் இருந்த பாரத்தை விலக்கி, அவர்களை குடும்பத்துடன் சேர்த்தால்.’’

’’ஐயாவும், நடந்த விசயங்களை கேள்விபட்டு மீனாட்சியை திட்டிவிட்டார், திருமூர்த்திக்கு கார்த்தியின் மீது அவ்வளவு பாசம், கீர்த்தியும் அவருக்கு செல்ல மகள் போன்றவள். அதனால் தான் இந்த கோவம்.’’

‘‘கார்த்தியும், கீர்த்தியும் மனதில் உள்ள, பாரத்தை விலகி ‘‘ சாரிம்மா, தெரியாம பேசிட்டேன் என்னையும்,கீர்த்தியும் உங்க பிள்ளைகள் தானே இல்லைனு சொல்லாதீங்கம்மா…, நான் உங்களை என்னைக்குமே என் அம்மாவா தான் பார்க்குறேன் அது என்னைக்கும் மாறது அம்மா, அப்பா நீங்களும்,’’ கார்த்தி அவர்களின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டான்.’’

’’பெற்றவள் யாரகா இருந்தாலும், வளர்ந்த பாசமும்,அன்பும் என்றும் இல்லை என நினைத்துவிட முடியுமா. அது மாதிரி தான்

மீனாட்சிக்கு இருந்தது. கோபத்தை பிடித்து வைக்க முடியாமால் அவர் “ நான் தான் உங்க ரெண்டு பேருகிட்டையும் மன்னிப்பு கேட்க்கனும் கார்த்தி, என்னைக்குமே நான் தான் அம்மா, இவரு தான் அப்பா, எதுவும் மாறதுப்பா” அவர் கார்த்தியையும், கீர்த்தியையும் கட்டிகொண்டு அழுதார்.

# அத்தியாயம் 20

”டேய்.. எப்படியோ என் மாமானுக்கு எந்த உண்மையும் தெரியவிடாம நாம முந்திகிட்டோம், அதே மாதிரி அந்த தெய்வாவையும், என் மாமானையும் போட்டு தள்ளிட்டு அவங்க சொத்து முழுசும் என் பேருக்கு எழுதி வாங்கனும். அது மட்டுமா, என்னை ஜெயிலுக்கு அனுபுன அந்த பாண்டியன நான் சும்மா விடமாட்டேன்.”

“ நான் அவங்களை கொல்ல தான், ஜெயில இருந்து தப்பி வந்தது வேற எவனுக்கும் தெரியக்கூடாது, முக்கியமா அந்த பாண்டியனுக்கு தெரியக்கூடாது. நல்லவேளை என் மாமான நீ என்கிட்ட கூட்டிட்டு வந்த. இல்லையினா அவனும் அவங்ககூட சேர்ந்துகிட்டு என்னையும், என் அப்பனையும் விடமாட்டான்”

“அண்ணே…. ஏன் சொத்துக்கு அந்த குடும்பத்தை கொல்லனும், பேசாம அந்த ஆள்கிட்ட வெத்து பேப்பர்ல கையேழுத்து வாங்கிட்டு, அந்த பொண்ணுகிட்டயும் கையெழுத்து வாங்கிறலாம், இதுக்கு எதுக்கு நீங்க நல்லவன் வேஷம் போடனும், அதுமில்லாம தேவையில்லாம அந்த இரண்டு பேரையும் எதுக்கு

வீணா கொல்லனும், கொன்னுட்டு ஜெயிலுக்கு வேற போகனும், சொல்லுங்க'' திவாகரனின் அல்லக்கை கேட்க.

" டேய் மடையா...., அந்த சொத்தும் முழுவதும் எனக்கு சொந்தம், ஆனா என் அம்மா, என் அப்பா செஞ்ச கொலைக்காகவும், எங்கமேல நம்பிக்கை இல்லாமலும், அவங்க சொத்தும் முழுவதும் அந்த தெய்வா பேருலையும், என் மாமா பேருலையும் எழுதி வச்சுட்டாங்க. அது தெரிஞ்ச என் அப்பா கோவத்துல என் அம்மாவ கொன்னுட்டாரு. அதான் அதுக்கு தான் அந்த குடும்பத்தையும் கொல்லனும் நானும் என் அப்பாவும் முடிவு செஞ்சோம்.''

"ஆனா.... நீ சொல்லறது சரி தான் ஏன் அவங்களை கொன்னுட்டு நாமா ஜெயிலுக்கு போகனும். பேசாம என் மாமானையும், அந்த தெய்வாவையும் மறுபடியும் கடத்திடலாம, கடத்தி அவங்ககிட்ட இருந்து சொத்தை எழுதி வாங்கிட்டு, அப்புறம் அவங்க ரெண்டு பேரையும் கொன்னுட்டு, தூக்கிப்போட்டுட்டு நாமா வேற ஊருக்கு ஓடிடாலாம்.''

"எனக்கு தேவை அந்த சொத்தும், அந்த பாண்டியன் குடும்பம் அனுபவிக்க வேண்டிய துன்பம் மட்டும் தான்.''

“என்னை எப்படியெல்லாம் அவமானப்படுத்திருப்பான் அவன், அவனை சும்மா விடமாட்டேன்” கண்களில் வெறியுடன் பேசினான்.

“அண்ணே, நாளைக்கு திருமூர்த்தி வீடுல மூனு ஜோடிக்கு விருந்து வச்சு இருக்காங்க…”

“ரொம்ப நல்லது… என் மாமானுக்கு வேலை வந்திருச்சு… எங்க இருக்கான் என் மாமான்”

“அவரு ரூம்லையே அடைஞ்சு கிடக்குறாங்கண்ணே… இன்னும் சாப்பிட கூட வரலை..”

“தட்டுல சாப்பாடு போட்டு எடுத்துட்டு வா.. இன்னைக்கு நான் பிழியுற சோகத்துல என் மாமா, அந்த திருமூர்த்தியையும், பாண்டியனையும், ஒருவழியாக்கனும்”

“அண்ணே.. அடுத்த வாரம் ஊர் திருவிழா நடக்கப்போகுது அன்னைக்கு நாம அவங்க மேல குறிவச்சுருலாம். அப்போ கடத்துனா யாருக்கும் தெரியாதுண்ணே…”

''அப்படியா சொல்லுற…. சரி பண்ணிடுவோம்.. எல்லா ஏற்பாட்டையும் நீயும், அவனும் பார்த்துக்கோங்க, யாருக்கும் சந்தேகம் வராம சரியா''

''சரிண்ணே''

''சொந்த மகளின் கல்யாணத்தை தான் முன்னின்று நடத்தாமல், வேறு யாரோ நடத்தியது அவருக்கு குருவுக்கு வருத்ததை அளித்தது. ஆனால் தன் மகள் தன்னிடம் ஏன் ஒரு வார்த்தை கூட பேசவில்லை என்று தெரியவில்லை. தான் அவர்களை பிரிந்து போனது மிகப்பெரிய தவறோ, என குருமூர்த்திக்கு தோன்றியது. தாமரையைவிட்டும், தன் மகளை விட்டும் பிரிந்து போனது சூழ்நிலை அவரின் நினைவு பின்னோக்கி சென்றது''.

''திருமூர்த்தியின் பஞ்சாயத்தின் தீர்ப்பால் ஊரைவிட்டு வெளியே சென்றப்பின் எங்கு செல்வது, எப்படி மனைவி, மகளை காப்பாற்றுவது என யோசித்து கொண்டே திருச்சிக்கு சென்றார். அங்கோ ஒரு வாடகை வீட்டில் குடியிருந்து கொண்டே குரு வேலை தேடினார். ஆனால் அவருக்கு வேலை கிடைத்தது ஆனால் அது வெளி மாநில வேலை தான் கிடைத்தது. அதில் அவருக்கு விருப்பம் இல்லை என்றாலும். அடுத்த வேலை

உணவுக்காக என்ன செய்வது மனைவியின் தாலிக்கொடியை அடகு வைப்பதை தவிர வேற வழி எனத் தோன்றியது. ஆனால் அந்த தாலிக்கொடி அவரின் முதல் நெல் அறுவடை செய்த பணத்தில் தாமரைக்கு போட்டது அந்த தாலிக்கொடி, அதை அடகு வைக்க மனம் இல்லை அவருக்கு அதானல் வெளி மாநில வேலைக்கு செல்வது என முடிசெய்துகொண்டு தாமரையிடம் கூறிக்கொண்டு சென்றார்''

''அங்கு சென்றப்பின் அவருக்கு நல்ல வேலையும், நல்ல சம்பாத்தியமும் கிடைத்தது.அவரின் மனைவிக்கு அந்த முதல் சம்பளத்தை அனுபினார். இப்படியாக அவர்களின் வாழ்க்கை யாருக்கும் தெரியாமல் முக்கியமாக பழனிச்சாமிக்கு தெரியாமல் நன்றாக சென்றுகொண்டிருந்தது. ப்ரியாவுக்கு நினைவு தெரிந்த பின் அவள் அப்பாவை பற்றி கேட்க ஆரம்பித்தால். தாமரையோ அவரின் பயணத்தை கூறி சமாதானம் செய்தார்.''

'' பின் ஒரு நாள் குருமூர்த்தியை தேடி திருச்சிக்கு திவாகரன் தேடி வந்துவிட்டான். அது தெரிந்த தாமரை யாரிடமும் சொல்லாமல் அவர் திருநெல்வேலிக்கு சென்றுவிட்டார். அதற்க்குபின் குருமூர்த்திக்கு தகவல் சொல்லிவிட்டார். அவரும் தாமரைக்கு பாதுக்காப்பாக இருக்க சொல்லி அறிவுறுத்தினார்..''

‘‘குருமூர்த்திக்கு, தாமரையின் எங்கு சென்றாலும் அவருக்கு தகவல் எப்படியாவது சென்று சேரவேண்டும். வேண்டாத தெய்வமில்லை. திருநெல்வேலியில் இருந்த தாமரைக்கு அங்கு இருந்த ஒரு பெரியவர் தான் அவர்கள் இருவரையும் பாதுக்காப்பாக பார்த்துகொண்டார். ப்ரியாவும் பெரிய பெண்ணாகி, பள்ளி முடித்து கல்லூரியில் அடி எடுத்து வைத்தாள். ஆனால் அங்கும் திவாகரன் தேடி வருவான் என்று அவர்கள் நினைக்கவில்லை.’’

‘‘ஒருவழியாக, திவாகரனின் கண்ணில் இருந்து தப்பி சென்னை வந்து சேர்ந்தார்கள். ப்ரியாவின் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு அவளை சென்னையில் படிக்க வைத்தார் தாமரை. மொத்தம் இருபது வருஷம் மனைவியையும், மகளையும் பிரிந்திருந்த குருமூர்த்திக்கு தாமரையையும், பிரியாவையும் பார்க வேண்டும் போல் இருந்தது ஆனால் அவரின் சூழ்நிலை வரவிடாமல் செய்தது.’’

‘‘இறுதியாக, இப்போ வந்தபோது தாமரை குடியிருந்த வீட்டின் முகவரியை தேடி சென்றார். ஆனால் அங்கு தன் மனைவி இறந்ததை அறிந்து அவருக்கு துக்கம் இருந்தது. ஆனால் மகள் எங்கு சென்றால் என தெரியாமல் அவர்

அலைந்தார். கடைசியாக திவாகரனை ஜெயிலில் சந்த்தித போது அவன் கூறிய விஷயங்கள் அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது.''

''பாண்டியனும்,திருமூர்த்தியும் சேர்ந்து தாமரையை கொல்ல சதித்திட்டம் தீட்டி, தெய்வாவை ஊர் ஊராக தேடி அலைந்து அவர்களை கண்டறிந்து பின் தெய்வாவை கடத்தினதும், அவளுக்கே தெரியாமல் அவளை திருமணம் செய்யதகையும், அதுவும், தாமரையை கொன்று அவரின் முன்னிலையிலே பிரியாவை அழைத்து சென்றத்தையும், மாற்றி கூறினான் திவாகரன். தான் காப்பாற்றா வந்த போது தான் இது எல்லாம் நிகழ்ந்தது என பெரிய பொய்யை கூறினான்.''

''பின் பிரியா, சொந்த ஊரில் இருக்கிறால். அதுவும் முத்தையாவின் வீட்டில் இருப்பதும். கூறிமுடித்தான். இதை அனைத்தையும் நம்பிய குருமூர்த்தியின் கோவம் பாண்டியன் மீதும், திருமூர்த்தியின் மீது திரும்பியது. அவரின் கோவத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்திகொண்ட திவாகரன் ஜெயிலில் இருந்து யாருக்கும் தெரியாமல் தப்பிவிட்டான்.''

''குருமூர்த்தி ஊருக்கு சென்ற நேரம் தெய்வா, தென்னவனின் திருமணம் விமர்சையாக நடந்துகொண்டிருந்தது. மகளின் கழுத்தில் மாங்கல்யம் ஏறும் நேரம் சரியாக மண்டபத்தில் நுழைந்தார்

குருமூர்த்தி. ஆனால் மகளின் வாழ்க்கையை கெடுக்க நினைக்காமல், தாமரையின் இறப்பையும், மகளின் இரண்டாவது திருமணத்தையும், மனதில் வைத்துகொண்டு, பாண்டியன், திருமூர்த்தியின் மீது கோவத்தை காட்டினார். ஆனால் இவரின் கோவம் பஞ்சாயத்தின் நடந்த உணமையை அந்த மூவருக்கும் தெரியப்படுத்திவிட்டார்''

''பழைய நினைவில் மூழ்கி இருந்த குருமூர்த்தியை '' மாமா " திவாகரனின் குரல்.

"மாமா'' "மாமா''

"சொல்லுப்பா..''

"என்ன மாமா பழைய ஞாயபகமா''

"ஆமாம் திவா''

"அந்த பாண்டியன சும்மா விடாக்கூடாது மாமா.. அவனையும் அந்த திருமூர்த்தியையும். சொல்லுங்க மாமா என்ன பண்ணலாம் அவங்களை''

"என் மனைவிய கொன்னவங்களுக்கு நான் தான் தண்டனை கொடுப்பேன் திவா..''

“என்ன செய்யப்போறீங்க மாமா”

“ என் மனைவிய கொன்னவனையும், இந்த ஊரை விட்டு அனுபுன என் அண்ணனையும், பழிவாங்குறேன். பஞ்சாயத்தை கூட்டி அவங்கமேல புகார் கொடுக்குறேன். இந்த ஊரைவிட்டு அனுப்புறேன். அவங்க ரெண்டு பேரையும்”

“புகார் கொடுத்து பழிவாங்கிறையா… யோவ் மாமா, இன்னும் ஒரு வாரத்துல உன்னையும், உன் மகளையும் கடத்தப்போறேன். இந்த நேரத்துல பஞ்சாயத்தை கூட்ட போறீயா… சரி எப்படியோ அவங்களை நீ பழிவாங்க போற.. நான் செய்யவேண்டியதை நீ செய்ய போற” திவாகரன் மனதுக்குள் பேசிகொண்டிருக்க.

“என்ன திவா நான் சொன்ன மாதிரி செய்யலாம் சரியா.. அப்போ தான் என் அண்ணவா பழிவாங்க முடியும்” குரு சொல்ல, திவாகரனோ முழித்துகொண்டிருந்தான்

“என்ன சொன்னாருனு தெரியலையே… சரி என்னனு அப்புறம் கேட்டுக்கலாம்.” அவன் நினைத்துகொண்டு அவருக்கு சாப்பாடு கொடுத்தான்.

“என்ன வள்ளி, தெய்வாவோட அப்பா இப்படி திடீர்னு வந்து நிக்குறாங்க. பாண்டியன் மேலையும், ஐயாமேலையும் பழி

போடுறாங்க. நீயும் பார்த்துட்டு இருக்குற சொல்ல வேண்டியது தானே வள்ளி நீ எல்லா உண்மையும். அமைதியா இருக்குற மண்டபத்துல.”

“எனக்கு பயமா இருக்கு வள்ளி, குருமாமா இப்போ வந்து இருக்குறதை பார்த்தா யாரோ அவருக்கு பின்னால இருக்காங்க. அது யாருனு உனக்கு தெரியுமா.. சொல்லு வள்ளி. இப்போ என்ன பண்ணப்போற வள்ளி.”

“ நான் தான் பேசிட்டு இருக்கேன் அங்க அந்த புறாக்கூட கொஞ்சிட்டு இருக்குற… வள்ளி.” தென்னவன் வள்ளியின் முழங்கையை பிடித்து திருப்பினான்.

“ப்ச்.. என்ன தென்னவன் மாமா நானே இப்போ தான் இந்த புறாவை கொஞ்சிட்டு இருக்கேன். இங்க வருவதே இதை பார்க்க தான்.. நீங்க அதையும் தடுக்குறீங்க. இப்போ என்ன குரு சித்தப்பா எப்படி இங்க வந்தாங்கனு உங்களுக்கு தெரியனும், அப்புறம் அவருக்கு பின்னாடி யாரு இருக்குறானு தெரியனும். அவ்வளவு தானே.”

“என்ன ஈசியா சொல்லுற அவ்வளவு தானேனு. நான் தெய்வாக்கு எதுவும் ஆகிடுமேனு பயப்பட்டா. நீ சாதாரணமா சொல்லுற. அப்போ உனக்கு தெரியும். குருமாமா வர்ரது.”

“தெரியும்..”

“தெரியுமா எப்படி வள்ளி..”

“அவரு சென்னை வந்ததுல இருந்து, தாமரை சித்தி இறந்ததை கேள்வி பட்டு, தெய்வாவை தேடி அவரு நம்ம ஊருக்கு வரதுக்கு முன்ன திவாகரனை சந்திச்சு பேசுனதையும், அடுத்து அவரு இங்க வருவார்னு எனக்கு தெரியும். அவருக்கு இப்படியெல்லாம் பேச சொல்லிகொடுத்தது திவாகரனும் எனக்கு தெரியும், அடுத்து இப்போ அவரு திவாகரன் வீடுல இருக்காருனு, அவங்க பழிவாங்க போற அடுத்த ஆள், அத்தானும், ஐயாவும் தான்.”

“ஆனா அதுக்கு முன்னாடி, தெய்வாவையும், சித்தாப்பாவையும் கடத்தி சொத்தை எழுதி வாங்க போறாங்க. அதுக்கு பின்னாடி தெய்வாவை அவனுக்கு சொந்தமாக்க போறானும் எனக்கு தெரியும்” வள்ளி திணறல் இல்லாமல் தென்னவனின் முகத்தை பார்த்து சொல்ல.

“தென்னவனுக்கு வள்ளி கடைசியாய் சொன்ன வார்த்தையில் நின்றது. ”தெய்வாவை அவனுக்கு சொந்தமாய்” அதிலே அதிர்ச்சியாய் நின்ற தென்னவனை உலுக்கிய வள்ளி..”

“ஆனா தெய்வாமேல அவன் கை படாது. அதுக்கு முன்னாடி நாமா எச்சரிக்கையா இருக்கனும். அடுத்த வாரம் ஊர் திருவிழா அப்போ நாமா தெய்வாவையும், குரு சித்தாப்பாவையும் பாதுகாக்கனும். அதுக்கு நீங்களும், எனக்கு உதவி செய்யனும் மாமா”

“என்ன வள்ளி, உதவினு சொல்லிகிட்டு, நம்ம குடும்பத்தை பாதுக்காப்பா நான் பார்த்துகிறேன். ஆனா உனக்கு எப்படி அவங்க இந்த திட்டத்தை போட்டு இருப்பாங்கனு சரியா சொல்லுற.”

“எனக்கு தகவல் வந்துச்சு சொல்லுறேன்.”

“அதான் எப்படி”

“அது எல்லாம் ரகசியம் மாமா”

“ஆனா பாண்டியன்கிட்ட மறைக்க முடியாதுல. அப்போ என்ன செய்வ வள்ளி”

“அத்தான்கிட்ட சொல்லனும், ஆனா இப்போ இல்லை இந்த பிரச்சனை எல்லாம் முடியட்டும், அப்புறம் சொல்லிக்கலாம் மாமா”

“சரி.. வா உள்ள போகலாம் எல்லாரும் நம்மள தேடிட்டு இருப்பாங்க. விருந்துக்கு வந்துட்டு நாமா பேசிட்டு இருந்தா என்ன ஏதுனு ஐயா கேப்பாங்க வா வள்ளி” இருவரும் சாதாரணமாக பேசிகொண்டே உள்ளே சென்றனர். ஆனால் அவர்கள் பேசியதை கேட்டு சிலை என நின்றிருந்தார் ஒருவர்.”

“ஊர் திருவிழா”

“திருவிழாவை முன்னிட்டு அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக நடந்துகொண்டிருந்தது. அவரவருக்கு ஒவ்வொரு வேலையை பகிர்ந்து கொடுத்து, அதன் வேலைகளை கண்காணித்துக் கொண்டிருந்தார் திருமூர்த்தி.”

“வள்ளிக்கு இது மூன்றாவது மாசம் ஆதலால், மசக்கை கொஞ்சம் அதிகமாக இருந்தது. காலையில் சீக்கிரம் எழுந்தாலும், அனைவருக்கும் காஃபி மட்டும் போட்டுகொடுத்துவிட்டு ஓய்வு எடுக்க ஆரம்பித்துவிடுவாள். பாண்டியனும் வயல், தோப்பு, என இருப்பக்கமும் அலைந்து கொண்டு இருப்பான் அவன் முயற்சியில் இது ஆறாவது நெல் அறுவடை அதனால் வேலையாக இருக்கிறான். கார்த்தியும் வாழைதோப்பை குத்தகைக்கு எடுத்து அவனது முயற்ச்சியில் இறங்கியுள்ளான்.”

“முத்தையாவிற்க்கு மகன்களின் உழைப்பை மகிழ்ச்சியுடன் பார்த்துகொண்டும், அவர்களின் கணக்கு வழக்குகளை பார்த்துக்கொள்கிறார். கீர்த்திக்கு பிறந்த வீடு போலவே புகுந்தவீடும் என்று இல்லாமல் மாமியாரை அமர்த்தி விட்டு அனைத்து வேலைகளையும் அவளே பார்த்துகொண்டால்”

“மலரும், அது போலவே இருந்தால். ஆனால் திருமூர்த்தியின் உடல் நிலைக்கு ஏற்ப, அவருக்கு நேரா நேரத்திற்க்கு உணவும், மாத்திரையும் மறக்காமல் கொடுத்துவிடுவாள். பிரகாஷ் மலரின் கவனிப்பில் தந்தை நன்றாக இருப்பார் என்று எண்ணிக்கொண்டு. அவரின் வேலைகளை பார்த்துகொண்டான். மாந்தோப்பின் கணக்குகளை மட்டும் அவரிடமே கொடுத்துவிடுவான்.”

“தெய்வாவிற்க்கு தான் சமையல் தெரியாமல் திணறிக்கொண்டிருக்கும் வேளையில் தென்னவன் உதவிக்கு வந்தான் அதுவும் ஒரு நிபந்தனையுடன். ஒரு முறை மட்டுமே சமையல் என்னவென்று சொல்லிகொடுத்துவிட்டு மறுமுறை அவள் செய்யவேண்டும் என்று. தெய்வாவிற்க்கு அவன் சமையல் செய்வதை பார்த்தவுடன் ஆச்சர்யம், அடுத்த முறை அவள் சமையலில் சொத்தப்பினாலும் அவனது அன்பு சொல்லில் அவள் மறுமுறை சரியாக செய்துவிடுவாள். தென்னவன் காதலோடு நெருங்கி வர, இவளோ தயக்கத்தோடு விலகி செல்வாள். சில

சமயம் தென்னவனை அவளே நெருங்கும் போது அவன் அவள் "மனம் முழுக்க நான் இருக்கவேண்டும் என நினைத்துகொண்டு விலகிவிடுவான்" இதுவே இவர்களுக்குள் இருக்கும் நெருக்கத்தை வெளிச்சம் போட்டு காட்டுவது போல் இருந்தது".

"வள்ளிக்கு தெரியும், தென்னவனும், தெய்வாவும் விலகி இருப்பது, ஆனால் அவள் வெளிப்படையாக அவர்களிடம் கேட்கவில்லை.அவர்கள் இருவருக்குள் தான் நுழைந்தால் அது நல்லதாக இருக்காது என நினைத்து கொண்டு வள்ளி அமைதியாக இருந்தால்."

"ஒவ்வொருவரும் திருவிழா வரும் வரை மிகவும் பிஸியாக இருந்தனர். திருவிழாவுக்கான நாளும் வந்தது. முதல் நாள் குத்துவிளக்கு பூஜை, மற்றும் இரவு பத்து மணிக்கு, கரகம் செய்ய ஆற்றங்கரைக்கு பெட்டியுடன் செல்லவேண்டும், அதற்க்கான வேளைகளும் நடந்துகொண்டிருந்தது."

"திருவிழாவின் இரண்டாம் நாளில், காலையில் சூரியோதயத்திற்க்கு முன் ஆற்றங்கரையில் இருந்து மேளச்சத்ததுடனும், வானவேடிக்கையுடனும், கரகத்தை எடுத்துவருவார்கள்."

“திருவிழாவின் எல்லா ஏற்பாடுகளும் பிரகாஷ், பாண்டியனும் பார்த்து கொண்டிருந்தனர். திருமூர்த்தி மேற்ப்பார்வை மட்டும் பார்த்தார். திருவிழாவுக்காக மாறன்,கீர்த்தியை குடும்பத்துடன் அழைத்தனர். தெய்வாவையும் தென்னவனையும் சேர்த்து அழைத்தனர் முத்தையாவின் குடும்பம்.”

“திவாகரனின் திட்டம் அறியாமல், குருமூர்த்தி அவனுடன் சேர்ந்து திருமூர்த்தியையும், பாண்டியனையும் பழிவாங்க சதித்திட்டம் தீட்டிக் கொண்டிருந்தனர். இது அறியாமல் அனைவரும் திருவிழா நாளினை எதிர்பார்த்துகொண்டிருந்தனர்.”

”ஊரே மாவிலை தோரணமும், தென்னம் பாலை தோரணத்துடன் சேர்த்து அலங்கார விளக்குடன் அலங்கரிக்க பட்டு இருந்தது. தெருவுக்கு தெரு வேப்பில்லை தோரணமும் கட்டி இருந்தது. வேப்பில்லை தோரணம் கட்ட காரணம் உண்டு”

“கோவிலின் பெட்டியும், அம்மனின் கரகமும், ஒவ்வொரு தெரு வழியாக வரும். அடுத்து கோவில்லுக்கு நேர்த்திகடன் செலுத்தவரும் பக்கத்தர்களும் அவர்களின் நேர்த்திகடனை ஆற்றங்காரையில் இருந்து எடுத்துகொண்டு ஒவ்வொரு தெருவின் வழி எடுத்து சென்று கடைசியாக கோவிலுக்கு வருவார்கள்.

முளைப்பாரி, பொங்கல் பானை, தீச்சட்டி, கரும்பு தொட்டில், பால்குடம், என ஒவ்வொன்றும் நடக்கும்.''

''திருவிழாவின் முதல் நாள் மாலையில், குத்துவிளக்கு பூஜையுடன் ஆரம்பித்தது. வள்ளியை தவிர கீர்த்தி, மலர், தெய்வா மூவரும் குத்துவிளக்குடன் கோவிலுக்கு வந்தனர்.''

''இந்த குத்துவிளக்கு பூஜைக்காக இளம் வயது பெண்களும், ஆண்களும் காத்திருப்பார்கள். வெளியூரில் இருந்து வந்த அத்தை பெண், மாம பையன் என அனைவரும் திருவிழாவுக்கு வரும் பெண்களை சைட் அடிப்பதற்க்கும், இந்த திருவிழாவின் போது சொல்லாத காதலை சொல்லிவிட்டு அடுத்த வருடம் வரும் திருவிழாவுக்காக அவர்களின் பதிலுக்காக காத்திருப்பார்கள்.''

''குத்துவிளக்கு பூஜை நடத்துவோர், குத்துவிளக்கு பூஜைக்கு வரும் பெண்களுக்கு, குங்குமம் சிமில், ஒரு சிறிய தட்டு போன்று பெண்களுக்கு வழங்குவர்.''

''திவாகரனின் அடியாள் ஒருவன், தெய்வாவின் பின்னயே சுற்றிக்கொண்டிருந்தான். அவள் தனியாக மாட்டும் சமயத்தில் அவளை கடத்துவது திட்டமாக தீட்டப்பட்டிருந்தது. ஆனால் தெய்வாவோ, எங்கு சென்றாலும், கீர்த்தியின் துணையுடனே

சென்றுகொண்டிருந்தால். அதனால் தெய்வாவை கடத்தும் திட்டம் மறுநாள் ஒத்திவைக்கப்பட்டது……''

''அண்ணே அந்த பொண்ணு எங்க போனாலும், பாண்டியன் தங்கச்சியோட போகுது, நானும் அப்போ தனியா போவா…, இப்போ தனியா மாட்டுவானு எதிர் பார்த்தேன். ஆனா ஒன்னும் நடக்கலை… நாளைக்குனா திருவிழாவோட முக்கியமான நாள் அண்ணே.''

''இப்போ என்ன பண்ணுறதுனு எனக்கு தெரியலை அண்ணே…'' தெய்வா அவர்களிடம் மாட்டாமல் இருந்த எரிச்சலில் அவன் பேச..

''டேய் நாளைக்கு தான் தீச்சட்டி, பொங்கல் பானை, முளைப்பாரி, பால் குடமுனு எல்லாம் வரிசையா நடக்கும். பாண்டியனும், தென்னவனும், திருவிழா நிக்ழ்ச்சியை பார்க்க போயிடுவானுங்க.., அப்புறம் இரண்டும் பெரிசுங்களும், கோவில்ல தான் இருப்பாங்க. வள்ளி சொல்லவே தெவையில்லை இப்போ மாசமா இருக்கறதுனால, வெளியவிடமாட்டாங்க.''

''அந்த நேரத்துல தெய்வாவ நாம தூக்குறோம்''

''எப்படியண்ணே… எனக்கு புரியல.''

‘‘டேய், பெரிய வீட்டுல இருந்து பொங்கல் பானை, முளைப்பாரி கண்டிப்பா எடுக்கனும், அது பரம்பரையா எடுத்தாக வேண்டிய கட்டாயம்.’’

‘‘இப்போ வள்ளி எடுக்க முடியாது, ஆனா தெய்வா எடுக்க முடியும். அதான்’’

‘‘அப்போ என திவாகரன் ஒவ்வொரு திட்டத்தையும் சொல்ல, அவனின் அடியாள், கவனமாக கேட்டுக்கொண்டான்.’’

‘‘அவர்களுடன் சேர்த்து வேறொருவரும் அவனின் திட்டத்தை அறிந்துகொண்டார்.’’

’’நாளைக்கு திருவிழா, தெய்வா நீ தான் நம்ம வீட்டு சார்பா பொங்கல் எடுக்கனும், கீர்த்தி நீ முளைப்பாரி எடுக்கனும், மலர் நீ மாவிளக்கும், பொங்கலும் எடுக்கனும், சரியா’’ வள்ளி அவரவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை சொல்லிக்கொண்டிருந்தால்.

‘‘சரிங்க அண்ணி, அப்போ நாங்க சீக்கிரமா எழுந்திரிக்கனும், நான் தூங்க போறேன்.’’ கீர்த்தி எழுந்து செல்ல.

‘‘மலர், நீயும் கிளம்பு, நான் அத்தான வந்து விட சொல்லுறேன் வீட்டுக்கு’’

‘‘வேண்டாம் அண்ணி, அவர் வரேனு சொன்னாங்க, இப்போ வந்துருவாங்க அண்ணி,’’ மலர் சொல்லிக்கொண்டிருக்கும் போதே பிரகாஷ் வந்தான்.

‘‘பார்த்து கூப்பிட்டு போங்க அண்ணா’’

‘‘சரிம்மா வள்ளி’’

‘‘ நீ தூங்க போகலையா தெய்வா ‘‘ அவளை பார்த்து கேட்க.

‘‘இல்லை அக்கா அவருக்காக காத்திருக்குறேன், அவர் வந்த பின்னாடி சாப்பாடு வைக்கனும். அதான் வெயிட் பண்ணுரேன் அக்கா.’’

‘‘அத்தான், தென்னவன் மாமா எங்க உங்க கூட கோவில்லுகு தானே வந்தாங்க’’

‘‘வள்ளியம்மா அவன் அப்போவே கிளம்பிட்டான். இன்னேரம் வீட்டுக்கு வந்திருக்கனுமே’’அவன் யோசனையுடன் சொல்ல.

‘‘அந்த நேரம் சரியாக வந்தான் தென்னவன்’’

“எங்க போனீங்க மாமா, தெய்வா உங்களுக்காக சாப்பிடாம வெயிட் பண்ணுரா.. போங்க சாப்பிடுங்க., போ தெய்வா சாப்பாடு எடுத்து வைச்சு நீயும் சாப்பிட்டு தூங்குங்க.., காலையில விடியலுக்கு எழுந்திரிக்கனும்..” அவளை அனுப்பி வைத்தாள்.

# அத்தியாயம் 21

''அந்த மருத்துவமனையில் ஆளுக்கு ஒரு ஒரு பக்கம் நின்று கொண்டிருந்தனர். யாருக்கு யார் ஆறுதல் கூறுவதென்று தெரியவில்லை..., பெரியவர்கள் முகத்தில் சோகம் அப்பிக்கிடந்தது. எங்கு என்ன தவறு நடந்தது என யாருக்கு புரியவில்லை. பிரகாஷும், தென்னவனும் அவர்களின் மனைவிமார்களுக்கு சமதானம் கூறிகொண்டிருக்க,.., மாறன், கார்த்திக், கீர்த்தி மூவரும் அந்த ஐ.சி.யு வின் அறையின் முன் இருந்தனர்.''

''பாண்டியனோ பித்து பிடித்தார் போல் தரையை பார்த்துகொண்டிருந்தான். எங்கு தவறு நடந்தது. அத்தனை பாதுகாப்பு இருந்தும் எப்படி அவனால் அந்த செயலை செய்ய முடிந்தது.''

''ஒவ்வொருவரும் அழுகையை அடக்க பெரும் பாடுபட்டுகொண்டிருந்தனர்., ஆனால் அதையும் மீறி மீனாட்சிக்கு அழுகை வந்தது.''

''யாருக்கும் சிறு துன்பம் நினைக்காதாவளுக்கா இப்படி ஒரு சோதனை, கடவுளே கதியென்று நினைப்பவள். இன்று அந்த கடவுள் கூட அவளை காப்பாற்ற வருவாரா.''

"அவர்களின் அமைதியான அழுகையின் சத்ததில் கூட ஒருவனின் காலடி சத்தம் பெரிதாக தோன்றியது.. அந்த வருகைக்கு உரியவன், பாண்டியன் முன் நின்றான்."

"பாண்டியன்" அவன் தோளை தொட்டவுடன், அவனை கட்டிபிடித்து அழுதான். ஆண்கள் அழுது ஒன்று அவர்களின் காதலுக்காக இல்லை, தாய்க்காக. ஆனால் பாண்டியன் அழுவது அவனது வள்ளிக்காக. அவனின் தாயை நினத்து கூட வருத்தம் கொள்வானே தவிர, அழுக மாட்டான். ஏன்னென்றால் மீனாட்சியின் தாயன்பு அவனை அன்னைக்காக ஏங்கவிட்டதில்லை. ஆனால் இன்று அவனின் சொர்க்கம், உலகம், காதலின் மொத்த உருவாமாய் அவனுடன் இருக்கும் வள்ளி இந்த கோர விபத்து நடந்துவிட்டதால் தான் இந்தனை துரம் அவனுள்."

"எனக்கு என் வள்ளியம்மா வேணும்டா.. அவங்க இல்லாம நான் எப்படி உயிரோட இருப்பேன். என் வாழ்க்கையே அவங்க தாண்டா.. ஆனா அவங்களை இப்படி இந்த கோலத்துல பார்க்கதான் கடவுள் மிகபெரிய அடிய எனக்கு கொடுத்துருக்காரா.., ஏன் டா எனக்கு மட்டும் இப்படி நடக்குது."

"டேய்... என் வள்ளியம்மா மட்டும் எனக்கு கிடைக்கல அப்புறம் நானும் உயிரோட இருக்க மாட்டேன்.., நீ சொன்னா

கேட்ப்பாங்க வாடா வள்ளியம்மாகிட்ட பேசு. அவங்களோட உயிர் தோழனே நீ தான நீ சொன்னா அவங்க மறுக்கமாட்டாங்க வாடா..'' அவன் நிலைமையில் புலம்பிக்கொண்டிருக்க.

''எப்படி சமதானம் செய்வது எனத்தெரியாமல் அவனும் விழிக்க., வேறு வழியின்றி அவனின் கன்னத்தில் வேகமாக அறைந்தான்.''

''அவன் அறைந்தை பார்த்த அனைவரும், கொஞ்சம் அதிர்ந்தனர். ஆனால் கார்த்தி மட்டும் அவனருகில் வந்து, ''அவர் நினைப்பு முழுசும் அண்ணிக்கிட்ட தான் இருக்கு அதான் ஓவர் எமோஸ்னல் ஆகிட்டாங்க'' கார்த்தி சொன்ன பின்பு தான் பாண்டியனை பார்த்து பேச ஆரம்பித்தான்.

''உன் வள்ளியம்மாக்கு ஒன்னும் ஆகாது., யாரை காப்பாதிருக்காங்க உன் குடும்பத்தை காப்பாத்திருக்காங்க டா.. நீ தைரியமா இருந்தா தான் இதோ இங்க இருக்காங்களே இத்தனை பேருக்கு நீ ஆறுதல் சொல்ல முடியும், வீட்டுக்கு மூத்தவனா இருந்துகிட்டு நீயே கலங்கி நின்னா என்னாகும்.''

''வள்ளி இன்னும் ஒருமணி நேரத்துல கண்ணு முழிச்சு உன்னை தான் முதல பார்க்கனும் சொல்லப்போறா. அப்போ நீ

அழுதுகிட்டு இருந்தா அவளுக்கு தான் மனசு சங்கடம் ஆகும். அவளுக்கு நீ அழுதா பிடிக்குமா பாண்டியன்.'' அவன் கேட்க.

''இல்லை, சின்ன தூசி கண்ணுல பட்டு என் கண் கலங்கினா அவங்க தாங்க மாட்டாங்க'' அவன் சொல்ல.

''ம்ம்ம்... அப்படி நினக்குறவ, இப்போ நீ அழுதது தெரிஞ்சா அவங்களும் வருத்தப்படுவாங்க டா.., உன்னை அழுகவிட்டு எல்லோரும் வேடிக்கை பார்க்குறேங்களானு, வள்ளி எங்க எல்லாரையும் சத்தம் போடும். அவ நல்ல மனசுக்கு கடவுள் என்னைக்கு துணை இருப்பாங்க டா'' அவனை தேற்ற.

''ஐ.சி.யு. அறையைவிட்டு மருத்துவ குழு வெளி வந்தது.. அங்கு இருந்தவர்களை பார்த்த மருத்துவர். பாண்டியனின் அருகில் சென்று.''

''அவங்க பிழைச்சுட்டாங்க பாண்டியன், இனி அவங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை. ஆனா.. அவர் தயங்குவதை பார்த்த பாண்டியன், என்னவென்று கேட்க்கும் முன், ''அவன்'' கேட்டான்.''

''என்னாச்சுப்பா...''

அடுத்த நாள் திருவிழா... முதல் இரவு கரகம் செய்ய கோவில் வீட்டில் இருந்து பெட்டி எடுத்துகொண்டு ஊர்

தலைவர்களும், பெரியவர்களும், கோவில்லுக்கு உரிமை பட்டவர்களும், கரகம் செய்வதற்க்கு ஆற்றங்கரைக்கு மேளத்தாளத்துடன் சென்றனர்.''

'' நடு சாமத்தில் எழுந்த பாண்டியன், வள்ளியை பார்த்தான், நன்றாக உறங்கி இருந்தாள் வள்ளி. அவளின் அருகில் தலையனை வைத்துவிட்டு அவர்களின் அறையைவிட்டு வெளியே வந்தான். அவனுக்கு முன் தென்னவன், பிரகாஷ், மாறன், கார்த்தி எழுந்து வந்து அமர்ந்திருந்தனர்.''

''வாங்க போகலாம், அவர்களை அழைத்துகொண்டு, கரகம் செய்யும் இடத்திற்க்கு சென்றனர். அங்கு ஏற்கனவே, திருமூர்த்தியும், முத்தையாவும் மற்றும் பெரியவர்கள் இருந்தனர்.''

''விடியலின் கரகம் செய்து முடித்து அதை அங்கிருந்து கோவிலுக்கு எடுத்து வரும் போது அதே வானவேடிக்கையுடன் ஆரம்பித்தார்கள். வேட்டு சத்ததை கொண்டு கரகம் வருகிறது என புரிந்துகொண்ட மக்கள், சாமியை வரவேற்க வாசல் தெளித்து கோலம் இட்டு, கோவிலுக்கு வந்த காத்திருப்பார்கள்.''

''வானவேடிக்கயுடன், மேளதாளத்துடன், மயிலாட்டாம், கரகாட்டாம், என ஒலிபெருக்கியில் சாமியி வரவேற்க, சாமியின்

பாடலை ஒலிக்கவிட்டு அந்த கரக்கத்தை காண மக்கள் திரண்டு இருப்பார்கள்.''

''சாமியின் கரகம், வந்துகொண்டிருப்பதை அறிந்த கீர்த்தி எழுந்து வேலைய ஆரம்பிக்க போனால் ஆனால் தெய்வாவின் அறையின் முன் யாரோ இருப்பதை அறிந்து கொண்டு சத்தம் போட ஆரம்பித்தால்''

''அண்ணி, அண்ணி இங்க வாங்க தெய்வா அறைக்கு முன்னாடி யாரோ நிக்குறாங்க அண்ணி.., வீடே அதிரும் படி கத்தி வள்ளியை அழைத்து கொண்டிருந்தால்.''

''அந்த சத்ததில் வள்ளியும் எழுந்து வந்து பார்த்தால், ஆனால் அதற்க்குள் அங்கு நின்றவன். எந்த பக்கம் ஓடினான் என்பதை யாரும் அறியவில்லை.''

''எங்க பார்த்த, எப்படி இருந்தான்,''

''அண்ணி, நான் மேல இருந்து கீழ வரும் போது பார்த்தேன், உங்களை சத்தம் போட்டு கூப்பிட்டதுல அவன் எந்த பக்கம் போனானு தெரியலை. தெய்வாக்கு என்னாச்சுனு தெரியலை வாங்க..'' இருவரும் தெய்வாவின் அறையை தட்டினர்.

‘‘அவளும் தூக்க கலகத்திலேயே எழுந்து வந்தாள். ‘‘என்ன கீர்த்தி, என்ன அக்கா, ஏன் உங்க முகம் இப்படி இருக்கு’’ அவள் சாதரணமாக கேட்க.

‘‘வள்ளியோ, கீர்த்தியின் கையை அழுத்தி பிடித்துகொண்டு, ‘‘ஒன்னுமில்ல தெய்வா, விடிய போகுது அதான் எழுந்து குளிச்சுட்டு வா கரகம் வரும் போது தூங்க கூடாது அதை சொல்ல தான் வந்தேன். போம்மா, ‘‘

‘‘சரிக்கா,’’ அவள் சென்றபின், கீர்த்தியிடம் திரும்பி, இதை பற்றி நான் அத்தான்கிட்ட சொல்லிகிறேன். நீ எதுவும் சொல்லாத கீர்த்தி சரியா..’’

‘‘சரிங்க அண்ணி’’

’’ஒரு நிமிசம் இரு கீர்த்தி, அவளை நிறுத்திவிட்டு, வீட்டை முழுவதும் சுற்றி யாராவது இருக்கார்களா என்று பார்த்த பின் அவளை வெளியில் அனுப்பினால்’’

‘‘தனது அறைக்கு வந்த பின் ‘‘அவனுக்கு போன் செய்தாள்’’.

‘‘இன்னும் எவ்வளவு நேரம் ஆகும் நீ வர்ரதுக்கு.’’

‘‘…….’’

“சீக்கிரம் வா.. எவ்வளவு தைரியம் இருந்தா.. எங்க வீட்டுக்குள்ள்யே வந்திருப்பான் அவன் அடியாள்”

“………..”

“ஆமாம் கீர்த்தி மட்டும் பார்க்கலைனா இன்னேரம் தெய்வாவ கடத்திட்டு போயிருப்பாங்க சீக்கிரம் உங்க ஆளுகலோட வா”

“…………..”

“இந்த பேச்சுக்கு ஒன்னும் குறை இல்லை.., என் வீட்டு ஆளுக மேல ஒரு கீறல் கூட விழுக கூடாது புரிஞ்சதா”

“……………..”

“என் மேல அடிபட்டா கூடா நான் தாங்கிப்பேன் ஆனா என் வீட்டுல உள்ளவங்களுக்கு அடிப்பட்டா.. அடுத்த நொடி உன் பேச்சை நான் மீறிடுவேன்”

“…………..”

“சரி வா நான் காத்திருக்கேன்”

”கரகத்தை கோவிலில் வைத்துவிட்டு திருவிழாவின் அடுத்த கட்டமாக ஒவ்வொரு பூஜையும், வேண்டுதலும் ஆரம்பித்தது.”

‘‘வீட்டின் மருமகளாக தெய்வா பொங்கல் எடுக்க ஆரம்பிக்க, கீர்த்தி முளைப்பாரி எடுக்க ஒவ்வொருவரும் அவர்களின் வேலையில் பிஸியாக இருந்தனர்.’’

‘‘தெய்வா கோவிலுக்கு பொங்கல பானை எடுத்துகொண்டு செல்லும் போது, வள்ளி தென்னவனையும் துணைக்கு போக சொன்னால்.’’

‘‘மாமா தெய்வாவ விட்டு ஒரு இஞ்சு நகரக்கூடாது. சரியா.’’

‘‘சரிம்மா’’

‘‘கீர்த்திக்கு மாறனை துணைக்கு அனுப்பினால்’’

‘‘இருந்தாலும் வள்ளியின் மனதில் நெருடலாகவே இருந்தது. அதனால் அவளால் வீட்டில் இருக்க முடியவில்லை.’’

‘‘திவாகரனின் திட்டப்படி தெய்வாவை கடத்த முற்படும் போது தென்னவனும் அவளுக்கருகில் இருப்பதை பார்த்த திவாகரன். கோபம் தலைகேறியது. இனியும் தாமதித்தால் இருப்பதும் போய்விடும் என்று எண்ணிக்கொண்டு, தெய்வாவை முடித்துவிட வேண்டும்’’

‘‘திவாகரனின் திட்டத்தில் மண் விழுவது போல் தெய்வாவின் தந்தை தென்னவனிடன் இங்கிருந்து போகும்படி சொல்லிக்கொண்டிருந்தார்..’’

‘‘ஆனால் அவர்களோ, அவரின் பேச்சில் இருந்த பதட்டதை அறிந்துகொண்டு என்னவென்று கேட்டார்கள்., ஆனால் அவரோ எதுவும் கூறாமல், முதலில் இங்கிருந்து போகச்சொல்லியே வற்புறுட்திகொண்டிருந்தார்.’’

‘‘இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த திவாகரன், மேலும் கோபமாகி, அவர்களை நெருங்கி தெய்வாவின் தந்தையின் முதுகில் தான் கொண்டு வந்த கத்தியை கொண்டு ஒரே குத்தாக குத்தினான்’’

‘‘இதை எதிர்பார்க்காத தெய்வாவோ, ‘‘அப்பாபாபா... அவரை தாங்கி பிடிக்க,’’ தென்னவனோ, திவாகரனை தடுக்க முற்ப்பட்டான். ஆனால் திவாகரன் அடியாட்கள், தென்னவனை இரண்டு பேர் பிடித்துகொண்டனர்.’’

‘‘உன்னை கடத்த பிளான் போட்டா, உன் அப்பேன் என்னை போடுறதுக்கு பிளான் போட்டான் அதான் அவனை போட்டு

தள்ளிட்டேன். அடுத்து நீ தான் அவளின் அருகில் செல்ல. அவள் ஓட எத்தனிக்க அவளையும் இரண்டு பேர் பிடித்துகொண்டனர்.''

''என்ன டி, என்கிட இருந்து தப்பிச்சுருவியா, உன்னை கொல்லாம் விடமாட்டேன், அவன் அவள் அருகில் வந்து கத்தியை அவளை குத்தும் போது, குறுக்கே வள்ளி வந்து அந்த கத்திக்குத்தை வாங்கிகொண்டால்.''

'' தெய்வாவின் வயிற்றில் கத்தியால் குத்த நினைத்தால், இடையில் வள்ளி வருவால் என்று திவாகரன் நினைக்கவில்லை. என்ன நடந்தது என அறியும் முன் திவாகரன் அந்த இடத்தைவிட்டு ஓடிவிட்டான்.''

''தென்னவனும், தெய்வாவும் பதறிக்கொண்டு வள்ளியை தூக்கிக்கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தனர். வள்ளியின் விசயத்தை கேள்விபட்டு ஊரே திமிலோகப்பட்டது. ''

''பாண்டியன், மற்றும், அவனின் குடும்பத்தார்க்கு வள்ளிக்கு நேர்ந்ததை சொல்லிமுடிக்கும் முன் அனைவரும் மருத்துவமனைக்கு சென்றனர்..''

‘‘அய்யோ வள்ளி, உனக்கா இப்படி நடக்கனும், என் வீட்டு குலவிளக்கை இப்படி அணைச்சுட்டேயே..’’ மீனாட்சி கதறிக்கொண்டு அழ.

‘‘என்னால தான் அக்காவுக்கு அப்படியாச்சு, எல்லாம் என்னால தான், என் அம்மா இறந்ததும் என்னால தான், இப்போ என் அப்பா இறந்ததும் என்னால தான், வள்ளியக்காவுக்கு இப்படியானதும் என்னால தான்’’ தலையில் அடித்துகொண்டே தெய்வா அழ.

‘‘திருமூர்த்திக்கூட கலங்கியிருந்தார். அவரது கண்ணில் கண்ணீர் வர ஆரம்பித்தது. இதை பார்த்த பிரகாஷ், அவரின் தோள் தொட்டு அவரை சமதானம் செய்தான்.’’

‘‘எல்லோரும் கலங்கி இருப்பதை பார்த பாண்டியன், மெதுவாக ஐ.சி.யு அறையை எட்டி பார்த்தான், அங்கு வள்ளியை சுற்றி நான்கு பெரிய மருத்துவரும், செவிலிப்பெண்களும், இருந்தனர். வள்ளி ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறாளா, இல்லை மயக்கத்தில் இருக்கிறாளா என அவனால் கணிக்க முடியவில்லை.’’

‘‘பாண்டியனை பார்த்ததும், வேகமாய் ஓடி வந்து அவனின் காலில் விழுத்தால் தெய்வா.’’

“என்னால தான் மாமா, அக்கா குறுக்க வராம இருந்தா நான் கூட அந்த வலியை ஏத்துட்டு இருப்பேன். என்னை மன்னிச்சுருங்க என்னை காப்பாத்த போய் அக்கா இங்க படுத்துருக்காங்க,” அவள் அவனின் காலில் விழுந்து அழ, அவளை தடுக்காமல் தென்னவன் அவளின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான்.”

”தெய்வாவை தோல் தொட்டு தூக்கி, ”வள்ளிக்கு எதுவும் ஆகாது பிரியா. என் வள்ளியாம்மா என்னைவிட்டு எங்கயும் போகமாட்டாங்க. அவங்க இன்னும் கொஞ்ச நேரத்துல கண்முழிச்சு என்னை பார்ப்பாங்க.” அனைவரும் சோகமாய், பாண்டியனை எப்படி எதிர்கொள்வது என நினைக்க. இவனோ, தெய்வாக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தான்.

“அவனின் மன தைரியத்தையும், அவனின் பேச்சையும் கேட்ட அனைவரும். அதே உறுதியுடன் ஒவ்வொரு நிமிடத்தையும் கடத்தினர். ஆனால் “அவன்” வரவில் பாண்டியனின் மனதைரியம் சுத்தமாக உடைந்து போனது.

“வாய்விட்டு அழுதே பாத்திராத குடும்பம், இன்று அவனின் அழுகையை பார்த்ததும் தான் அவனுள் இருக்கும் வருத்தம் வெளிப்பட்டது.”

‘‘தெய்வாவின் தந்தையை, அதே மருத்துவமனையில் சேர்த்திருந்தனர் ஆனால் அவர் இன்னும் அபாய கட்டத்தில் இருப்பதால் எந்த உறுதியும் கொடுக்க முடியாது மருத்துவர் சொல்ல.’’ தெய்வாவின் அழுகை இன்னும் கூடியது.

‘‘என்னாச்சுப்பா’’ அவன் கேட்க…

‘‘பாண்டியன்… வள்ளிய மட்டும் தான் எங்களால காப்பாத்த முடிஞ்சது. உங்க குழ….’’

‘‘என்னாச்சு அங்கில்… அவன் உயிரை பிடித்துகொண்டு கேட்க.

‘‘உங்க குழந்தையை எங்களால காப்பாத்த முடியல.., சாரி பாண்டியன்..’’ அவர் பாண்டியன் தோளை தட்டிக்கொடுத்து ஆறுதல் கூற.

‘‘அவனின் இதயம் பத்திரமாக உள்ளது, ஆனால் சின்னஞ்சிறு இதயம் உயிரோடு இல்லையே, அவன் மொத்தமாக உடைய…. அங்கிருந்தவர்கள் இதை சற்றும் எதிர்பார்க்காமல் அதிர்ச்சியில் இருந்தனர்.’’

‘‘ப்பா.., எப்படி நடந்தது.. குழந்தையை உங்களால ஏன் காப்பாத்த முடியலை.. அவன் கேட்க.’’

“கத்தி ஆழமா வள்ளியோட அடிவயித்துல குத்துனதுல முதல அடி படுற இடம் கருப்பை தான். அதோட தாக்கம் குழந்தையை பாதிச்சுருச்சு… எவ்வளவோ முயற்ச்சித்தும் குழந்தை காப்பாத்த முடியல.”

“ஆனா கர்ப்பபைக்கு எந்த விதமான பிரச்சனையும் இல்லை, அடிப்பட்ட இடத்துல தையல் போட்டு இருக்கோம், காயம் ஆறினா எல்லாம் சரியாகிடும். பாண்டியா… நீங்க குழந்தை உருவாகுறதுல எந்த பிரச்சனையும் இல்லைப்பா”

“ நீயே மனசு உடைஞ்சு நின்னா வள்ளிக்கு யார் ஆறுதல் சொல்லுவாங்க.. எல்லாரும் அழுகுறதைவிட்டு வள்ளிக்கு தைரியம் சொல்லுங்க.. தயவு செஞ்சு வள்ளி முன்னாடி உங்க சோகத்தை காட்டாதீங்க, முத்தையா.”

“அங்கிருந்த அனைவருக்கு, வள்ளியின் நிலமையை சொல்லிமுடித்த பின் அவரின் அறைக்கு சென்றார்.”

“டேய் பாண்டியா.. எனக்கு என்ன சொல்லுறதுனு தெரியலை டா.., ஆனா உங்களுக்கான சந்தோஷம் சீக்கிரம் உங்களை தேடி வரும் டா.. வள்ளி முன்னாடி இப்படி நிக்காதா டா” அவன் பங்கிற்க்கு சொல்ல.

‘‘அனைவரையும் காக்கவைத்துவிட்டு, ‘‘அவன்’’ சொன்ன மாதிரி ஒரு மணை நேரத்தில் கண்விழித்தாள் வள்ளி.

‘‘சார்.. அவங்க கண்முழிச்சுட்டாங்க.. சார்’’ செவிலிபெண் சொல்ல.

‘‘போடா போய் பாரு வள்ளியை, உன்னை தான் எதிர் பார்ப்பா.’’ அவன் சொல்ல.

‘‘முகத்தை அழுந்த துடைத்துகொண்டு, கண்ணீரை உள்ளிழுத்துகொண்டு, அவளை காண சென்றான்.’’

‘‘அவன் வருகையை உணர்ந்து, அவளுக்கு மகிழ்ச்சி தான் ஆனால், அவனது குழந்தையை இழந்த என்னால் இனி அவனிடம் எப்படி பேசமுடியும்.. வள்ளி நினைத்துகொண்டிருக்க. அவனோ அவள் அருகில் வந்து அவளின் நெற்றியில் அழுந்த முத்தம் பதித்தான்.’’

‘‘அவளுக்கு தெரியும், இந்த முத்தம் எதற்க்கு என்று, வள்ளிக்கு சிறு அடிப்பட்டாலும் அவனால் தாங்கிக்கொள்ள முடியாது. ஒருமுறை அவனின் சட்டை பட்டனை தைக்கும் போது அவளது விரலில் ஊசி குத்திவிட்டது. அது அவளுக்கு வலிக்கவில்லை, ஆனால் அதை பார்த்துவிட்ட பாண்டியன் தான்

அவளைவிட பதறினான். அன்றில் இருந்து அவளுக்கு காயம் ஏற்படும் போதெல்லாம் இந்த முத்தமும் அவளுக்கு அவன் இருப்பதை உணர்த்தும்.’’

‘‘அதே போல் தான் இன்றும். ஆனால் அந்த முத்தம் தொடர்ந்து நீடித்துகொண்டிருந்தது.. அவன் தான் அவளை விட்டு முதலில் விலகி அவளின் கைக்குள் அவன் கையை வைத்துகொண்டு இருவரும் பேசாமல் அமைதியாக ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தனர்.’’

‘‘அவளே ஆரம்பித்தால்.., ‘‘தெய்வாக்கு எதுவும் ஆகலையே அத்தான், குரு சித்தாப்பாக்கு எப்படி இருக்கு,’’ அவள் இருந்த நிலமையில் வேறொரு இருந்தார் இன்னேரம் வேறு நடந்திருக்கும் ஆனால் அவள் நிலையை மனதில் வத்துகொள்ளாமல், தெய்வாவையும், தெய்வாவின் தந்தையும் விசாரிக்கின்றாள்.’’

‘‘யாருக்கும் எதுவும் ஆகலை, தெய்வா பத்திரமா இருக்கா,’’

‘‘அத்தான், இன்னொன்னு சொல்லுவேன் ஆனா வருத்தப்படக்கூடாது, நம்ம குழந்தை… நம்ம குழந்தை… ‘‘ அவள் திக்கிகொண்டிருப்பதை பார்த்தவன்.

“கண்டிப்பா இன்னொரு குழந்தை பெத்துக்கலாம் வள்ளியம்மா.., இந்த குழந்தை இல்லைனா, என்ன.., உங்களை மாதிரி பத்து குழந்தை பெத்துக்கலாம் வருத்தப்படாதீங்க வள்ளியம்மா.. என்னால தாங்க முடியாது” அவளின் வருத்தை போக்கினான்.

“இவனுக்கு ஆறுதல் சொல்ல நான், என்னை பார்த்து ஆறுதல் சொல்கிறான். குழந்தை பிறப்பில் எவ்வளவு ஆர்வமாய் எதிர் பார்த்தான், இப்போ பேசுவதென்ன… குழந்தை இழப்பில் உடைந்து அழுவான் என எதிர்பார்க்க. தைரியமாய் அவளுக்கு சமதானம் கூறினான்.”

“ஆமாம் அத்தான், பத்து குழந்தை நான் பெத்துகொடுக்கிறேன். உங்களை மாதிரி என இருவரும் மாற்றி மாற்றி சமதானம் சொல்லிக்கொண்டனர்.

”பின், ஒருவர் பின் ஒருவராக வந்து பார்த்துகொண்டிருந்தனர்., தெய்வா அவளிடன் உடைந்து அழுதே விட்டால். “ஏன் அக்கா, இடையில வந்தீங்க, என்னால உங்களுக்கு, முடியலை அக்கா,” தெய்வ அழ.

“அழக்கூடாது தெய்வா.., நீ யாரு என் சித்தி பொண்ணு, அப்படியிருக்க, உன்னை காவக்குடுக்க சொல்லிறையா.. ஐயாவுக்கு

அவர் வீட்டு வாரிசு முக்கியம், ஏற்கனவே சித்திய இழந்தாச்சு, இனி உன்னையும் சித்தாப்பாவையும் இழக்க கூடாதுனு தான்..''அவளின் அழுகை நிறுத்தினால்.

''கடைசியாய் ''அவன்'' வந்தான்..''

''என்ன மேடம்.. வீர சாகசம் செஞ்சிருக்கேங்க.., நான் தான் மிஸ் பண்ணிட்டேன். எப்படி இருக்கு கத்திகுத்து. நான் கூட முன்ன பின்ன வாங்கினது இல்லை.., அனுபவம் எப்ப்டி இருக்கு வள்ளி.'' அவளை பார்த்து கிண்டலாய் பேச்சை ஆரம்பித்தான்.

''வேணா, நட்டு அப்பாகிட்ட கத்திய வாங்கி நான் உன் வயித்துல குத்தி காட்டவ. என்னைவிட நீதான் நேருல பார்த்த மாதிரி அனுபவத்தை சரியா சொல்லுவ, அதை நான் பிரட்டிக்கலா செஞ்சு காட்டுறேன்.'' அவனுடன் வாயாடிக்கொண்டிருந்தாள்.

''சரிதான்.. எங்க எங்கனு வள்ளிய தேடிட்டு இருந்தேன் இதோ வந்துட்டாங்க எங்க வள்ளி..''

''சாரி வள்ளி.. என்னால தான், சரியான நேரத்துக்கு நாங்க வந்திருந்தா.. உனக்கு இது மாதிரி நடந்திருக்க விட்டுருக்க மாட்டேன்., நீ சொன்ன மாதிரியே உன் குடும்பத்து மேல விழ இருந்த அடிய நீயே வாங்கிட்ட.., உன்னை நினைச்சா பெருமையா

இருக்கு, காதலிச்சவன விட அவன் குடும்பத்து மேலையும் நீ அதிகமா பாசம் வச்சுருக்கிறதை இன்னைக்கு தான் பார்க்குறேன்.. நீ கிடைக்க பாண்டியனும், அவன் குடும்பமும் தவம் செஞ்சுருக்கனும் வள்ளி..''

''கண்டிப்பா நீயும், பாண்டியனும் அடுத்த வருசத்துக்குள்ள இன்னொரு பாண்டியனோ, வள்ளியோ பிறக்கனும் அதுக்கான என் முதல வாழ்த்து.'' அவளின் கை மேல் அவன் கை வைத்து அவளுக்கு ஆறுதல் கூறினான்.

''ம்ம்ம்... திவாகரன் என்ன ஆனான்''

''அவன் என் கஷ்டடியில் தான் இருக்கிறான். என் பாண்டியன் குடும்பத்தையும், வள்ளியையும் கதறவிட்டவனுக்கு, போலீஸ்காரன் அடியும், பலத்தையும் காட்ட வேணாம். இனி உங்க ஊருப்பக்கம் கூட அவன் தலைவச்சு படுக்க மாட்டான். நீ உடம்ப பார்த்துக்கோ.''

''அனு என்னா ஆனா'' அவனின் நடை நின்றது.

''என்னப்பா, இன்னுமா அவ மேல கோவம் போகலை''

''அடுத்த மாசம் கல்யாணம்,''

“அனு கண்டிப்பா ஒத்துட்டு இருக்கமாட்டா, நீ போய் கூப்பிடு அவ கண்டிப்பா உன் கூட வருவா”

“அவனின் புன்னகை விரிந்தது… “அடுத்த மாசம் எனக்கு அவளுக்கு தான் கல்யாணம்.. அதை சொல்லவருவதற்க்குள் நீ தான் முந்திகிட்ட.” அவன் மகிழ்ச்சியில் சிரிக்க.

“இவளோ… “இரு எப்படியும் நான் தான் அவளை உன் அறைக்கு அனுப்பனும் அப்போ பார்த்துகிறேன்.” அவனுக்கு மிரட்டல் விடுக்க.

“தெரியாம சொல்லிட்டேன்.. நான் கிளம்புறேன்., பாண்டியன்கிட்ட உண்மைய சொல்லிடு வள்ளி.. சரியா.”

“ம்ம் சரி..”

“வள்ளியின் உடல் தேறி வருவதற்க்குள் பாண்டியன் உடல் இளைத்திருந்தது.., இருவரையும், நன்றாக கவனித்துகொண்டார் மீனாட்சி..”

”இரவு மட்டுமே, பாண்டியன் கவனிப்பில் இருப்பவள், பகல் முழுவதும், ஒவ்வொருவரி கவனிப்பில் இருந்தாள் வள்ளி,”

“அனைவரையும், அழைத்து வந்து ஹாலில் அமரச்சொன்னால், எல்லாரும் என்ன என கேட்டதற்க்கு, அவளின் அமைதி தான் கிடைத்தது பதிலாக.”

“ நான் எல்லாரையும் கூப்பிட்டதுக்கு காரணம், உண்மைய சொல்ல தான், என ஆரம்பித்து, தென்னவன் தெய்வாவின் மீது வைத்துள்ள காதல்,தாமரை பற்றியும், அவரை நினைத்து கவலைப்பட்ட குடும்பத்தையும், அதனால் பாண்டியனின் சென்னை பயணம், ஒவ்வொன்றாக சொல்லிக்கொண்டே வந்தவள், ஊரில் நடந்த பஞ்சாயத்துக்கு காரணம் நான் தான் என்றும் போட்டு உடைத்தாள்.”

“என்ன வள்ளி சொல்லுற…”

“உங்களுக்கு தெரியுமே அத்தை, அகிலன் அவன் மூலமா தான் நான் பஞ்சாயத்தை கூட்டச்சொன்னேன், அந்த கடிதம் எழுதுனது வேற யாரும் இல்லை,அகிலன் தான், நான் தான் அப்படி எழுத சொன்னேன், என அதற்க்கான காரணம் சொல்லிவிட்டு, குருமூர்த்தியின் வருகையும், அவர் திவாகரனின் பிடியில் சிக்கி இருப்பதை அறிந்து கொள்ள காரணம் அகிலன் என சொல்லிகொண்டிருந்தாள்.”

“இப்போ திருவிழா நடக்கும் போது தெய்வாவ அவன் கடத்த போறாத சொன்னதும் அகிலனின் ஆள், ஆனால் அகிலன் எப்படியும் திவாகரனை பிடித்து விடுவான் என்ற எண்ணம் இருந்தாலும், தெய்வாவின் பாதுகாப்பு எனக்கு முக்கியமா இருந்துச்சு, அதான் திருவிழா அன்ன்னைக்கு அகிலன் எங்க வந்துட்டு இருக்கானும், சீக்கிரமா வரச்சொல்லியும் எல்லாம் கை மீறி போச்சு” வள்ளி குழந்தையின் இழப்பில் கண்கலங்க ஆரம்பித்தால்.

“அதை பார்த்த பாண்டியன், என்கிட்ட கூட சொல்லாம அகிலனோட உதவியை நாடி இருக்கீங்கல வள்ளியம்மா.. அப்போ நான்” பாண்டியன் வள்ளியை பார்த்து இந்த கேள்வியை கேட்க.

“அய்யோ அத்தான் நான் அந்த மாதிரி சொல்லலை, ஏற்கனவே தாமரை சித்தி இழப்பை தாங்க முடியாம ஐயா உங்களை எப்படி பார்த்தார்னு எனக்கு தான் தெரியும், அதான் அகிலன்கிட்ட சொன்னேன், ஆனா அவனா தான் உதவி செஞ்சான். நீங்க என்னை புரிஞ்சுக்குவீங்கனு நினைச்சேன்” அவளின் புரிதலை கண்டுகொண்டவன் முதல் முறையாக அவளிடம் கோபம் கொண்டு அவர்களின் அறைக்கு சென்றுவிட்டான்.”

“அத்தானை எப்படி சமதானம் செய்தாலும், இப்போ அவரி கோபம் போகாது, பிறகு பார்த்துக்கொள்ளலாம் என நினைத்துகொண்டு தெய்வாவின் பக்கம் திரும்பினால்.”

“சாரி தெய்வா, என்மேல கோபம் இருந்தா என்கிட்ட காட்டு, ஆனா தென்வன் மாமா எதுவும் செய்யலை, அவரோட காதலை சேர்த்து வைக்க தான் நான் அப்படி செஞ்சேன்.” தெய்வாவின் கை பிடித்து மன்னிப்பு கேட்டால்.

“என்னக்கா என்கிட்ட போய், நீங்க அப்படி செய்யலைனா நானே இந்த ஊரைவிட்டு போயிருப்பேன்க்கா, ஆனா அவரோட காதலை புரிஞ்சிகிட்டு சேர்த்து வச்சுருக்கீங்க நீங்க போய் என்கிட்ட மன்னிப்பு கேட்கலாமா” அவளும் சமதானம் சொன்னால்.

“அகிலன் யாரும்மா, அன்னைக்கு மருத்துவமனைக்கு வந்தாரே அவரா.. என திருமூர்த்தி கேட்க.”

“ஆமாம் ஐயா, அவரும், அத்தானும் தான் போலீஸ் ட்ரைனிங்கல நண்பர்கள் ஆன கதையும், அதற்க்கு பின் வள்ளியின் தோழனாக ஆனா கதையையும் சொன்னால்”

''ரொம்ப நல்ல தம்பிம்மா, பாண்டியன் மனசுல என்ன இருக்குனு, அவன் தோளை தொட்டதும், அந்த தம்பிகிட்ட மனசுல இருக்குறதை வெளிகொண்டு வந்துருச்சு அந்த தம்பி''

(ஆமாம் ப்ரண்ட்ஸ், அகிலன் வேற யாரும் இல்லை, பாண்டியன் சென்னையில ஒரு போலீஸ மீட் பண்ணானே, அவரோட மருமகன் தான் இந்த அகிலன், கொஞ்சம் பத்து எபிக்கு பின்னால் போனா தெரிஞ்சுக்குவீங்க,)

''என் மேல தப்பிருந்தா எல்லாரும் என்னை மன்னிச்சுருங்க'' அனைவரின் முன் கைகூப்பி நின்றிருந்தாள். வள்ளி.''

''என்னம்மா, விடு இதுகெல்லாம் மன்னிப்பா, எங்கிட்ட சொல்லிட்டு செஞ்சுருக்கலாம், அதான் வருத்தம், போ போய் தம்பிய சமதானம் படுத்து'' மீனாட்சி அனைவரின் சார்பாய் பேசினார்.

''இரவின் தனிமையில், ஜன்னல் ஓரமாய் நிலாவை ரசிக்கும் மனநிலையில் நான் இல்லை என்பது போல் நிலாவை வெறித்துப்பார்த்துக்கொண்டிருந்தான் பாண்டியன்,''

''அத்தான், இன்னும் என்மேல கோபம் போகலையா, அவனை பின்னிருந்து அணைத்துகொண்டே கேட்டால்.''

‘‘கோபம் இருந்துச்சு ஆனா, உங்களுக்கு ஒன்னுனா என் உயிர் அடுத்த நிமிசம் உங்ககிட்ட தான் வந்திருக்கும் வள்ளியம்மா, இனிமே செய்யமாட்டீங்கனு எனக்கு சத்தியம் பண்ணுங்க’’ அவளின் கை பிடித்துக்கேட்க.

‘‘சத்தியமா, உங்ககிட்ட சொல்லாம செய்ய மாட்டேன் அத்தான், அவனது நெஞ்சில் சாய்ந்துகொள்ள, இருவரின் மௌனம் மெல்லிய காற்று அவர்களின் மோன நிலையை கலைக்க, ‘‘தூங்கலாம், இரண்டு நாள் கழிச்சு அகிலன் கல்யாணம், நாம அங்க இருக்கனும், அகிலன் என்னை எதிர் பார்க்குறதை விட உங்களைத்தான் எதிர் பார்ப்பான்’’

‘‘ம்ம்ம்... ஆமா.. அவனுக்கு இருக்கு கச்சேரி..’’ முணுமுணுத்துக்கொண்டால்.

‘‘என் காதலை சொல்லிருக்கனும் ப்ரியா, ஆனா எப்படி சொல்லுறதுன்னு தெரியாம தவிச்சேன்,’’ அவன் தெய்வாவிடம் சொல்லிக்கொண்டிருக்க.

‘‘சரி இப்போ சொல்லுங்க கேட்க்குறேன்’’

‘‘என்ன’’

‘‘அதான் உங்க காதலை’’

‘‘திடிருனு எப்படி சொல்லுறது ப்ரியா..’’

‘‘இப்படி தான் ‘ நான் உன்னை காதலிக்குறேன்’ என அவன் எதிர்பார சமயத்தில் கன்னதில் முத்தமிட்டு அவளின் காதலை கூறினால்.

‘‘அவனுக்கோ ஆச்சர்யம் தாங்க முடியவில்லை..,அவளை பார்த்தான், அவளோ,

‘‘எப்படி இருக்கு என் ப்ரபப்போஸல்,.. அதே மாதிரி நீங்களும் சொல்லுங்க பார்ப்போம், என அவனை வம்பிழுக்க, அவனும் கன்னத்துக்கு பதிலாக இதழில் முத்தமிட்டு காதலை கூறினான்.’’

‘‘இரு ஜோடிகளும், ஒருவரின் மீது உள்ள காதலை, அன்பாய் சொல்லிக்கொண்டும், சொல்லிக்கொடுத்தும் ஆனந்தமாய் இருந்தார்கள்.’’

‘‘அகிலன் வெட்ஸ் அனுராகவி’’

‘‘வாங்க, வாங்க, என்ன பாண்டியன் இப்போ தான் வரணுமா, அகிலன் கல்யாணத்துக்கு கொஞ்சம் முன்னாடியே வரவேணமா, வள்ளிக்கு தான் உடம்பு முடியலை என் பொண்ண பார்த்துக்க எல்லாரும் இருக்காங்க ஆனா அகிலனுக்கு நீயும், வள்ளியும் தானேப்பா’’ அகிலனின் தந்தை நட்ராஜன் கேட்க.

‘‘இல்லாப்பா, என்ன தான் வள்ளியம்மாவ எல்லாரும் பார்த்துகிட்டாலும் நான் அவங்க பக்கத்தில் இல்லைனா ஒழுங்க சாப்பிட மாட்டாங்க. அதான்ப்பா. இதோ வந்துட்டேன்ல இனி எல்லா வேளையும் நானே பார்த்துகிறேன் எங்க அகிலன்’’ அவன் கேட்க.

‘‘உள்ள தான் இருக்கான் போப்பா, வள்ளி அனு உன்னை தான் கேட்டுட்டு இருந்தான் போம்மா’’ இருவரையும் உள்ளே அனுப்பி வைத்தார்.

‘‘வள்ளி கண்ணு எப்படிம்மா இருக்க,’’ அனுவின் அப்பா கேட்க.

‘‘ நல்லா இருக்கேன்ப்பா, நீங்க எப்படி இருக்கீங்க’’

‘‘அனு கல்யாணம் முடிஞ்ச அடுத்து ரேனு கல்யாணம் மட்டும் தான்ம்மா, ஆனா அவளுக்கு கல்யாணத்துல கொஞ்சம் கூட இஷ்ட்டம் இல்லைனு இரண்டு நாளுக்கு முன்னாடி என்கிட்ட சண்டை போட்டு கிளம்பிட்டா, இதோ இன்னைக்கு காலையில தான் வந்தா, அனுவோட தான் இருக்காம்மா, போய் பாரு, ஆமா பாண்டியன் எங்கம்மா’’ அனுவின் தந்தை ரவிக்குமார் கொஞ்சம் மகிழ்ச்சியாய், கொஞ்சம் வருத்தமாய் அவளிடம் புலம்பிகொண்டிருந்தார்.

“அத்தான், அகிலன பார்க்க போயிருந்தாங்கப்பா, வந்து உங்களை பார்க்க சொல்லுரேன்.”

“எல்லாம் கேள்விபட்டேன்ம்மா, இருந்தாலும் பாண்டியன் உன்கூட இருக்கும் போது எந்த துன்பம் வராது சரியா.”

“சரிங்கப்பா,”

“மணமகள் அறையில், கல்யாணக்கலையுடன் அமர்ந்திருந்த அனுவை பின்னிருந்து அணைத்து “ஹாப்பி மேரிடு லைப் அனு” வள்ளி வாழ்த்து கூற.

“வள்ளியம்மை, எப்போ வந்த, ரொம்ப வருசம் ஆச்சுல உன்னை பார்த்து. எப்படி இருக்க, எங்க செந்தூர் அண்ணாவ”

“ நான் நல்லா இருக்கேன், உன் அண்ணா, என் நண்பனை பார்க்க போயிருக்காரு”

“ம்க்கு… அவனை பார்க்கலை யாரு அழுதா, திமிரு பிடிச்சவன்” அனு எரிச்சலில் சொல்ல.

“என்ன டி இன்னும் கோபம் போகலையா அகிலன் மேல”

“ஆமா.. போகலை.. ஆனாலும் அவனை விட்டு என்னால வாழ முடியுமா. அதான் மிரட்டி கல்யாணம் பண்ணவேண்டியாத

இருக்கு, இப்போ கூட என்கிட்ட எதுவும் பேசாம தான் இருக்கான், வளந்த மாடு'' அவள் பாட்டிற்க்கு அகிலனை திட்டிகொண்டிருக்க வள்ளி, அவளை வேடிக்கை பார்த்துகொண்டிருந்தாள்.

''முடிச்சுட்டியா, அகிலனை திட்டி முடிச்சுட்டியா, அவரு பக்கம் இருக்குற நியத்தை நீ பார்க்கவே மாட்டுற அனு''

''என்ன நியாயம் இருந்தாலும் அவனுக்கு நான் முக்கியமில்லையா வள்ளியம்மை,''

'' நீ முக்கியம் இல்லாமையா, உன் அப்பாகிட்ட போய் உன்னை காதலிக்குறேன், கல்யாணம் பண்ணா அனுவ தான் பண்ணுவேனு சண்டை போட்டு வருவாரா''

''ம்ம்ம்... சண்டை போட்டாலும் என்கிட்ட பேசுறதுக்கு என்ன வந்துச்சாம் உங்க பிரண்ட்க்கு''

''ஏதாவது ஒரு காரணம் இருக்கும்டி''

''வள்ளியக்கா, எப்போ வந்தீங்க,'' ரேனுகா வர, அவளிடம் பேசிகொண்டு அனுவை தயார் செய்துவிட்டு மணமேடைக்கு அழைத்துகொண்டு சென்றால்.

“டேய் இன்னும் அனுமேல கோபமா தான் இருக்கியா, எல்லாம் சரியாகும் டா, இன்னைக்கு உனக்கு கல்யாணம் சிரிடா”

“ எப்படி போகும் பாண்டியா, அவ மட்டும், தற்கொலை பண்ணிருந்தா இன்னேரம் நானும் செத்து போயிருப்பேன் டா, ஆனா என்னை புரிஞ்சு காதலிச்சவ இந்த விசயத்துல ஏண்டா அப்படி முடிவு எடுக்கனும்” அகிலன் வேதனையுடன் கூற.

“சரி இப்போ ஒன்னும் ஆகலை அனுக்கு வா, ஐய்யர் அழைச்சுட்டு வரச்சொன்னாங்க” அவனை சமதான செய்து அழைத்து போனான்.

“அகிலனும், அனுவும், ஐந்து வருடமாய் காதலித்து வந்தார்கள், ஆனால் அனுவின் தந்தைக்கு, அனுவிர்க்கு வேறு மாப்பிளை தேடும் போது தான் பிரச்சனை ஆரம்பித்தது. அந்த சமயம், டெல்லி சென்று இருந்த அகிலனுக்கு தெரியவில்லை, அவள் எவ்வளவு தடுத்து அனுவின் பிடிவாதமாக இருந்தார்.”

“இது தெரிந்துகொண்ட அகிலன் வேளையை விட அனு தான் முக்கியம் என அடுத்த விமானத்தில சென்னைக்கு பறந்து வந்தான், ஆனால் அவன் வருவதற்க்கு அனு வேறுமுடிவை தேடிக்கொண்டால், நல்ல வேலை அவள் அருந்தியது வீரியம் குறைவான மருந்து, அதனால் உடனே காப்பாற்றப்பட்டால்

ஆனால் அகிலன் அவள் முழிப்பதற்க்காக காத்திருந்து, அவள் கண்விழித்தவுடன்''

‘‘இனி நம்ம காதல் இல்லைனு நினைச்சுக்கோ கவி, இனி நீ யாரோ, நான் யாரோ.., என் வாழ்க்கையில ஆனா, இனி உன்னை தவிர வேற யாருக்கும் இடம் இல்லை, குட் பாய்'' அவளிடம் கோபமாய் சொல்லிவிட்டு சென்றவன் இன்று தான் அவளை மணமேடையில் அவனுக்கு அருகில் அனுவை பார்த்துகொண்டிருக்கிறான்.

‘‘எவ்வளவு விலகி தூரம் போனாலும், இவள் என்னை விடமாட்டாள், ஆனால் இவளின் செயலில், கொஞ்சம் கவர்மாய் கூட உணர்ந்தான். தன்னை கரம் பிடிக்க அவளின் உயிரைவிட துணிந்தாளே, என்ன எண்ணிக்கொண்டே அவளுக்கு தாலிகட்டினான்.''

''அவளும் காதல் கணவன் கட்டிய தாலியை ஆசையுடன் தொட்டுப்பார்த்து, அவனையும் பார்த்தால்.''

''எந்த ஒரு காதலும், தோற்க்கு நேரத்திலும் வெற்றி பெறும், இருவரின் காதல் உள்ளங்களும், உண்மையாய் இருந்தால், எந்த இடத்திலும் அவர்களின் காதல் தோற்க்காது''

“ஒன்பது மாதத்திற்க்கு பிறகு”

“அத்தை, எல்லாருக்கும் நான் தான் காஃபி கொடுப்பேனு தெரியும்ல, அப்புறம் என்ன” வள்ளி, மீனாட்சியிடம் சண்டை போட.

“இங்க பாரு வள்ளி, தம்பி உன்னை ஒரு வேளையும் செய்யக்கூடாதுனு தான் சொல்லிட்டு போயிருக்கு, நீ மட்டும் இந்த காஃபி தட்டை எடுத்தது தெரிஞ்சா, தம்பி கோபம் என் மேல தான் திரும்பும், சொன்னா புரிஞ்சுக்கோம்மா,”

“அவரு தான் வீட்டுல இல்லையே, அப்புறம் என்ன, கொடுங்க, நான் எடுத்துட்டு போறேன், அவள் வம்படியாய், மீனாட்சியின் கையில் இருந்த ட்ரேயை வாங்க, சரியான நேரத்தில் அதை பாண்டியன் வாங்கினான்”

“அய்யோ அத்தான்,” வள்ளி மிரள.

“இதுக்கு தான் நான், உங்களை விட்டு எங்கயும் போகலைனு சொன்னேன், நான் அந்த பக்கம் போன சமயம் பார்த்து, உங்க வேளையை ஆரம்பிச்சுட்டேங்க வள்ளியம்மா,” வள்ளியிடம் கோபத்தை கட்டாமல், பேச.”

“அத்தான் எந்த வேலையும் செய்யாம இருந்த எனக்கு என்னவோ மாதிரி இருக்கும், இது ஒன்னும் அவ்வளவி வெயிட் இல்லை அத்தான்”

“பரவாயில்ல, வெயிட் இருக்கோ இல்லையோ,எந்த வேலையும் செய்யக்கூடாது நீங்க”என அவன் கறாரக கூற, அவளோ சினுங்கிகொண்டே சோபாவில் அமர்ந்தால்.

“இந்தாங்க ஜூஸ் குடிங்க, மாதுளை ஜூஸ் ரொம்ப நல்லது, உங்களுக்கு, பாப்பாவுக்கும்” அவள் கையில் கொடுக்க, கொஞ்சம் கொஞ்சமாய் குடித்தால்.

“வள்ளியின் அந்த விபத்திற்க்கு பின் காயம் ஆறா கொஞ்ச நாள் சென்றது, பின் மருத்துவரின் ஆலோசனையில், அடுத்த மூன்று மாதத்தில் தீராத காதலில் கிடைத்தது தான் இப்போது வள்ளியின் கரு உருவானது.”

“அதை தெரிந்துகொண்ட, பாண்டியன் இனி வள்ளியை ஒருவேலையும் செய்யவிடாமல், பக்கத்தில் இருந்தே பார்த்துகொண்டான். வள்ளி மீண்டும் கரு உருவானதை அறிந்த அனைவரும் வள்ளியை தாங்கினர்.”

“தெய்வாவோ, வள்ளியை பார்த்துகொள்ள, அங்கேயெ தங்கி இருந்தாள், அடுத்த ஒரு மாதம் மலரும், இருந்தால். கீர்த்தியும், மாறனும், வேலையின் காரணமாக வெளிநாடு சென்றுவிட்டான், ஆனால் வள்ளியின் விசயம் கேள்விப்பட்டது, குழந்தை பிறப்புக்கு கண்டிப்பாக அங்கு இருப்பேன் என உறுதியாக சொல்லிவிட்டான்.”

“தெய்வாவின், தந்தை உயிர் பிழைத்ததும் அனைவரிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு, கோவில் கோவிலாக சென்றுவிட முடிவு எடுத்தார், திருமூர்த்தியும், முத்தையாவும் எவ்வளவு தடுத்தும், தான் செய்த பாவத்திற்க்கு அது சரி என்று சென்றுவிட்டார்.”

“அவர்களும், அவரின் மனநிலையை புரிந்துகொண்டு, சம்மதித்தனர்.”

“வள்ளி ஜூஸ் குடித்துகொண்டே, பாண்டியனிடம் பேசிகொண்டிருந்தாள், அப்பொழுது, வாசலில், கவர்மெண்ட் கார்கள் அணி வகுத்து நின்றது. அதில் இறங்கி வந்தார் ரவிகுமார், இதை பார்த்த வள்ளி, அவரை வரவேற்று, உபசரித்தாள்.”

“சொல்லுங்கப்பா, என்ன திடீர்னு வந்திருக்கீங்க,”

“ நான் போலீஸா வந்திருக்கேன்மா, அதனால பாண்டியன்கிட்ட பேசனும்,”

“சொல்லுங்க சார்,”

“ நீங்க போலீஸ் வேலையவிடுறதுக்கு முன்னாடி, நான் உங்கிட்ட ஒரு விசயம், சொன்னே ஞாயபகம் இருக்கா பாண்டியன்”

“இருக்கு சார், வேலைய தான் விட்டேன், ஆனா பொதுமக்களுக்கு ஒன்னுனா என் உதவி கண்டிப்பா நம்ம டிப்பார்ட்மெண்ட்க்கு கிடைக்கும்னு சொல்லிருந்தேன் சார், என்னைக்கும் மறக்கமாட்டேன்”

“இப்போ அதுக்கு தான் வந்திருக்கோம், உங்க உதவி தேவையா இருக்கு, அதனால நீங்க நாளைக்கே உங்க வேலையில சேரலாம் பாண்டியன்”

“ரவிகுமாரின் முகத்தில் தெரிந்த பாவனையில், புரிந்து கொண்ட பாண்டியன், “ஒகே சார், நான் நாளைக்கு டியுட்டில ஜாயின் பண்ணுறேன். அகிலனுக்கு சொல்லிடுங்க” எதையும் சிந்திக்காமல் ஒப்புகொண்டான்.

“ வெல்கம் பாண்டியன், நாங்க கிளம்புறோம்” வந்த வேலை முடிந்து சென்றுவிட்டார்.

‘‘உங்களை கேட்காம முடிவு பண்ணிட்டேன் வள்ளியம்மா, சாரி’’

‘‘கொஞ்சம் நாள் போனதும் நானும் அங்க வந்திருவேன், சரியா அத்தான், உங்களைவிட்டு, நானும் பாப்பாவும் எப்படி இருப்போம்,’’

‘‘சரிங்க வள்ளியம்மா,’’

‘‘வள்ளிக்கு தெரியும், பாண்டியனின் கனவு, லட்சியம், அனைத்து அந்த போலீஸ் வேலை தான் என்று, ஆனால் இந்த வேலையால் வள்ளிக்கோ, குடும்பத்து ஆபத்து நேர்ந்துவிட்டால் என்று பயமும் இருந்தது, அதனால் தான், போலீஸ் வேலையில் ஒரு வருடம் மட்டுமே இருந்துவிட்டு, அவனது சொந்த ஊருக்கே திரும்பிவிட்டான், அகிலனும் அவனை ஒன்றும் சொல்லவில்லை,’’

‘‘வள்ளிக்கு தெரிந்திருந்து, அவளால் அதை பற்றி பேசவும் முடியவில்லை. இதனால் வள்ளிக்கு சிறு வருத்தம் கூட இருந்தது. ஆனால் இப்பொழுது அது இல்லை’’

‘‘இரண்டு மாதம் சென்றுவிட்டது, பாண்டியன் வள்ளி இல்லாத இடத்தில் இனியும் இருக்க முடியாதென்று,உடனே வள்ளியை

அழைத்து வந்துவிட்டான், அவள் உடனிருப்பதாள், வேலையில் கவனத்தை செலுத்தினான்.''

''அவர்களின் காதலும், ஒவ்வொரு நாளும் கூடியதே தவிர ஒரு துளியும் குறையவில்லை,''

''இதற்கிடையில், கார்த்திக்கிற்க்கு வரன் பார்ப்பதாய் வள்ளியிடம் சொல்லிக்கொண்டிருந்த மீனாட்சி, ஒன்றும் சரியாக அமையவில்லை என புலம்பிக்கொண்டிருந்தார்.''

''இதை கேட்ட வள்ளி, அனுவிடம் புலம்ப, அவளோ ரேனுவிற்க்கு, கார்த்திக்கும், கல்யாணம் செய்தால் என்ன '' ஒரு குண்டை போடவும்.

''ஆளுக்கு முதலாய் சம்மதம் சொன்னாள் ரேனுகா'' அவளின் தீடீர் சம்மத்தால், அனு சந்தேகமாய் பார்க்க.., வள்ளியோ சந்தோஷமாய் இருந்தால்.

''ஒரு வழியாக கார்த்திக்கும், ரேனுவுக்கு கல்யாணம் செய்து வைத்து அவன் வேலை பார்க்கும் மும்பைக்கே அனுப்பி வைத்தனர்.''

‘‘அனுவின் சந்தேகத்தை, அகிலனிடம் சொல்ல, அவனோ, ‘‘பின்ன, இரண்டு வருசமா கார்த்திக் பின்னாடி சுத்துன உன் தங்கச்சி, வேற யாரை கல்யாணம் பண்ணுவா,’’

‘‘இது எப்படி உனக்கு தெரியும், அகில்’’

‘‘கண்டுபிடிச்சதே, நானும், பாண்டியனும் தான்’’

‘‘அடப்பாவிங்களா என்கிட்ட சொல்லலை’’

’’வள்ளிகிட்டயே சொல்லலை, இதுல உன்கிட்ட சொல்லனுமா’’

‘‘உன்னை, அவனை அடிக்க துரத்த, அவனோ, அவளை கட்டிபிடித்து காதல் பாடத்து சொல்லிக்கொடுத்தான்’’

‘‘உன்னை துரத்தி துரத்தி காதலிச்சேன்ல இன்னும் வேணும் டா எனக்கு’’ கோபமாய் ரேனுகா பேச

‘‘உன்னை யாரும்மா என்னை காதலிக்க சொன்னா’’கார்த்திக் எதிர் பாட்டு பாட’’

‘‘அவன் பேச்சில், கண்கலங்க, அவனுக்கோ, அதிகமாய் சீண்டிவிட்டோமோ, என நினைத்துகொண்டு, அவளை நெருங்கினான்.

“சாரி ரேனு, தெரியாம சொல்லிட்டேன்,”

“சரி விடு, உனக்கு என்ன பிடிக்கும் சொல்லு, இன்னைக்கு சமைக்குறேன்” அவள் சகஜமாக.

“வாயேன் வெளிய போகலாம், சாப்பிட.”

“உண்மையில என்னை காதலிச்சியா ரேனு” அவன் கேட்க.

“ சாப்பிட்டு முடித்துவிட்டு, இருவரும் நடந்து கொண்டிருந்தனர், அப்போது தான் அவளிடம் இந்த கேள்வியை கேட்டு வைத்தான்,”

“நடைபாதை கடையில் விற்றுக்கொண்டிருந்த ரோஜாவை வாங்கிகொண்டு அவன் முன் மண்டியிட்டு, “உலகத்துல உன்னை தவிர என் உயிரினும் மேலான என் காதல் கணவா, ஐ லவ் யு” என கூறி அவன் முன் நீட்டினால்.

“அங்கிருந்த அனைவரும் அவளின் செயலில், கை தட்டி, பாராட்டினர். ஒருவரோ, “ரொம்ப லக்கி மேன் நீ, இப்படி எந்த பொண்ணு காதலை சொல்ல மாட்டா, உனக்கு கிடைச்சிருக்குற காதலி, ரொம்ப லக்கியா இருக்குறா” சொல்லிவிட்டு செல்ல.

‘‘அவனோ, அவளை மாதிரி மண்டியிட்டு, அவளின் காதலை ஏற்றான்’’

‘‘வாழ்க்கையில், எந்த துன்பமும், நிரந்தரம் இல்லை, என்பது போல் வள்ளியின் காதல் இருக்க, தன்னையும் ஒரு பெண் உயிராய் காதலித்தால் என்பது போல், ரேனு, அனு காதல் இருக்க, தனக்கு தெரியாமல் காதலை மறைத்து வைத்த தென்னவனின் காதல், இன்னும் அவனை அதிகமாக காதலிக்கனும் என முடிவு செய்தவள் தெய்வா.’’

‘‘எதையும், காதலால் சரிபடுத்திவிடாலம் என்று காதலின் மீது வைத்துள்ள நம்பிக்கையின் மறு உருவம் தான் இந்த ‘‘காதலின் இருதுருவங்கள்’’….

# முற்றும்